தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு

முனைவர் அ. பிச்சை

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு

முனைவர் அ. பிச்சை
பேராசிரியர், தமிழ்த்துறை
காந்திகிராம் கிராமியப் பல்கலைக்கழகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
C.P.T. Campus, Taramani, Chennai - 600 113

டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் - டாக்டர் சிவந்தி ஆதித்தனார், அதிபர், தினத்தந்தி நாளிதழ்)

வரிசை எண்: 3 நாள்: 28-2-2003

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Tamil̠ Nāṭṭuppur̠aviyal Āyvin̠ Varalār̠u
Author	:	Dr. A. Pitchai
Publisher & ©	:	International Institute of Tamil Studies C.P.T. Campus, Chennai - 600 113. Phone : 2254 2992
General Editor	:	Dr. S. Krishnamoorthy
Publication No.	:	445
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2003
Paper Used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	viii + 200
No. of Copies	:	1200
Price	:	Rs. 50/- (Rupees Fifty only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Chennai - 600 004
Subject	:	Folklore Studies

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

நாட்டுப்புற இலக்கியத்தை மக்கள் இலக்கியம் என்பர். மண்ணின் மணத்தையும், மக்களின் குணத்தையும் ஒருசேர வெளிப்படுத்துவதுதான் நாட்டுப்புற இலக்கியம். இதனை எழுதா இலக்கியம் என்றும் கூறுவர். இத்தகைய வாய்மொழி இலக்கியங்கள் மக்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொள்வன. மனிதனின் தொடக்கமாம் பிறப்பு முதல் முடிவாம் இறப்புவரை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மனிதனின் வாழ்வு நிலைகளுடன் பின்னிப் பிணைந்திருப்பன நாட்டுப்புற இலக்கியங்கள். பிற இலக்கிய வகைகளை ஆய்வு செய்வதைவிட நாட்டுப்புற இலக்கியங்களை ஆய்வு செய்வதால் ஒரு சமுதாயத்தை அதன் பண்பாட்டுக் கூறுகளோடும் உணர்வுகளோடும் படம் பிடித்துக் காட்ட முடியும். இதனால்தான் இன்றைய நாட்டுப்புறவியல் ஆய்வு இன்றியமையாததாகக் கருதப்படுவதோடு, அதன் ஆய்வுக்களம் மேலும் விரிவடைந்து கொண்டே போகிறது. உளவியல், மானிடவியல், சமூகவியல், மொழியியல் போன்ற பிற துறைகளோடும் நாட்டுப்புறவியலை இணைத்து ஆய்வு செய்யும் போக்கு வளர்ந்துள்ளது.

இன்றைய தமிழியல் ஆய்வுப்போக்கில் நாட்டுப்புறவியல் ஆய்வு பல்கிப் பெருகி வரும் நிலையில் இது பற்றிய விரிவான வரலாற்றை அறிவது இன்றியமையாதது ஆகும். இவ்வகையில் தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு என்ற பொருண்மையில் அறக்கட்டளைச் சொற்பொழிவை அமைத்துக் கொள்ள விரும்பிய நிலையில், அதனை உள்ளன்போடு ஏற்று, இச்சொற்பொழிவை நிகழ்த்த முன்வந்த காந்தி கிராம் கிராமியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் அ. பிச்சை அவர்களை உளங்கனிந்து பாராட்டி மகிழ்கிறேன். இச்சொற்பொழிவு டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளையின் மூன்றாம்

சொற்பொழிவாக அமைகிறது. இச்சொற்பொழிவைத் தமிழ் **நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு** என்ற தலைப்பில் நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை கொள்கிறது. இந்நூலுக்கு மெய்ப்புத்திருத்தம் செய்ய உதவி புரிந்த முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் தா. ரெங்கநாதன் அவர்களுக்கு நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு **மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்** திரு. **எஸ். செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் **செயலாளர்** திரு. **பு.ஏ. இராமையா,** இ.ஆ.ப. அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர்** திரு. தா. **சந்திரசேகரன்,** இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலிற்குச் சிறந்த முறையில் ஒளியச்சுக்கோப்புச் செய்த திரு. சு. கண்ணனுக்கும், அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : 22-02-2003 **இயக்குநர்**

ஆசிரியரைப் பற்றி



தேனி மாவட்டம் சீலையம்பட்டியில் 12.3.1951-இல் பிறந்த முனைவர் அ. பிச்சை அவர்கள் பி.எஸ்சி. (வேதியியல்), எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (உளவியல்), சான்றிதழ் மற்றும் பட்டயம் (மொழியியல்), பட்டயம் (உயர்கல்வி), சான்றிதழ் (மலையாளம்), பிஎச்.டி., (தமிழ்-சங்கயாப்பியல்) ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

1978 -இல் வேலையில் சேர்ந்த இவர் கொடைக்கானல் பண்பாட்டுப் பள்ளியில் இரண்டு ஆண்டுகளும் (78-80), பாடத்திட்டத்துறை, மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலம் சென்னையில் நான்கு ஆண்டுகளும் (80-84) பணியாற்றினார். 1984-இல் இருந்து திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராம் கிராமியப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

சிறந்த தமிழறிஞரான இவர் மதுரை ஞாலத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் செயற்குழு உறுப்பினராகவும், இந்திய ஒப்பிலக்கியம் என்ற காலாண்டிதழின் சிறப்பாசிரியராகவும், திருவனந்தபுரம் திராவிட மொழியியல் கழகத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறார்.

இவர் **தமிழர் பண்பாட்டில் விளையாட்டுகள்** (1982), **வெற்றிக்கண், கலங்கரை விளக்கம்** முதலிய எழுத்தறி முதன் நூல்களையும், ஆறுக்கும் மேற்பட்ட முதியோர் கல்வித் துணைப் பாடநூல்களையும், 90-க்கும் மேற்பட்ட தமிழ்க் கட்டுரைகளையும், 12-க்கும் மேற்பட்ட ஆங்கிலக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இந்திய ஒப்பிலக்கியத்தில் 1986-இல் 12 மாத இதழ்களையும், 1997 முதல் 18 காலாண்டிதழ்களையும் சிறப்பாசிரியராக இருந்து பதிப்பித்துள்ளார்.

ஆய்வு நெறியாளராக இவரது மேற்பார்வையில் நான்கு பேர் முனைவர் பட்டமும், ஐந்து பேர் எம்.ஃபில்., பட்டமும் பெற்றுள்ளனர். நான்கு முனைவர் பட்ட மாணவர்களும், மூன்று எம்.ஃபில்., பட்ட மாணவர்களும் இவரிடம் பயின்று வருகிறார்கள். பாரதியார் ஆய்வகத்தின் ஒருங்கிணைப்பாளராக இருந்து ஐந்து மாநிலக் கருத்தரங்குகளையும் ஒரு மொழிபெயர்ப்புச் செயலரங்கையும், இரு தேசியக் கருத்தரங்கையும் நடத்தியுள்ளார்.

பொருளடக்கம்

1.	அறிமுகம்	.....	1
2.	நாட்டுப்புற இலக்கியம்	.....	17
3.	நாட்டுப்புறக் கலைகள்	.....	61
4.	நாட்டுப்புறப் பண்பாடு	.....	87
5.	நிறைவுரை	.....	143
6.	துணைநூற் பட்டியல்	.....	155
7.	பிற்சேர்க்கை	.....	157

1. அறிமுகம்

1.0 முன்னுரை

ஆய்வு என்பது உண்மையைத் தேடலாகும். இயற்கையிலும், மனித வாழ்க்கையிலும் புதையுண்டு இருக்கும் உண்மைகளை ஆராய்ந்து வெளிப்படுத்துவது இன்றைய நாகரிகத்தின் தேவைகளில் ஒன்றாகும். விடுதலைக்கு முன் தமிழ்க் கல்வி வரி வடிவ இலக்கணம், இலக்கியம், கல்வெட்டியல் அல்லது சாசன இயல், பண்பாடு, வரலாறு ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பதாக அமைந்திருந்தது. ஆனால், இந்திய விடுதலைக்குப் பின் தமிழ்க்கல்வியின் எல்லையும், பரப்பும் விரிவாக்கம் செய்யப்பட்டும், மொழியியல் அதனோடு சேர்ந்தும், நாட்டுப்புறவியல், இதழியல் அதனோடு சேர்ந்தும், மின்னணு மக்கள் தகவல் ஊடகங்கள், ஒப்பிலக்கியம் போன்ற பாடங்களும் இடம்பெறத் தொடங்கின. இத்தகைய பாடங்கள் எழுபதுகளுக்குப் பின் இடம்பெறத் தொடங்கியதால் ஆசிரியர்களும், ஆய்வாளர்களும் இந்தப் புதிய புலங்களில் ஆய்வுப் பணியை மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

1.1 நாட்டுப்புறவியல்

இன்று பொதுவாக நாட்டுப்புறவியல் என்ற சொல் folklore என்பதற்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டாலும் 'folklore' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு வேறுசொல் வழக்காறுகளும் காணப்படுகின்றன. இந்தக் கலைச்சொல்லாக்கம் பற்றிய விளக்கமே ஆராய்ச்சிக்குட்பட்டது. இந்தக் கலைச் சொல்லாக்கம் பற்றிய விவாதங்களை ஆறு.அழகப்பன், தே.லூர்து, மீ.அ.மு. நாசிரலி, ஆறு.ராமநாதன், சு.சக்திவேல், சு.சண்முகசுந்தரம் ஆகியோர் நூல்களில் காணலாம்.

1.1.1 ஒரு நாட்டின் / மக்களின் இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றின் மரபான வழக்காறுகளை ஆய்வுச் சிந்தனை தோன்றிய காலந்தொட்டே பாதுகாத்தும், எழுதியும் வந்தார்கள். இதனை ஆங்கிலத்தில் 'popular antiquities' என்ற பெயரில் சுட்டினார்கள். இந்தச் சொல்லாக்கத்தில் திருப்தியடையாத வில்லியம் ஜான் தாமஸ் கி.பி.1846-இல் folklore என்ற சொல்லை உருவாக்கினார். இந்தச் சொல் வாய்மொழி இலக்கியங்கள், மனிதனின் பழங்காலப் பண்பாட்டின் எச்சங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக வழங்கப்பட்டது. இச்சொல்லுக்கு இணையாகத் தமிழகத்தில் வாய்மொழி இலக்கியம், ஏட்டில் எழுதா இலக்கியம், நாடோடி இலக்கியம், கிராமப்புற இலக்கியம், நாட்டார் வழக்காற்றியல், ஊரகவியல், கிராமப்புற இலக்கியம், பாமரர் இலக்கியம் போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறார்கள். இவற்றுள் எது சரியானது என்று மேலே குறிப்பிட்ட தமிழறிஞர்கள் விவாதித்துள்ளார்கள்.

1.1.2 ஆறு. அழகப்பன், ஆறு. இராமநாதன், சரஸ்வதி வேணுகோபால், சு. சண்முகசுந்தரம் போன்றோர் நாட்டுப்புறவியல் என்று பயன்படுத்துவதையே வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இந்தச் சொல்லையே மக்களின் வழக்காற்றினைக் குறிப்பதற்கு ஏற்ற சொல்லாகக் கருதுகின்றனர். நாட்டுப்புறப் பாடல்களை நாடோடிப்பாடல் என்று வழங்குவதைக் கைவிடும்படி கி.ஆ.பெ.விசுவநாதம் எழுதியதை ஆறு. அழகப்பன் தம் நூலில் சுட்டிக் காட்டியுள்ளார். ஆரம்ப காலத்தில் கிராம மக்களிடையே வழங்கும் பாடல்களையும் கதைகளையும் நாடோடிப்பாடல் என்றும், நாடோடிக்கதைகள் என்றும் தொகுத்து வழங்கினார்கள். நாடோடி என்ற சொல் இலக்கியங்களின் இடப்பெயர்ச்சியைச் சுட்டுவதற்கு பொருத்தமாக இருக்குமேயன்றித் தமிழ்மக்களின் பண்பாட்டிற்குப் பொருந்தாது. இந்தச் சொல்லை கி.வ.ஜ. நாட்டுப்புறப் பாடல்களுக்கும் நா. வானமாமலை நாட்டுப்புறக் கதைகளுக்கும் பயன்படுத்தியுள்ளனர்.

1.1.3 நா. வானமாமலை, தே. லூர்து ஆகியோர் நாட்டார் வழக்காற்றியல் என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்தி வருகின்றார்கள். இந்தச் சொல்லாட்சியை இவர்களின் மாணவர்கள் மற்றும் மதுரைக்குத் தெற்கே உள்ள நெல்லை, குமரி

மாவட்டங்களில் நாட்டுப்புறவியலைக் குறிக்க அதிகமாகப் பயன்படுத்துகின்றார்கள். ஆனால், மதுரைக்கு வடக்கே திருச்சி, கோவை, தஞ்சை, புதுவை, சென்னை, சேலம், வேலூர் போன்ற நகரங்களில் நாட்டுப்புறவியல் என்ற சொல்லே ஆசிரியர்களாலும்; ஆய்வாளர்களாலும் பயன்படுத்தப்படுகின்றது. நாட்டார் என்ற சொல் இலங்கையிலுள்ள தமிழ் அறிஞர்களால் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும், நாட்டார் வழக்காற்றியல் என்பது தமிழகம் முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட கலைச்சொல்லாக இல்லை.

1.1.4 ப.கிருஷ்ணசாமி 'south Indian folklorist' என்னும் ஆங்கில இதழை மதிப்பிடும் போது (தன்னனானே 2000) தென்னாட்டு ஊரகத்தான் என்று மொழி பெயர்த்துக் கூறுகின்றார். 'folklore' என்னும் சொல்லை ஊரகவியல் என்றும் 'folk' என்பதை ஊரகத்தான் அல்லது ஊரகத்தார் என்றும் மொழி பெயர்த்துக் கொள்கின்றார். மேலும், ஊர் என்னும் தமிழ்ச் சொல் பன்முகப் பொருளுடையது. ஊரு, நாட்டுல ஊரார், ஊர்ப்புறம், ஊருஉலகம் முதலிய இணைச் சொற்கள் 'folk' என்னும் சொல்லுக்கு மிக நெருக்கமான பொருளைத் தருகின்றன என்று விளக்கி 'நாட்டுப்புறவியல், நாட்டார் வழக்காற்றியல் முதலிய சொல்லாக்கங்களோடு எமக்கு எந்தவித வேற்றுமையுமில்லை அவற்றையும் பயன்படுத்தலாம் என்று குறிப்பிடுகின்றார். தமிழக அரசு Rural Development என்பதைத்தான் ஊரக வளர்ச்சி என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்துகின்றது. ஆனால், 'folk' என்பதற்கு இணையான ஊரகத்தார் என்ற சொல்லைப் பயன்படுத்த நினைப்பது மேலும் குழப்பத்தையே விளைவிக்கும். வ.ஐ. சுப்பிரமணியன் அவர்களும் நாட்டுப்புறப் பாடலை நாட்டுப் பாடல் என்றே குறிப்பிட்டார். அதுவும் தேசியப் பாடல் என்ற பொருளோடு குழப்புவதால் அந்தச் சொல்லும் கைவிடப்பட்டது.

1.1.5 இன்று நாட்டார் வழக்காற்றியல், நாட்டுப்புறவியல் ஆகிய இரண்டும் ஆய்வாளர்களின் பயன்பாட்டில் அதிக ஆட்சியைப் பெற்றன. இவற்றுள் நாட்டார் வழக்காற்றியல் என்பதைக் காட்டிலும் நாட்டுப்புறவியல் என்ற சொல்லையே எல்லோரும் கையாளலாம். ஏனென்றால் தென் தமிழகத்தில் ஒரு சொல்லாட்சியும் வட தமிழகத்தில் இன்னொரு

சொல்லாட்சியும் ஒரு பாடத்துறைக்கு அல்லது கல்வித்துறைக்குச் சுட்டப்படுவது மாணவரிடத்திலும் குழப்பத்தையே விளைவிக்கும். மேலும், ஆங்கிலத்தில் folklorism என்பதும் வழங்கப்படுகின்றது. இதற்கு இணையாக 'நாட்டுப்புறவியம்' என்ற சொல்லை உருவாக்கிக் கொள்ளலாம். நாட்டுப்புறவியம் என்பது நாட்டுப்புறவியலைப் போலச் செய்தோ, நகல் எடுத்தோ பயன்படுத்திக் கொள்வதாகும். உதாரணமாக இளையராஜாவின் கிராமியப் பாணியில் அமைந்த திரைப்பாடல்களைச் சுட்டிக்காட்டலாம். இத்தகைய நாட்டுப்புறவியல் பயன்பாட்டை 'fakelore' என்று ஆலன்டண்டீஸ் குறிப்பிடுவர். நாட்டுப்புற வழக்காறுகளை ஆராயும் இயலை 'folkloristics' என்று அமெரிக்காவில் சுட்டுகின்றார்கள். இதனை நாட்டுப்புற ஆய்வியல் என்றோ, நாட்டார் வழக்காற்றியல் என்றோ மொழி பெயர்த்துக்கொள்ளலாம். ஓர் ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு இணையாக ஒரு தமிழ்ச்சொல்லை எல்லோரும் ஏற்றுக் கொண்டு பயன்படுத்துவது ஆராய்ச்சியில் ஒருமையும், சீர்மையும் பெருகுவதற்கு வழிவகுக்கும்.

1.2 நாட்டுப்புறவியல்: வரையறை

நாட்டுப்புறவியலைப் பற்றிப் பல அறிஞர்கள் விளக்குவதற்கு முயன்றுள்ளார்கள். அவற்றையெல்லாம் தொகுத்து மரியாலீச் தமது அகராதியில் இருபத்தொரு வரையறை யாகச் சுட்டுகின்றார். இந்த வரையறைகளின் சாராம்சமாகச் சிலவற்றை நாம் தொகுக்கலாம். வாய்மொழித் தன்மை, பரப்புதல், மரபு, எஞ்சி நிற்றல், சமூகச் சார்புடைமை ஆகியவை இந்த வரையறைகளிடையே ஊடுருவியுள்ள முக்கியமான கருத்துகளாகும். மரபு என்பது இந்த இருபத்தொரு வரையறைகளில் பதின்மூன்றில் காணப்படுகிறது. இந்த வரையறைகளிலிருந்து ஆறு கருத்துக் கூறுகளைத் தே. லூர்து தொகுத்துத் தருவது இங்கு நினைக்கத் தக்கது. 1. வாய்மொழியாகப் பரப்பப்படுவது, 2. மரபு வழிப்பட்டது, 3. ஆசிரியரற்றது, 4. ஒருவித வாய்பாடுகளுக்கு உள்ளடங்குவது, 5. ஒரு குழுவினரால் பகிர்ந்து கொள்ளப்படுவது, 6. பல்வேறு வடிவங்களாகத் திரிவடைவது. இந்த பண்புகளைக் கொண்ட மக்களின் வழக்காறுகளை நாட்டுப்புறவியல் தன்மையுடையதாகக் கருதலாம்.

1.3 நாட்டுப்புறவியலின் வகைப்பாடு

பாட்டுக் கதை, கதைப்பாடல், பழமொழி, விடுகதை, காவியம் போன்ற இலக்கிய வடிவங்களும், மர, மண்பாண்ட மற்றும் பிற கைவினைக் கலைகளும், பழக்க வழக்கங்களும், சடங்கு முறைகளும், நம்பிக்கைகளும், வழிபாடுகளும் திருவிழாக் களும் நாட்டுப்புறவியலின் ஆய்வெல்லைக்குட்பட்டனவாக அமைகின்றன. இவற்றை வகைப்படுத்துவதில் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் வேறுபடுகின்றார்கள். ஜான் ஹெரால்டு பிரன்வான்கு என்பவர் மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார். வாய்மொழி வழக்காறுகள், வழக்கங்கள் சார்ந்த வழக்காறுகள், புழங்கு பொருள் சார்ந்த வழக்காறுகள் ஆகியவையாகும். அமெரிக்க நாட்டுப்புறவியலார் ரிச்செர்டு எம்.டார்சன், 1. வாய் மொழிக்கலை, 2. புழங்கு பொருள்சார் பண்பாடு, 3. சமூகப் பழக்க வழக்கங்கள், 4. நாட்டுப்புற நிகழ்கலைகள் என்று நான்காகப் பிரிக்கின்றார். இவ்விரண்டையும் கருத்தில் கொண்டு நாட்டுப்புற வழக்காறுகளை 1. நாட்டுப்புற இலக்கியம், 2. நாட்டுப்புற நிகழ் கலைகள், 3. பழக்கங்களும் பொருள்சார் பண்பாடும் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளால் இவண் விளக்கலாம்.

1.4 நாட்டுப்புறவியல் ஆய்வுப் பணி

1.4.1 நாட்டுப்புறவியல் கூறுகளைத் தொகுப்பதும், வகைப்படுத்துவதும், விளக்குவதும் புதிதாக ஒன்றும் தோன்றி விடவில்லை. இவையாவும் 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தொல்காப்பியர் காலந்தொட்டே தமிழர் வாழ்வில் நிகழ்ந்து வரும் செயல்பாடாகும். தொல்காப்பியம் பாட்டு, பண்ணத்தி, பழமொழி, விடுகதை ஆகியவற்றைப் பற்றிக் கூறுவதிலிருந்து நாட்டுப்புறவியல் பழங்காலந்தொட்டே மக்களிடத்தில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பதை அறியலாம். நாட்டுப்புறவியல் கூறுகளைச் சேகரித்துத் தொகுத்தல், வகைப்படுத்துதல், விளக்கி விவாதித்தல் ஆகிய முத்திறப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்திய விடுதலைக்கு முன் ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் தொகுக்கும் பணியும், வகைப்படுத்தும் பணியும் செம்மையாக நடைபெற்றன. இந்தப்பணி, இந்திய விடுதலைக்குப்பின்னும் அறுபதுகள் வரையிலும் தொடர்ந்து செயல்பட்டது. அதற்குப் பின் இன்றும்

தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், நாட்டுப்புறவியல் கூறுகளை அல்லது வழக்காறுகளை விமர்சித்து, விவாதித்துக் கோட்பாட்டு அடிப்படையில் விளக்கும் பணி எழுபதுகளில் தான் எழுச்சி பெற்றது.

1.4.2 பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் ஆய்வுக் கட்டுரை வழங்கும் தளமாக இருக்கும் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் ஆண்டுதோறும் ஆய்வுக் கோவை என்ற நூலினை வெளியிட்டு வருகிறது. 1969-இல் தொடங்கிய இம்மன்றம் ஓர் ஆய்வுக் கோவை தொகுதியில் (1992) வெளியிட்ட கீழ்க்காணும் மதிப்பீடு நாட்டுப்புறவியலின் வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறது. "1972-ஆம் ஆண்டில் 0.7 சதவிகிதமாக இருந்த நாட்டுப்புறவியல் 1989-ஆம் ஆண்டில் 12.3 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. 71,72-ஆம் ஆண்டுகளில் முறையே ஒவ்வொரு கட்டுரையே ஆய்வுக்கோவையில் இடம்பெற்றுள்ளது. 73-ஆம் ஆண்டில் ஒரு கட்டுரை கூட இடம் பெறவில்லை. 76-ஆம் ஆண்டிலிருந்து விகிதாச்சாரம் உயரத் தொடங்கியுள்ளது. 80-க்குப் பிறகு அது வளர்ச்சியைப் பெற்றது." இருப்பினும் இவ் வெழுச்சி தொண்ணூறுகளில் தளர்ச்சியும் வீழ்ச்சியும் அடையத் தொடங்கியது. 90,91-ஆம் ஆண்டுகளில் 10.73 விழுக்காடு ஆகி, 1999-ஆம் ஆண்டில் 8.59 விழுக்காடு நாட்டுப்புறவியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், ஆய்வுக் கோவையில் வீழ்ச்சி தென்பட்டாலும், ஆய்வேடு இதழ் / நூல் வெளியீடு, பிறகருத்தரங்கு மலர்கள் ஆகியவற்றில் நாட்டுப் புறவியல் முன்னேற்றப் போக்கு காட்டி வருகின்றது.

	எழுபதுகள்	%		எண்பதுகள்	%
1.	1970	1.86	11.	1980	4.33
2.	1971	1.16	12.	1981	4.41
3.	1972	0.69	13.	1982	6.10
4.	1973	0	14.	1983	6.71
5.	1974	2.68	15.	1984	8.97
6.	1975	5.33	16.	1985	13.82
7.	1976	3.08	17.	1986	7.93
8.	1977	4.89	18.	1987	12.89
9.	1978	4.73	19.	1988	12.65
10.	1979	4.31	20.	1989	12.32

1.5 நாட்டுப்புறவியலில் முதுகலைப் படிப்பு

முதுகலைத் தமிழிலக்கியப் பாடத்திட்டங்களில் நாட்டுப்புறப் பாடல்களும் கதைப்பாடல்களும் கதைகளும் எழுபதுகளின் தொடக்கத்தில் இடம்பெறத் தொடங்கின. பின்பு நாட்டுப்புற வியலை அறிமுகப்படுத்தும் ஒரு தாள் வைக்கப்பட்டது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, திருநெல்வேலி தூய சவேரியார் கல்லூரித் தமிழ்த்துறை ஆகியவற்றில் நாட்டுப்புறவியல் நான்கு பருவங்களிலும் கற்பிக்கப்படும் சிறப்புப் பாடமாக / விருப்பப்பாடமாக அளிக்கப்பட்டது (1975). பின்பு இதுவே இரண்டு துறைகளிலும் நாட்டுப்புறவியலில் முதுகலைப் பட்டப்படிப்பு வழங்குவதற்கு வழி வகுத்தது (1987). தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்று மையத்தில் முதுகலை நாட்டுப்புறவியலில் சேர்ந்த மாணவர்களின் நிலையைக் கடந்த பத்தாண்டுகளில் ஆராயும்பொழுது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக உள்ளது. 1989-இல் மாணவர் எண்ணிக்கை 14; ஆனால், 1998-இல் நான்கு பேர். இதற்கு, வேலை வாய்ப்பின்மை, துறைத்தலைவர் ஓய்வு/மாற்றம் ஆகியவற்றைக் காரணமாகக் கூறலாம். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் மாணவரின் சேர்க்கை ஊக்கமூட்டுவதாக இல்லை. பள்ளி, கல்லூரி, பிற தொழிலகங்கள் ஆகியவற்றின் தேவையே முதுகலைப்படிப்பின் சேர்க்கையை நிர்ணயம் செய்கின்றன. இவற்றில் ஆழமாகவும் விரிவாகவும் படிக்கும் மாணவர்கள் நாட்டுப்புறவியலில் சிறந்த ஆய்வாளர்களாக உருவாக்கம் செய்யப் படுகின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை.

1.6 காலந்தோறும் நாட்டுப்புறவியல் ஆய்வு

6.1 1976-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகப்பகுதிகளில் எம்ஃபில் படிப்பு தொடங்கப்பட்டது. பல மாணவர்கள் இப்படிப்பின் ஒரு பகுதியாக ஆய்வுத்திட்டத்திற்கான ஆய்வேடுகளைச் சமர்ப்பித்தனர். தமிழண்ணலின் ஆய்வுப்படி 1988-வரை ஆய்வேடு சமர்ப்பிக்கப்பட்ட தலைப்புகளில் 268 நாட்டுப்புறவியலைச் சேர்ந்தவை. இவற்றுள் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பகுதி நாட்டுப்புற இலக்கியம் சார்ந்தவை. குறிப்பாக 41 தலைப்புகள் நாட்டுப்புறப்பாடல்களைத் தொகுத்து ஆராய்ந்தவை. மீதமுள்ள நான்கு பகுதி இலக்கியம் சாரா நாட்டுப்புறப்

பண்பாட்டை விளக்குபவை. குறிப்பாக, குலச்சடங்கு / மரபு (42), சிறுதெய்வவழிபாடு (25), திருவிழாக்கள் (46), ஊர்ப்பெயராய்வு (41), சாதி / இனம் பற்றியவை (22) எனப் பகுத்துக் கூறலாம். நாட்டுப்புறக் கலைகள், விளையாட்டு, மற்ற பண்பாட்டுக்கூறுகள் ஒன்றிரண்டு விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் இடம் பெற்றுள்ளன. அறுபதுகளிலும் எழுபதுகளிலும் செல்வாக்குச் செலுத்திய நாட்டுப்புற இலக்கிய ஆய்வு குறைந்து நாட்டுப்புறப் பண்பாட்டு ஆய்வு முதலிடம் பெற்றது. எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் நாட்டுப்புறப்பண்பாட்டு ஆய்வே நாட்டுப்புற இயலிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.

6.2 ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் நாட்டுப்புறவியல் பற்றிய ஆய்வு தமிழ் ஆய்வுலகில் தலைகாட்டவில்லை. அறுபது களின் இறுதியில் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் கே.பி.எஸ்.ஹமீது, சென்னைப் பல்கலைக்கழகத்தில் பா.ரா. சுப்பிரமணியன் ஆகியோர் எம்.லிட். பி.எச்.டி பட்டங்களுக்கு நாட்டுப்புற இலக்கியங்களை ஆராய முனைந்தனர். பின்பு எழுபதுகளிலும் எண்பதுகளிலும் தமிழகப் பல்கலைக்கழகங் களிலும் முனைவர் (பி.எச்.டி.) பட்டங்களுக்கு நாட்டுப்புறவியலை ஆய்வுப் பொருளாகத் தெரிந்தெடுத்துப் பதிவு செய்து ஆராய்ந்தனர். தமிழண்ணலின் தமிழியல் ஆய்வு நூலின் மதிப்பீட்டின்படி 1988 வரை 81 பேர்கள் முனைவர் பட்டங்களுக்குப் பதிவுசெய்தும் / சமர்ப்பித்தும் நாட்டுப்புறவியலை ஆய்வு செய்தமையை அறியலாம். இவற்றுள் ஏறக்குறைய நாட்டுப்புற இலக்கியமும், நாட்டுப்புறப் பண்பாடும் சம நிலையில் ஆய்வுப் பொருளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டமையை உணரலாம். வாய்மொழி இலக்கியத்தில் நாட்டுப்புறப்பாடல் (27) முதன்மை பெறுகின்றது. கதைப்பாட்டு (7), கதை (6), பழமொழி (4), விடுகதை (1) ஆகியன பற்றி ஆய்வுகள் குறைந்த அளவில் காணப்படுகின்றன. நாட்டுப்புறப் பண்பாட்டில் சிறுதெய்வ வழிபாடு (10), சடங்கும் நம்பிக்கையும் (8), நாட்டுப்புறக் கலைகள் (10) ஆகியன ஆய்வுக்குரிய பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எண்பதுகளில் தன்னிலையைத் தக்கவைத்துக் கொண்ட நாட்டுப்புற இலக்கியக்கூறுகள் அடுத்த பத்து ஆண்டுகளில் தன்னிலையிலிருந்தும் கீழிறங்கிவிட்டதைத் தொண்ணூறுகளில் காணலாம்.

1.7 வட்டாரம் சார்ந்த ஆய்வுகள்

7.1 தொடக்கக்காலத்தில் 'தமிழில் / தமிழகத்தில்' என்ற பெரிய எல்லையைக் கொண்டு நாட்டுப்புறவியல் ஆய்வுகள் தொடங்கப்பட்டன. ஆனால், இந்தப் போக்கு எழுபதுகளின் இறுதியில் மாறியது. 1979-இல் ச.வே.சுப்பிரமணியன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் நாட்டுப்புறவியல் கருத்தரங்கு நடத்தினார். இதில் மாவட்ட அளவிலும், மீனவர் போன்ற தொழிற்சாதி அடிப்படையிலும் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. இந்த முன்னோடி வழிகாட்டுதலின் பேரில் மாவட்ட அளவில் அல்லது மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டார அளவில் ஆய்வெல்லையைக் குறுக்கிக் கொண்டு ஆராயும் போக்கு நிலைபெற்றது. தமிழண்ணலின் கணக்குப்படி 81 முனைவர் பட்ட ஆய்வுத்தலைப்புகளில் 30 தலைப்புகள் பொதுநிலையில் அமைவன; மீதமுள்ள 51 தலைப்புகளும் தமிழகத்திலுள்ள மாவட்ட / வட்டார அடிப்படையில் நாட்டுப்புறக்கூறுகளை ஆராய்வன. மதுரை (7), தஞ்சை (7) நெல்லை (7) குமரி (7) ஆகிய மாவட்டங்கள் தலா ஏழு பேர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. சிவகங்கை, இராமநாதபுரம், ஆற்காடு, புதுச்சேரி ஆகிய பகுதிகளில் தலா மூவர் ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளனர். தேனி, திண்டுக்கல், திருச்சி, கோவை மாவட்டங்களில் ஒன்றிரண்டு ஆய்வாளர்கள் நாட்டுப்பாடல்கள்/ சிறுதெய்வ வழிபாடுகள் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளனர். இந்த நிலை தொண்ணூறுகளில் மாறி அமைவதைப் பின்பு காணலாம்.

1.7.2 இளம் முனைவர் (எம்ஃபில்) பட்டத்தின் ஒரு பகுதியாக எடுக்கப்பட்டுள்ள 261 தலைப்புகளில் வட்டாரம் சார்ந்த தலைப்புகளைக் காணலாம். இவற்றுள் ஐந்தில் மூன்று பங்குத் தலைப்புகள் வட்டாரம் சார்ந்தவை. மதுரை வட்டாரத்தைச் சேர்ந்த தலைப்புகள்(43) முதன்மை இடம் பெறுகின்றன. மதுரை நகரில் உள்ள கல்லூரிகளில் எம்ஃபில் தொடங்கியதால் நாட்டுப்புறவியல் தலைப்புக்களைத் தேர்ந்தெடுத்தனர். மேலும், மதுரையைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து விருதுநகர் (20), நெல்லை (21), இராமநாதபுரம் (12), தஞ்சை (14), திண்டுக்கல் (11), தேனி (8), சிவகங்கை (5) ஆகிய இடங்களிலிருந்து படிக்க வந்த மாணவர்கள் தத்தம் கல்லூரித் தமிழ்த் துறைகளில் தமது பகுதியை ஆய்வுப்பொருளாக எடுத்தனர். பெரியார் (1),

சேலம் (1), தென்னாற்காடு (2), திருச்சி (2), தூத்துக்குடி (1), புதுச்சேரி (3) ஆகிய பகுதியிலிருந்து விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலே ஆய்வுத்தலைப்புகள் அமைகின்றன. எம்ஃபில் படிக்கும் மாணவர்களின் சொந்த வட்டாரத்தை இப்புள்ளி விபரம் பிரதிபலிக்கின்றது.

1.8 சாதி சமூகம் சார்ந்த ஆய்வுகள்

1.8.1 சாதிய நோக்கில் மிகக்குறைந்த அளவில் (6 பேர்கள்) முனைவர் பட்டத்திற்கு நாட்டுப்புறவியலை எடுத்துள்ளனர். யாதவர் பாடல்கள், மீனவர்களின்/பரதவர்களின் பாடல்களும் கதைகளும், நகரத்தாரின் வாழ்வியலும், கொங்குவேளாளர்களின் குலதெய்வங்களும் இவ்வாய்வில் அடங்கும். பா.ரா. சுப்பிரமணியன் பெண்களால் பாடப்படும் தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களை அமைப்பியல் நோக்கில் ஆராய்ந்தார். இவ்விரண்டையும் சாதி அடிப்படையில் மதுரை மாவட்டத்தைக் களமாகக்கொண்டு சரசுவதி வேணுகோபால் ஆராய்ந்தார். இவரது ஆய்வு பின்னாளில் அதே போன்ற பலரின் ஆய்வுக்கு வழிகாட்டியாக அமைந்தது. க. பரமேஸ்வரி (1985) குமரி மாவட்ட இன அடிப்படைத் தாலாட்டுப் பாடல்களில் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கண்டார். பி. புஷ்பம் (1984) திருநெல்வேலி மாவட்டத் தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களைச் சாதி அடிப்படையில் ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்கினார். தஞ்சாவூர், தென்னாற்காடு மாவட்டத் தாலாட்டு, ஒப்பாரிப்பாடல்களும் ஒப்பாய்வு செய்யப்பட்டன. ஆனால், இவற்றில் சாதி ஒரு மாறியாக (variable) கொள்ளப்பட்டு விளக்கப்பட்டதா என்று தெரியவில்லை. இத்தகைய ஆய்வுகளிலிருந்து கிடைக்கும் பொதுவான செய்திகள் என்னவென்றால் பிராமணர், பிராமணர் அல்லாதார் வேறுபாடு தாலாட்டு, ஒப்பாரிப்பாடல்களில் தெளிவாகத் தெரிகின்றது என்றும், சாதி வேறுபாடு தாலாட்டுப் பாடல்களைக் காட்டிலும் ஒப்பாரிப்பாடல்களில் தான் சிறப்பாக வெளிப்படுகின்றது என்றும் கூறலாம்.

1.8.2 35-க்கு மேற்பட்ட தமிழகச் சாதியினர்/மதத்தவர் எம்ஃபில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பதைத் தமிழண்ணல் அவர்களின் தமிழியல் ஆய்விலிருந்து உணரலாம். இச் சாதியினரின் பழக்க வழக்கங்கள் அல்லது குலச்சடங்குகளே

பெரும்பாலும் ஆய்வுப்பொருளாகின்றது. நாடார் இனத்தவரைப் பற்றிய ஆய்வே இவற்றின் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. அடுத்து சைவப் பிள்ளைமார், இல்லத்துப் பிள்ளைமார், நாஞ்சில் வேளாளர் ஆகியோரை உள்ளடக்கிய வேளாளர்களைப் பற்றிய பண்பாட்டு ஆய்வு இடம் பெறுகின்றது. கள்ளர், யாதவர், முக்குலத்தோர், நாயக்கர், பரதவர் அடுத்த இடத்தைப் பெறுகின்றனர். அகமுடையார், கள்ளர், செட்டியார், அந்தணர், சௌராஷ்டிரர், முதலியார், ஆயிரவைசியர் ஆகியோர் களைப் பற்றித் தலா இருவர் ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர். கணியான், வாணியச் செட்டி, பழியர், முதுவர், நகரத்தார், தங்க ஆசாரியார், வளையர், மறவர், புலையர், குளுவர், ரெட்டியார், ராஜீ, வேட்டுவக் கவுண்டர், மருத்துவர், இருளர், தேவாங்கர், குடுகுடுப்பைக்காரர், சாலியர், தெலுங்கர், படகர் ஆகியோர்களைப் பற்றியும் ஒவ்வொரு ஆய்வு காணப்படுகின்றது. மத அடிப்படையிலும் சில ஆய்வேடுகளைக் காணமுடிகின்றது. கிறித்தவர் (நாடார்), இஸ்லாமியர், சைனர் ஆகியோரைப் பற்றிய சில ஆய்வுகளும் பண்பாட்டு ரீதியாகச் செய்யப்பட்டுள்ளன.

9. நாட்டுப்புறவியல் கழகமும் நாட்டுப்புறவியல் இதழும்

1.9.1 சிதம்பரம் அண்ணாமலை நகரில் 'இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம் 1982-இல் பதிவு செய்யப்பட்டு, முனைவர் ச. அகத்தியலிங்கனாரைச் செயலாளராகக்கொண்டு, தொடங்கப் பட்டது'. ஆண்டுக் கருத்தரங்கம் நடத்தவும் காலாண்டு இதழ் வெளியிடவும் நோக்கங்களாகக் கொண்டு இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம் பணியாற்றத் தொடங்கியது. இக்கழகத்தின் முதல் இதழ் (1&2) முதல் தொகுதி 1 (சூலை-டிசம்பர் 1983) 1983-இல் வெளிவந்தது. இதைத் தொடர்ந்து நான்கு தொகுதிகள் வெளிவந்தன. அரையாண்டுக்கு ஒரு தடவையாகத் தான் வெளியிட நேர்ந்தது. இறுதி இதழ் 1987-88ஆம் ஆண்டில் வந்து நின்றுவிட்டது. இதில் ஏறக்குறைய 57 கட்டுரைகள் நாட்டுப்புறவியலின் பல்வேறு அம்சங்கள் குறித்து வெளிவந்தன. இந்தக் கழகம் 1987, மே மாதத்தில் கருத்தரங்கு நடத்தியது. தமிழ்நாடு, ஆந்திரம், டெல்லி போன்ற பல பகுதிகளிலிருந்தும் இருநூற்றுக்கு மேற்பட்ட ஆய்வாளர்கள் கட்டுரை படித்தனர். கட்டுரைகள் 'நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை' என்ற தலைப்பில்

இருதொகுதிகளாக வெளியிடப்பட்டன. நாட்டுப்புறவியல் இதழ், நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தமிழ் ஆய்வுக்கோவை தாமரை & கலைமகள் போன்ற இதழ்கள் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளைத் தொகுத்து சு. சக்திவேல் நாட்டுப்புறவியல் நூலடைவு என்ற பெயரில் வெளியிட்டார். இந்நூலில் 2197 கட்டுரைகள் (தமிழ் & ஆங்கிலம்) இடம் பெற்றுள்ளன.

1.9.2 மதுரையில் 'தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுக்கழகம் 17-1-1986 அன்று தொடங்கப்பட்டது. முதலாண்டில் 7 மாதக் கருத்தரங்குகளும் 2 சிறப்புக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன. முதல் சிறப்புக் கருத்தரங்கு 'நாட்டுப்புறவியலும் பிறதுறைகளும்' என்னும் தலைப்பில் 21-6-1986 அன்று மதுரையில் நிகழ்த்தப் பட்டது. இரண்டாம் சிறப்புக் கருத்தரங்கு 'நாட்டுப்புற ஆட்டக் கலைகள்' என்பது பற்றி ஆகஸ்டு 9,10 ஆகிய நாட்களில் நிகழ்ந்தது. அடுத்த ஆண்டு (1987) ஏழு மாதக் கருத்தரங்குகளும், 27-3-1987-ஆம் நாள் 'நாட்டுப்புற நம்பிக்கைகள்' பற்றி ஒரு நாள் கருத்தரங்கும் நிகழ்ந்தது. குலதெய்வ வழிபாடு, கோலம், யாதவர், நாட்டுப்புறப் பாடல்கள், கனவு, மக்கள் பெயரிடல் ஆகியவற்றில் காணப்படும் நம்பிக்கைகள் பற்றி ஆய்வுக்கட்டுரைகள் வாசித்தனர். இந்தத் தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுக் கழகம் ஒரு காலாண்டுச் செய்தியிதழையும் கொண்டு வந்தது. ஆனால், ஓரிதழுக்குப் பின் செய்தியிதழும் நின்றுவிட்டது. நாட்டுப்புறவியல் ஆய்வுக் கழகத்தின் செயற்பாடும் படுத்துவிட்டது. இருப்பினும், மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் எம்.ஏ. தமிழ் மற்றும் நாட்டுப்புறவியல், எம்.ஏ. நாட்டுப்புறவியல் படிப்புகள் பின்னாளில் தொடங்குவதற்கு மேலே தொடங்கப்பட்ட முயற்சிகள் அடித்தளமாக அமைந்தன.

1.9.3 தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகச் சமூகவியல் துறையின் சார்பில் 1986, மே மாதத்தில் 'நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள்' என்னும் இருநாள் கருத்தரங்கம் நிகழ்ந்தது. கருத்தரங்க அமைப்பாளரான ஆறு. இராமநாதன் பின்பு இக்கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். 1987 ஆகஸ்டு முதல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியல் தனித்துறையாகச் செயல்படத் தொடங்கியது. 1988 ஜனவரி 14-15 தேதிகளில் நாட்டுப் புறவியல் கருத்தரங்கு ஒன்றையும் நிகழ்த்தியது. ஆறு.இராமநாதன் எழுதிய 'வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை அறிமுகமும்

ஆய்வுகளும்' என்னும் நூல் இப்பல்கலைக்கழகம் நாட்டுப்புறவியல் இளம் ஆய்வாளர்களுக்கு வழங்கிய மிகச் சிறந்த கொடையாகும்.

1.9.4 திருநெல்வேலி தூயசவேரியார் கல்லூரி 1987-ஆம் ஆண்டில் நாட்டுப்புறவியலில் முதுகலைப் பட்டத்தைத் தொடங்கியது. மேலும், அதே ஆண்டில் 'நாட்டார் வழக்காற்றியல்' என்னும் இதழை (தொகுதி-1, ஜனவரி-ஜுன், ஜூலை-டிசம்பர், 1987, இதழ் எண் 1&2) வெளியிட்டது. மந்திரம், தமிழில் அமைப்பியல் வகைகளும், சமூகக் கதைப்பாடல்- ஒரு வரையறை, ஐயனார் வழிபாடு; சமூக உறவும் மோதலும், குறியியல் கோட்பாடுகள் ஆகிய கட்டுரைகளைத் தாங்கி முதல் தொகுதி உலா வந்தது. இரண்டாம் இதழ் லெவிஸ்டிராஸ்- அமைப்பியல் ஆய்வுச் சிறப்பிதழாகவும், மூன்றாம் இதழ் மானிடவியல் சிறப்பிதழாகவும் வெளிவந்தன. இவற்றுக்குப் பின் இவ்விதழ் தன் பயணத்தை நிறுத்திக்கொண்டது. இருப்பினும், நாட்டார் வழக்காற்றியல் துறை, ஃபோர்டு பவுண்டேஷன் நிதி உதவியோடு அங்கு 'நாட்டார் வழக்காற்றியல் அருங்காட்சியகமும்' நூலகமும் ஆய்வுமையமும் அமைத்துக் கொண்டது. இதன் மூலம் தனது நிலைப்பாட்டை உறுதி செய்து கொண்டது. தரமான, சிறந்த நூல்களையும் இந்த ஆய்வு மையத்தின் மூலம் வெளியிட்டு வருகின்றது. சேகரிப்பு, வகைப்பாடு, ஆய்வு ஆகிய மூன்றையும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது. படிப்பு, பயிற்சி, ஆய்வு ஆகியவற்றைக் கருத்தரங்கு, மாநாடு, செயலரங்கு, கள ஆய்வு ஆகியவற்றின் மூலம் திட்டமிட்டுச் செயல்படுத்திக் கொண்டு வருகின்றது.

1.9.5 சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979-இல் முன்னோடியாகத் தமிழ் நாட்டுப்புறவியல் குறித்து கருத்தரங்கு நடத்தியது. தமிழியல் (Journal of Tamil Studies) என்னும் இதழில் சில கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது. இவற்றைக் காட்டிலும் முக்கியமான ஒன்று சுவடிகளில் தூங்கிக் கிடக்கும் வெளிவராத நாட்டுப்புறக் கதைப் பாடல்களை ஆய்வுக் குறிப்புகளுடன் பதிப்பித்து வெளியிடுகின்றது. வெள்ளைக்காரன் கதை, சேர்வைக்காரன் கதை, தோட்டுக்காரிக் கதை, சின்னணைஞ்சான் கதை போன்ற கதைப்பாடல்கள் குறிப்பிடத் தக்கவை. இந்நிறுவனத்தின் தமிழக நாட்டுப்புறக் கலைகள், தமிழர்

நாட்டு விளையாட்டுகள், கும்மிப் பாடல்கள் தமிழில் விடுகதைகள், சிந்து இலக்கியம் போன்ற வெளியீடுகள் தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு வரலாற்றில் மைல்கற்களாக அமைந்தவை; பல ஆய்வுகளுக்கு முன்னோடியாகச் செயல்பட்டவை.

1.9.6 சென்னை ஆசியவியல் நிறுவனம் எண்பதுகளில் செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனம் "Journal of Asian Studies" என்னும் இதழை வெளியிட்டு வருகின்றது. அ. பிச்சை வெளியிட்ட "Tattoing as a Folk Art" என்னும் கட்டுரை கா. மீனாட்சி சுந்தரம் தமிழ்க்கலை (தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை) வழியாகக் கோவை வட்டாரத்தில் 'பச்சைகுத்துதல்' கலையை ஆராய்வதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. இதே போல வேறு சில கட்டுரைகளும் நாட்டுப்புறவியல் சார்ந்தனவாக வெளிவந்தன. மேலும், இதன் சிறப்பான பணி நாட்டுப்புறக் கதைப்பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டதாகும். இவற்றுள் சந்தனத்தேவன் கதைப்பாடல், வெங்கலராஜன் கதைப் பாடல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவை காவியப் பரிமாணத்தைக் கொண்டவை. ஆங்கிலத்தில் 'தமிழ் நாட்டுப்புறவியல் கலைக் களஞ்சியம்' ஒன்றை இந்நிறுவனம் தயாரித்துக் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஏற்கெனவே கன்னட நாட்டுப்புறக் களஞ்சியத்தை ஆங்கிலத்தில் தயாரித்து வெளியிட்டுள்ளது.

1.9.7 தமிழ்நாட்டுப்புறவியல் வளர்ச்சிக்கு மணிவாசகர் நூலகம், நியுசெஞ்சுரி புத்தக நிறுவனம், கழக வெளியீடு, அன்னம் ஆகியவற்றின் பங்கு குறிப்பிடத்தக்கது. சு.சண்முகசுந்தரம் தமது பெரும்பாலான நாட்டுப்புறவியல் நூல்களை (நாட்டுப்புறவியல் வரலாறு, நாட்டுப்புறவியல் சிந்தனைகள், இலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு) மணிவாசகர் நூலகத்தின் மூலம் வெளியிட்டார். பின்பு ஆறு.இராமநாதன் நூலும் இதன் வழியே வெளிவந்தது. நா. வானமாமலையின் நூற்கள் நியுசெஞ்சுரியின் வெளியீடாகப் பல பதிப்புகளைக் கண்டன. இவரது நாட்டுப்புறப் பாடல், நாடோடிக் கதைகள், பழங்கதைகளும் பழமொழிகளும் ஆகிய நூல்கள் குறிப்பிடத் தக்கவை. செங்கோவின் 'மேற்கு கொங்குநாட்டுப்புறவியல்' பெ.கோ.நா.வின் 'கதிரைமலைப் பாடல்கள்' ஆகிய நூல்களும் நாட்டுப்புறவியலுக்கு வளத்தைச் சேர்க்கும் படைப்புகளாகும். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆறு. அழகப்பனின் தமிழ்நாட்டுப் பாடல் திறனாய்வு

வெளியிட்டுள்ளது. இந்நூல் பிற்கால நாட்டுப்புறப்பாடல்களை ஆராய்பவர்களுக்குத் துணை செய்தது. அன்னம் வெளியீட்டின் சிலநூல்கள் (நகர்சார்கதைப் பாடல்கள், இடுக்கி மாவட்டப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல்) இவண் நினைவு கூரத்தக்கவை.

1.10 நாட்டுப்புறவியலும் ஆய்வுக் கோட்பாடுகளும்

1.10.1 தொடக்கக்காலத்தில் கதைகளையும் வழக்காறுகளையும் தொகுத்துப் பகுப்பதையே ஆய்வாகக் கருதினர். முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணுதல் மரபைச் சார்ந்தது தமிழ் மரபு. இன்றும் கூட 'ஆய்வு என்பது வகை தொகைப்படுத்தும் அறிவியலே' என்று குறிப்பிடுவர். ஆறு.அழகப்பனின் நாட்டுப்புறப் பாடல் ஆய்வாக இருந்தாலும் சரி அல்லது நாசிர்அலியின் ஆய்வாக இருந்தாலும் சரி அது வகை தொகைப்படுத்தும் விளக்கவியல் ஆய்வாகும். கே.பி.எஸ். ஹமீது, பா.ரா. சுப்பிரமணியன் பிராப்பின் அமைப்பியலை நாட்டுப்புறப் பாடல் ஆய்வுக்குக் கொண்டு வந்தனர். கே. நாச்சிமுத்து மதுரைத் தலபுராணத்தைப் பிராப்பின் முறையை நாட்டுப்புறச் சிறுவர் விளையாட்டுக்குப் பயன்படுத்தினார். தமிழவன், எம்.டி.முத்துகுமாரசுவாமி, சரசுவதி வேணுகோபால், ஜவஹர்லால் ஹண்டு ஆகியோர் லெவிஸ்டிராஸ் அமைப்பியல் முறையை கதையாய்வுக்குப் பயன்படுத்தினர். தமிழவனின் 'தமிழில் அமைப்பியல் கதை ஆய்வுகள் - ஒரு பரிசீலனை' (1987/2000) என்னும் கட்டுரை தமிழில் அமைப்பியல் பின்பற்றப்பட்டதை விமர்சிக்கின்றது. லூர்து மற்றும் சிலர் ஆலன்டண்டீசின் அமைப்பியல் விளக்கத்தைப் பழமொழி, விடுகதை ஆய்வுக்குப் பயன்படுத்தினர். இவ்வாறாக அமைப்பியல் நாட்டுப்புறப்பாடல், கதைப்பாடல், கதை, பழமொழி, விடுகதை, சடங்குமுறை, வழிபாடு போன்றவற்றிற்குப் பின்பற்றப்பட்டது.

1.10.2 நாட்டுப்புறவியல் சமூக மானுடவியல் அல்லது பண்பாட்டு மானுடவியல், இனவரைவியல் ஆகியன பின்பற்றப் பட்டன. நா. வானமாமலை மார்க்சீய சமூகவியல் அணுகுமுறை, சமூக மானுடவியல் முறையினைக் கதைப்பாடல், கதை, தொன்மம், நாட்டுப்புறப்பாடல் ஆகியன பற்றிய ஆய்வுக்குப் பயன்படுத்தினார். ஆ. சிவசுப்பிரமணியன் இந்த அணுகுமுறைகளோடு இனவியல் வரைவு அணுகுமுறையையும் வரலாற்று ஆவணங்களோடு விளக்குவதையும் நாட்டுப்புறவியலுக்குக் கொண்டு வந்தார். இந்த

அணுகுமுறையைப் பெ.சுப்பிரமணியன், சரசுவதி வேணுகோபால், செல்லப்பெருமாள் போன்றோர் தம் ஆய்வில் கடைப்பிடித்துள்ளார். தே.லூர்து வெளியிட்ட 'நாட்டார் வழக்காற்றியல் - கள ஆய்வு' என்னும் நூல் (1986) நாட்டுப்புறவியல் சமூக அறிவியல் என்பதைப் பிரகடனப்படுத்தியது.

1.10.3 வரலாற்று ஒப்பியல் ஆய்வுமுறையைப் பற்றி ஆறு.இராம நாதன் வெளியிட்டார் (1977). வரலாற்று நிலவியல் ஆய்வு முறை என்னும் இந்த நூல் இவ்வாய்வு முறையின் தோற்றம் வளர்ச்சி குறைநிறைகளைச் சுட்டுவதோடு ஒரு கதையின் 25 வடிவங்களும் ஆராயப்பட்டு மூலவடிவம் மீட்டுருவாக்கம் செய்யப்படுகின்றது. இவ்வகையிலும் எம்.பி. எமனோ, வ.ஐ. சுப்பிரமணியன், பெ. சுப்பிரமணியன், ஆ.சுப்பிரமணியன் ஆகியோர் ஒரு கதையின் பல்வேறு வடிவங்களைச் சேகரித்து, பரவி, நகர்ந்து, பல திரிபுகள் அமைவதை விளக்கியுள்ளனர். ஆலன்டண்டீஸ் இம்முறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவற்றைக் களைந்து இம்முறையை நாட்டுப்புறவியல் ஆய்வுக்குப் பயன்படுத்தலாம்.

1.11 முடிவுரை

இந்திய விடுதலைக்குப்பின் தமிழில் நாட்டுப்புறவியல் ஆய்வு சிறிது சிறிதாக எழுச்சி பெற்று, எண்பதுகளில் உச்ச நிலையை அடைந்திருப்பதைப் பல்வேறு பரிமாணங்களை அடிப்படையாக வைத்து உணரலாம். முதுகலையில் பாடத்தாள்-முதுகலைப்பட்டம், எம்ஃபில் மற்றும் முனைவர் பட்டங்களுக் குரிய ஆய்வுப்பொருள்-தனிக்கழகங்கள், தனியிதழ்கள், தனிக் கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிப்பட்டறைகள் ஆகியவற்றை ஏற்ற ஓர் அறிவு / கல்விப் புலத்திற்குரிய அனைத்துச் செயல் பாடுகளையும் பெற்று நாட்டுப்புறவியல் நிலைபெற்றுள்ளது. இனி, தொண்ணூறுகளில்-இரண்டாம் மில்லினியத்தின் இறுதிப் பத்தாண்டுகளில் தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் செல்நெறிகள் அல்லது போக்குகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் காணலாம்.

2. நாட்டுப்புற இலக்கியம்

2.0 முன்னுரை

நாட்டுப்புற வழக்காறுகளில் ஒன்று இலக்கியம். இன்றைய வரி வடிவ இலக்கியங்களுக்கெல்லாம் அடிப்படையாக, ஆணி வேராக அமைவது வாய்மொழி இலக்கியமாகும், எழுத்தறிவு அற்ற மக்களால் தலைமுறை தலைமுறையாக, மரபு வழியாகப் பரப்பப் பெற்று வரும் இலக்கியம் நாட்டுப்புற இலக்கியம் ஆகும். இந்த இலக்கியத்தைப் பற்றிப் பேராசிரியர் பீட்டர் கிளாஸ் (தி இந்து, மார்ச்-8, 1987) 'பழமையானது, எளிமையானது, மாசற்றது, நேரிடையானது, சக்தி வாய்ந்தது மற்றும் மக்களுடையது என்று குறிப்பிடுகின்றார். நாட்டுப்புற இலக்கியத்தில் அடங்குவன பாடல்கள், கதைப்பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள். இவற்றைப் பற்றிய ஆய்வின் போக்குகள் சென்ற பத்தாண்டுகளில் எவ்வாறு அமைந்தன என்பது பற்றி இவ்வியலில் காணலாம். எழுபது, எண்பதுகளில் தொடங்கிய சில ஆய்வுகள் மீண்டும் இக்கால கட்டத்தில் தொடர்கின்றன. பரந்துபட்ட தமிழ் இலக்கியத்தில் நாட்டுப்புற இயலின், இலக்கியத்தின் செல்வாக்குப் பற்றிக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன. திருவருட்பாவில் நாட்டுப்புற இலக்கியங்களும் சகிப்புத்தன்மையும் (1996), நாட்டுப்புறவியல் கூறுகள் (1992), நாட்டுப்புற இலக்கியங்களும் சகிப்புத் தன்மையும் (1996), நாட்டுப்புறப்பாடலும் இலக்கியமும் (1996), வைரமுத்துவின் கவிதைப்பாடல்களில் நாட்டுப்புற செல்வாக்கு (1996), எட்டிலக்கியத்தில் எழுதா இலக்கியத்தின் செல்வாக்கு (1996), சங்கப் பாடல்களில் நாட்டுப்புற இலக்கிய வெளிப்பாடு (1998) ஆகிய கட்டுரைகளை இங்குச் சுட்டிக் காட்டலாம். இவையெல்லாம் மேற்போக்காக அமைந்த விளக்கவியல்

கட்டுரைகளாகும். வாய்மொழி இலக்கியத்தில் எதிர்ப்புக்குரல்கள் (1994), நாட்டுப்புற அழகியல், எதிர் அழகியல் குறித்த சிந்தனைகள் (1995) ஆகியவை ஆய்வின் புதிய எல்லைகளைத் தலித்திய இயக்கத்தின் தாக்கத்தை இனங்காட்டுபவை.

2.1 பாடல்கள்

தொல்காப்பியம் இலக்கிய வகைகளில் ஒன்றாகப் பாட்டினைக் கூறுகின்றது. பாட்டு ஓசை, வண்ணம், தொடை, அடியளவு ஆகியவற்றைக் கொண்டு ஒழுங்கான அமைப்பைக் கொண்டது. இந்தப் பாட்டுக்கு முன்னோடியாகப் பண்ணத்தி அமைந்திருந்ததை உரையாசிரியர்கள் விளக்கத்திலிருந்து உணரலாம். பண்ணத்தி என்பதுபற்றித் தரும் விளக்கம் நாட்டுப்புறப் பாடல்களையே நமக்கு நினைவூட்டுகின்றது. 'நாட்டுப்புறப்பாடல்கள், இயற்கைப் பாடல்கள், அதுபோல் இயற்கை இலக்கியம், இயற்கை அன்னை தன் முகம் பார்த்துக் கொள்ளத் தேர்ந்தெடுத்த தெளிவான கண்ணாடி நாட்டுப்புறப் பாடல். . . . . நாட்டுப்புறப்பாடல்', தாய்-இதன் சேய்கள் தாம் நாட்டுப்புறக்கலைகள், நாட்டுப்புறக்கதைகள், பழமொழிகள் என்று மே. சுந்தரம் அவர்கள் தரும் விளக்கம் நாட்டுப்புறப்பாடலின் தொன்மையையும், மேன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. நாட்டுப்புறப்பாடல் ஓர் ஊற்று இலக்கியம் என்பதில் ஐயமில்லை. அனைத்து இலக்கிய வகைகளுக்கும் இதுதான் மூல ஊற்று (1981: VII-X)

2.1.1 சேகரிப்பும் பதிப்பும்

இந்திய விடுதலைக்கு முன்னும், பின்னும் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டு வந்துள்ளார்கள். தொண்ணூறுகளில் நாட்டுப்புறப் பாடல்களைப் பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஆய்வாளர்கள் / தனியார்கள் தொகுத்து விளக்கத்துடன் வெளியிட்டுள்ளார்கள். ஆனால் மே.சுந்தரம், நா. வானமாமலை, கோவேந்தன் போன்றோர் வெளியிட்டதைப் போலத் தொகுப்பு நூல்கள் வெளியிடப்பட வில்லை. கவிஞர் கோ.பெ.நா. சேலம் மாவட்டம் கத்திரி மலைச்சாரல்களிலிருந்து தொகுத்த நாட்டுப்புறப்பாடல்கள் (1994) இவண் குறிப்பிடத் தக்கவை. இத்தொகுப்பில் வேடிக்கைப் பாடல்கள், கதைப்

பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், அவலச் சுவை ததும்பும் துன்ப மாலைகள் இடம்பெற்றுள்ளன. பாடல்களை விளக்கி அவற்றின் நயத்தையும் வெளிப்படுத்தி யுள்ளார். இக்காலகட்டத்தில் தாலாட்டும் ஒப்பாரியும் என்ற முனைவர் பட்ட ஆய்வேடு (எண்பதுகளில் சமர்ப்பிக்கப்பட்டது) நூல் வடிவமாக வெளிவந்துள்ளது (1999). சமீபத்தில் செட்டிநாட்டு ஆச்சிகள் பாடிய ஒப்பாரிப்பாடல்களை 'பொங்குதே கண்ணீரு' என்னும் பெயரில் (ஜூலை-2002) பழ. அன்புமீனாள் தொகுத்துத் தரக் காவ்யா சண்முகசுந்தரம் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

நாட்டுப்புறப்பாடல்களின் பொருண்மை, யாப்பு வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் சில கட்டுரைகள் அமைந்துள்ளன. நாட்டுப்புறப் பாடல்களில் மனிதம் (1994), வாணிபம் (1996), பெண்ணுரிமை (1996), அகப்பொருள் மரபுகள் (1994), நாட்டுப் புறப்பாடல்களில் சமுதாய நலச் சிந்தனைகள் (1996), நாட்டுப்புறப் பாடல்களும் விடுதலை வீரர்களும் (1999) ஆகிய கட்டுரைகள் பொருண்மை அடிப்படையில் அமைந்துள்ளன. நாட்டுப்புறப் பாடல்களின் யாப்பு (1999) மற்றும் கரூர் வட்டாரக் கும்மிப் பாடல்கள், காவடிச்சிந்து (1995) பற்றிய கட்டுரைகள் நாட்டுப்புறப் பாடல்களின் புறவடிவத்தையும் அமைப்பையும் ஆராயும் நோக்கில் எழுதப்பட்டுள்ளன. நாட்டுப்புறப்பாடல்களைப் பிராப்பின் அமைப்பியல் நோக்கில் ஆராயும் இரா.வீ.அப்பாத் துரையின் கட்டுரை இங்குக் குறிப்பிடத்தக்கது.

2.1.2 வகைப்பாடு

விடுதலைக்கு முந்தைய காலத்திலிருந்தே, அதாவது நாற்பதுகளிலிருந்து (மு.அருணாசலம்) நாட்டுப்புறப் பாடல்களை வகைப்படுத்தும் முயற்சி காணப்படுகின்றது. சாம்பமூர்த்தி, அன்னகாமு, கி.வ.ஜகந்நாதன், ஆறு. அழகப்பன், ம.கோதண்ட ராமன், ம. வரதராஜன், மே. சுந்தரம், நாசீரலி ஆகியோர் தங்களுக்குக் கிடைத்த நாட்டுப்புறப் பாடல்களின் அடிப்படையில் பல்வேறு வகைகளாகப் பிரித்து விளக்கியுள்ளனர்இவற்றைப் பற்றிய விமர்சனத்தை ஆறு. இராமநாதனின் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் என்னும் நூலில் (1997:61-84) காணலாம். இவர் சூழலை அடிப்படையாகக் கொண்டு 1. தாலாட்டு, 2. குழந்தை வளர்ச்சி நிலைப்பாடல்கள், 3. விளையாட்டுப் பாடல்கள், 4. தொழிற்

பாடல்கள், 5. வழிபாட்டுப் பாடல்கள், 6. கொண்டாட்டப் பாடல்கள், 7. இரத்தல் பாடல்கள், 8.இழப்புப் பாடல்கள் என்னும் எட்டு வகைகளில் பெரும்பிரிவாகப் பிரித்து ஒவ்வொன்றின் கீழும் பல உட்பிரிவுகளைக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரிவுகளும், இந்தப் பாகுபாடும் திருப்திகரமாக இல்லையென்று தான் சொல்ல வேண்டும். எடுத்துக்காட்டாக, காதல் பாடலை இவர் பகுப்பின் படி எதில் அடக்குவது என்று தெரியவில்லை. பெரும்பாலான ஆய்வாளர்கள் பொருண்மையடிப்படையில் நா. வானமாமலையைப் பின்பற்றுவர். ச. வளவன் மழலை, இளமை, முதுமை என்று மனிதப்பருவங்களின் அடிப்படையில் நாட்டுப்புறப் பாடல்களை அடக்க முயல்கின்றார். பாடுவோரை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் இந்த வகைப்பாட்டிலும் குறைபாடு காணப்படுகின்றது. ஆகவே, தமிழகத்தில் கிடைக்கும் எல்லா நாட்டுப்புறப் பாடல்களையும் ஒரே வகைப்பாட்டுக்குள் கொண்டுவர இன்னும் ஆழமான, விரிவான பரிசீலனை தேவைப்படுகிறது. அதுவரைக்கும் அந்தந்த ஆய்வாளர்கள் தங்கள் வட்டாரத்தில் கிடைத்த தரவுகளுக்கு ஏற்ப வகைப்பாடு செய்து விளக்குவதே சரியான முறையாகும்.

2.1.2.1 தாலாட்டு

மனித வாழ்வின் தொடக்கப் பாடலாகத் தாலாட்டைக் கருதுகிறார்கள். தாலாட்டின் செல்வாக்கைச் சங்க காலத்தில் குறிப்பாகவும் பக்தி இலக்கியத்தில் வெளிப்படையாகவும் உணரலாம். இது பிள்ளைத் தமிழில் ஒரு பருவமாக இடம் பெறுவது அதனுடைய சிறப்பை உணர்த்தும். கம்பர் தாலாட்டை 'தாராட்டு' என்று சுட்டுகின்றார். இந்தச் சொல்லாட்சி மலையாளத்திலும் காணப்படுகின்றது. லகர, ரகர மாற்றம் (தாலாட்டு > தாராட்டு) என்பது தமிழ் ஒலிமாற்ற விகுதிக்கு உட்பட்டது. இர.முத்துமாறன் அண்ணா மாவட்டத் தாலாட்டில் காணப்படும் சமுதாயநிலையைப் பற்றி ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளார். இவர் எடுத்துக்கொண்ட அண்ணா (திண்டுக்கல்) மாவட்டத் தாலாட்டில் இறைபக்தியும், மாமன் பெருமைகளும், குழந்தை வருணனைகளும், தொட்டிலின் சிறப்புகளும் மிகுதியாக இடம் பெறுகின்றன. இம்மாவட்டத்தில் தாலாட்டுப் பாடல்களில் தாய்பெரிதும் தம் பிறந்தகத்தின் பெருமைகளை வெளியிடுகின்றார்கள் என்று அவர் கூறுகின்றார்.

இம்மாவட்ட தாலாட்டுப் பாடல்களில் நில அமைப்பு, நிலவளம், சாதிமதப் பிரிவுகள், மிளகைத் தின்று குழந்தை வரம் கேட்டல் போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

மலை ஒதுக்கி பூ எடுத்து எங்கண்ணே, மல்லிகைப்பூ
தொட்டி செய்வோம்
மல்லிகைப்பூ தொட்டியிலே எங்கண்ணே, நீ படுத்
துறங்க வந்த கண்ணோ
செடி ஒதுக்கிப்பூ எடுத்து எங்கண்ணே, செவ்வந்திப்பூ
தொட்டி செய்வோம்
செவ்வந்திப்பூ தொட்டியிலே எங்கண்ணே, நீ
சிரிச்சுறங்க வந்த கண்ணோ
பச்சை தழை முறிச்சு எங்கண்ணுக்கு, பக்கம் ஒரு
பொட்டு வைச்சு
பாப்பார வீதியிலே எங்கண்ணே, பந்தாட அனுப்பி
வப்போம்.

ச.சந்திர குமாரியின் 'தாலாட்டு காட்டும் வறுமையும், செழுமையும்' என்னும் கட்டுரை (1995) பெரியார் மாவட்டத் தாலாட்டுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டது. இம்மாவட்டத்தில் தாலாட்டுப் பாடல்களைத் தொட்டில் பாட்டு, தூரிப்பாட்டு, ஆசுப்பாட்டு என்று வழங்குகிறார்கள். தாலாட்டு என்பது இலக்கிய வழக்காறே தவிர, மக்கள் வழக்காறு அல்ல.

1. *ஏழக் குடிசையில் ஈச்சம் பாய்போட்டு*
கூந்தல விரிச்சே - கண்மணியே தூங்கவைச்சே(ன்)
ஒடஞ்ச சட்டியில ஊறுகாய் தொட்டுக்கிட்டு
ஊட்டினாத்திம்பாயா? உன் ஆத்தால
உதைக்கவும் செய்வாயோ?

2. *மாம போட்ட நகையெல்லா மரக்காம பூட்டிடுவே*
உன் சிவந்த மேனியிலே சிகப்பு கல்ல நா பதிச்சா
திஷ்டி படுமின்னு சொல்லி போடாம வச்சிருக்கே
இடுப்ப சுற்றி அரநாக் கொடி இளைய அண்ண செஞ்சி
வந்தா(ன்)
அடுக்கடுக்க பட்டு சட்டை அடுத்தவனும் கொண்டு
வந்தா(ன்)
நீ அணிந்து மகிழன்னு ஏ அண்ணாமாரு
அணியாவே திரண்டு வந்தார்.

2.1.2.2 சிறுவர் பாடல்கள்

தாய்மார்கள் குழந்தைக்குப் பாடுவது தாலாட்டு. குழந்தைகள் அதாவது பத்து பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் விளையாடும்போது பாடுகின்ற பாடல்களைச் சிறுவர் பாடல்கள் என்று அழைக்கிறோம். அஞ்சலி ராஜசேகரன் (1995) சிறுவர் விளையாட்டுப் பற்றியும் அவற்றில் வெளிப்படும் நையாண்டி பற்றியும் இக்கட்டுரையில் விளக்கியுள்ளார். குழந்தைகள் விளையாடும்போது தனியாகவும், குழுவாகவும் இருவர் உரையாடுவதாகவும் பாடல்களைப் பாடி விளையாடி பொழுது போக்குகின்றனர். விளையாட்டில் ஆட்டம், பாட்டம் மட்டுமின்றிக் கேலியும் கிண்டலும் நிறைந்து காணப்படும்.

1. *கிச்சு கிச்சு தாம்பாலம்*
   கியா கியா தாம்பாலம்
   கள்ளன் வாரான் கதவடச்சிக்கோ

2. *மொட்டப் பாப்பாத்தி*
   முறுக்கு (ரொட்டி) சுட்டாளா(ம்)
   எண்ணெ பத்தலையா(ம்)
   கடைக்குப் போனாளா(ம்)
   காசு பத்தலையா(ம்)
   கடைக்காரனைப் பாத்து
   கண்ணடிச்சாளா(ம்)

2.1.2.3 தொழிற்பாடல்கள்

உழைப்பாளிகள் தொழில் செய்யும் பாடல்களைப் பாடிக் களைப்பை நீக்கிக் கொண்டு உற்சாகத்தோடு வேலையைச் செய்கின்றனர். இப்பாடல் வேலைச் சுமையினைக் குறைக்கவும், சோம்பலை நீக்கவும் பாடப்படுகின்றது. உழவர்கள், மீனவர்கள் மற்றும் பிற தொழிலாளர்கள் தொழிற்பாடல்களைப் பாடுகின்றார்கள். மீனவர்கள் தொழிற்களத்தில் அல்லது கடற்கரையில் பாடும் அம்பாப் பாடல்கள் பற்றி (1998) சு.சக்திவேல் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். அம்பாப் பாடல்களைப் பாடுவோர் செய்யும் தொழில், பொருள் பாடலில் இடம்பெறும் இணைப்பு ஆகியவற்றை வைத்து நான்காக வகைப்படுத்துகின்றார்கள். பாடுவோர் அடிப்படையில் அம்பாப்

பாடல்களைத் தனி அம்பா, குழு அம்பா, எதிர் அம்பா என்று மூன்றாகப் பிரிப்பர். பொருள் அடிப்படையில் அம்பாப் பாடல்களைப் போன்று 1. மீன் பிடித்தல் பற்றிய பாடல்கள், 2. தெய்வம் பற்றிய பாடல்கள், 3. இணை விழைச்சு பாடல்கள், 4. வாழ்க்கைப் போராட்டப் பாடல்கள், 5. புராண இதிகாச வரலாற்றுத் தொடர்புடைய பாடல்கள் என ஐந்தாகப் பிரிக்கலாம்.

எடுத்துக்காட்டு

'வடக்கே நல்ல ஏலேலோ வெகுதூரம்
தென்கிழக்கே ஏலேலோ ராமேஸ்வரம்
வெகுதூரம் ஏலேலோ தோணியேறி
போரோமய்யா ஏலேலோ நடுக்கடலும்
நடுக்கடலும் ஏலேலோ போயிறங்கி'

2.1.2.4 கொண்டாட்டப் பாடல்கள்

கடின உழைப்பிற்குப் பின் பொழுதுபோக்குகளில் மனித மனம் ஈடுபடுகின்றது. கும்மி, கோலாட்டம் போன்றவற்றிலும் பரிகாசப்பாடல்கள் பாடுவதிலும் பொழுது போக்கி இன்பம் அடைகின்றனர். சு.சக்திவேல் மீனவர்களின் கொண்டாட்டப் பாடல்களை (1996) திருமணப்பாடல்கள், பரிகாசப் பாடல்கள், கும்மிப்பாடல்கள் என்று மூன்றாகப் பிரித்து விளக்குகின்றார். மீனவர் பாடும் பரிகாசப்பாடல் ஒன்று பின்வருமாறு.

'எண்ணெ கொடத்துலே எளயுதய்யா ஒங்கருப்பு
தண்ணி கொடத்துலே தளம்புதய்யா ஒங்கருப்பு
கருப்பு கருப்புன்னு கட்டுவார் யாருமில்லே
ஓடைக்கதை மேலே ஓங்குதய்யா ஒங்கருப்பு
கோமுட்டித் தெருவெல்லாம் குதிக்குதய்யா ஒங்கருப்பு
திருவைக்குக்கிழாலே தேயுதய்யா ஒங்கருப்பு
அம்மிக்குக் கீழாலே அரைக்குதய்யா ஒங்கருப்பு'

2.1.2.5 காதற்பாடல்கள்

காதல் என்பது உயிரினங்களின் அடிப்படையான இயல் பூக்கம் ஆகும். மனிதனுக்கு இது பாலுணர்வின் தோற்றுவாயாக அமைந்து வாழ்க்கையில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

இந்தக் காதலைப் பற்றி நாட்டுப்புறப்பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. கோபி வட்டாரக் காதல் பாடல்கள் காட்டும் சமுதாயத்தைப் பற்றி ச.சந்திரகுமாரி (1994) ஆராய்ந்துள்ளார். பெரியார் மாவட்டத்தின் ஒரு பகுதியான வேளாண்மை செழித்து ஓங்கும் கோபி வட்டாரத்தில் காணப்படும் காதற் பாடல்களை ஐந்தாகப் பிரித்து விளக்கியுள்ளார். அவை 1. காதல், காதலி பாடும் பாடல்கள், 2. காதலும், காமமும் பற்றிய பாடல்கள், 3. இல்லறத்தைப் பற்றிய பாடல்கள், 4. தகாத உறவுகள் பற்றிய பாடல்கள், 5. பரத்தமை பற்றிய பாடல்கள்.

காதலன்

கரட்டு மேட்டு மேலே
கண்ஜாடை காட்டும் புள்ள
கட்டழக நானும் வந்தேன்
காரியத்த சொல்லுமடி

காதலி

கண்ணுல நெல்லுப்பட்டு
கண்ண நானு சிமிட்டி வந்தே
முருக்கிவிட்ட மீசைக்காரா
நீ தொட்ட கருத்தப்புள்ள
நின்னு மயங்குறனே.

2.1.2.6 திருமணப்பாடல்

திருமணம் மனித வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைகிறது. இந்த முக்கியமான நிகழ்ச்சி ஒரு சடங்காகக் கொண்டாடப்படுகின்றது. கொங்கு நாட்டுப் பகுதியில் வழக்காற்றில் இருந்து வரும் திருமணம் மங்கல வாழ்த்துப்பாடல் பற்றி சி.சுப்பிரமணியன் ஆராய்ந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும் (1997). இந்த ஆய்வைத் தன்னானே பதிப்பகம் நூலாக வெளியிட்டுள்ளது. பழநி, உடுமலை, கோவை, (நாட்டுப்புறப் பாடல்) தாராபுரம், கோபிசெட்டிபாளையம் வட்டாரங் களிலிருந்து சேகரித்தவை கம்பர் இயற்றியது. கொங்கு வேளாளர் புராண வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு கொங்குநாட்டு வேளாளரின் மரபில் உள்ள மங்கல வாழ்த்துப்

பாடலை விளக்கியுள்ளார். இவரது ஆய்வு கொங்குவேளாளர் மங்கல வாழ்த்துப்பாடல், மங்கல வாழ்த்துப் பாடல் காட்டும் சிறப்புச் செய்திகள், மங்கல வாழ்த்துப் பாடலும் மனித உறவுகளும், திருமணச் சடங்குகள் என்னும் தலைப்புகளில் அமைந்துள்ளது. மங்கல வாழ்த்துப் பாடலின் தொடக்கமாக ஒரு வெண்பா வடிவிலான பாட்டு இடம்பெறுகின்றது. நிச்சய தாம்பூலம் தொடங்கிச் சம்பந்தம் கலக்கும் வரை நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. கொங்கு நாவிதர் இனத்தார் இப்பாடலைப் பாடுகின்றார்.

நல்ல கணபதியை நாம் காலமே தொழுதால்
அல்லல் வினையெல்லாம் அகலுமே சொல்லரிய
தும்பிக்கை யாத் தொழுதால் வினைதீரும்
நம்பிக்கை உண்டே நடக்கு வினாயகரே
. . . .
. . . .
குதிரையுடன் பல்லக்கு குறையாத செல்வம்
ஆல்போல் கிளைகிளைத்து அருகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் கிளைகிளைத்து முசியாமல் வாழ்ந்திருக்க
மாப்பிள்ளையும் பொண்ணும் மணவாளன் வாழி
தேடும் சம்பந்தம் சீர்பெற வாழி
கேட்ட பெரியோர்கள் கிளைகோத்தரமாய் வாழ்ந்திருக்க
வாழியோர் வாழி
மலைமேலிருக்கும் அந்தமாது தெய்வானையோர் வாழி
விக்னீஸ்வரன் துணை.

-(வீரபண்டிதர், மாமரத்துப்பட்டி,
தாராபுரம் வட்டம்)

2.1.2.7 ஒப்பாரிப்பாடல்

மனித வாழ்வின் இறுதிச் சடங்கில் இடம் பெறுவது ஒப்பாரிப்பாடல். இறந்தவரை நினைத்து அவரை மற்றவர்களோடு ஒப்பிட்டு அவரது பெருமைகளைச் சிறப்பித்துச் சொல்லி அழுவது ஒப்பாரிப் பாடலின் நோக்கமாகும். கல்லாதவர்களின் 'கையறு நிலைப் பாட்டு' ஒப்பாரியாகும். ஒப்பாரிப் பாடல்களைத் தொகுத்துக் 'கண்ணீர்ப் பூக்கள்' 'கண்ணீர் வயல்கள்' என்ற பெயர்களில் எழுபது / எண்பதுகளில் வெளியிட்டனர். இம்முயற்சி சிறிய அளவில் பாவண்ணன் (புதுச்சேரி

ஒப்பாரிப்பாடல்கள், 1998) மா. சுப்பிரமணியன் (குருவிகுளம் வட்டார ஒப்பாரிப்பாடல்கள், 2000) ஆகியோர் தொகுத்துத் தன்னானே இதழ்களில் வெளியிட்டுள்ளனர்.

1. *நெய்யூத்திப் பாத்தி கட்டி*
நெல்லிமரம் நட்டு வச்சேன்
நெல்லி நிழலாகுமா
நெனச்சவங்க தாயாகுமா
பாலூத்திப் பாத்தி கட்டி
பாக்குமரம் நட்டு வச்சேன்
பாக்கு நிழலாகுமா
பாத்தவங்க தாயாகுமா

-(சிவசாமி, 50, வன்னியர், ரெட்டியார் பாளையம், புதுச்சேரி)

2. *குத்தாலம் போனதிலே*
கொடிமரத்தை தொட்டதிலே
கொடிமரத்தை தொட்டதாலே
குழந்தை மத்துவமோ?
பாவநாசம் போனதிலே
பால்மரத்தைத் தொட்டதிலே
பால்ரமரத்தைத் தொட்டதாலே - ஏ
பால் மகனும் மத்துவமோ?
திருச்செந்தூர் போனதிலே
திருநீற்றைத் தொட்டதிலே
திருநீற்றைத் தொட்டதிலே
தீட்டுப் பிடிச்சதோ?

- (கோட்டையம்மாள், 35, பள்ளி, குருவிகுளம், நெல்லை மாவட்டம்)

ச.ருக்மணியின் 'ஒப்பாரிப் பாடல்களில் சமூகப் பிரச்சனைகள், என்னும் கட்டுரை பொதுநிலையில் அமைகின்றது.

2.2 கதைப்பாடல்கள்

கதையை எடுத்துரைக்கும் பாடல் கதைப்பாடல் ஆகும். கதைப்பாடல் தனியாகவோ குழுவாகவோ பாடுதற்கு உரியது; ஆட்டத்தோடும் கதைப்பாடல் சொல்லப்படுவதும் உண்டு. கதைப்பாடல் வில்லுப்பாட்டு என்னும் நிகழ்கலையாக

மாறுவதும் உண்டு. கதை, மாலை, குறம், அம்மானை, கும்மி, கூத்து, சிந்து, வில்லுப்பாட்டு, பூசாரிப்பாட்டு, லாவணி என்ற பெயர்களில் கதைப்பாடல்கள் கிடைக்கின்றன. "ஒரு நாட்டில் வழங்கி வரும் கதைப்பாட்டுகள் அந்த நாட்டின் சட்டங்களை விட முக்கியமானவை" என்று அண்ட்ரூஸ் பிளெச்சர் கூறுவர். இந்திய தேசிய விடுதலையிலும், சமூக மறுமலர்ச்சியிலும் பக்தி உணர்வை வளர்ப்பதிலும் பொழுதுபோக்காக அமைவதிலும் கதைப்பாடல்கள் சிறந்த சேவை புரிந்து வருகின்றன. இதன் தன்மை / இயல்பு, வடிவம் / அமைப்பு, பாடும்முறை, உள்ளடக்கம், யாப்பு உத்தி, கிளைக்கதை ஆட்சி, வட்டார வழக்குச் சொற்கள், கதைப்பாடல் மரபுகள் குறித்து நாட்டுப்புற ஆய்வாளர்கள் தம் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். ஏ.என். பெருமாளின் 'தமிழ்க் கதைப் பாடல் ஆய்வு' பலராலும் படிக்கப் பட்ட பாராட்டுதலைப் பெற்ற விளக்கவியல் ஆய்வு நூலாகும்.

2.2.1 சேகரிப்பும் பதிப்பும்

1863-இல் கருணானந்த சுவாமிகளால் 'பவளக் கொடி மாலை' என்ற கதைப்பாடல் முதன்முதலில் பதிக்கப்பட்டது. பின்பு புகழேந்தி பெயரில் எழுதப்பட்ட கதைப்பாடல்கள் வெளியிடப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து ஏட்டுச்சுவடி களிலிருந்து படியெடுத்துக் கதைப்பாடல்கள் பதிக்கப்பட்டன. வாய் மொழியாக வழக்கில் இருந்த கதைகளையெல்லாம் தொகுத்து ஆய்வுக்குறிப்புகளோடு வெளியீடு செய்யப்பட்டன. ஏ.என். பெருமாளின் நூலில் 240-க்கு மேற்பட்ட கதைப்பாடல்கள் பதிப்பும் வெளியீடும் செய்யப்பட்டதை அறியலாம். இம்முயற்சி தொண்ணூறுகளிலும் தொடர்ந்து நிகழ்ந்தது. செங்கிடாக்காரன் கதை (1994) தோட்டுக்காரி அம்மன் கதை (1995) தாதரம்மன் கதை (1998) மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல் (1999) மலைச்சாமி குன்றுடையான் (1997) பார்வதியம்மன் கதை ஆகிய கதைப்பாடல்கள் இக்காலகட்டத்தில் வெளிவந்த குறிப்பிடத்தக்க கதைப்பாடல்களாகும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட சின்னணைஞ்சான் கதை, அரவமுத்து வீரன் கதை, தடிவீரசுவாமி கதை, வன்னியராயன் கதை ஆகிய நூல்கள் ஆய்வாளர்களின் கவனத்தைக் கவர்ந்த கதைப் பாடல்களாகும்.

தி. நடராசன் கண்ணகி கதையின் சிறப்பையும் தேவையையும் உணர்ந்து, தாம் பதிப்பித்த "கோவலன் கதை" கதைப்பாடலை மீண்டும் புதிய மறுப்பதிப்பாகக் கொண்டு வந்துள்ளார் (2001). இதைப்போல காவ்யா சு. சண்முகசுந்தரம் தான் முன்பு வெளியிட்ட கதைப் பாடல்களை ஒரே தொகுப்பாக ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் கொண்டுவந்துள்ளார் (2001). ஆந்திர யாதவர் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ள காட்டமராஜன் கதை (1998) என்னும் தெலுங்குக் காவியத்தை இரு பாகங்களாகத் தமிழில் மொழி பெயர்த்து கிரிபிரகாஷ் ஒப்பியல் (நாட்டுப்புற) இலக்கிய ஆய்வுக் களம் அமைத்துத் தந்துள்ளார்.

2.2.1.1 வெள்ளையம்மாள் கதைப்பாடல் (1991)

சிலப்பதிகாரக் கண்ணகியைப் போலக் கொங்கு நாட்டில் காங்கேயன் பகுதியில் வெள்ளையம்மாள் போராடி வெற்றி பெற்றார். இந்த நிகழ்ச்சியைக் கண்ணாடி பெருமாள் என்பவர் நாட்டுப்புறக் கதைப்பாடலாகப் பாடியுள்ளார். இக்கதைப் பாடலை, தாராபுரம் வட்டமலைப் புதுப்பாளையத்தைச் சேர்ந்த காமதேனு துரைச்சாமி என்பவர் பதிப்பித்துள்ளார். வெள்ளையம்மாளுக்குத் தனிக் கோயில் காடையூர் காடேஸ்வரர் கோயிலில் உள்ளது. முழுக்காது குளத்தார் தங்கள் தாய் என்று கூறி வழிபட்டு வருகின்றனர். இக்கதைப்பாடல் இந்து, முஸ்லீம் ஒற்றுமைக்கு மிகவும் உதவும் பாடலாகும். தமது சகோதரர்களால் ஏமாற்றப் பட்ட, வஞ்சிக்கப்பட்ட வெள்ளையம்மாள் தன் கணவருக்குக் கொடுக்க வேண்டிய நிலத்தை, இஸ்லாமிய படைத்தலைவர் சர்தார் என்பவரிடம் எடுத்துரைத்து நீதிக்காகப் போராடுகின்றாள். நாட்டார் சபை முன்பாக வெள்ளையம்மாள் மூன்று வகையான சத்தியம் செய்து அம்மூன்றிலும் தமது தெய்வீகக்கற்பின் ஆற்றலால் வெற்றி பெறுகின்றாள். வெள்ளையம்மாளின் நான்கு மக்களுக்கும் நிலச் சொத்துகளைக் கொடுத்து விட்டுச் சேடகுலத்தார் அவ்வூரை விட்டுப் போய் விடுகின்றனர். வெள்ளையம்மாளைப் பற்றிய குறிப்பு மெக்கன்சி ஆவணத்திலும், காடையூர் சேடகுலத்தான் பற்றிக் கொங்கு மண்டலச் சதகத்திலும் காணப்படுகின்றது.

2.2.1.2 கோவலன் சரித்திரம் (1992)

கேரளத்திலுள்ள இடுக்கி மாவட்டத்தில் - தமிழகத்தை ஒட்டியுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வாழும் மன்னான் என்னும் பழங்குடி மக்களின் வாய்மொழியாக வழங்கி வரும் நாட்டுப்புற இசைக் கூத்து வடிவத்தில் காணப்படும் கோவலன் சரித்திரத்தை முதன் முதலாகப் பதிவு செய்து நூலாக வெளியிட்டுள்ளார் பீ. டாக்டர் நசீம்தீன். இந்நூலில் கோவலன் சரித்திர இசைக்கூத்துக் கதைப்பாடல் தவிர, இது தொடர்பான நான்கு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் முன்பகுதியில் சேர்த்துள்ளார். கட்டுரைகளில் இக்கூத்துக் கதை பற்றியும், இதை ஒத்த பிற கோவலன் கதைப்பாடல்களின் நாட்டாரியல் தன்மைகள், கதை வேறுபாடுகள் பற்றியும் பல கோணங்களில் நன்கு ஆராய்ந்து விளக்கியுள்ளார். இறுதியில் பொருளகராதியும் உள்ளது. இது இசைக்கூத்து (பள்ளு / குறவஞ்சி) அல்லது தெருக்கூத்து ஒத்த அமைப்பைக் கொண்டது. குழுநடனமாக நிகழ்த்தப்படுகின்றது. இக்கதைக் கூத்து மதுரை மாவட்டச் சமவெளிப் பகுதியிலிருந்து இடுக்கிப் பகுதிக்கு நகர்ந்து பரவியிருக்கலாம் என்று ஆய்வாளரால் ஊகிக்கப்படுகின்றது. அல்லது கதையுடன் வந்து மன்னான் மக்கள் குடியேறியிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது. இது 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கதைப்பாடல் ஆகும்.

2.2.1.3 ஆந்திரமுடையார் கதைப்பாடல் (1992)

இக்கதைப்பாடலின் தலைவனான 'ஆந்திரமுடையார்' மாடான் நாடாருக்கும் பொன்னிலங்கிக்கும் மகனாகப் பிறந்தார்; உறவுப் பெண்ணொருத்தியை மணம் முடித்தார். அப்பெண் வேட்டைக்குச் சென்று திரும்பிய ஆந்திரமுடையாரை மதிக்காதிருந்தமையால், மிதியடியால் எறிந்து கொன்று விட்டார். பின்னர், வள்ளியூர் சென்று அங்குள்ள மடத்தாண்டியின் மகளான சின்னம்மையை மணம் புரிந்து மகிழ்ந்திருக்கும் வேளையில், வடநாட்டுத் திருடர்கள் வள்ளியூரைக் கொள்ளையடித்தனர். இதைக்கண்ட ஆந்திரமுடையார் வல்லயமும் ஈட்டியும் எடுத்துக் கொண்டு, திருடர்கள் களவாடிய நகைகள், துணிமணிகள், பணம் முதலியவற்றை மீட்டார். அத்துடன் அவர்கள் களவாடிச் சென்ற

ஆநிரைகளையும் மீட்டு, அக்கொள்ளையரை ஊரை விட்டே விரட்டினார். மக்கள் ஆந்திரமுடையாரை வியந்து பாராட்டிப் பரிசுகள் வழங்கினர்.

2.2.1.4 அண்ணன்மார்சுவாமி கதைப்பாடல்

இது கொங்கு நாட்டில் மூலை முடுக்கெல்லாம் பாடப் படுகின்ற - காப்பிய வீச்சினைக் கொண்ட பெருங்கதைப் பாடலாகும். இக்காப்பியத் தலைவர்கள் கொங்கு வேளாளர்களின் குலதெய்வமாகவும் கருதப்படுகின்றார். அண்ணன்மார் எனப்படும் பொன்னர் சங்கர் கதைப்பாடல் கொங்கு வேளாளரிடையே பரவியுள்ளது. சக்திக்கனல் அண்ணன்மார்சுவாமி கதையை முதன் முதலில் வெளியிட்டார். இந்தக் கதையை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து 'அண்ணன்மார்கதை ஒரு தமிழ் வாய்மொழிக் காப்பியம்' என்ற தலைப்பில் சென்னை ஆசியவியல் நிறுவனம் 1991-ஆம் ஆண்டு தனது வெளியீடாகக் கொண்டு வந்தது. இக்காப்பியத்தை இரண்டு தொகுதிகளாகச் சுமார் 800 பக்க அளவில் அசல் தமிழ் வடிவம் இடது பக்கத்திலும், ஆங்கில வடிவம் வலது பக்கத்திலும் தரப்பட்டுள்ளது. இந்தக் காப்பியக் கதைப்பாடலைத் தொகுத்தும் மொழி பெயர்த்தும் வழங்கி இருப்பவர் திருமதி. பிரண்டாபெக் என்னும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆய்வாளராவார். இவர் ஓலப்பாளையத்தில் வேறொரு ஆய்வுக்காகத் தங்கியிருந்த போது அண்ணன்மார் கதைப்பாட்டு பாடல் வடிவத்திலும், நிகழ்ச்சி வடிவிலும் நடத்தப்பட்டதைப் பார்த்து அப்பகுதியைச் சேர்ந்த பாட்டுக்காரரைப் பாடச்சொல்லி இருபது நாட்கள் 44 மணி நேரம் ஓடுகின்ற ஒலிநாடாவில் பதிவு செய்தார். இக்கதைப்பாடலைக் காவியமாகக் கருதியுள்ளார். 1989-ஆம் ஆண்டு கலிபோர்னியா பல்கலைக்கழகம் வெளியிட்ட இந்திய வாய்மொழிக் காப்பியங்கள் என்னும் தொகுப்பு நூலில் அண்ணன்மார்சுவாமி கதை இடம் பெறுகின்றது.

2.2.1.5 மாரியம்மன் கதைப்பாடல் (1995)

தமிழகத்தில் மாரியம்மன் வழிபாடு தலைமை சான்ற வழிபாடு. தமிழகத்தில் பெரும்பாலான கிராமங்களில், நகரங்களில் மாரியம்மன் கோவிலைக் காணலாம். தாய்த் தெய்வ வழிபாட்டின் எச்சமாக - நீர்வளமைச் சடங்கின் மரபுக் குறியீடாக

மாரியம்மன் வழிபாடு அமைகின்றது. கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடையது. இத்தகைய வழிபாடு பற்றி நெல்லை மாவட்டம், தென்காசி வட்டத்தைச் சேர்ந்த வில்லுப்பாட்டுக் காரரின் ஓலைச்சுவடியில் காணப்பட்ட மாரியம்மன் கதையை ஆ. தசரதன் பதிப்பித்துள்ளார். மாரியம்மன் பேரில் துதி, அகவல், தாலாட்டு, ஊஞ்சல், கும்மி போன்ற பல பாட்டு வகைகள் சுவடிகளாகவும் அச்சு நூல்களாகவும் கிடைத்தாலும் அவற்றில் கதை அம்சம் இல்லை. பதிப்பிக்கப்பட்ட இந்நூல் கதைச் சொல்லியாக அமைகின்றது. மாரியம்மன் புதுமாரியாகப் பிறவி எடுத்து, வரம்பெற்றுக் கையிலாயத்திலிருந்து தில்லிக்கு வந்து, பின்பு பல ஊர்களுக்கு அம்மை நோயைப் பரப்பிச் செல்வதும், அவளுடன் பல தெய்வங்களும் பூதகணங்களும் செல்வதும், அம்மை நோயால் மக்கள் படும் அவலமும், அந்நோயைப் போக்கி அருளுமாறு அவளை வேண்டுவதுமான கதை அமைந்துள்ளது. இக்கதையின் ஊடே பல தெய்வங்களின் கதைகளும் சுட்டப் படுகின்றன.

2.2.1.6 பொன்னிறத்தாள் கதை (1997)

தமிழகத்தில் கிடைக்கின்ற கதைப்பாடல்களில் மூன்றில் இரண்டு பகுதி குமரி, நெல்லை மாவட்டங்களைச் சேர்ந்தவை. குறிப்பாக, குமரி மாவட்டத்திற்கு 92-க்கு மேற்பட்ட கதைப் பாடல்கள் உள்ளன. ஒரு கதைக்கு இரண்டு வடிவங்களும், சில கதைகளுக்கு மலையாள வடிவங்களும் காணப்படுகின்றன. பொன்னிறத்தாள் கதைக்கும் மலையாள வடிவம் உள்ளது. இக்கதை மிக அபூர்வமாகவே பாடப்படுகிறது. குமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் தம்மத்துக் கோணம் பூச்சிவிளாகம் போன்ற சில கிராமங்களில் முத்தாரம்மன் கோவில்களில் துணைத் தெய்வமாகப் பொன்னிறத்தாள் தெய்வம் இருக்கிறது. பொன்னிறத்தாள் கதையின் ஆசிரியர் உலகுடைய பெருமாள் ஆவார். இக்கதைப்பாடல் 1891-ஆம் ஆண்டிற்கு முற்பட்டது என்று கருதப்படுகிறது. ஏட்டு வடிவத்திலிருந்து இக்கதை பதிப்பிக் கப்பட்டுள்ளது. இக்கதைப் பாடல் இணைசூரன் காதல் பற்றியும், பொன்னிறத்தாள் தெய்வமானது பற்றியும் விளக்குகிறது. பொன்னிறத்தாள் தெலுங்குக்காரி என்றும், இவள் பலி கொடுக் கப்பட்ட பின்பு சிவனிடம் வரம் வாங்கித் தெய்வமாய்க் கோயிலில்

நிலை பெறுகின்றாள் என்றும், நாஞ்சில் நாட்டிலுள்ள நாடார் சமூகத்தினர் இத்தெய்வத்தை வழிபடுகின்றனர் என்றும் பதிப்பாசிரியர்கள் விளக்குகின்றனர். இக்கதைப் பாடல் வில்லுப் பாட்டாக நிகழ்த்தப்படுகின்றது.

2.2.1.7 முத்தாரம்மன் கதை

திருவனந்தபுரம் கேரளப்பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் சுவடிவடிவில் இருந்த இக்கதையை நூலாக்கிப் பதிப்பித்துள்ளார் சூ. நிர்மலாதேவி. இது வில்லுப்பாட்டாக நெல்லை, குமரி மாவட்டங்களில் பாடப்படுகின்றது. பெரிய முத்தம்மன், சின்ன முத்தம்மன் என்னும் இரட்டைப் பெண்கள் சிவனிடம் வரம் வாங்கி நாட்டில் அம்மை நோயைப் பரப்பினர். பின்னர் பட்டபுரத்தில் தெய்வம் ஆகின்றனர். மக்கள் இவர்களை வணங்கி நோயிலிருந்து மீண்டு வாழ்கின்றனர் என்பது தான் கதை. முத்தாரம்மன் பற்றிய பெயராய்வு, அம்மை நோய் தொடர்பான ஆராய்ச்சிக் குறிப்புகள், பரிவாரத் தேவதைகள் பெயர் பற்றிய ஆராய்ச்சிகள் போன்றவற்றை இந்நூலில் காணலாம்.

2.2.1.8 குருக்கேந்திரன் கதைப்பாடல் (1997)

குருக்கேந்திரன் கதைப்பாடல் புராணக் கதைப்பாடல் வகையைச் சேர்ந்தது. இதனை முதன் முதலாக ஏட்டுச் சுவடியிலிருந்து சிவ. விவேகாநந்தன் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இக்கதைப் பாடல் குமரி மாவட்ட நாராயண சுவாமி திருக்கோயில்களில் சிறப்பு வழிபாட்டின் போது வில்லுப் பாட்டாகப் பாடப்பட்டு வருகின்றது. திருமால், அர்ச்சுனன் ஆகியோரின் பெருமைகளைப் பறைசாற்றுகின்றது. இவ்வாய்வு, புராணக்கதைப்பாடல், நாராயணசுவாமி வழிபாடு, கதையாராய்ச்சி, கதைத் தொடர்பு, கதைக்கரு, கதைப் பின்னணி, கதைப்பின்னல், திருப்புமையம், பாத்திரப்படைப்பு, கற்பனை, இயற்கை இறந்த நிகழ்ச்சிகள், புராணச் செய்திகள், உவமைகள், பழமொழிகள், சொல்லாராய்ச்சி, சுவடி பற்றிய வரலாறு என்னும் பல திறத்தில் அமைகின்றது. இக்கதைப்பாடலில் குருக்கேந்திரன் வாழ்க்கை பற்றியோ வரலாறு பற்றியோ எதுவும் குறிப்பிடப்

படவில்லை. இக்கதை நிகழ்ச்சிக்குக் குருக்கேந்திரன் திருமால் மீது துப்பிய சம்பவம் காரணமாக அமைகின்றது. கதைப்பாடல் முழுவதுமே திருமாலுக்கும் அர்ச்சுனனுக்கும் இடையே நடந்த போர் தான் விவரித்துக் கூறப்பட்டுள்ளது. அர்ச்சுனன் குருக்கேந்திரனுக்கு அடைக்கலம் கொடுத்தது. அதனால் திருமாலோடு ஏற்பட்ட பகைமையும் அதன் விளைவாக உண்டான போரையும் விரிவாகக் கூறுவதால், "அருச்சுனன் அடைக்கலம் ஏத்த கதை" என்றும் குறிப்பிடப்படுகின்றது. குருக்கேந்திரன் கதைப்பாடல் மலையாளம் மற்றும் தெலுங்கு மொழிகளில் "கிருஷ்ணார்ச்சுன யுத்தம்" என்ற பெயரில் வழங்குகின்றது.

2.2.1.9 தாதரம்மன் கதை (1998)

தாதரம்மன் கதை என்பது குமரி மாவட்டத்தில் வழங்கி வந்த நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் ஒன்று. இக்கதைப்பாடல் மதுரையம்பதியில் தோன்றிய பெண்மணியாகிய தாதரம்மை என்பவளை மையமாகக் கொண்டு உருவான ஒரு சமூகக் கதைப்பாடல். இது ஆரம்பக் காலத்தில் வில்லுப்பாட்டில் பாடப்பட்டு வந்திருக்கலாம். ஆனால், இக்காலத்தில் அவ்வாறு நிகழ்த்தப்படவில்லை. இக்கதைப்பாடல் பெருமாள்சாமி கோயிலிலிருந்த ஏட்டுச்சுவடியில் இருந்து பதிப்பிக்கப்பட்ட தாகும். இந்நூலில் இருந்த வண்ணமே எதையும் மாற்றாமல் பதிப்பித்துத் தந்திருப்பவர் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் தி. நடராசன். இது போன்று இருபதுக்கும் மேற்பட்ட நாட்டுப்புறப் பாடல்களை ஏட்டிலிருந்து எழுதி யெடுத்து நாட்டுக்கு நல்லதொரு பணி செய்து வருகின்றவர். அன்னாரது சமீபத்துப் பதிப்பு நூல் இது. நாட்டுப்புறச் சமூகக் கதைப்பாடல்களுள் இக்கதைப்பாடல் ஒரு தனித்துவம் கொண்டது. தாதரம்மையின் மகன் - நம்பியின் கொலையும் இதனைத் தொடர்ந்து அவனது குடும்பத்தாரின் தற்கொலைகளும் இக்கதைப்பாடலுக்கு அவல முடிவை வழங்குகின்றன. மற்ற கொலைச்சிந்துகளிலிருந்தும் சமூகக் கதைப்பாடல்களிலிருந்தும் இது மாறுபட்டது. இவர்களின் மரணத்திற்குத் தெய்வாம்சம் வழங்கிக் கோயில் நிறுவப்படாமை இவண் குறிப்பிடத்தக்கது.

2.2.1.10 சின்னணைஞ்சான் கதை, அரவமுத்து வீரன் கதை

சுவடிகளில் உள்ள கூட்டெழுத்து, சங்கிலி எழுத்து, வல்லின, இடையினப் பிழை எழுத்துகள், இலக்கணப் பிழைகள் முதலானவற்றைப் பதிப்பாசிரியர் சு. நிர்மலாதேவி 5-12 பக்கங்களில் எடுத்துக்காட்டியிருப்பது இவரின் சுவடிப் புலமையின் நுண்மாண் நுழை புலமையைக் கோடிட்டுக் காட்டுகிறது. 13ஆம் பக்கம் முதல் 74ஆம் பக்கம் வரையுள்ள ஆராய்ச்சி முன்னுரை, சிந்தித்து எழுதப் பெற்றதாகும். காத்தவராயன் கதை. . . வீரபத்திரன் கதைகளுடன் புராணக் கதைகளையும், ஒப்பிட்டு, இக்கதைச் சுருக்கமும் அரவமுத்துவின் கதைச்சுருக்கமும் காணப் பெறுகின்றன. இவற்றுள், பாத்திரப்படைப்பு, விளக்கங்களும், அரசு மரபினர் பற்றி எழுதிய புலவர்களின் அணுகுமுறைகளும், அக்கால ஜாதி வேறுபாடுகளின் தாக்கம் . . . கழுவேற்ற முறைகள் முதலானவையும் குறிப்பிடத்தக்கவை. பின்னர், மூலச்சுவடிகளின் பாடல்களைப் பிழையின்றி வெளியிட்டுள்ளனர். அவை, தனித்தனி உட்தலைப்புகளுடன் வந்திருப்பது, படிப்போரை எளிமையாகப் புரிந்துகொள்ள வைப்பவை. 599 அருஞ்சொற் பொருள் விளக்கம், 45 நூல்களின் சமூகக் கதைப்பாடல்கள் அகர வரிசைப் பட்டியல், 27 துணை நூற்பட்டியல், சிறப்புச் சொல்லகராதி அனைத்தும் பதிப்பாசிரியரின் பேருழைப்பையும் புலமையையும் புலப்படுத்துகின்றன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அழகாக இந்நூலை வெளிக்கொணர்ந்திருக்கிறது.

2.2.1.11 பார்பதியம்மன் கதை (2000)

புதுதில்லியில் பணிபுரியும் தமிழ்ப் பேராசிரியர் சிவ. விவேகானந்தன் நாட்டுப்புறக் கதைப்பாடல்களுக்கு அச்சுவடிவம் கொடுப்பதில் முன்னணியில் விளங்குபவர். பார்பதியம்மன் வழிபாடு என்னும் கதைப்பாடல் இந்நூலாசிரியரின் ஐந்தாவது வெளியீடாகும். திருவிளையாடற்புராணத்தின் ஒரு கூறான வலைவீசு படலம்தான் இக்கதைப்பாடலுக்கு மூலக்கதையை வழங்கியுள்ளது. வலைவீசியம்மன் கதைப்பாடலும் மேலே உள்ள திருவிளையாடற் புராணக்கதையைத்தான் தழுவி உள்ளதாக நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். பார்பதியம்மன் கதைப்பாடல் 1146 அடிகளில் இயற்றப்பட்டுள்ளது. அச்சில் 41 பக்கங்களில் உள்ளது.

இதற்கான ஆய்வுரை 75 பக்கங்களில் விளக்கமாக எழுதப் பட்டுள்ளது. வில்லுப்பாட்டின் தோற்றம், கதை நிகழ்ச்சிகள், யாப்பும் மொழிநடையும் (தொடைகள், ஒலிக்குறிப்புச் சொற்கள் போன்றவை) சமுதாயச் சிக்கல்கள், வாழ்க்கை முறைகள், சுவடிகளும் பாடவேறுபாடுகளும் ஆகிய தலைப்புகளில் விவரித்துள்ளார். நூலின் இறுதியில் அருஞ்சொற்பொருள் அகர வரிசை 25 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுப் புறக் கதைப்பாடல் வரலாற்றில் இக்கதைப்பாடலும் நூலாசிரியரும் சிறந்த இடத்தைப் பெறுகின்றனர்.

2.2.1.12 காட்டமராஜன் கதை (2001)

தெலுங்கு மொழியிலுள்ள காட்டமராஜன் கதைப் பாடல்கள் தொகுதியின் தமிழ் மொழி பெயர்ப்பாக இந்நூல் அமைகிறது. தெலுங்கு நாட்டார் காப்பியமாகவும் வீரக் கதைப் பாடலாகவும் விளக்குகின்ற காட்டமராஜு கதைப்பாடல் நெல்லூரை ஆண்ட தெலுங்குச் சோழன் நல்ல சித்திக்கும் (கி.பி. 1280-1296) ஆயரினத் தலைவனான காட்டமராஜுவுக்கும் நடந்த போரைச் சித்திரிக்கிறது. பாட்டன் கவுலாவுல கங்குராஜன், தாத்தன் ஆவுல வலுராஜன் தகப்பன் பெத்திராஜன், மகன் காட்டமராஜன் எனக் கொடிவழி முறையாக, நான்கு தலைமுறையினரின் வீரதீரச்செயல்கள் இக்கதைப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ளன. இவ்வீரர்கள் மட்டுமின்றி இவர்களுடன் உறவுடைய போலுராஜன், பக்திரன்னன், அமித்தமராஜன் ஆகிய வீரர்கள் மற்றும் பாப்பநூக, அகுமஞ்சி, எரநூக ஆகிய வீரப் பெண்மணிகளின் வரலாறும் இதில் இடம் பெற்றுள்ளது. பழுமரம் தேடும் பறவை போல் இடம் பெயர்ந்து செல்லும் ஆயர்களின் அரசியல், சமூக, பொருளாதாரப் பண்பாட்டு வரலாறு இக்கதைப் பாடல்களில் அழகுறப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கதைப் பாடல்கள் வட்டமாக (Cycle of Ballads) அமைந்துள்ள இதில் காட்டமராஜுவின் வீரப்பரம்பரை தொடர்பான 32 கதைகள் உள்ளன. இக்கதைகளை ஆந்திரத்தில் கொம்முலவாரு என்ற இனத்தவரும் யாதவர்களில் சுத்துல கொல்லலு தெரசீரபத்தலு என்ற பெயரில் அழைக்கப்படும் இனத்தவரும் வாய்மொழியாகப் பாடி வருகின்றனர். ஆந்திர நாட்டின் கிராமத் தேவதையான கங்கையம்மனுக்கு எடுக்கப்படும்

விழாக்களில் காட்டமராஜன்கதை பாடப்படுகிறது. ஆந்திரத்திலிருந்து நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்திற்கு இடம் பெயர்ந்து குடியேறியுள்ள தெலுங்கு யாதவர்களிடமும் இத்தகைய கங்கையம்மன் வழிபாட்டினையும் காட்டமராஜன் கதை வழக்கினையும் காணமுடிகிறது. மேலும், காட்டமராஜன் கதைப்பாடலில் இடம்பெற்று இன்று மக்கள் வழிபாட்டு மரபிலுள்ள தொனகொண்ட கங்கை போலுராஜன், பொல்லாவு ஆகியோரின் சிலைகள் மற்றும் கோவில்கள் பற்றிய புகைப்படங் களும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. இவை இந்நூலின் தரத்திற்கும் ஆய்வுச் சிறப்பிற்கும் சான்று பகர்கின்றன. ஆயர்களின் வாழ்வியல் சடங்குகளைப் பதிவு செய்திருக்கும் இந்த நூல் இந்திய ஆயர் வரலாற்றில் ஒரு மைல்கல். தமிழகத்தில் குடியேற்றம் கொண்டு தங்களது பண்பாட்டு வேர்களைத் தேடும் தெலுங்கர்களுக்குக் குறிப்பாக ஆயர்குல மக்களுக்கு இந்த நூல் ஒரு வரலாற்றுப் பெட்டமாகத் திகழ்கிறது.

2.2.1.13 ஐந்து கதைப்பாடல் (2001)

இத்தொகுப்பு ஈனமுத்து பாண்டியன் கதை, மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை, சோணமுத்து பாண்டியன் கதை, சிவராம பாண்டியன் கதை, பாலம்மாள் கதை என்னும் ஐந்து கதைப் பாடல்களை உள்ளடக்கியது. இந்த ஐந்து கதைப் பாடல்களும் நெல்லை வட்டார மறவர் சமூகத்தைச் சேர்ந்தவை. இக்கதைப் பாடல்களில் முரணுக்குக் காரணங்களாகப் பெண்ணும், சாதி சார்ந்த களவும், சாதிக்கே உரிய மானமும் விளங்குகின்றன. தேவர் இனத்தோர் பிற இனத்தவரோடும் கொள்கின்ற முரண்பாடுகள், அதனால் விளையும் போராட்டங்கள் இக்கதைப்பாடலின் கருப்பொருளாக அமைகின்றன. இக்கதைப் பாடல்கள் வில்லுப் பாடலாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஈனமுத்து, சோணமுத்து, சிவராமன், மெச்சும் பெருமாள், பாலம்மாள் ஐவரும் கொலை செய்யப்படு கிறார்கள், ஈனமுத்துவுக்கு இது தண்டனை. பாலம்மாளுக்கு இது மானப்பிரச்சனை. சிவராமனுக்கோ பழி வாங்கப்படல் மெச்சும் பெருமாளும், சோணமுத்துவும் போரில் மடிகிறார்கள். மரணமே அவர்களைத் தெய்வமாக்குகின்றது. இக்கதைப் பாடல்கள் சமூக கதைப்பாடல் வகையைச் சேர்ந்தவை.

2.2.2 வகைப்பாடு

கதைப்பாடல்கள் அவற்றின் பெயர், பாடுபொருள், பாட்டின் வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டுப்புற அறிஞர்களால் சில வகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றன. பௌஃகஸ், ஜே.வோனாஸ் என்ற அறிஞர் மந்திரக் கதைப்பாடல், வீரர் கதைப்பாடல், காதலர் கதைப்பாடல், வரலாற்றுக் கதைப் பாடல் என நான்காகப் பகுத்துக் கூறியுள்ளார். தமிழ்க் கதைப் பாடல்களை ஆராய்ந்த நா.வானமாமலை தெய்வீகம், புராணம், சமூகம், வரலாறு என நான்கு வகையாகப் பகுத்துள்ளார். ஏ.என். பெருமாள், தே.லூர்து, ஆறு. இராமநாதன், சு.சண்முக சுந்தரம் கதைப்பாடல்களின் பாகுபாட்டை விவாதித்துள்ளனர். தமிழில் உள்ள கதைப் பாடல்களைப் புராண, இதிகாசத் தெய்வக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாட்ல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள் எனப் பிரித்து ஆராய்ச்சி செய்யலாம். பார்பதியம்மன் கதை, தாதாரம்மன் கதை ஆகியவை முதல் வகைக்கு எடுத்துக்காட்டுகளாகும். காட்டமராஜன் கதை வரலாற்றுக் கதைப்பாடலுக்குச் சிறந்தச் சான்றாகும். தமிழில் தொண்ணூறுகளில் கிடைக்கும் பெரும்பாலான கதைப்பாடல்கள் தெய்வநெறியை மேம்படுத்தும் கதைப்பாடலாகும்.

தொண்ணூறுகளில் கதைப்பாடல்களின் பல்வேறு இயல்புகள் குறித்த ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. கதைப்பாடல் தலைவர்கள், குற்றமும் தண்டனையும், மொழிநடை, சமயப்பொதுமை, இறுதிச்சடங்கு, அமைப்பு, உவமைநயம், அடித்தள மக்களின் சித்திரிப்பு, இலக்கிய மரபு, மேல்நிலையாக்கம் ஆகியன குறித்துக் கட்டுரைகள் அமைந்துள்ளன. வெள்ளையம் மாளின் கதை, நல்லதங்காள் கதை, உடையார் கதைப்பாடல், காத்தவராயன் கதைப்பாடல், கிளியேந்திரராசன் கதை, முத்துப் பட்டன் கதை, புலமாடன் கதை, பெரியண்ணன் - சின்னண்ணன் கதைப்பாடல், மருதநாயகம் பிள்ளை கதை, நீலகண்டன் கதைப்பாடல், சோணமுத்துக் கதைப்பாடல் ஆகியன பற்றிக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பிராப்பின் அமைப்பியல், வாய்மொழிக் கோட்பாடு, சமூகவியல் கோட்பாடு - ஆளுமைக் கோட்பாடு ஆகியன கதைப்பாடல் ஆய்வில் கையாளப் பட்டுள்ளன.

2.2.2.1 சமூகக் கதைப்பாடல்

ஒரு குடும்பத்தில் நிகழும் பாலியல் சிக்கல் அல்லது நிலத்தகராறு சமூகக் கதைப்பாடலின் தோற்றத்துக்குக் காரணமாகிறது. இதுபோல வெவ்வேறு பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு அமைகின்றன. கொங்குநாட்டிலும் மதுரை மாவட்டத்திலும் பல்வேறு வடிவங்களில் வழங்கிவரும் 'பெரியண்ணன் - சின்னண்ணன் கதைப்பாடலை' சு.சக்திவேல் (1994) ஆராய்ந்துள்ளார். பெரியண்ணன், சின்னண்ணன், பெரியண்ணன் மனைவி மூவரும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். தனது தம்பிக்கும் மனைவிக்கும் பாலியல் உறவு இருப்பதாகச் சந்தேகம் கொண்ட அண்ணன் வேட்டையின் போது தம்பியைக் கொல்கின்றான். இதை அறிந்த அண்ணி கொழுந்தனைத் தேடி வந்து பிணத்தைக் கண்டுபிடித்துத் தீமூட்டித் தானும் உடன்கட்டை ஏறி இறந்து விடுகின்றாள். 'அண்ணன் பொண்டாட்டி அரைப்பொண்டாட்டி' என்னும் பழமொழிக்கு ஏற்ற எடுத்துக்காட்டு இக்கதைப்பாடலாகும். இக்கதைப்பாடலில் அண்ணி கொழுந்தனை நேசித்தது அவனோடு உடன்கட்டை ஏறியதும் மறக்க முடியாத உண்மைகளாகும். வேட்டைச் சமுதாய அமைப்பு மாறி நிலவுடைமைச் சமுதாயம் மாறும்போது இவ்வுறவுகளில் சிக்கல் ஏற்படுகின்றது என்பதைத்தான் இப்பாடல் விளக்குகின்றது. 'அண்ணன், தம்பி, அண்ணி, தம்பி மீது சந்தேகம், மான்வேட்டை, தீக்குளிப்பு முதலியவை இராமாயணத்தை நினைவூட்டுவனவாக உள்ளன' என்று ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். கொங்குநாட்டில் நல்லதங்காள் கதைப்பாடல் (2001), மருதநாயகம்பிள்ளை கதைப் பாடல் (2000), காத்தவராயன் கதைப்பாடல் அமைப்பு (1998), கதைப்பாடல்களில் மேனிலையாக்கம் (1996), கதைப்பாடல்கள் வழி அறியலாகும் சாதிப் போராட்டம் (1999), ஆதிக்கத்திற்கு எதிரான அடித்தள மக்களின் கதைப்பாடல்கள் (1999), ஆந்திரமுடையார் கதைப்பாடலில் சமயப் பொதுமை (1995) போன்ற கட்டுரைகள் சமூகக் கதைப்பாடல்களை ஆராய்கின்றன.

2.2.2.2 வரலாற்றுக் கதைப்பாடல்

வெங்கலராசன் கதைப்பாடல் குறுநில மன்னான வெங்கலராசனைப் பற்றியதாகும். இக்கதைப்பாடலை ஆசியவியல்

நிறுவனம் (1988) பதிப்பித்துள்ளது. இக்கதைப்பாடலை சு.தமிழரசி ஆராய்ந்து (1996) ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். இக்கதைப் பாடலில் 'வலங்கையர் வரலாறு' சிறப்பாக இடம் பெற்றுள்ளது. வலங்கையர் சத்திரிய குலத்தினர், கரிகாலன் ஆட்சியில் இடங்கை, வலங்கைப் பிரிவுகள் இருந்ததாக இக்கதைப் பாடல் சுட்டுகின்றது. அக்காலத்தில் நிலவிய நம்பிக்கை, சடங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையும் இக்கதைப்பாடல் எடுத்துரைக்கின்றது. உடையார் கதைப்பாடலில் எடுத்துரைக்கப்படும் மரங்களின் சிறப்பை த.த. தவசிமுத்து எடுத்துக் காட்டியுள்ளார். கி.பி.16ஆம் நூற்றாண்டில் தென்காசியை ஆண்ட ஸ்ரீவல்லபமாற பாண்டியனின் மெய்க்காப்பாளன் மாவீரன் உடையார். இவன் தன்மீது சாட்டப்பட்ட பொய்யான அவதூறுக்கு நாணி கழுவன் திரட்டில் கழுவேறி உயிர் துறந்தார். இவனுடைய பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள வரலாற்றை உடையார் கதை எடுத்துரைக்கின்றது. இவரது கதைப்பாடல் ஏட்டுச்சுவடியிலும் நூல் வடிவிலும் உள்ளது. 50-க்கு மேற்பட்ட மரங்கள் பட்டியலிடப்படுகின்றன. ச.இரவியின் கட்டுரை (1994) ஐவர்ராசாக்கள் கதை, கன்னடியன் போர் போன்ற கதைப்பாடல்களில், தலைவர்களைக் கண்டறிவதில் உள்ள சிக்கல்களை ஆராய்கின்றது.

2.2.2.3 குறுங்கதைப் பாடல்களும் நெடுங்கதைப் பாடல்களும்

கதையம்சத்தையும் அமைப்பையும் வைத்துக் கதைப் பாடல்களைச் சிறுகதைப் பாடல்கள், குறுங்கதைப் பாடல்கள், பெருங்கதைப் பாடல்கள் (காப்பியம்) என மூன்றாகப் பிரிப்பர். சிறுகதைப் பாடல்களின் இயல்புகளைப் பற்றி ஆறு.இராமநாதன் தம் நூலில் ஒரு சிறு கட்டுரையின் மூலம் விளக்கியுள்ளார். (1997:183) கே.ஏ.குணசேகரன் தொகுத்த 'நகர்சார்கதைப்பாடல்கள்' இவ்வகையைச் சேர்ந்தது எனக் கூறலாம். சி.மா.இரவிச்சந்திரன் 'கொங்கு நாட்டுக் குறுங்கதைப்பாடல்கள்' பற்றி ஆராய்ந்துள்ளார். குறுங்கதைப் பாடல்களுக்கு இவர் தரும் வரையறை பின்வருமாறு:

1. ஒரே நாளில், ஒரு சில மணி நேரங்களில், ஒரே அமர்வில் பாடி முடிக்கப்படும்.

2. குறுங்கதைப் பாடல்களுக்குத் தனித்த நிகழ்கலை வடிவங்கள் (கணியான் கூத்து, வில்லுப் பாட்டு, பொம்மலாட்டம்) பெரும்பாலும் இருக்காது.

3. கோயில் சார்ந்து, வழிபாட்டோடு தொடர்புடைய கதைப் பாடல்களாக வழக்கில் இருக்காது.

கொலைச் சிந்து, தற்கொலைச் சிந்து ஆகியன இவ்வகையைச் சேர்ந்தவை. சி.மா. இரவி, (1) சேலம் கன்னங்குறிச்சி கல்யாணிக்கவுண்டன் செய்த கடமையான கோரக் கொலைச்சிந்து (2) ஈரோடு தங்கராட்டு அங்குமுத்து முதலியார் தற்கொலைச் சிந்து (3) பழனி வையாபுரி குளத்தில் ஆறு குழந்தை தாய் ஒன்று ஏழுபேர் மாண்ட தற்கொலைச் சிந்து (4) மம்மட்டியான் கொலைச் சிந்து (5) சூலூர் சுப்பாராவ் கதைப்பாடல் (6) மொட்டையப்பன் கொலைச் சிந்து ஆகிய ஆறையும் இவ்வகையில் உள்ளடக்கிக் கூறியுள்ளார். "கொங்குநாட்டுக் கிராமங்களில் இன்றும் பெருவாரியாக நடந்துவரும் பங்காளிச்சண்டைகளின் பிரதிபலிப்பாகவே இக்குறுங்கதைப் பாடல்கள் விளங்குவதைக் காணலாம்" என்று ஆய்வாளர் கருதுகின்றார். கிளியேந்திரராசன் கதைப்பாடலும் குறுங்கதைப் பாடல் வகையைச் சேர்ந்தது என்பதை ம. மதியழகன் விளக்கியுள்ளார் (1999).

நெடுங்கதைப் பாடல்கள் காப்பியப் பரிமாணத்தைக் கொண்டவை. தமிழகத்தில் வழக்கில் உள்ள பெரும்பாலான நெடுங்கதைப் பாடல்கள் அண்ணன்மார் கதைப்பாடல் போல வழிபாடு, சடங்கு சம்பிரதாயங்களோடு வாழ்ந்து வருகின்றது. அண்ணன்மார் சுவாமி கதையை பிரெண்டா பெக் வாய்மொழிக் காப்பியம் என்று நிரூபித்துள்ளார். கெ.சுப்பிரமணியன் தம் கட்டுரையில் அண்ணன்மார் சுவாமி கதையில் உள்ள காப்பியக் கூறுகளை அலசல் திறனாய்வு செய்து வெளிப்படுத்தியுள்ளார். இராமப்பையன் அம்மானை வாய்மொழிக் காப்பியமாகும் என்பதைத் தே.லூர்து தம் நூலில் விரிவாக எடுத்துரைத்துள்ளார் (1997:210-215) கட்டமராஜன் கதைப்பாடல் வாய்மொழிக் காப்பியம் என்பது நினைக்கத்தக்கது.

2.3 நாட்டுப்புறக் கதைகள்

இந்தியாவைக் கதைகளின் தாயகம் என்று சொல்வார்கள். நினைவிற்கு அப்பாற்பட்ட காலந்தொட்டே இந்தியாவின் பல பகுதிகளில் பல்வேறு கதைகள் வழங்கி வருகின்றன. நம் நாட்டுக் கதைகள் பிற நாடுகளுக்குப் பரவிச் சென்றுள்ளன. தமிழகத்தின்

கிராமப்புறங்களில் தாத்தா-பாட்டிமார்கள் பேரக்குழந்தைகளுக்குப் பொழுதுபோக்காக எடுத்துரைக்கும் வற்றாத கற்பனைச் செல்வங்களாக இன்று பயன்பட்டு வருகின்றன. இக்கதைகளுக்குப் புனிதத்தன்மையும் சடங்கியல் தன்மையும் இல்லாவிட்டாலும் நீதிபோதிக்கவும் நம்பிக்கைகளைப் பாதுகாத்து வைக்கவும் பொழுது போக்கவும் பயன்படுகின்றன. மற்ற நாட்டுப்புற இலக்கிய வகைகளைக் காட்டிலும் இடப்பெயர்ச்சி செய்து பரவும் இயல்பைக் கொண்டவை. வணிகச் செட்டியார்கள் இத்தகைய பணியைச் செய்துள்ளார்கள். இயற்கையின் வளம், பிறப்பு, இறப்பு போன்றவற்றை விளக்குவது பழங்கதைகள் என்கிறார் சர்.ஜேம்ஸ்பிரேஜர். இக்கதைகளை ஃபிராய்டு, யுங் ஆகியோர் உளவியல் அடிப்படையில் விளக்கியுள்ளனர்.

2.3.1 சேகரிப்பும் பதிப்பும்

நாட்டுப்புற வழக்காற்றில் இடம் பெற்றுள்ள இக்கதைகள் காப்பியங்களில் கிளைக்கதைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், உலகெங்கும் 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் கதைகள் அச்சேறத் தொடங்கின. ‘மயில் ராவணன் கதை’ தமிழில் 1867-ஆம்ஆண்டு வீராச்சாமி நாயக்கரால் அச்சேற்றப்பட்ட கதையாகும். இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் இலக்கியங்களிலிருந்து கதைகளைத் தொகுத்துப் பதித்து வெளியிட்டனர். பண்டித நடேசசாஸ்திரி, அ.வெ. நடராசன், அரு. இராமநாதன், வை. கோவிந்தன், கி. ராஜநாராயணன், நா. வானமாமலை ஆகியோரின் பணிகள் குறிப்பிடத்தக்கவை. தெனாலிராமன் கதை, மரியாதை இராமன் கதை, விக்கிரமாதித்தன் கதை போன்ற மக்கள் வழக்கிலுள்ள கதைகள் நூல்வடிவம் பெற்று மீண்டும் மாணவர்களுக்கும் மக்களுக்கும் சென்றன. விடுதலைக்குப் பின் வாய்மொழி வழக்காற்றிலிருந்து கதைகளைத் தொகுத்து ஆராயும் நோக்குப் பரவியது. மாவட்ட / வட்டார அடிப்படையில் தொகுத்து, பகுத்து ஆராயப்பட்டன. சான்றாக, மு. பாண்டியின் ‘திருப்புவன வட்டார நாட்டுப்புறக்கதைகள்’ (1989) என்னும் நூலைக் கூறலாம். இது ஒரு எம்ஃபில் ஆய்வேடாகும். சி.சுந்தரேசன் தஞ்சாவூர் ஓரத்த நாடு வட்டத்தைச் சேர்ந்த கள்ளர் இனத்தவரிடமிருந்து 25

நாட்டுப்புறக்கதைகளைத் தொகுத்து வகுத்து ஒரு நாட்டுப்புறக் கதைகள் தொகுப்பு நூலை (1991) வெளியிட்டுள்ளார்.

2.3.1.1. புதுவை நாட்டுப்புறக் கதைகள்

ஆ.திருநாகலிங்கம், புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்த காலத்தில், ஆய்விற்காகத் தொகுக்கப்பட்ட முதன்மைத் தரவுகளின் ஒரு பகுதியே இந்நூலாகும். புதுச்சேரி வட்டாரத்திலுள்ள ஆறு கொம்யூனியன்களில் உள்ள ஊர்களில் சேகரிக்கப்பட்ட - ஆய்வேட்டின் பின்னிணைப்பில் இடம்பெற்ற 107 கதைகளில் முதல் தொகுதியாக 22 கதைகள் மட்டும் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. இக்கதைகள் தகவலாளிகள் சொன்ன மொழி நடையிலே, அப்படியே எழுதப்பட்டன. அவர்கள் சொன்ன வைப்புகளே கதைத் தலைப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. வட்டார மொழிச் சொற்களைப் புரிந்து கொள்வதற்காகக் கதைச் செய்திகளின் தன்மை அடிப்படையில் விளக்கச் சொற்களும் நூலின் இறுதியில் இடம் பெற்றுள்ளன. நாட்டுப்புறப் பேச்சியல், வாய்மொழி வரலாறு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், ஆராயவும் இக்கதைகள் துணைபுரியும்.

2.3.1.2 நாட்டுப்புறப் பாலியல் கதைகள்

கி.ராஜநாராயணன் 'வயது வந்து வந்தவர்களுக்கு மட்டும்' என்னும் பெயரில் பாலியல் கதைகளை ஒரு தொகுப்பாக வெளியிட்டுள்ளார். இது கி. ராஜநாராயணனும் கழனியூரனும் சேர்ந்து தொகுத்து வெளியிட்ட இரண்டாவது தொகுப்பாகும். இத்தொகுப்பு 25 பாலியல் கதைகளை உள்ளடக்கமாகக் கொண்டது. "இக்கதைகள் நமது முன்னோர்கள் உண்டாக்கித் தந்த சொத்து ... கதைக் கட்டுமானம், கற்பனை, விசயம், மொழிப் பிரயோகம், மொழி லாவகம், மனுசமனம் இப்படி யாவுமே அறிந்து கொள்ள உதவுகின்றன" என்று கிரா. தம் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். "தமிழ்ப் புராணக்கதைகளைப் பாலியல் கதைகளில் தான் காணமுடியும்" என்றும், "பெரும்பாலான கதைகளில் அரசனின் மனைவியும் அரசனின் மகளுமே பாலியல் கேலிக்குள்ளாகுகின்றனர்" என்றும், கள்ளக் கணவனும் கள்ள மனைவியும் தமிழ் நாட்டார் கதைகளில் மட்டுமல்லாது, உலகெங்கும் சொல்லப்படும் கதைகளிலும் வருகின்றனர். ஆனால்

மற்ற மொழிகளைவிட இத்தகைய கதைகள் தமிழில் ஏராளமாக காணப்படுகின்றன" என்று தே.லூர்து தம் அணிந்துரையில் குறிப்பிடுகின்றார். நாட்டுப்புறக் கதைகளில் உயர்வு, தாழ்வு என்ற விழுமியம் தேவையில்லை.

2.3.2 வகைப்பாடு

நாட்டுப்புறக் கதைகளை ஆய்வாளர்கள் பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளனர். பெரும்பாலான நாட்டுப்புறவியல் அறிஞர்கள் மனிதக்கதைகள், மிருகக்கதைகள், மந்திரக் கதைகள், தெய்வக் கதைகள் என்று பாகுபாடு செய்துள்ளனர். கதைக்கூறுகளை (motif) ஆராய்ந்த ஸ்டித் தாம்ஸன் அவற்றின் அடிப்படையில் 12 வகைகளாகக் குறிப்பிட்டுள்ளார். சிலர் கதை (Tale), நீதிக்கதை (Fable), புராணக்கதை (Myth) பழமரபுக் கதை (Legend) என்ற பாகுபாட்டை முன்மொழிந்துள்ளனர். புராணக் கதைகளை உலகவிளக்கக்கதை, விலங்குக்கதை, வீரநிலைப் புராணக்கதை என்று பாகுபாடு செய்கின்றனர். மனிதக்கதைகளை (1) காதல் கதைகள் (2) விகடக்கதைகள் (3) உல்லாசக் கதைகள் (4) வேடிக்கைக்கதைகள் (5) நீதிக்கதைகள் (6) பிரயாணக் கதைகள் என்று பகுத்துரைப்பர். சிலர் கதை சொல்லும் நேர அளவை வைத்து நான்கு வகையாகக் (நொடிக்கதைகள், சிறுகதைகள், நெடுங்கதைகள், கிளைக்கதைகள்) கூறுவர்; வேறு சிலர் கதை சொல்லும் முறையால் ஐந்து வகையாகக் (சபையில் சொல்லல், இருவர் மட்டும் தனியாகக் கூறல், குழந்தைகளுக்குப் பெரியோர்கள் கூறல்) குறிப்பிடுவதும் உண்டு. ஆகவே, நாட்டுப்புறக் கதைகளைக் கதைமாந்தர், கதைக்கரு, வடிவ அமைப்பு, சொல்லும் உத்தி, கதை சொல்வோர் - கேட்போர், கதைக்கூறுகள், சுவைகள், பயன்பாடு போன்ற பல காரணிகளின்/ கூறுகளின் அடிப்படையில் வகைப்பாடு செய்யலாம்.

தமிழ் நாட்டுப்புறக் கதைகள் பல்வேறு அணுகுமுறைகளில் ஆராயப்பட்டுள்ளன. உளவியல் பார்வை, அமைப்பியல் ஆய்வு எதிர்வு அமைப்புமுறை, உடல்மொழி, பெண்ணிய நோக்கு, வரலாற்று நிலவியல் முறை ஆகிய கோணங்களில் ஆராயப் பட்டுள்ளன. குடும்ப உறவுகள், கள்ள உறவுகள் பற்றிய கதைகள் ஆராயப்பட்டுள்ளன. திருப்புவனம், புதுச்சேரி, நெல்லை

ரெட்டியார்பட்டி பகுதிகளில் வழங்கும் கதைகள் குறித்து ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. பாலியல் கதைகள், காவடி பற்றிய கதைகள், நீதிக்கதைகள், காரணக்கதைகள், குழந்தைக் கதைகள், மீனவர் கதைகள், முஸ்லீம் பெண்களின் கதைகள் ஆகியவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு பல்கலைக்கழகங்களில் அம்மாவட்டங்களை / வட்டாரங்களைச் சேர்ந்த நாட்டுப்புறக் கதைகள் முனைவர் பட்ட ஆராய்ச்சிக்கு முதன்மைத் தரவுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2.4 பழமொழி

பழமொழிகள் மக்கள் அனுபவத்தின் சாரமாகும் - அறிவுரை முத்துகளாகும். பேச்சுக்குச் சுவையூட்டி அர்த்தமுள்ள தாக்குபவை பழமொழிகள். இவை உலகப் பொதுமை உடையவை. படைப்பாளரின் பெயர் அறியாதவை. காலத்திற்கு ஏற்ப மாறும் இயல்புடையவை. "பழமொழிகள் அறிவின் வளர்ச்சியிலே பிறப்பவை. சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய சிறப்புகளால், நாள்தோறும் இறந்து கொண்டிருக்கும் இவ்வுலகில், என்றும் இறவாமல் வாழ்கின்றன' என்று கிரேக்கத் திறனாய்வாளர் அரிஸ்டாட்டில் கூறியுள்ளார். தமிழில் தொல்காப்பியர் இதன் இலக்கணத்தைப் பின்வருமாறு வரையறுத்துள்ளார்.

"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
எண்மையும் என்று இவை விளங்கத் தோன்றி
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப"

இந்நூற்பாவில் தொல்காப்பியர் பழமொழியில் இருக்க வேண்டிய ஏழு கூறுகளை வலியுறுத்தியுள்ளார். இவர் பயன்படுத்திய முதுமொழி மற்றும் முதுசொல் சங்ககாலத்துக்குப் பின் வழக்கு இழந்து பழமொழி என்னும் சொல் பயன்படத் தொடங்கியதை வரலாற்றில் அறியலாம். பழமொழிகளின் இயல்பு குறித்து தே.லூர்து பதினாறு இயல்புகளைச் சுட்டிக்காட்டியுள்ளார் *(197:270).*

2.4.1 சேகரிப்பும் பதிப்பும்

பதினெண் கீழ்க்கணக்கு நூலில் ஒன்றான முன்றுரை அரையனார் என்பவரை முதல் தொகுப்பாளர் என்று சொல்ல வேண்டும். 1919-இல் கேரள மாநிலத்தில் உள்ள சித்தூர் என்ற ஊரிலிருந்து 500 பழமொழி கொண்ட ஓர் ஓலைச்சுவடி கிடைத்தது. இதுதான் நமக்கு இருபதாம் நூற்றாண்டில் கிடைத்த அதிக எண்ணிக்கையுள்ள முதல் திரட்டு நூலாகும். இதற்கு முன் பி.பெர்சிவல் என்ற கிறித்தவப் பாதிரியார் 6000 பழமொழிகளைக் கொண்ட ஒரு நூலை (1874) வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது. இருப்பினும் 1912-இல் எஸ். அனவரத விநாயகம் பிள்ளையால் பதிக்கப்பட்ட 12,270 பழமொழிகளைக் கொண்ட பழமொழி அகராதியே அதிக எண்ணிக்கையைக் கொண்ட பழமொழித் தொகுப்பாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டே சைவ சித்ததாந்த நூற்பதிப்புக்கழகம், வானதி பதிப்பகம் ஆகியவை பழமொழிகளை அகரவரிசைப் படுத்தி வெளியிட்டன. இம்முறையிலேயே பூங்கொடி பதிப்பகத்தின் வாயிலாக ஆர்.ஜெயக்குமார் 1400-க்கு மேற்பட்ட பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இது ஒரு பொதுமக்களுக்குரிய பதிப்பாகும். தொண்ணூறுகளில் அறிவூட்டும் பழமொழிகள் (1992), புதிய நோக்கில் பழமொழிகள், பண்பை வளர்க்கும் பழமொழிகள் (1992), பழமொழிகளும் கருத்துகளும் (1994), அறிவியல் நோக்கில் தமிழ்ப் பழமொழிகள் (1998), தமிழ் நாட்டுப் பழமொழிகள் (2000) ஆகிய நூல்கள் பழமொழிகள் பற்றி வெளிவந்தவை.

2.4.2 வகைப்பாடு

ஆரம்பக் காலத்தில் பழமொழிகளை அகர வரிசைப் படுத்தித் தந்தார்களே தவிர வேறு எந்த வகைப்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. அளவு, பொருள், அகர வரிசை, அமைப்பியல், பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம் என்று சு.சக்திவேல் கூறியுள்ளார் (1983:79). தமிழ் பழமொழி இலக்கியம் என்ற நூலை எழுதிய எஸ். சௌந்தர பாண்டியன் 1. உணர்வு, 2.தத்துவம், 3. பொருள் என்ற மூன்றன் அடிப்படையிலும் அல்லது புதுப் பழமொழிகள், வட்டாரப் பழமொழிகள் என்று இரண்டாகப் பிரித்தும் ஆராயலாம் என்று

குறிப்பிடுகின்றனர் (1988:233-34). மேலை நாட்டு அறிஞர்கள் சுமித், ரோஜர், டி. ஆபிரகாம், ஆலன்டண்டீஸ் ஆகியோர் வெவ்வேறு வகையாகப் பழமொழிகளை வகைப்படுத்து கின்றார்கள். ஆலன்டண்டீஸ் அமைப்பின் அடிப்படையில் கீழ்க்காணுமாறு மூன்றாகப் பகுக்கின்றார்.

1. எதிரிடை இல்லாதது (Non-oppositional) > சமமாக்கல் (equational).
2. எதிரிடை (oppositional)
3. எதிரிடை இல்லாததும் எதிரிடையும் (Non-oppositional and oppositional).

எனவே பழமொழியின் கருத்து மற்றும் அமைப்பு அடிப்படையில் பழமொழிகளை வகைப்பாடு செய்து ஆராயலாம்.

2.4.2.1.

சாலை இளந்திரையன், வி. பெருமாள், தே. லூர்து, ம. மீனாட்சி சுந்தரம் ஆகியோரைத் தொடர்ந்து முதுகலை இளம் முனைவர் பட்டங்களுக்குப் பழமொழியை ஆய்வுப் பொருளாக மாணவர்கள் தேர்ந்தெடுத்து ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகிறார்கள். அ. துரைப்பாண்டியன் பரமக்குடி வட்டாரப் பழமொழிகள் பற்றி எம்ஃபில் பட்டத்திற்கு ஆய்வேட்டை (1998) சமர்ப்பித்துள்ளார். இது போன்று பல பல்கலைக்கழங்களைச் சேர்ந்த தமிழ்த்துறைகளில் எம்.ஏ, எம்ஃபில் பட்டங்களுக்காகப் பழமொழி குறித்த தலைப்புகள் ஆய்வுப் பொருளாக அமைந்துள்ளன. பழமொழிகளில் மருத்துவம், சமுதாயக் கருத்துகள், மீன்கள், பால் பாகுபாடுகள், உறவுப் பெயர்கள், மாமியார் - மருமகள் உறவு முறைகள், நிறம் ஆகியன குறித்து ஆய்வுக்கட்டுரைகளும், வங்காளி மற்றும் மலையாளம் பழமொழிகள் குறித்த நூல்களும் தொண்ணூறுகளில் வெளிவந்துள்ளன.

2.4.2.2. பரமக்குடி வட்டாரப் பழமொழிகள் (1998)

இந்த எம்ஃபில் ஆய்வேடு பரமக்குடி வட்டாரத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த தகவலாளியிடத்தில் கள ஆய்வில்

சேகரிக்கப்பட்ட 340 பழமொழிகள் அடிப்படையில் அமைந்த ஆய்வேடாகும். இவருக்கு முன்னதாக ம.மீனாட்சிசுந்தரம் இராமநாதபுரம் மாவட்டத் தமிழ்ப் பழமொழிகள் என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வேடு (1958) அளித்துள்ளார். பரமக்குடி நகரைத் தவிர்த்த பரமக்குடிக்குப் பின் பகுதியிலுள்ள பதினேழு கிராமங்களிலிருந்து கிராமத்தில் வாழும் தேவேந்திர குல மக்கள் வழங்கும் பழமொழிகளைக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வாய்வேடு பழமொழி அமைப்பு, பழமொழி காட்டும் குடும்ப நிறுவனம், பழமொழி காட்டும் மதிப்பீடுகள் என்னும் மூன்று முக்கியமான இயல்களைக் கொண்டது. ஆலன்டண்டீஸ் அமைப்பியல் கோட்பாட்டைக் கொண்டு பழமொழியின் அமைப்பு விளக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டுகள்

1. ஊர்க்கன்று மேஞ்சுச்சாம் உழுந்தம் செய்ய, கழுதையைப் பிடிச்சு காதறுத்தானாம்.
2. அலுவத்த கழுத அக்கரகாரத்தக் காத்துச்சாம்.
3. அவுத்து விட்டுச்சாம் கழுத எடுத்து விட்டுச்சாம் ஓட்டம்.
4. வேலை இல்லாத கழுத வெள்ளால வீட்டக் காத்திச்சாம்.
5. வெங்கங் கழுதைக்கு வீராப்பாம், பழைய துணிதான் மாராப்பாம்.

2.4.2.3 வங்காளப்பழமொழிகள்

சுசில்குமார் தே என்ற வங்காள அறிஞர் சுமார் 11000 வங்காளப் பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 பழமொழிகள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. மற்ற மாநிலங்களைப்போல் வங்காளத்திலும் பழமொழிகளுக்கு ஒரு தொன்மையான வரலாறு உண்டு. வானவியல் நிபுணர் வராகமிகிரரின் மனைவி 'கனா' வானவியல், சோதிடம் ஆகிய கலைகளில் சிறந்தவளாகக் கருதப்படுகிறாள். அவளால் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படும் பெயரில் வழங்கி வருகின்றவை. பெரும்பாலும் கிரகநிலைகள், பருவங்கள், விவசாயக் குறிப்புகள், சகுனங்கள் பற்றியவை. இதே போல் 'டாக்' என்ற அறிஞர் பெயராலும் வங்காளப்

பழமொழிகள் என்னும் இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. சு. கிருஷ்ணமூர்த்தி என்னும் மொழி பெயர்ப்பு அறிஞர் வங்காளத்திலிருந்து ஆயிரம் பழமொழிகளை மொழி பெயர்த்து வானதி பதிப்பகத்தின் மூலமாக வெளியிட்டுள்ளார். சு. கிருஷ்ணமூர்த்தி, சோ. முத்தையா ஆகியோர் வங்காள பழமொழிகள் குறித்து நூல்களை வெளியிட்டுள்ளார்கள். மேலே குறிப்பிட்ட வங்காள அறிஞரின் 'பங்களா பிரபாத்' என்னும் நூலை அடிப்படையாக வைத்து இந்நூலை ஆக்கியுள்ளார். எடுத்துக்காட்டாக:

1. அசலை விட வட்டி ருசி
2. அடிமை அரசனானால் இரவிலும் குடை பிடிப்பான்
3. ஆட்டின் இஷ்டத்துக்குத் துர்க்கா பூஜை நடக்காது
4. கீரையில் மீனை மறைப்பது
5. அன்னாசி சொன்னதாம் பலாப்பழத்தை 'இருந்தாலும் நீ ரொம்ப சொரசொரப்பு'.

சொ. முத்தையாவின் நூல் 1. வங்காளப் பழமொழிகள் தமிழில் விளக்கம் 2. வங்காளம், தமிழ், ஆங்கில மொழிகளில் பழமொழி ஒப்புமை 3. வங்காளப் பழமொழிக்கதை என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. பொது மக்களிடையே பெருவழக்காக வழங்கப்படுகின்ற வங்காளப் பழமொழிகள் மட்டும் இதில் இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக,

ஆப்பந் காயே குக்குர் ராஜா
Aappan gaayee kukkur raajaa
(ஆப்பந்-தனது; காயே-கிராமத்தில், குக்குர்-நாய், ராஜா-ராஜா)

தமிழ் இணைப்பழமொழிகள்

தன் ஊருக்கு அன்னம், பிற ஊருக்குக் காகம்
நாயும் தன்னிலத்துக்கு ராசா
தன்னிடத்தில் குறுமுயல் தந்தியினும் வலிது.

ஆங்கில இணைப்பழமொழிகள்

Every dog is lion at home
Every dog is valiant at his own door
My house is my castle.

மலையாளப் பழமொழிகள் (1993)

சென்னை மணிமேகலைப் பிரசுரம் மலையாளப் பழமொழிகளைத் தமிழ் விளக்கங்களுடன் பதிப்பித்துள்ளது. முதலில் மலையாளப் பழமொழியும் அடுத்துத் தமிழில் விளக்கம் அல்லது தமிழ்ப் பழமொழி கொடுக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டு

அக்ரஹாரத்தில் பிறந்தாலும் நாயி வேத
மோதுகயில்ல (மலையாளம்)

அக்ரஹாரத்தில் பிறந்தாலும் நாய்
வேதம் ஓதுவதில்லை (தமிழ்)

இவ்விடத்தில் ரா.பி.சேதுப்பிள்ளை தொகுத்த தென்மொழி பழமொழி என்ற நூலும் நினைக்கத்தக்கது.

2.4.2.3 தஞ்சை வட்டாரப் பழமொழிகள்

சோழநாட்டு பகுதிகளில் ஒன்று கோநகர் நாடு. இந்நாடு தஞ்சைக்குத் தெற்கே சுமார் 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நாட்டில் 18 கிராமங்கள் உள்ளன. இவற்றுள் கருப்பட்டிப்பட்டி, பொய்யுண்டார் தெரு, சோழகன் தெரு என்னும் மூன்று கிராமங்களில் சேகரிக்கப்பட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர் வெ. அமுதா கட்டுரையை வெளியிட்டுள்ளார் (1996).

எடுத்துக்காட்டுகள்

1. ஒத்தாப்புல இருந்தா ஒப்படியா
   சரியா இருந்தா சம்மந்தி
2. கண்ணாலே சீவன் கடகடன்னு போனாலும்
   வண்ணாரக் கழுதை பொதி சுமந்தேயாகனும்
3. தாய் செத்தன்னைக்கே சீர் செத்து போச்சு
4. செட்டிபிள்ளையிலேயும் வெட்டிப்பிள்ளை உண்டா
5. சொல்லுக்கு ஏலாத புள்ளையிருந்த குலத்துக்கு ஈனம்
6. பருவா பருவத்திலே பல்லு சிங்காரம்
   பல்லு போன மூனாம் நாளு பழைய சிங்காரம்

7. தலையழிய வந்தாலும் முறையழிய பேசக்கூடாது
8. வித்தைக்காரி புருசன் வியாழக்கிழமை செத்தானாம்
வீடு வெறிச்சோடிக் கெடக்குமுன்னு
வெள்ளிக் கிழமை தூக்கினாளாம்
9. ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோட
10. வழியிலே போனுச்சாம் சண்டை
வளைச்சிக்கிச்சாம் கொண்டை
11. வழியிலே போன ஓணானை காதில் பிடிச்சுவிட்டு
குத்துது கொடையுது
12. கறக்குறது ஔக்குப்பால் ஒதைக்ககிறது பல்லுப்போக

2.4.2.4. கொங்கு வட்டாரப் பழமொழிகள்

சு.சண்முகசுந்தரம், கொங்குநாட்டுப்புறவியல் பற்றிய திருமதி.மீனாட்சி சுந்தரத்தின் கட்டுரையை மொழிபெயர்த்து தன்னனானே இதழில் (16, மே, 2001) வெளியிட்டுள்ளார். திருமதி மீனாட்சி சுந்தரம் அகரவரிசையில் கொங்குப் பழமொழிகளை வெளியிட்டுள்ளார். அவற்றுள் சில:

1. ஊர் சக்கலீர் எல்லாம் சேர்ந்து
தோலெக் கெடுத்தாப்பலே.
2. மருமகொ அறுக்கோணும்னு
மகனெ கொன்னாப்பலே
3. வல்லவனுக்கு முண்டு வழுக்குப்பாறை
4. ஒரு குடிக்காரனுக்கு உறியிலே சோறு
இரு குடிக்காரனுக்கு இடியுஞ்சோறு.
5. வெரலுக்குத் தகுந்த வீக்கம்
மாவுக்குத் தகுந்த பணியாரம்
6. தன்வினை தன்னை சுடும்
ஓட்டெப்பானெ ஊட்டெ சுடும்
7. தண்ணி காசு தண்ணிலே
பாலு காசு பால்லே
8. அடுப்பிலே வச்ச கொள்ளி
வெந்துதான் ஆகோணும்,

9. வெள்ளான் புத்திவேலி வரெ
வடுகம்புத்தி வாசப்படி வரை

10. அப்பங்கூட போறவளுக்கு
அண்ணன் எது தம்பி எது?

2.4.2.5 பழமொழிகளில் உறவுமுறைப் பெயர்கள்

மா.பார்வதி பழமொழித் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு அவற்றில் வரும் உறவுமுறைப் பெயர்களை விளக்கியுள்ளார். பெற்றோர் (தாய்,தந்தை) கணவன்-மனைவி, உடன்பிறப்பு, குழந்தை என்னும் தலைப்புகளில் உறவுமுறைப் பெயர்களைத் தொகுத்துக் கூறியுள்ளார் (1996).

எடுத்துக்காட்டுகள்

1. தாயில்லா பிள்ளை கொலுவிலே
தந்தையில்லா பிள்ளை தெருவிலே

2. பெற்ற தாய் இல்லை யென்றால்
பெற்ற அப்பனும் சித்தப்பனே

3. ஏர் பிடித்தவன் என் செய்வான்
பானை பிடித்தவள் பாக்கியம்

4. இரண்டு பொண்டாட்டிக்காரன் இருதலைக் கொள்ளி எறும்பு

5. ஐந்து வயதில் தம்பி; ஐம்பதில் பங்காளி

6. அக்கா பண்டம் அரிசி போல
தங்கச்சி பண்டம் தவிடு போல

7. மண்பிள்ளையானாலும் தன்பிள்ளை வேண்டும்.

8. பெத்த மனம் பித்து; பிள்ளைமனம் கல்லு.

9. சாண்பிள்ளை என்றாலும் ஆண்பிள்ளை

10. அண்ணனிடத்தில் ஆறுமாசம் வாழ்ந்தாலும்
அண்ணியிடத்தில் அரைநாழிகை வாழமுடியுமா?

2.4.2.6 பழமொழிகளில் நிறம்

இரா. பாலசுப்பிரமணியம் நாட்டுப்புற வாழ்வியல் (1990) என்னும் நூலில் பழமொழிகள் குறித்து ஆராய்ச்சி நிகழ்த்தி

யுள்ளார். திருவரங்க நீலாம்பிகை அம்மையார் எஸ்.கே. துர்காதாஸ்சுவாமி ஆகியோர் தொகுத்த பழமொழி நூல்களை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரையை அமைத்துள்ளார். தான் சேகரித்த தரவுகளில் நிறம் என்ற சொல்லாட்சியே பெரு வழக்காய் உள்ளது என்றும், கருப்பு நிறமே முதன்மையான இடத்தைப் பெறுகிறது என்றும் கூறியுள்ளார். குறியீட்டு முறையில் கருப்பினைத் தீமையுடன் தொடர்புபடுத்தியும், வெள்ளையை நன்மையோடு தொடர்புபடுத்தியும், பச்சையை வாழ்வியலுடன் தொடர்பு படுத்தியும் கூறப்படுகிறது. இவ்வாறு சில முடிவுகளைத் தம் கட்டுரையின் தொகுப்புரையில் தந்துள்ளார்.

எடுத்துக்காட்டுகள்

1. கருப்புநாய் வெள்ளையாகுமா?
2. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.
3. இக்கரை மாட்டுக்கு அக்கரைப்பச்சை
4. கோழிக் கருப்போ சிவப்போ முட்டை வெள்ளைதான்
5. தூரத்திலிருக்கும் மலை நீலநிறமாகத் தோன்றும்
6. பார்ப்பான் கருப்பும் பறையன் சிவப்பும் ஆகாது
7. வேப்பம்பழம் சிவந்தாலும் விரும்புமா கிளி
8. வெளுத்ததெல்லாம் பாலில்லை, மின்னுவதெல்லாம் பொன்னில்லை
9. செத்தவன் கண் செந்தாமரைக் கண்; இருந்தவன் கண் நொள்ளைக் கண்
10. கருப்புநிறப் பறவையெல்லாம் குயிலா?

2.4.2.7 பழமொழிகளில் மாமியார் – மருமகள் உறவுநிலை

வி.புவனேஸ்வரி பழமொழியில் மாமியார் - மருமகள் உறவுநிலையை விளக்கியுள்ளார். (2001) நமது சமூக மதிப்பீடுகளை, குடும்ப உறவுகளைப் பழமொழிகள் மூலம் ஓரளவு அறியலாம். இந்தக் கண்ணோட்டத்தில் கூட்டுக் குடும்பத்தில் வாழும் மாமியார் - மருமகள் நிலைகளை விளக்கியுள்ளார். இப்பழமொழிகளில் மாமனார் - மருமகள் உறவு இல்லை. கீழ்க்காணும் பழமொழிகள் தமிழ்க் குடும்பங்களில் மாமியார் - மருமகள் உறவு நிலைகளைச் சுட்டிக் காட்டுவன.

எடுத்துக்காட்டுகள்

1. ஊருக் கேற்ற மாடு வாங்கனிவனுமில்லை
தாயுக்கேற்ற பெண் கட்டினவனுமில்லை.

2. பிள்ளை வாத்தியார் பெண்ணுக்கு மாமியார்

3. பானை ஒட்டினாலும் ஒட்டும்
மருமகள் ஒட்டாள்

4. மாமியார் உடைத்தால் மண்குடம்
மருமகள் உடைத்தால் பொன்குடம்

5. மாமியார் குற்றம் வயிற்றுக்கு மட்டம்

6. தன் மகன் போனாலும் பரவாயில்லை
தன் மருமகள் தாலியறுந்தால் சரி.

7. ஆணைப் போல் ஐந்து பெண் இருந்தாலும்
பூனைபோல் ஒரு மாட்டுப் பெண் வேண்டும்

8. பொன்னான மருமகள் ஆனாலும்
மண்ணாலே ஒரு மாமியார் வேண்டும்

9. மாமியார் செய்யும் கொடுமை
மருமகள் வாழ்வு அடிமை

10. பொறுமையில் உயர்ந்தது பூமி
பொல்லாங்கில் உயர்ந்தவள் மாமி.

2.4.2.7. வட்டார நாவல்களில் பழமொழிகள்

மாவீரன் வாட்டக்குடி இரணியன் என்ற வீரனைப் பற்றி ச. சுபாஷ் சந்திர போஸ் எழுதிய வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ச.மகேஸ்வரி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். ஆலன்டண்டீஸ் பாகுபாட்டின் படி பழமொழிகளைப் பகுத்து விளக்கியுள்ளார்.

1. முரணற்ற பழமொழி (a-b) சமநிலை

எடுத்துக்காட்டு
மீன்குஞ்சுக்கு நீந்தவா கற்றுக் கொடுக்கணும்

2. முரணுடைய பழமொழி

எடுத்துக்காட்டு
படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில்.

3. முரணுடைய முரணற்ற கூறுகளைக் கொண்ட பழமொழி

எடுத்துக்காட்டு

நாங்க தான் வீமனைப் பெத்து போட்டு வீதியிலே நிற்கிறோம்
கர்ணனை பெத்துப் போட்டு காட்டுல நிற்கிறோம்.

4. காரண காரியப் பழமொழி

எடுத்துக்காட்டு

வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்.

2.5 விடுகதை

நாட்டுப்புற வழக்காறுகளில் ஒன்று விடுகதையாகும். விடுவிக்கப்பட வேண்டிய மறை பொருளைப் பற்றிய கதை விடுகதையாகும். விடுகதைகள் உருவகப் பாங்கானவை என்று உலகுக்குக் கூறியவர் கிரேக்கத் திறனாய்வாளர் அரிஸ்டாட்டில். தொல்காப்பியமும், விடுகதை என்பதைப் பிசி என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றது.

'ஒப்பொடு புணர்ந்த வுவமத்தானும்
தோன்றுவது கிளந்த துணிவினானும்
என்றிரு வகைத்தே பிசி வகை நிலையே'

என்னும் தொல்காப்பியரின் சிந்தனையிலும் விடுகதை உவமை அடிப்படையிலும் (உருவகம்) வேறு வகையிலும் அமையும் என்று குறிப்பிடுகின்றார். பிசி என்னும் சொல்லே பிற்காலத்தில் பிதிர் என்றும் புதிர் என்றும் மாற்றம் பெற்றதாகச் ச.வே.சுப்பிரமணியம் தமிழில் விடுகதை என்ற நூலில் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியத்தில் நொடி என்ற சொல்லும் பிசியோடு இணைத்து வழங்கப்படுகின்றது. நொடி என்னும் சொல் மணிமேகலை, பெருங்கதை ஆகிய இலக்கியங்களில் விடுகதையைச் சுட்ட கையாளப்பட்டுள்ளது. இன்றைய வழக்காற்றில் திருச்சி, தென்னாற்காடு, வடஆற்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் விடுகதையை 'வெடி' என்ற பெயரில் குறிப்பிடுகின்றனர். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் விடுகதையை அழிப்பான் கதை என்று கூறுகின்றனர். இந்த விடுகதைகள் சிந்தனையைத் தூண்டுவதாகவும், பொழுதுபோக்கு வதாகவும் அமைகின்றன. சில பண்பாடுகளில் நம்பிக்கையோடும்,

சடங்குகளோடும், பழமொழிகளோடும் தொடர்பு கொண்டுள்ளதாக அமைகின்றன. தமிழைப் பொறுத்தவரையில் குழந்தைகள், இளைஞர்கள், முதியோர்கள் ஆகியோரிடத்தில் பொழுதுபோக்குக் கருவியாகப் பயன்பட்டுக் கொண்டு வருகின்றது. விடுகதைகளை ஆராய்ந்த ராபர்ட் பெட்ஸ் உண்மையான விடுகதை வடிவம், 1. தொடக்கச் சட்டகம், 2. பெயர்க்கூறு, 3. விளக்கக்கூறு, 4. தடைக்கூறு, 5. முடிக்கும் வாய்பாடு என்னும் ஐந்து அடிப்படைக் கூறுகளைக் கொண்டது என்று கூறுகின்றார். இவற்றோடு ஆறாவது கூறாகிய விடையையும் குறிப்பிடுகின்றார் தே.லூர்து (1997:293). ஒரு விடுகதையில் ஐந்து கூறுகளும் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை இரண்டு, மூன்று கூறுகள் சேர்ந்தும் ஒரு விடுகதையை அமைக்கலாம். விடுகதை (1968), தமிழ் நாட்டு விடுகதைகள் (1963), சிறுவர் புதிர்கள் (1975), தமிழில் விடுகதைகள் (1975), காதலர் விடுகதைகள் (1982) போன்ற நூல்கள் விடுகதைகளுக்குப் பின் தொகுத்து வெளியிடப்பட்ட நூல்களில் குறிப்பிடத்தக்கவை. இவற்றைத் தொடர்ந்து எம்.ஏ., எம்ஃபில், பி.எச்டி போன்ற ஆராய்ச்சி தொடர்பான பட்டங்களுக்கு வட்டார அடிப்படையில் ஆங்காங்கே தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை எல்லாம் அச்சு வடிவம் பெறவில்லை. பிரேமா ரகுநாதனின் விடுகதைகள் 1000 என்னும் நூல் (1994) தொண்ணூறுகளில் வெளிவந்த நூல்களில் நினைவு கூரத்தக்கது.

2.5.2 பாகுபாடு

ச.வே.சுப்பிரமணியன் தமிழில் விடுகதைகள் என்னும் நூலில் ஒன்பது வகையாகப் பிரித்துக் கூறுகிறார். தமிழில் புதிர்கள் ஓர் ஆய்வு என்னும் நூலை எழுதிய ஆறு.இராமநாதன் தமிழ் விடுகதைகளை வகைப்படுத்த முயன்ற முன்னோடி ஆய்வாளராவார். விடுபுதிர், விடுகணக்கு, புதிர் பேச்சு, நாட்டுப்புறப்புதிர், இலக்கியப் புதிர் என்றெல்லாம் அவர் வகைமை செய்துள்ளார். விடுகதையின் அமைப்பியலை ஆய்ந்த க.சாந்தி தனிநிலை விடுகதை, கூட்டு நிலை விடுகதை, இணைநிலை விடுகதை என்று மூன்று வகையாக அமைப்பியல் அடிப்படையில் பாகுபாடு செய்துள்ளார்.

1. தனிநிலை விடுகதை

   எடுத்துக்காட்டு
   ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல். (மூக்கு)

2. கூட்டு நிலை விடுகதை

எடுத்துக்காட்டு
எட்டாத இராணியாம் இரவில் வருவாள்
பகலில் மறைவாள் அவள் யார்? (நிலவு)

3. இணைநிலை விடுகதை

எடுத்துக்காட்டு
ஆனை அசைந்து வர அறு மிளகு சிந்திவர கொத்தளத்துப்
பெண்கள் எல்லாம் கூடிக் குலவையிட
(மேகம், மழைத்துளி, தவளை)

2.5.3. பாலியல் விடுகதைகள்

அ.கணேஸ்வரி மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தொண்ணூறுகளின் இறுதியில் தமிழ் விடுகதைகளைப் பற்றிப் பன்முகக் கோட்பாடுகளின் அடிப்படையில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டவர். விடுகதை வாய்பாடு, விடுகதை மொழி, பாலியல் தொடர்பான விடுகதைகள், விடுகதையைப் பனுவலிடைக் கோட்பாட்டு அடிப்படையில் விளக்குதல் ஆகியவை இவருடைய ஆய்வுக் கட்டுரைகளின் கருப்பொருளாக அமைகின்றன.

1. கட்டிப் புடிச்சு ரெண்டு காலையும் பின்னி
தட்டி விட்டாச் சொட்டுச் சொட்டுன்னு வடியும்
(கள் இறக்குதல்)

2. மஞ்சக் குளிச்சு மலர்ந்து நிக்கயில
மாட்டேன்னியே மாமா - நான்
புள்ளப் பெத்த மய்க்கா நாளு
புடுங்கவா வந்த மாமா (நிலக்கடலை)

3. கைமேலே கைபோட்டு
கால்மேல கால்போட்டு
நீங்க இழுக்க நாங்க இழுக்க
வெள்ளை வெள்ளையா விழுகுது (திருகை திரிதல்)

4. கப்பப் பௌந்து கணுக்கணுவா உள்ள விட்டு
வெளிய இழுத்தாச் சொட்டுச் சொட்டா வடியும்
(திலாமூலம் நீர் இறைத்தல்)

5. முள்ளில்லாத கொரவைய
பல்லில்லாத ஆமை முழுங்குது (ஆண் பெண் உறவு)

6. மூக்கனுக்கு முன்னூறு
மூக்கனப்பெத்த ஆத்தாவுக்கு
சொளகு அகலம் (வாழைப்பழம், வாழை இலை)

7. ஆசப்பட்டது எப்ப? நீ
தெருவில் போனியே அப்ப
கையப்பிடுச்சது எப்ப? - நாம
கண்டு மகிழ்ந்தோமே அப்ப
வருத்தப்பட்டது எப்ப?
பாதி நொளஞ்சுச்சே அப்ப
பிரியப்பட்டது எப்ப?
பூரா, நொளஞ்சுச்சே அப்ப
காசு குடுத்தது எப்ப? - நாம
இருந்திட்டு எந்திரிச்சமே அப்ப (வளையல் போடுதல்)

'பாலியல் தொடர்பான விடுகதைகளைக் கேலி உறவுடையவர்கள் கூறிக் கொள்கிறார்கள். அப்பொழுது வயது என்னும் மதிப்புக் கூறு, பால்வேறுபாடு ஆகியவை கண்டு கொள்ளப்படாமல் கேலி பேச்சு உறவுடையவர் என்ற உறவு முறை மட்டுமே இத்தகைய விடுகதைகள் வெளிப்படக் காரணமாக அமைகின்றது' என்று ஆய்வாளர் கணேஸ்வரி குறிப்பிடுகின்றார் (1995-99). விடுகதையின் மொழி, வாய்பாடு, பனுவலிடைப்பண்பு ஆகியன குறித்த கட்டுரைகள் சிந்தனையைத் தூண்டுவனவாகும்; பின் நவீனத்துவ அடிப்படையில் விடுகதைகளை ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளாகும்.

2.5.2.2. விடுகதைகளில் உணவுப் பொருட்கள்

அன்றாட வாழ்க்கையில் பயன்படும் பல பொருள்கள் குறித்து விடுகதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள் பற்றிய விடுகதைகள் எல்லோரின் கவனத்தையும் ஈர்க்கக் கூடியவை. இவ்வகையான விடுகதைகளைத் திரட்டிச் சுலோர் மணி பாண்டியன் ஒரு கட்டுரையை (1999) வெளியிட்டுள்ளார். தானியங்கள், துணை உணவுகள், பழம், காய்கறி, இறைச்சி பற்றிய விடுகதைகளை விளக்கியுள்ளார்.

அ. தானியங்கள்

1. ஏற முடியாத மரத்தில்
எண்ணாயிரம் காய்கள் - அது என்ன? (கேழ்வரகு)

2. ஒற்றைக் கால் குருவி
ஒழக்கு முட்டையிடும் - அது என்ன? (சோளம்)

3. ஆறு மாதப் பெண்ணுக்கு
அடிவயிற்றில் கர்ப்பம் - அது என்ன? (நெற்பயிர்)

ஆ. துணை உணவு

1. தாய் இனிப்பு, மகள் புளிப்பு,
மகபிள்ளை பேத்தி மரம் - அது என்ன?
(பால்,மோர் நெய்)

2. மஞ்சள் பட்டுடுத்தி
மடிக்குள் பிள்ளை வைத்து
கடைத்தெருவில் வீற்றிருப்பாள்
கண்டவர் மயக்கும் ராணி - அது என்ன (மாம்பழம்)

3. முள்ளு முள்ளுக்குள்ளே
முந்திரி தோப்புக்குள்ளே
வைக்கோல் போருக்குள்ளே
கண்டெடுத்தேன் வைரமணி - அது என்ன? (பலாப்பழம்)

4. மஞ்சள் குருவி ஊஞ்சலாடும்
மாதேவனுக்குப் பூசைக்காகும் - அது என்ன?
(வாழைப்பழம்)

5. உச்சிக்கிளையில் ஒரு முழக்குச்சி
ஊசலாடுது - அது என்ன? (முருங்கைக்காய்)

6. சொறியனைக் கறிசமைத்து
சோறெல்லாம் கசப்பு - அது என்ன? (பாகற்காய்)

7. குட்ட மரத்தில் கொட்டாப்புள்ளி - அது என்ன?
(கத்தரிக்காய்)

8. முட்டையைப் பிக்கப்பிக்க
முந்தாணியே வருது - அது என்ன? (வெங்காயம்)

இ. பிற

1. உரித்த கோழி ஓர் வழி போகுது - அது என்ன?
(புளிச்ச நாறு)

2. குண்டுச்சட்டியில் கெண்டை மீன் - அது என்ன? (நாக்கு)

2.5.2.3 கொங்கு விடுகதைகள்

தி. பெரியசாமி கொங்கு விடுகதைகளைப் பிராப்பின் அமைப்பியல் ஆய்வு அடிப்படையில் விளக்கிக் கட்டுரை வெளியிட்டுள்ளார் (2001). X-(C)-Y- என்பது விடுகதையின் பொது அமைப்புச் சூத்திரம்.
f

X என்பது உவமானப்பொருள்; C என்பது குறிப்பு; F என்பது செயல்; Y என்பது உவமேயப் பொருள். தனிநிலை விடுகதை, கூட்டு நிலை விடுகதை,இணைவு நிலை விடுகதை என்னும் மூன்று அமைப்பிற்குள் தொகுத்து விளக்கியுள்ளார்.

(அ) தனிநிலை விடுகதை

எடுத்துக்காட்டு
'ஊள மூக்கன் சந்தைக்குப் போனான் - அது என்ன)
(நுங்கு)

(ஆ) கூட்டு நிலை விடுகதை

எடுத்துக்காட்டு
'விரிச்ச தலை முடியத் தெரியாத
விபரங்கெட்ட பொம்பளை
அவள் பெற்ற பிள்ளைக்கு
விதத்தால் ஒரு பெயர் - அது என்ன? (பனைமரம்)

(இ) இணைவு நிலை விடுகதை

எடுத்துக்காட்டு
பிச்சிப்பூ சிதறிக் கிடக்கு
பொறுக்க நாதியில்லை
ராசாமகள் கோவிச்சுக்கிட்டுப்போறா
அழைக்க நாதியில்லை
சமுக்காளம் கிழிஞ்சுகிடக்கு
தைக்க நாதியில்லை - அது என்ன?
(நட்சத்திரம், நிலா, வானம்)

கொங்கு விடுகதைகள் மேற்கூறிய அமைப்புகளில் எதில் அதிகமாக அமைந்து காணப்படுகின்றன என்னும் கருத்துப் பெறப்படவில்லை. சாந்தியின் கட்டுரையை ஒட்டி, மூன்று வகைக்கு மூன்று சான்றுகள் தந்து விளக்கம் தந்துள்ளதைப் போல அமைந்துள்ளது.

2.6 முடிவுரை

நாட்டுப்புற இலக்கியத்தின் வகைகளைத் தொகுக்கும் பதிப்பிக்கும் பணி தொண்ணூறுகளில் ஏறக்குறைய மிகவும் நலிந்துவிட்டது. சு.சக்திவேலின் நெல்லை, தஞ்சை மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்புகளை (1995) மட்டும் தான் நினைவுகூரமுடியும். நாட்டுப்புறப்பாடல்களைத் தொகுப்பதைக் காட்டிலும், தொகுத்த பாடல்களை ஆராயும் போக்குக் காணப்படுகின்றது. பல்கலைக்கழகப் பட்டங்களின் ஆய்வுக்கு அடிப்படையாக அமைந்த - சேகரித்த நாட்டுப்புறப் பாடல்கள் அச்சாகவில்லை. வழக்கம் போல் கதைப்பாடல்கள் குமரி, நெல்லை மாவட்டங்களிலிருந்து அதிக அளவில் பதிக்கப் பட்டுள்ளன. கோவைப் பகுதியிலிருந்து குறுங்கதைப் பாடல்கள் சிலவற்றைச் சேகரித்து ஆராய்ந்துள்ளனர். வடதமிழகத்தில் தமிழ்க் கதைப்பாடல் மரபே இல்லையா? அல்லது தொகுக்கப்பட வில்லையா? பல மாவட்டங்களில் நாட்டுப்புறக் கதைகள் தொகுக்கப்பட்டுப் பல்கலைப் பட்டங்களுக்கு ஆராய்ச்சி செய்யப் பட்டாலும் அவை அச்சுவடிவில் வந்து ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்படவில்லை. பழமொழி மற்றும் விடுகதை பற்றிய தொகுப்பும் ஆய்வும் ஊக்கமூட்டுவதாக இல்லை. இவ்விரண்டு இலக்கிய வகையிலும் நாட்டுப்புற ஆய்வாளர்கள் அதிக கவனமும் ஈடுபாடும் காட்டவேண்டிய தேவை உள்ளது.

3. நாட்டுப்புறக்கலைகள்

3.0 முன்னுரை

அழகுணர்ச்சி ஊட்டும் அனைத்து வடிவங்களும் கலை என்ற சொல்லால் குறிக்கப்படும். மனிதனின் சிந்தனை, கற்பனை ஆகியவற்றோடு அழகுணர்ச்சி சம்பந்தப்பட்ட ஒன்றாகும். நாட்டுப்புறக் கலை மிகப்பழமையான தொன்மைக் கலைக்கும் (Primitive art) செம்மைப்பட்ட செவ்வியல் கலைக்கும் (Classical art) இடைப்பட்ட ஒரு நிலையை உடையது. தொன்மைக்கலை நாகரிகமும் பண்பாடும் அடைய அடைய நாட்டுப்புறக் கலையாகி இறுதியில் செவ்வியல் கலையாக இலக்கண வரையறை பெற்றுப் பரிபூரணத்துவம் அடைகின்றது. பலவகைப்பட்ட நாட்டுப்புறக் கலைகளை நிகழ்கலை, அழகுக்கலை, கைவினைக் கலை, விளையாட்டு என்னும் நான்கு தலைப்புகளில் ஆராயலாம்.

3.1 நிகழ்கலைகள்

ஆட்டமும் பாட்டமும் கருவி இசையும் பிணைந்த இயங்குகலை தான் நிகழ்கலை அல்லது நிகழ்த்துக் கலை என்பதாகும். தெருக்கூத்து, பாவைக் கூத்து, வில்லுப்பாட்டு, கணியான் கூத்து, தேவராட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காவடியாட்டம், தப்பாட்டம், நையாண்டி மேளம் ஆகியன தமிழகத்தில் காணப்படும் முக்கியமான நிகழ்கலைகளாகும். தொண்ணூறுகளில் இக்கலை பற்றிச் சில நூல்கள் வெளிவந்துள்ளன. குமரி மாவட்ட கிராமியக் கலைகளும் கலைஞரும், கோவில் சார்ந்த நாட்டார்கலை, நாட்டுப்புற நிகழ்த்துக் களையும் பண்பாடும் (களியலாட்டம், 1996), பறை இசைக்கருவி பற்றிய ஆய்வு (1999), தமிழக நாட்டுப்புறக்

கலைகள் (2001) நாட்டார் நிகழ்த்துக்கலைகள்; களஞ்சியங்கள் (2001), சேவையாட்டம் (2002) ஆகிய நூல்கள் நாட்டுப்புற ஆய்வில் தொண்ணூறுகளில் வெளிவந்த குறிப்பிடத்தக்க புதிய வரவுகளாகும்.

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றுத் துறையில் முதுகலை மாணவர்கள் நிகழ்கலை தொடர்பாக ஆய்வேடுகள் சமர்ப்பித்துள்ளனர். கரகாட்டக் காரர்களின் வாழ்வும் கலையும் (1990), தேவராட்டத்தில் நிகழ்த்துநர் வெளிப்பாடும் பால்வேறுபாட்டுக் கருத்துருவமும் (1990), கணியான் கூத்து ஓர் நிகழ்த்துதல் ஆய்வு, ஒயிலாட்டம் (1990), மிகைல்பக்தினின் கோட்பாட்டுப் பின்னணியில் தோற்பாவை நிகழ்கூத்து (1990), கரகாட்டத்தில் நகைச்சுவை (1990), ஜவ்வாது மலைப்புழியூர் தெருக்கூத்து நிகழ்த்துதலில் பஃபூனின் மற்றொன்று விரித்தல் (1990), கிறிஸ்துவப் பள்ளர்களின் இறப்புக் கும்மி நிகழ்த்துதல் ஆய்வு (1990), கூத்தங்குழி கித்தேரியம்மாள் நாடகம் ஓர் ஆய்வு (1991), நாட்டார் பாடல்களும் இசையும் - ஓர் ஆய்வு (1993), காவடி வகைகளும் அவற்றின் அடங்கியல் தன்மைகளும் (1993) ஆகிய ஆய்வேடுகள் நிகழ்கலை தொடர்பானவை.

தொண்ணூறுகளில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்துக் காணும் பொழுது கூத்தாண்டவர் வழிபாட்டில் தெருக்கூத்து (1995), பேடியாடல் (1993), நாட்டுப்புறக்கலைகளில் செலாக்குத்தாட்டம் (1995), பரதநாட்டியத்தில் நாட்டுப்புற நடனங்கள் (1996), கேரளத்தோல் பாவைக்கூத்து (1995), முத்து நாச்சியம்மன் கூத்து (2000), நாட்டுப்புற நிகழ்கலைகள் வழி தகவல் பரவல் (1992), தெருக்கூத்து நாடகங்களின் அமைப்பும், உத்தியும் (2000), யக்ஷகானம், தெருக்கூத்து ஒரு கண்ணோட்டம் (1996), கணியான் கூத்து (1996), வாய்மொழிக்கலை நிகழ்த்துகளில் கருத்துப்புலப்பாடு (2000) ஆகியன பல்வேறு நிகழ்கலைகளின் இயல்புகளையும், பயன்பாட்டையும் விளக்குபவை. நிகழ்கலைகள் குறித்துச் சில நூல்களும், பல ஆய்வேடுகளும் காணப்பட்டாலும் நிகழ்கலைகள் குறித்த ஆய்வுக்கட்டுரைகள் மிகக் குறைந்த அளவிலேயே அமைந்துள்ளன.

3.1.1. ஒயிலாட்டமும் அமைப்பும் (1991)

தமிழக நிகழ்கலைகளில் ஒன்று ஒயிலாட்டம். இந்த ஆட்டத்தைப் பண்பாட்டு மானுடவியல் மற்றும் அமைப்பியல் கோட்பாட்டுப் பின்னணியில் ஆராய்ந்து எம்ஃபில் ஆய்வேட்டை உருவாக்கியவர் சுதானந்தா. இந்த ஆய்வேட்டின் அச்சு வடிவமே 'ஆட்டமும் அமைப்பும்' என்ற நூலாகும். இந்த ஆய்வேடு நாட்டுப்புறக்கலையும் மானுடவியலும், அமைப்பியலும் ஆட்டமும், ஒயிலாட்டத்தின் அமைப்பு, சடங்குநிலையும் பொழுது போக்கு நிலையும் என்ற நான்கு இயல்களில் அமைந்துள்ளது. ஒயிலாட்டத்தைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வு இது என்று கூறலாம். ஒரே ஊரில் ஆடப்படும் ஒயிலாட்டம் மட்டுமே (வலையபட்டி) இங்கு ஆய்வுக்குள்ளா கிறது. இந்த ஊரின் ஆட்டத்தினின்றும் வேறுபட்ட வடிவங்கள் பிற இடங்களில் காணப்பட்டாலும் அவற்றையெல்லாம் இந்த ஆய்வில் பயன்படுத்தவில்லை. கரகாட்ட இசையும், ஒயிலாட்ட இசையும் ஒரே தாளகதியில் அமைந்துள்ளன என்றும், இவை இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு அவற்றின் பொருளில் அமைந்துள்ளது என்றும் ஆய்வாளர் கருதுகிறார். ஒயிலாட்டத்தில் நிகழும் உரையாடலை அது நிகழ்த்தப்படும் சூழ்நிலையோடு பொருத்திக் காணவேண்டும் என்றும் ஆய்வாளர் வலியுறுத்துகின்றார்.

3.1.2 தமிழக நாட்டுப்புறக் கலைகள் (2001)

மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலம் தொடர்கல்வி திட்டத்துக்காகத் தயாரிக்கப்பட்ட அறிமுக நூல் இதுவாகும். கிராம மக்களின் கலைகளைத் தொகுத்து வகுத்து அவர்களிடையே தரவேண்டியது கற்றோர்களின் கடமையாகும். அந்த வகையில் சு.பாலசுப்பிரமணியன் தமிழகத்தில் வழங்கும் 25 நிகழ்கலையோடு தொழில் சார்ந்த நான்கு கலைகளையும் சேர்த்து 29 கலைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன. ஒயிலாட்டம், ஆலியாட்டம், கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், கும்மி, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, பாவைக் கூத்து (பொம்மலாட்டம்), கணியான் ஆட்டம், வர்மம், சிலம்பாட்டம், களரி, தேவராட்டம், சக்கையாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம்,

உறியடி விளையாட்டு, தப்பாட்டம், உடுக்கடிப் பாட்டு, லாவணி, கைச்சிலம்பாட்டம், குறவன் குறத்தி நடனம், துடும்பாட்டம், புலியாட்டம் ஆகியவை ஒரு தொகுப்பாகத் தரப்படுகின்றன. பொம்மைக்கலைகள், மண்பாண்டக்கலை, கோலக்கலை, பாய்பின்னுதல் ஆகிய தொழில் சார்ந்த கலைகள் இறுதியில் தரப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வழங்கப்படும், நிகழ்த்தப்படும் முக்கியமான கலைகள் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆலியாட்டம் என்பது முகமூடியணிந்து அம்மன் விழாக்களில் நெல்லை, குமரி மாவட்டங்களில் நிகழ்த்தப்படும் வேதாள ஆட்டமாகும். வில்லுப் பாட்டு நெல்லை, குமரி மாவட்டங்களில் நிகழ்த்தப்படும் நிகழ்கலையாகும். தெருக்கூத்து எனப்படும் கட்டைக்கூத்து வடதமிழகத்தில் தென்னாற்காடு, வடஆற்காடு, திருவண்ணாமலை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மகா பாரதத்தின் கிளைக்கதைகளின் அடிப்படையில் நிகழ்த்தப்பெறும் கூத்தாகும். கணியான் ஆட்டம் நெல்லை, குமரி மாவட்டங்களில் சுடலைமாடன், இசக்கியம்மன், பிச்சைக்காலன், செங்கிடாக்காரன் ஆகிய சிறுதெய்வங்களின் வழிபாட்டோடு தொடர்புடைய கூத்தாகும். தேவராட்டம் மதுரை மாவட்ட கம்பளத்து நாயக்கருக்குரிய ஆட்டமாகும். சக்கையாட்டம் திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் மாரியம்மன், முருகன் கோயில் திருவிழாக்களின் போது நிகழ்த்தப்படுவதாகும். பொய்க்கால் குதிரையாட்டம் தஞ்சை மாவட்டத்திற்கு உரியதாகும். தப்பாட்டம் என்னும் பறையாட்டம் மதுரையிலும்,மதுரையைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் நிகழ்த்தப்பெறும் நவீன நிகழ்கலையாகும். சில வட்டாரங்களில் காத்தவராயன் கதை (ராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை) அண்ணன்மார் சுவாமி கதை (கோவை, சேலம், ஈரோடு, தாராபுரம், நாமக்கல்) உடுக்கையடித்து நிகழ்த்தப்படுவதாகும். சென்னை, காஞ்சிபுரம் வட்டாரங்களில் அம்மன் விழா, நவராத்திரி விழா ஆகியவற்றில் இரவு நேரத்தில் ஆண்களால் நிகழ்த்தப்படுவது கைச்சிலம்பாட்டம். தொடும்பு என்னும் இசைக் கருவிக்கேற்ப ஒயிலாட்டத்தைப் போன்று கோவை, திருவண்ணா மலை மாவட்டங்களில் ஆடப்படுகின்ற ஆட்டமாகும். எனவே, பலருக்குத் தெரிந்த, தெரியாத ஆட்டங்களையும், கலைகளையும்

அறிமுகப்படுத்துகின்ற (அதிகமான படங்களுடன்) நூல் இந்நூலாகும்.

3.1.3 தெருக்கூத்து

சு.ராஜரத்தினம் கூத்தாண்டவர் வழிபாட்டில் தெருக்கூத்துப் பற்றி ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். தருமபுரி மாவட்டம் பறையபட்டி, சாமியார்புரம் கூட்டு ரோட்டில் நடைபெறும் கூத்தாண்டவர் வழிபாடு பற்றியும், அரூர் புதுப்பட்டியில் நடைபெறும் கூத்தாண்டவர் விழாவில் அரவான் கூத்துப் பற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளார். பஞ்ச பாண்டவர்களின் மகனான அரவானை மகாபாரதப் போர் வெற்றிக்காகக் களப்பலி கொடுப்பது மகாபாரதத்தில் வரும் செய்தியாகும். இக்கிளைக் கதையை அடிப்படையாக வைத்து வட தமிழகத்தில் பல ஊர்களில் அரவான் களப்பலி நாடகம் நடைபெறுகிறது. மாம்பட்டி கூத்தாண்டவர் கோவில் மரத்தடியில் ஒரு கல்லை நட்டு மேடை அமைத்து வழிபடு கின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவில் தெருக்கூத்தும் நடைபெறும். இங்கு அரவானுக்குக் களிமண்ணில் உருவம் அமைக்கப்படுகிறது. தஞ்சை சரஸ்வதி மகால் வெளியிட்ட அரவான் களப்பலி என்னும் நாட்டிய நாடகத்தில் நாகக்கன்னி என்ற பாத்திரமே கிடையாது. அரவான் ஐந்து தந்தையிடமும், பாஞ்சாலியிடமும் களப்பலிக்கு விடை பெற்றுச் செல்லுகின்றான். அரவான் களப்பலி நாடகக் கதையை ஆலன்டண்டீஸ் அமைப்பியல் கோட்பாட்டின்படி விளக்கம் தந்துள்ளார். போர்க்களத்தில் உயிர்விடுவதற்கு எல்லோரும் தயாராக இருக்கவேண்டும் என்பதைக் குறிப்பாகச் சொல்கிறது அரவான் களப்பலி நாடகம் என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

3.1.4 யக்ஷகானம்

இறையடியான் யக்ஷகானம், தெருக்கூத்து ஆகிய இரண்டையும் ஒப்பிட்டு ஓர் ஆய்வுக்கட்டுரை வெளியிட்டுள்ளார் (1995, 96). யக்ஷகானம் கர்நாடகம் மட்டுமன்றி ஆந்திரம், தமிழகம் ஆகிய மாநிலங்களிலும் சில பகுதிகளில் நிகழ்த்தப்படுகின்றது. இதனைப்பற்றி துளசி ராமசாமி முனைவர் பட்டத்திற்கு விரிவான ஆய்வை நிகழ்த்தியுள்ளார். யக்ஷகானம் தெலுங்கு வீதி நாடகத்

தோடும், மலையாளக் கதகளியோடும், தமிழகத் தெருக்கூத்தோடும் நெருங்கிய தொடர்புடையது. இந்த ஆட்டக்கலை கோவில் வழிபாட்டோடு தொடர்புடையது. யக்ஷகானம், தெருக்கூத்து ஆகியனவற்றின் வரலாறு, ஒப்பனை - ஆடை அணிகலன்கள், கதைகள் மற்றும் ஆடுகளன், பாத்திரங்களின் வருகை, இசைக் கருவிகள், ஆட்டத்தின் துவக்கம் ஆகியன குறித்துக் கட்டுரை அமைந்துள்ளது. யக்ஷகானம் பற்றிய ஐந்து அட்டவணைகள் பிற் சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன.

3.1.5 தோல்பாவைக்கூத்து

கேரளத் தோல் பாவைக்கூத்துக் கலையைப் பற்றிச் சிற்பி. பாலசுப்பிரமணியன் மற்றும் செந்தில்குமார் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்கள். இக்கூத்துக் கலையைப் பற்றிப் புராணம், நிகழ்த்தப்படும் கதை, கலைஞர்கள், இசைக்கருவிகள், அரங்கம், சடங்கு நிகழ்த்தும் முறை, கொடைக்காரன், அந்தர் நாடகம், ஊடாட்டம் என்னும் தலைப்புகளில் கேரளத்தோல் பாவைக் கூத்தினை விளக்கியுள்ளார். கேரளத் தோல்பாவைக் கூத்து காளியோடு தொடர்புடைய ஒரு சடங்கியல் தன்மையான புனிதப்படுத்தப்பட்ட ஒரு கலையாக மதிப்பிடப்படுகிறது. மேலும், அந்தர் நாடகம் என்னும் அம்சம் கேரளத் தோல்பாவைக்கு உண்டு. இவ்விரண்டு இயல்புகளும் அதாவது, சடங்கியல் தன்மை மற்றும் உள்சிறு நாடகம் ஆகிய இரண்டும் தமிழகத் தோல் பாவைக்கூத்தில்' இல்லாதவை. வருடத்தில் ஒரு முறை பகவதியுடனான தங்களின் உறவினை மக்கள் புதுப்பித்துக் கொள்ளும் வகையாக இக்கூத்துக்கலை விளங்குகின்றது என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

3.1.6 முத்துநாச்சியம்மன் கூத்து

திருச்சி மாவட்டம் முசிறி வட்டத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் தொட்டியப்பட்டி நாயக்கர்கள் நடத்தும் கூத்துகளில் ஒன்று முத்துநாச்சியம்மன் கூத்து. இக்கூத்தினை அரு. மருததுரை ஆராய்ந்து கட்டுரை வெளியிட்டுள்ளார் (2000). கட்டபொம்மு கூத்தில் கட்டபொம்முவின் இறப்பு வரையில் ஒரு நாளும் அதனைத் தொடர்ந்து முத்துநாச்சியம்மன் கதை என்று

தனியாகவும் இவ்வரலாறு கூத்தாக நடிக்கப்பெறுகின்றது. முத்து நாச்சியம்மன் கூத்தில் கட்டபொம்முவிற்குப் பிறகு முத்துநாச்சி, ஊமைத்துரை, இவர்களுக்குப்பிறகு ஆறு தங்கைகள் என்று கூறுகின்றனர். கட்டபொம்முவின் தங்கையாகவும் ஊமைத்துரையின் அக்காவும் முத்துநாச்சியம்மன் காட்டப் பெறுகின்றாள். முத்துநாச்சியம்மன் பட்டத்தரசியாக விளங்கினாள் என்பதை இக்கூத்து விவரிக்கின்றது. இக்கூத்து பற்றிய கட்டுரை கூத்து நிகழ்த்தப்படும் சூழல், ஒப்பனை, பார்வையாளர் பங்களிப்பு, கதை வழி வரலாற்றுக் குறிப்பு, கூத்து நிகழ்த்துதற்குரிய காரணம் ஆகியவற்றை விவரிக்கின்றது. மழை வேண்டியும், குடும்ப இனநலன் வேண்டியும் நாயக்கர் இனத்தவரால் இக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது.

3.1.7 செலாக்குத்தாட்டம்

மக்களை மகிழ வைக்கும் ஆட்டக்கலைகளில் ஒன்று செலாக்குத்தாட்டம். இரா. கருப்பையா இந்த நிகழ்வுகளைப் பற்றி ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். வயிற்றின் விலாப்பகுதியில் இரண்டு பக்கமும் இரண்டரை அடி நீளமுள்ள கம்பியைச் செருகிக் கொண்டு உடையலங்காரத்துடன் தாள இசைக்குத் தக்கவாறு ஆடும் ஆட்டம் செலாக்குத்தாட்டம் எனப்படும். இவ்வாட்டத்தினை தோல் குத்தாட்டம், லாக்குத்தாட்டம் என்றும் குறிப்பிடுவர். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சிறு தெய்வக் கோயில்களில் (மாரியம்மன் கோவில்களில்) செலாக்குத்தாட்டம் நடைபெறும். மாசி, பங்குனி ஆகிய இரண்டு மாதங்களில் இக்கலை சிறப்புடன் நிகழ்த்தப்படுகின்றது. செதிலாட்டம், செதில், செலா ஆட்டக்கலைஞர்கள், கொட்டடி வாத்தியார், ஆட்டமுறைகள், இசைக்கலைஞர்களும் கருவிகளும், ஒப்பனை, ஒத்திகை பார்த்தல், கொட்டடியில் அலங்கார ஒப்பனை, ஆடுகளம், உறவினர் பங்களிப்பு, போட்டியாட்டம், கம்பு சுழற்றுதல் என்னும் சிறு தலைப்புகளில் இவ்வாட்டம் விளக்கப்பட்டுள்ளது. இவ்விழாக்கள் காலத்துக்கேற்ற வகையில் குடும்ப விழாக்களிலும் (திருமணவிழா, முதியோர் இறப்பு) அரசியல் தலைவர் வருகை ஆகிய சமயங்களில் இது நிகழ்த்தப் படுகின்றது.

3.2 அழகுக்கலைகள்

உடம்பினையும், வீட்டையும் அழகுபடுத்துவதை அழகுக்கலைகளின் கீழ்க் காணலாம். உடம்பினைப் பல ஒப்பனைகள் மூலம் நாட்டுப்புறத்தில் அழகூட்டுகின்றனர். மருதாணியை உள்ளங்கையில், நகங்களில் வைத்தல், உடம்பின் மேல் பச்சைக்குத்திக் கொள்ளுதல், மலர்களைச் சூட்டிக் கொள்ளுதல், பல வகையான கொண்டைகளையும் கூந்தல்களையும் அமைத்துக் கொள்ளுதல் போன்றவற்றைச் சுட்டிக் காட்டலாம். வீட்டை அழகுபடுத்தும் கலைகளில் கோலக்கலையும் ஓவியங்களும் இடம் பெறுகின்றன. இவற்றை யெல்லாம் ஆராயும் முயற்சி விடுதலைக்கு முன் முளைவிட்டாலும் எண்பதுகளுக்குப் பின்பு தான் இவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து ஆராயும் போக்கு ஆய்வாளர்களிடம் ஏற்பட்டுள்ளது.

3.2.1 கோலம்

நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான கோலத்தைப் பற்றி முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்திருப்பவர் வே. சரோஜா. இவர் 'தமிழர் பண்பாட்டில் கோலங்கள்' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இது ஆய்வாளரின் மூன்றாவது நூல். ஏற்கெனவே கோலங்கள் தொடர்பாக இரண்டு நூல்கள் வெளியிட்டுள்ளார். கோலத்தின் வகைகள் பொருள், இடம் அமைப்பு அடிப்படையில் மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. பொருள் அடிப்படையில் ஆறு வகையாகவும், இட அடிப்படையில் ஏழு வகையாகவும், அமைப்பு அடிப்படையில் இருவகையாகவும் கோலத்தை வகைப்பாடு செய்கின்றார். புள்ளிக் கோலமானது பத்துவகைப்பாடு உடையதாக விளக்கியுள்ளார். கோலமிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மெழுகு வகைகள், பயன்படுத்தப்படும் கருவிகள், கோலமிடுவதற்குப் பயன்படுத்தப் படும் பொருள்கள் போன்றவையும் இந்நூலில் விவரிக்கப் பட்டுள்ளன.

தி.முத்துஇலக்குமி 'கோலங்களில் தாந்திரிக் கூறுகள்' என்னும் கட்டுரையை (2001) வெளியிட்டுள்ளார். கோலம் குறித்துப் பெண்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள் நடத்தை

சார்ந்த வடிவமாக வெளிப்படுகின்றன. கோலம் ஒரு குறியீட்டு ஊடகமாக அமைகின்றது. இறந்தவர் வீடுகளிலும் அம்மை நோய் வந்தவர் வீடுகளிலும் கோலம் போடுவதில்லை. உழைக்கும் வர்க்கத்தினரின் வீடுகளின் முன் விழக்காலங்களில் மட்டுமே கோலங்கள் தென்படும். நடுத்தர மேட்டுக்குடி மக்களிடத்தில் இக்கலை மரபாகப் பேணப்பட்டு வருகிறது. கோலமிடுதலில் பிராமணர், பிராமணர் அல்லாதார் வேறுபாடு காணப்படுகிறது. கோலத்தை ஆன்மீகம் சார்ந்த, சாராத கோலங்கள், பிராமணரின் கோலங்கள் எந்திரங்களுடன் தொடர்புடைய ஆன்மீகக் கோலங்கள், தாந்திரிகம் பெண்ணின் பிறப்புறுப்புக்கும் முக்கியத்துவம் தருகிறது. பெண்களின் பிறப்புறுப்புகளைச் சார்ந்து அமைக்கப்பெறும் சடங்குகள் தாந்திரீக எந்திரங்களில் காணப்படுகின்றன. இத்தகைய எந்திரங்களை ஒட்டியே ஆன்மீகக் கோலங்கள் அமைந்துள்ளன. பொதுவாக எந்திரங்கள் அனைத்தும் பெண்ணுறுப்பின் குறியீடாக அமையும் தாமரை மலர்களையும் முக்கோணங்களையும் கொண்டுள்ளன. இவ்வாறு கோலத்திற்கும், தாந்திரீகத்திற்கும் உள்ள உறவினை முத்து இலக்குமி விளக்கியுள்ளார்.

3.2.2 நாட்டுப்புற ஓவியம்

உருவ அமைப்பிலும், வண்ணம், கோடுகள், ஓவியப் பொருள், ஒழுங்கற்ற நிலையில் மிகைப்படுத்தப்பட்டதாக அமையுமானால் அது நாட்டுப்புற ஓவியமாகும். பச்சைக் கோலம் ஒரு நாட்டுப்புற ஓவியக் கலை என்னும் கட்டுரையை ஷீலா ஆசீர்வாதம், சி. பொன்னுத்தாய் ஆகியோர் வெளியிட்டுள்ளார்கள் (2001). இக்கட்டுரை தமிழக நாட்டுப்புறக் கைவினைக்கலைகள் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. நாட்டுப்புற ஓவியக் கலையின் ஒரு பகுதி பச்சைக்கோலம் என்னும் ஒருவகையாகும். இது மதுரையின் மேற்குப் பகுதியில் கருமாத்தூர், செக்கானூரணி, வடக்கம்பட்டி போன்ற கிராமப் பகுதிகளில் காணப்படுகின்றது. இவை சுவர்களில் வரையப்படும் ஓவியங்களாகும் (mural). திருமணம் நடைபெறுவதற்கு முன் அவர் தம் வீடுகளில் இக்கோலங்களைத் தீட்டுகின்றார்கள். பச்சிலைச்சாற்றையும் செம்மண்ணையும் கொண்டு வரைகின்றார்கள். மணமக்கள்

கண்களில் படும் வகையிலும், மணவறையிலும், மாலையைக் கழற்றிப்போடும் இடத்திலும் வளமையின் குறியீடாக அல்லது கெட்ட ஆவிகளை விரட்டுவதாக இப்பச்சைக் கோலங்கள் தீட்டப்படுகின்றன. தாமரை, தெப்பக்குளம், தண்ணீர் அல்லது பன்னீர் செம்பு, மஞ்சள் நீர், பிடி செம்பு, வீடு, வாழைமரம், தென்னை மரம் போன்ற உருவங்கள் வரையப்படுகின்றன. இக்கோலங்கள் பிரமலைக்கள்ளர் வகுப்பினரிடையே காணப்படுகின்றன. முன்பு மாப்பிள்ளைக்கு அண்ணி முறை உள்ளவர்கள் இக்கோலத்தை வரைவது மரபு என்றும், அம்மரபு இப்போது மாறி வருகிறது என்றும், இவ்வகையான பச்சைக் கோலங்கள் மது பணி என்ற பெயரில் பீகாரில் வழக்கத்தில் உள்ளன என்றும் ஆய்வாளர்கள் சுட்டுகின்றார்கள்.

உடையார் சாமி வழிபாட்டில் நாட்டுப்புற ஓவியங்கள் குறித்து ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளார் த.த.தவசிமுத்து (2001). பாரதி பித்தனின் நாயக்கர் கால ஓவியங்களில் நாட்டுப்புறக் கூறுகள் (நுண்கலை, செப்டம்பர்-98) என்னும் கட்டுரையில் நாட்டுப்புற ஓவியங்களை இனங்காணும் முறையை விளக்கியுள்ளார். அவற்றின் அடிப்படையில் உடையார் சாமி கோயில் ஓவியங்களை விளக்கியுள்ளார். தூத்துக்குடி மாவட்டம் (மாதவன் குறிச்சி, வேப்பலோடை, பாண்டியாபுரம்) விருதுநகர் மாவட்டம் (மேலவர குணராமபுரம் புத்தூர்) திருநெல்வேலி மாவட்டம் (ஆ.திருமலாபுரம்) கன்னியாகுமரி மாவட்டம் (வெள்ளாரன்விளை) ஆகிய மாவட்டங்களில் உள்ள சில ஊர்களில் உள்ள உடையார்சாமி கோயில்களில் காணப்படும் ஓவியங்கள் ஆராயப்பட்டுள்ளன. மாதவன் குறிச்சி கோயிலில் காணப்படும் ஓவியங்களைத் துணி ஓவியம், சுவர் ஓவியம் என இரண்டாகப் பிரித்து ஆய்வாளர் விளக்கியுள்ளார். கோடுகள், உருவங்கள், முகபாவங்கள், உடல்மொழி, மஞ்சள் சிவப்பு வண்ணங்கள் கலவை மற்றும் ஒளிர் வண்ணங்கள், இடைவெளி போன்ற கூறுகளை வைத்து நாட்டுப்புற ஓவியங்களை இனங்காணலாம்.

3.3. கைவினைக் கலைகள்

நாட்டுப்புறக் கலைகளில் ஒரு வகை கைவினைக் கலையாகும். குறைந்த பட்ச எந்திர உதவியோடு தன்னுடைய கரங்களால் பொருள்களை உருவாக்குவது கைவினைக்

கலையாகும். பாரம்பரியம் அல்லது மரபு கைவினைக் கலைகளின் முதன்மையான பண்பாகும். மரபின் நேர்த்தியையும், மேன்மையையும் கைவினைக் கலைகளில் காணலாம். கைவினைக் கலைகள் குடும்பத் தொழில்களாகவும், ஒரு குழுவினர் பணியாகவும் தொன்று தொட்டு வந்து கொண்டிருக்கின்றன. மண், கல், மரம், உலோகம், நார்ப்பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்பவர்களின் வாழ்க்கையைப் பற்றியும், அவர்களின் பொருள்களைப் பற்றியும் பல ஆண்டுகளாக ஆய்வுகள் நிகழ்த்தப்படவில்லை. தொண்ணூறு களில் தான் நாட்டுப்புற ஆய்வாளர்கள் கைவினைக் கலைகளை ஆராய்வதில் மனத்தை ஈடுபடுத்தியுள்ளனர். 'செ.பெருமாள்' காரக்குறிச்சி வேளாளர்களின் வாழ்க்கையும் கைவினைத் தொழிலும் (1992) என்னும் தலைப்பில் ஆய்வேடு சமர்ப்பித்துள்ளார். க.சிதம்பரத்தின் தஞ்சை வட்டார நாட்டுப் புறப் பொருட்கலைகளும் கைவினைப் பொருட்களும் பற்றிய வரலாற்றியல் ஆய்வு (எம்ஃபில் ஆய்வேடு) இத்துறையில் முன்னோடியான முயற்சியாகும். மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழக நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் (பன்முகப் பார்வை) என்னும் நூல் கைவினைக் கலைகள் பற்றிய வரலாற்று முதன்மையான புதிய வரவாகும்.

3.3.1 தஞ்சை வட்டாரக் கைவினைப் பொருட்கள்

தமிழக கலைகளுள் தஞ்சை வட்டாரக் கலைகள் தனித்துவம் வாய்ந்தவை. தஞ்சாவூர் தட்டு உலகப் புகழ்பெற்றவை. கும்பகோணம் கோவிற்சிலைகளும் செவ்வியல் மரபில் உலகத் தரத்தை எட்டியவை. தஞ்சைக் கலைப்பாணி, தமிழர், தமிழரல்லாத நாயக்கர், மராட்டியர் ஆகியோரின் திருவேணி சங்கமமாகும். தஞ்சை நாட்டுப்புறக் கைவினைப் பொருள்களில் காணப்படும் பொதுக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு இவற்றை ஒரு தனிப்பாணியாகக் கருதினாலும் அந்தந்த மக்களின் தனித்தன்மைகளும், பண்பாட்டியல் கூறுகளும், கைவினைப் பொருள்களில் வெளிப்படுகின்றன. ஓவியம், (பலகை ஓவியம்) பொம்மை, மாலை ஆகிய மூன்று கைவினைப் பொருள்களின் தொன்மை, வளர்ச்சி பணிநிலைகள், இன்றைய நிலை, எதிர்கால நிலை, கலைஞர்களின் வாழ்க்கை நிலை முதலானவை ஆராயப் படுகின்றன.

3.3.2 திண்டுக்கல் வட்டாரக் கைவினைக் கலைகள்

ஏ.பூலோகரம்பை, திண்டுக்கல் வட்டாரக் கைவினைத் தொழில்களும், இனக்குழுக்களும் என்னும் பொருளில் கட்டுரை ஒன்றினை வெளியிட்டுள்ளார். மண்பாண்டத் தொழில், கூடைப் பின்னுதல், நெசவுத்தொழில், கயிறு திரித்தல், பனைஓலை பொருள்கள் தயாரித்தல், பாத்திர வேலை, கடைசல் வேலை ஆகிய கைவினைத் தொழில்கள் பற்றியும் அவற்றை செய்யும் சாதியாரையும் இக்கட்டுரை அறிமுகப்படுத்துகின்றது. குறிப்பிட்ட ஒரு சாதிக்குரிய பரம்பரை கைவினைத் தொழில் மற்ற சாதியாரும் செய்யும் தொழிலாகத் தொழில் மாற்றம் நிகழ்ந்து வருவதைக்காணலாம். சான்றாக ஆசாரிகள் செய்யும் கடைசல் வேலையைத் தங்கமலை என்ற தேவர் இனத்தவரும், டிசத்தார் என்ற முஸ்லீம் இனத்தவரும் செய்கின்றனர்.

3.3.2 நெல்லை மாவட்டத் தட்டார்களின் கைவினைக்கலை

பி.சாந்தி நெல்லை மாவட்டத் தட்டார்களின் வாழ்வியலும் நகைத்தொழில் நுணுக்கங்களும் என்பது பற்றி தன்னனானே இதழில் (மே-2000) ஒரு நீண்ட கட்டுரையை வெளியிட்டுள்ளார். இக்கட்டுரை விஸ்வகர்மாக்களின் புராண வரலாறு, இன்றைய பிரிவுகள், சாதிய உரிமைப் போராட்டங்கள் குறித்த தகவல்களை முதல் பகுதியாகவும், விஸ்வகர்ம தட்டார்களின் சமூக வாழ்வியல் குறித்த தகவல்களை இரண்டாம் பகுதியாகவும், தட்டார்களின் தொழில் நுட்பங்கள் அவர்கள் தொழில் சார்ந்து எதிர் கொள்ளும் பிரச்சனைகள் ஆகியவற்றை மூன்றாவது பகுதியாகவும் எடுத்துரைக்கின்றது. இறுதியாக நாட்டார் கைவினைக் கலையாக, தட்டார் தொழில் எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் குறித்துப் பேசுகின்றது. கைவினைக் கலைகளின் அடிப்படைப் பண்பாக ஓவியத் தன்மையும், சிற்பத்தன்மையும் இரண்டு சிறப்புக் கூறுகளாக சங்கர் செங்குப்தா கூறுகின்றார். பொன்னால் ஆபரணம் செய்யும் கலையில் இவ்விரு பண்புகளும் இணைந்து திகழ்வதைக் காணலாம். இதே ஆய்வாளர் தமிழக நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் என்னும் நூலில் பொன்னால் ஆபரணம் செய்யும் கலை என்னும் கட்டுரையை (2000:75) எழுதியுள்ளார்.

3.3.3 தமிழக நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

பேராசிரியர் சரஸ்வதி வேணுகோபால் மற்றும் சிலரும் சேர்ந்து பதிப்பித்த இந்த நூல் ஆறு கட்டுரைகளையும், மண்பாண்ட வெண்பாவையும் உள்ளடக்கமாகக் கொண்டது. பக்தவச்சல பாரதியின் கைவினைக் கலைகளும், சமயமும் என்ற கட்டுரை கைவினைச் சாதியினர், சமயம், கலை ஆகியவற்றுக்கு இடையே காணப்படும் பரஸ்பர உறவை விளக்குகின்றது. கோ.விஜய வேணுகோபாலின் நாட்டுப்புறக் கைவினைக் கலைகளும் அழகியலும் என்னும் கட்டுரை, வண்ணம், வடிவம், பொருண்மை, பண்பாடு என நான்கு கூறுகள் ஒத்திசைவுடன் அமைக்கப்பட்டன. நாட்டுப்புறக் கைவினைப் படைப்புகள் என்ற கருத்தை விளக்கி கைவினைப் படைப்புகளின் நிலையான தன்மைக்குரிய காரணங்களை விளக்குகின்றது.

நாட்டுப்புறக் கைவினைக் கலைகளின் இன்றைய எதிர்காலநிலை என்ற கட்டுரையில் ஆ.பாப்பா மூன்று பகுதியாகப் பிரித்துக் கைவினைக் கலையின் நிலைப்பாட்டை விளக்க முயன்றுள்ளார். முதல் பகுதி சாதியினரின் தொழில் மாற்றம் பற்றியும், இரண்டாம் பகுதி கைவினைப்பொருளின் உற்பத்தி பற்றியும், மூன்றாம் பகுதி கைவினைப் பொருள்களின் விற்பனை பற்றியும் இக்கட்டுரை விளக்கமுற்படுகின்றது. மு.சுப்பையாவின் தசரா முகமூடியில் வடிவங்களும் செய்முறைகளும் என்னும் கட்டுரை குலசேகரப்பட்டணத்தில் அமைந்துள்ள முத்தாரம்மன் திருக்கோயிலில் நிகழ்த்தப்பெறும் தசரா திருவிழாவில் நேர்த்திக்கடனாகச் செலுத்தப்படும் வேடம் புனைதலில் பயன்படுத்தப்படும் முகமூடிகளின் வடிவ வகைகள், தயாரிக்கும்முறை, தயாரிக்கும் மரபு, மரபு மாற்றங்கள் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றது. ஷீலா ஆசீர்வாதம், சி.பொன்னுத் தாய் ஆகியோரின் பச்சைக்கோலம் பற்றிய கட்டுரையும், பி.சாந்தியின் ஆபரணக்கலை பற்றிய கட்டுரையும் இந்நூலில் இடம் பெறுகின்றன. எஸ். ஹரிதாஸ் வேளார் என்பவரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மண்பாண்ட வகைகளை விளக்கும் வெண்பா (56 வெண்பாக்கள்) இந்த நூலில் இடம் பெறும் புதுமையான பிற்சேர்க்கையாகும்.

3.3.4 மண்பாண்டக்கலை

தமிழரின் மண்பாண்டக்கலை மிகத்தொன்மையானது. இதன் வரலாறு நம்மை சிந்து சமவெளி நாகரிகத்திற்கே அழைத்துச் சென்றுவிடும். ஆதிச்சநல்லூரிலும், தமிழகத்திலும் பல இடங்களிலும் கிடைக்கும் முதுமக்கள் தாழிகளும் மற்றும் பிற மண்பாண்டக் கருவிகளும் மண்பாண்டக்கலை மிகமிகப் பழமையானது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. சங்க காலத்திலிருந்து மண்பாண்டப் பொருள் பற்றி இலக்கியச் சான்றுகள் (புறம் 228, 256) கிடைப்பதைக் காணலாம். வெண்ணிக் குயத்தி என்ற புலவர் சங்கப்புலவர் வரிசையில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். தண்டச் சக்கரம் என்னும் திகிரியைப் பயன்படுத்தி மண்பாண்டப் பொருட்கள் தயாரிக்கும் உத்தியைக் குயவர்கள் சங்க காலத்திலே அறிந்திருந்தனர். இன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏதேனும் ஓர் ஊர் மண்பாண்டக் கலையில் சிறப்புற்றிருப்பதைக் காணலாம். இராமநாதபுரத்தில் 'பரமக்குடி' மண்பாண்டக் கலையில் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கின்றது. கருப்பு வகை மண்பாண்டங்களும் சிவப்பு வகை மண்பாண்டங்களும் உருவாக்கப்படுகின்றன. மண்பாண்டக் கலையின் வளர்ச்சி அய்யனார், முத்தாலம்மன், விநாயகர் வழிபாட்டோடு பின்னிப் பிணைந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பாளையங்கோட்டை முத்துவேல் தமது எம்ஃபில் ஆய்வேட்டிற்காகக் கன்னிவாடி வட்டார மண்பாண்டக் கலையை ஆராய்ந்துள்ளார்.

3.3.4.1 குதிரையெடுப்பு (1991)

தமிழ் நாட்டில் மண்சிலைகள் (Terracotas) பற்றிய விரிவான ஆய்வு செய்யப்படவில்லை. அவ்வகையில் இரவிக்குமாரின் 'குதிரையெடுப்பு' முன்னோடியான முதல் நூலாகும். இது எம்ஃபில் ஆய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் அச்சுவடிவமாகும். மதுரை வட்டாரத்தை ஆய்வுக் களமாகக் கொண்டு 'குதிரையெடுப்பு' என்பது ஆராயப் பட்டுள்ளது. வேளார் வாழ்க்கை இவர்களுடைய தொழில் நுட்பம் - வேளார் சாதியினருக்கும் மற்ற சாதியினருக்கும் உள்ள உறவுநிலை - தெய்வ உருவகங்களும் நாட்டார்களின்

விருப்பங்கள், உணர்ச்சிகள், அழகுணர்வு ஆகியவற்றுக்கும் உள்ள தொடர்பு - சடங்கு நடைமுறைகளுக்கும் நாட்டார் தொழில் முறைக்கும் உள்ள தொடர்பு - குதிரையெடுப்புச் சடங்குக்கும் சமூக வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு ஆகியவற்றை இந்நூலிருந்து அறிந்து கொள்ளலாம். மண் உருவாக்கல், விழா நடைமுறைகள் ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்க இயல்கள். உருவங்களை உருவாக்கிய பின் காய வைத்துப் பின்னர்ச் சூளையிட்டு, வெள்ளையடித்து வண்ணம் தீட்டுவார்கள். பின் பட்டம் ஒட்டுவார்கள். திருவிழாவின் முதல் நாள் குதிரைச் சாமிகளைக் கிராமத்தார் முன்னிலையில் பூசைகள் செய்து கிராமத்திற்குத் தூக்கிச் செல்வார்கள். ஊர்ப் பொதுவிடமான மந்தையில் அவற்றை நிறுத்தி வைப்பார்கள். இரண்டாம் நாள் அவை கோயிலுக்குள் கொண்டு போகப்படும். குதிரையெடுப்பு, ஐயனார், சாத்தன், சாஸ்தா, ஐயப்பன் ஆகிய வழிபாடுகளோடு தொடர்புடையது.

3.3.4.2 சுடுமண் சிற்பங்கள் (2001)

பெருமாள் முருகன், கொங்கு நாட்டுச் சுடுமண் சிற்பங்கள் பற்றிய கட்டுரையைத் தன்னனானேயில் வெளியிட்டுள்ளார் (மே, 2001). கொங்கு நாட்டு கிராமக்கோவில்களில் காணப்படும் சிற்பங்களை (1) தெய்வங்களின் மூல உருவங்கள் (2) வேண்டுதலுக்காகச் செய்யப்படும் உருவங்கள் என இரண்டாகப் பகுத்து விளக்கியுள்ளார். கண்களை அகட்டிக் கொண்டு கைகளில் ஆயுதம் ஏந்தியபடி நிற்கும் தெய்வங்களின் உருவங்கள் முதல் வகையைச் சேர்ந்தவை. வேண்டுதல்களுக்காகச் செய்யப்படும் உருவங்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை. இவையே அளவில் அதிகம். பல கோவில்களைச் சுற்றிலும் இத்தகைய உருவங்கள் உடைபட்ட நிலைகளில் காணலாம். கொங்கு நாட்டுச் சுடுமண் சிற்பங்களை மக்கள் இட்டு வழங்கும் பெயர்களின் அடிப்படையில் (1) உரு அல்லது உருவு (2) பசு அல்லது பசுவு (3) வேட்டை (4) குதிரை என நான்காகப் பிரித்து கூறுகின்றார். இத்தகைய சுடுமண் சிற்பங்கள், பலராலும் வணங்கப்படும் முனியப்பன், மாரியம்மன் போன்ற பொதுத் தெய்வங்களுக்கே வைக்கப்படுகின்றன. தனிப்பட்ட குடும்பத்தினர் வணங்கும் தெய்வங்களுக்கோ, குல தெய்வங்களுக்கோ

வைக்கப்படுவதில்லை. சுடுமண் சிற்பங்கள் பாவனை என்னும் போலச் செய்தலை அடிப்படையாகக் கொண்ட ஒத்த மந்திரத்தின் தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. சுடுமண் சிற்பங்கள் மந்திரம், சமயம் ஆகிய இரண்டின் கூறுகளையும் கொண்ட மந்திரச் சமயச்சடங்காகும் என்பது ஆய்வாளரின் முடிவு.

3.4 விளையாட்டு

நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றாகக் கருதப்படுவது விளையாட்டு ஆகும். ஒரு சமுதாயத்தின் நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் பூகோள இயற்கை வளத்திற்கும் ஏற்ப விளையாட்டுகள் அமைகின்றன. ஒரு மொழி எவ்வளவு தொன்மை வாய்ந்ததோ அதைப்போன்று அந்த நாட்டின் விளையாட்டுகளும் தொன்மை வாய்ந்தன என சு. சக்திவேல் குறிப்பிடுவார் (1983:134). விளையாட்டுகள் பொழுதுபோக்காவும், உடல், மனம் ஆகியவற்றின் நலம் பேணுவதற்கும் பயன்படுகின்றன. விளையாட்டுப் பற்றிய நம்பிக்கைகளும், விதிமுறைகளும் சமூகத்திற்குச் சமூகம் வேறுபடலாம். இருப்பினும் விளையாட்டு வெளிப்பாட்டு நடத்தைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. விளையாட்டு என்பது ஒரு தன்னார்வச் செயலாகும். கலை, மொழி, சமயம் ஆகியவற்றைப் போன்று விளையாட்டு ஒரு கலவையான ஒரு நிகழ்வாகும். சிறுவர்கள் விளையாட்டில் பொழுது போக்கும் பண்பும், வயது வந்தோர் விளையாட்டில் போட்டிப் பண்பும் அமைந்து காணப்படுகின்றன.

ஒரு செயலை விளையாட்டாகக் கருத வேண்டுமானால் கீழ்க்காணும் ஐந்து அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிடுவர் மானிடவியலார் ஒட்டர் பெய்ன் :

1. அமைப்புடைய ஆட்டமாக இருக்க வேண்டும்
2. போட்டியை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்
3. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களோ குழுக்களோ இருக்க வேண்டும்
4. வெற்றியை நிர்ணயிக்கும் விதியைக் கொண்டிருக்க வேண்டும்

5. பலராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க விதிகளை உள்ளடக்கி இருக்கவேண்டும்

3.4.1 சேகரிப்பும் பதிப்பும்

சங்க இலக்கியம் முதற்கொண்டு பல இலக்கியங்கள் சிலப்பதிகாரம், பெருங்கதை, சீவகசிந்தாமணி, திருவாசகம், பெரிய புராணம், கம்பராமாயணம் போன்ற பல காவியங்கள் பழங்கால மரபு விளையாட்டுகளைப் பதிவு செய்துள்ளன. பிள்ளைத்தமிழின் இறுதி மூன்று பருவங்களும் ஆடவர், மகளிர் விளையாட்டு களைப் பருவங்களின் பெயர்களாகக் கொண்டுள்ளன. பந்து விளையாட்டு மகளிர் ஆட்டமாகவும், ஏறுதழுவல் ஆடவர் விளையாட்டாகவும் பழங்கால இடைக்கால இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. மாணிக்கவாசகர் நாட்டுப்புற மகளிர் விளையாட்டுகளின் பெயர்களை வைத்துப் பாட்டுகளைப் புனைந்துள்ளார். ஆனால் முறையான நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுப்பது இந்திய விடுதலைக்குப் பின் தான் தொடங்கியது என்று கூறலாம். பாரதியார் தேசியக் கல்வித் திட்டத்தில் சில தமிழர் விளையாட்டுகளை இருபதுகளில் சுட்டிக் காட்டினாலும் இந்திய விடுதலைக்கு முன்பு மரபு விளையாட்டை யாரும் தொகுத்ததாகத் தெரியவில்லை. தமிழர் விளையாட்டுகளைத் தொகுத்து விளக்கும் முயற்சியில் முன்னோடியாகத் திகழ்பவர் தேவநேயப் பாவாணர் (1954).

இவரது நூலுக்குப் பின் தமிழர் விளையாட்டுப் பற்றிய ஆய்வில் எவரும் கவனமும், ஈடுபாடும் செலுத்தவில்லை. 1980-இல் இரா.பாலசுப்பிரமணியனின் 'தமிழர் நாட்டு விளையாட்டுகள்' என்னும் நூல் இத்துறையில் வெளிவந்த வழிநூலாகும். இவ்விரண்டிற்குப் பின் அ.பிச்சையின் தமிழர் பண்பாட்டில் விளையாட்டுகள் தமிழர் மரபு விளையாட்டுகளை விளக்கவியல், வரலாற்றியல், ஒப்பியல் நோக்குகளில் ஆராய முனைந்தது. ஜே.டேவிட், டேனியல் ராஜ் எழுதிய சிலம்பம் அடி முறைகளும் வரலாறும் என்ற நூல் (1973) ஆடவரின் சிலம்பாட்டத்தை முழுமையாக, தனியாக விரிவாக விளக்கும் நூலாகும். எம்.எஸ். சுதர்சன்தாஸ் என்பவரின் சிலம்பாட்டக் கலையும் அதன் உத்தி முறைகளும் என்ற முதுகலை ஆய்வேடு (1992) இங்கு நினைவு

கூரத்தக்கது. தமிழ்ப் பல்கலைக்கழகம் தொண்ணூறுகளில் (1990) நாட்டுப்புற விளையாட்டுகளைப் பற்றிய ஒரு கருத்தரங்கம் நடத்தியது. இக்கருத்தரங்கு பல இளம் ஆய்வாளர்களை நாட்டுப்புற விளையாட்டுகளை ஆராய்வதில் ஈடுபாடும், கவனமும் செலுத்துவதற்குத் தூண்டுதல் அளித்தது. தன்னனானே என்னும் நாட்டுப்புற இதழ் (ஆகஸ்டு 1996) நாட்டுப்புற விளையாட்டுகளின் சிறப்பிதழை வெளியிட்டது. இவற்றைத் தொடர்ந்து நாட்டுப்புறவியல் விளையாட்டுக் கட்டுரைகள் பரவலாக இடம் பெற்றன. எம்.ஏ., எம்ஃபில், பி.எச்.டி பட்டங்களுக்கு நாட்டுப்புற விளையாட்டு ஆய்வுப் பொருளாகியது.

3.4.2 நாட்டுப்புற விளையாட்டுகளின் வகைப்பாடு

தமிழகக் கிராமங்களில் நூற்றுக்கு மேற்பட்ட விளையாட்டுகள் வழக்காற்றில் காணப்படுகின்றன. இவற்றை வகைப்படுத்தும் முயற்சி, தேவநேயப் பாவாணர், இரா.பாலசுப்பிர மணியன் ஆகியோரின் நூல்களிலும், கார்லோஸ் எழுதிய தமிழ் நாட்டு விளையாட்டுகள் பற்றிய ஆங்கிலக்கட்டுரையிலும் காணலாம். நாட்டுப்புற விளையாட்டுகளை விளையாடும் பாலினம் (ஆடவரும், மகளிரும்) வயது (சிறுவர், பெரியவர்) கருவி (பந்து பலகை, குச்சி) இடம் (வீடு, தெரு, மைதானம்) காலம் (பகல், இரவு) பருவம் (திருவிழா, சடங்கு) ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். தமிழக விளையாட்டுகளைப் பற்றிய ஆய்வுரைகளைச் சுருக்கமாகக் காணலாம்.

3.4.2.1 சல்லிக்கட்டு

"புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்" என்னும் சங்கத் தமிழரின் வீர வாழ்க்கையைச் சித்திரிப்பது சல்லிக்கட்டு என்னும் வீரவிளையாட்டு ஆகும். கலித்தொகை காலந்தொட்டு கலி யுகத்திலும் தொடர்ந்து வரும் கன்னித் தமிழரின் காளை விளையாட்டு சல்லிக்கட்டு பற்றி 1980-81-ஆம் ஆண்டுகளில் ஆ. முத்தையா மேற்கொண்ட ஆய்வின் விளைவாகும் இந்நூல். இந்நூல், தோற்றமும் வளர்ச்சியும், காளை விளையாட்டு வகைகள், காளை வளர்ப்பும் பயிற்சியும், பிடிமுறைகள், மஞ்சி விரட்டும் சல்லிக்கட்டும், காளை விளையாட்டும் சமூகமும், தமிழ்நாட்டுக்

காளை விளையாட்டும் மேலைநாட்டுக் காளை போரும் என்னும் இயல்களைக் கொண்டு ஆய்வுப் பொருளைச் சிறப்பாக அலசி ஆராய்கின்றது. இது, சல்லிக்கட்டுப் பற்றிய முன்னோடியான முதன்மையான ஆராய்ச்சி நூலாகும். இவ்வாய்வு விளக்கவியல், வரலாற்றியல், ஒப்பியல் கோணங்களிலும், பண்பாட்டு மானுடவியல், வரலாற்றியல் ஆகிய அணுகுமுறை அடிப்படையிலும் சல்லிக்கட்டினை விதந்து உரைக்கின்றது. முனைவர் பட்டத்திற்கு இதனைத் தொடர்ந்து செய்யவேண்டிய ஆய்வுத் தளத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

இரண்டாயிரம் ஆண்டுத் தொன்மையுடைய இவ்வீர விளையாட்டு மதுரையைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் கிராமத் தெய்வ வழிபாட்டோடு - திருவிழாவோடு இணைந்து நிகழ்த்தப் படுகின்றது. இதனைப் பற்றிப் பலர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். குறிப்பாகத் தேவநேயப்பாவாணர், இரா. பாலசுப்பிரமணியன், அ.பிச்சை ஆகியோரைச் சுட்டிக் காட்டலாம். இதனை எம்ஃபில் ஆய்வுக்கு (22 வருடங்களுக்கு முன்பே) எடுத்து ஆராய்ந்தவர் ஆ.முத்தையா. இவ்வாய்வேடு சென்ற ஆண்டு நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது. இவரது ஆய்வைத் தொடர்ந்து முழு வீச்சில் ஆழமாகவும் அழுத்தமாகவும் மதுரைமாவட்ட சல்லிக்கட்டினை ஆராய்ந்துள்ளார் ஆ.சிவக்கொழுந்து. மதுரை மாவட்டத்திலுள்ள 35 ஊர்களில் 63 தகவலாளிகளைச் சந்தித்துக் கள ஆய்வு செய்து தகவல்களைத் திரட்டி இந்த ஆய்வு நூலை ஆக்கியுள்ளார். ஆய்வு அறிமுகம், சல்லிக்கட்டுத் தோற்றமும் வளர்ச்சியும், சல்லிக்கட்டு சார்ந்த நம்பிக்கைகள், சல்லிக்கட்டும் மக்களும், முடிவுரை என்னும் ஏழு இயல்களில் ஆய்வுப் பொருளை விளக்கியுள்ளார். தமிழகப் பண்பாட்டை எழுதும் ஆய்வாளருக்கு இந்நூல் ஒரு வரலாற்றுப் பெட்டமாகும்.

3.4.2.2. நெல்லை நாட்டுப்புற விளையாட்டுக்கள்

சு.சக்திவேல் நெல்லை மாவட்ட நாட்டுப்புற விளையாட்டுகள் பற்றித் தன்னனானேயில் ஒரு கட்டுரை (ஆகஸ்ட், 1996) வெளியிட்டுள்ளார். கட்டுரையில் தொடக்கத்தில் விளையாட்டுப்பற்றிய விளக்கம், கொள்கைகள், வகைப்பாடு ஆகியவற்றைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார். பின்பு சிறுவர்கள் (பையன்கள்) விளையாடும் 41 விளையாட்டுகளை

விளக்கி எழுதியுள்ளார். இதைத் தொடர்ந்து சிறுமியர் விளையாடும் பன்னிரெண்டு விளையாட்டுகளை விவரித்துள்ளார். சிறுவர், சிறுமியர் இருபாலரும் விளையாடும் ஏழு விளையாட்டுகளைக் குறிப்பிடுகின்றார். பல்லாங்குழி, தட்டாங்கல், தாயம் ஆகிய மூன்று மகளிர் விளையாட்டுகளையும், சடுகுடு, பதினைந்தாம் புலி, உறிப்பானை அல்லது உறியடி விளையாட்டு, சேவல்கட்டு, எருதுகட்டு என்றும் ஐந்து ஆடவர் விளையாட்டுகள் பற்றியும் தம் கட்டுரையில் தேவையான படங்களோடு விளக்கம் தந்துள்ளார். இறுதியில் காக்காகுஞ்சு, கண்ணாமூச்சி ஆகிய இரண்டு விளையாட்டுகளையும் அமைப்பியல் கூறுகள் அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டியிருக்கின்றார்.

3.4.2.3 நாட்டுப்புற சிறுவர் விளையாட்டுகள்

அரு.மருததுரை, ஆ. சண்முகம் ஆகிய இருவரும் நாட்டுப்புறச் சிறுவர் விளையாட்டுகளைப் பற்றி ஆராய்ந்து கட்டுரைகள் (1996) வெளியிட்டுள்ளனர். அரு.மருததுரை திருச்சி மாவட்டம் முசிறி வட்டாரத்தைக் களமாகக் கொண்டு சேகரித்த மூன்று விளையாட்டுகளை (தண்ணீர் இறைத்தல், சங்கிலி புங்கிலி, பாட்டி பாட்டி) சூழல், அமைப்பு ஆகியவற்றை விளக்கியுள்ளார். ஆ.சண்முகத்தின் கட்டுரை கும்பகோணம் வட்டம் சாக்கோட்டை கிராமத்தில் காணப்படும் சிறுவர் விளையாட்டுகளை ஆராய்ந்துள்ளது. இக்கட்டுரையில் ஆலியல், கிட்டிப்புள்ளு, குச்சி விளையாட்டு, சடுகுடு, தவக்களைப் போட்டி, பம்பரம், பளிங்கு என்னும் எட்டு விளையாட்டுகள் ஆராயப்பட்டுள்ளன. இவ்விளையாட்டுகளை எட்டு முதல் பதினைந்து வயது வரை உள்ள சிறுவர்கள் விளையாடுகின்றனர். விளையாடும் நேரத்திற்கு வரையறை இல்லை. இந்த விளையாட்டுகளைப் பொதுக்கூறுகளின் அடிப்படையிலும், அமைப்பியல் கூறுகளின் அடிப்படையிலும் ஆராய்ந்துள்ளனர். இறுதியில் விளையாட்டுகளின் மூலச்செயல்கள் அடிப்படையிலான அட்டவணையையும் இணைத்துள்ளார்.

3.4.2.4 மகளிர் விளையாட்டுகள்

நா.சாந்தியின் மகளிர் விளையாட்டுகள் என்னும் கட்டுரை மகளிரின் முக்கியமான விளையாட்டான பல்லாங்குழியைப் பற்றி

விளக்குகிறது. கட்டுரையின் ஆரம்பத்தில் விளையாட்டுகள் பற்றிய வரையறை, விளையாட்டின் தோற்றம், விளையாட்டுப் பற்றிய கொள்கைகள், விளையாட்டின் வகைப்பாடுகள், மகளிர் விளையாட்டுகள் என்று அமைந்துள்ளன. பல்லாங்குழி என்பதன் பெயர்க்காரணத்தை விளக்கிவிட்டுப் பல்லாங்குழி ஆட்ட வகைகளை விளக்குகின்றார். 1.முத்துப்பாண்டி, 2. எதிர்ப்பாண்டி, 3. ராஜா பாண்டி, 4. காசிப் பாண்டி அல்லது அச்சரப்பாண்டி, 6. சீதைப்பாண்டி, 7. சரிப்பாண்டி அல்லது தள்ளுப் பாண்டி ஆகிய எட்டு வகைகளை விளக்குகின்றது. இறுதியில் பல்லாங்குழி விளையாட்டு பற்றிய நம்பிக்கை சுட்டிக்காட்டப் படுகின்றது.

3.4.2.5 கிட்டிப்புள் விளையாட்டு

ஆடவர்களின் அல்லது சிறுவர்களின் விளையாட்டுகளில் ஒன்று கிட்டிப்புள் என்னும் கோட்டி விளையாட்டாகும். இதனைப் பற்றி தி.குரவிச்சந்திரன் கிரிக்கெட்டோடு ஒப்பிட்டு இரண்டையும் பிராய்டிஸ அடிப்படையில் விளக்கியுள்ளார். கிரிக்கெட் என்னும் நவீன விளையாட்டின் மூல வடிவம் கிட்டிப்புள் விளையாட்டாகும். இவ்விளையாட்டு இந்தியா வெங்கும், ஏன் உலகெங்.கும் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப் படுகின்றது. பதினான்காம் நூற்றாண்டில் கால்நடை மேய்க்கும் சிறுவர்களால் பொழுது போக்காக விளையாடத் தொடங்கிக் கொஞ்சங்கொஞ்சமாக வளர்ச்சி பெற்று நகர்ப்புறங்களில் முதிர்ச்சி அடைந்தது. ஆங்கிலேயரின் முதன்மை ஆட்டமாகக் கிரிக்கெட் காணப்படுகிறது. ஆங்கிலேயர் ஆதிக்கம் செலுத்திய நாடுகளில் விளையாட்டுகள், விளையாட்டு விதிகள், முறைகள், ஆடுகளம், அமைப்புக் கூறுகள் ஒற்றுமையுடையனவாக இருக்கின்றன. இவ்விரண்டு ஆட்டங்களின் பொதுக்கூறை (குச்சியை வீழ்த்துதல்) பிராய்டின் நனவிலிக் கொள்கை அடிப்படையில் காயடிப்புச்சிக்கலோடு தொடர்பு படுத்தி விளக்குகின்றார். விளையாடுகின்ற அனைவரிடத்திலும் காயடிப்புச் சிக்கலே பொதுப்படையாக இருக்கின்ற நனவிலிக்கூறு ஆகும் என்று ஆராய்ச்சியின் முடிவாகக் கூறுகின்றார்.

3.4.2.6 சேவற்கட்டு

சுப.நடராஜன் கொங்கு நாட்டு சேவற்கட்டு பற்றிய பொழுதுபோக்கினை அறிமுகம் செய்து ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார் (1996). கொங்கு நாட்டுப் பகுதியான கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை வட்டங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சில கிராமங்களில் கள ஆய்வு செய்து இக்கட்டுரையை உருவாக்கியுள்ளார். சேவற் கோழியின் இனங்கள் இவற்றின் போர்க்குணத்திற்கான உளவியல் காரணங்கள் சேவற்கட்டுகளும், கட்டு நிகழ்வு, கட்டில் பார்வையாளரின் பங்கு போன்றவற்றை அறிமுகப்படுத்தவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆங்கிலேயரின் ஆட்சியிலும், தற்காலத்திலும் இவ்விளையாட்டுத் தடை செய்யப்பட்டிருந்தாலும் இவ்விளையாட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழ்நாட்டில் நடத்தப்படுகின்றது. சேவற்கட்டு போட்டி விளையாட்டாக நிகழ்த்தப்படலாம். ஆனால் சூதாட்டமாக நிகழ்த்தக்கூடாது. நாட்டுக் கோழிக்கே உரிய போர் மறப்பண்பு புதிதாக உருவாக்கப்பட்ட கோழியினத்தில் முற்றிலும் மறைந்து விட்டது. நாட்டுக் கோழியினம் அழிந்து விட்டால் சேவற்கட்டும் நிகழாது. ஆகவே நாட்டுக் கோழியினம் அழியாமல் காக்கப் படுவதின் மூலம் நாட்டுப்புறப் பொழுதுபோக்காக இருக்கும் போட்டி விளையாட்டாகச் செயல்படும் சேவற்கட்டு தமிழர் விளையாட்டில் தொடர்ந்து இடம்பெறும் என்று ஆய்வாளர் கருதுகின்றார்.

3.4.2.7 பன்முகப் பார்வையில் நாட்டுப்புற விளையாட்டுகள்

நாட்டுப்புற விளையாட்டுகள் அமைப்பியல், வரலாற்று ஒப்பியல் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமன்றி உளவியல், சமூகவியல், அரசியல் ஆகிய நோக்குகளில் ஆராய்வதற்கும் வாய்ப்புண்டு. நாட்டுப்புற ஆய்வாளர்களின் ஆய்வுக் கோணம் நடத்தை அறிவியல் (Behaviour science) பக்கம் திரும்பியுள்ளது. எனவே நாட்டுப்புற விளையாட்டுகளை உளவியல், சமூகவியல், அரசியல் என்ற கோணங்களில் ஆராய்வது பொருத்தமுடையது. ஜோசர்ஜவஹர் சிறுவர்கள் விளையாடும் கல்பாரி என்னும் விளையாட்டை மேற்கூறிய மூன்று பார்வைகளில் விளக்கியுள்ளார். கல்பாரி என்னும் விளையாட்டைக் குழு, களம்,

ஆடுவோர், கட்டங்கள், கற்கள், கட்டம் தாண்டுதல், கட்டத்தில் கற்களை வைத்தல், கட்டம் தாண்டும்போது தொடுதல், ஒருவரே அனைத்துக் கற்களையும் எடுத்தல், வெற்றி பெறல் ஆகிய பத்துக் கூறுகளின் அடிப்படையில் மூன்று அணுகுமுறையின் அடிப்படையில் விளக்கம் தந்துள்ளார். ஆ.பாப்பாவின் நாட்டுப்புற விளையாட்டுகளும், அரசியலும் என்னும் கட்டுரையும் (1996) இங்கு நினைவு கூரத்தக்கது. ச.ஹரிராமன் பூசணிக்காய் விளையாட்டை இனமரபியல் அடிப்படையில் ஆராய்ந்து முதுகலை ஆய்வேடு (1990) அளித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய அணுகுமுறையில் மட்டுமன்றி, தத்துவ நோக்கிலும் சில விளையாட்டுகளை ஆராயலாம் என்பதை சோ.கி. கல்யாணியின் 'பரமபத சோபனம் - விளையாட்டும் தத்துவமும்' என்னும் கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது. வேதாந்த தேசிகர் (கி.பி.1268-1369) எழுதிய 'பரமபத சோபனம்' என்னும் தத்துவ நூலின் அடிப்படையில் 'பாம்பும் - ஏணியும்' விளையாட்டை விளக்கியுள்ளார். மேலும், சொக்கட்டான் விளையாட்டு, ஊஞ்சல், ஏசல், பந்து, கழல், அம்மானை போன்ற விளையாட்டுகள் தத்துவத்தை விளக்க எவ்வாறு இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளன என்று ஆராய இடமுள்ளது என்று வேண்டுகோள் விடுகின்றார் (1995).

3.4.2.8 நாட்டுப்புற விளையாட்டுகளில் இடமும் & மொழியும்

நாட்டுப்புற விளையாட்டுகளில் முனைவர் பட்ட ஆய்வை செய்யும் ஆ.பாப்பா நாட்டுப்புற விளையாட்டில் இடம் (1994) பற்றியும் செயல்பாட்டு நோக்கில் நாட்டுப் புறவிளையாட்டு, அரசியல் நோக்கில் நாட்டுப்புற விளையாட்டு பற்றியும் (1996) கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். விளையாட்டிற்கு அடிப்படை இடம். அது வீடாகவோ, வீதியாகவோ மைதானமாகவோ இருக்கலாம். ஆய்வாளருக்குக் கிடைத்த விளையாட்டுகளை அடிப்படையாகக் கொண்டு இடங்களை இரண்டாகப் பிரிக்கின்றனர். 1. பரந்த இடம், 2. குறுகிய இடம், உப்பு வைத்தல் விளையாட்டிற்குப் பரந்த இடம் தேவைப்படுகிறது. குறுகிய இடத்தை மேலும், வரையறுக்கப்பட்ட இடம், வரையறுக்கப் படாத இடம் என்றும், வரையறுக்கப்பட்ட இடத்தை மேலும்

அடைக்கப்பட்ட இடம், திறந்த இடம் அடைக்கப்பட்ட திறந்த இடம் என்று மூன்றாகப்பிரிக்கின்றார். அடைக்கப்பட்ட இடத்திற்கு எடுத்துக்காட்டாக தாயம் மற்றும் ஆடுபுலி ஆட்டத்தையும், திறந்த இடத்திற்கு எடுத்துக்காட்டாக கல்லா, மண்ணா விளையாட்டையும் அடைக்கப்பட்ட திறந்த இடத்திற்கு எடுத்துக்காட்டாகக் கிளித்தட்டு விளையாட்டையும், வரையறுக்கப்படாத இடத்திற்குக் கிட்டிப்புள் விளையாட்டையும் குறிப்பிடுகின்றார்.

நாட்டுப்புற விளையாட்டுகளின் மொழி என்னும் கட்டுரை நாட்டுப்புற விளையாட்டில் பேச்சு மொழி அமைந்துள்ள விதம் பற்றி விளக்குகின்றது. நாட்டுப்புற விளையாட்டுகள், பேச்சுமொழியை மையப்படுத்தி அமைந்தவை, சைகை மொழியை மையப்படுத்தி அமைந்தவை என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. முன்னதற்கு வருதுகிளி, வரட்டுக்கிளி என்கிற விளையாட்டையும், பின்னதற்குத் தட்டாங்கல், கண்ணாமூச்சி, தாயம் போன்ற விளையாட்டுகளையும் சான்றாகக் கூறலாம். பேச்சு மொழியை அடிப்படையாக வைத்து நாட்டுப்புற விளையாட்டுகளை ஐந்து வகையாகப் பகுத்துக் கூறுகின்றார். பட்டவரை தேர்ந்தெடுப்பதற்கும், விளையாட்டின் அமைப்பைத் தீர்மானிப்பதற்கும், விளையாட்டில் தூண்டுதலாக, எச்சரிக்கையாக இருப்பதற்கும் பேச்சு மொழி பயன்படுகிறது. ஈரெதிர் பண்பு அடிப்படையில் மொழியின் பயன்பாட்டை விளக்கியுள்ளார்.

விளையாட்டுகள் வெளிப்படையாகவும், உள்ளிடையாகவும் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. செயற்பாட்டியல் நோக்கில் நாட்டுப்புற விளையாட்டு என்னும் கட்டுரை வெத்தலக் கட்டு பிடியாத என்ற விளையாட்டில் திருமணம் என்பது வெளிப்படும் பாங்கினை விளக்குகிறது. இவ்விளையாட்டு மேலூருக்கு அருகிலிருக்கும் வண்ணாம் பாறைப்பட்டி என்கிற கிராமத்தில் சேகரிக்கப்பட்டது. விளையாட்டின் அமைப்பை விளக்குவதற்காகச் செயல்பற்றிய மாலினோவ்ஸ்கி கருத்தையும் செயலை விட அமைப்புக்கு முக்கியத்துவம் தரும் ராபர்ட் பிரெளன் கிளிப் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கூறிய விளையாட்டை விளக்கியுள்ளார். மாலினோவ்ஸ்கி குறிப்பிடும்

முதன்மை தேவைகளான உயிரியல், உளவியல், சமுதாயத் தேவைகளை முன்னர் குறிப்பிட்ட விளையாட்டுக்குப் பொருத்தி ஆராய்ந்துள்ளார்.

விளையாட்டுகள், நாட்டுப்புற விளையாட்டுகள் சமூகத்தை மட்டுமல்ல சில அரசியல் கூறுகளையும் பிரதிபலிக்கின்றன. நாட்டுப்புற விளையாட்டுகளும் பொதுவான மற்றும் சிறப்பான கூறுகளை அரசியல் கூறுகளுடன் ஒப்பிட்டுக் காண்கிறது கட்டுரை. நாட்டுப்புற விளையாட்டுகளைப் பொதுநிலை விளையாட்டுகள், அணிநிலை விளையாட்டுகள் என இருவகையாகப் பிரிக்கலாம். இதில் அணிநிலை விளையாட்டுகளில் போட்டியும், வெற்றி தோல்வியும் உண்டு. இவற்றை அரசியல் தேர்தல், அணியாகப்பிரிதல், போட்டியில் நிற்றல், வெற்றி தோல்வியோடு நிற்றல் ஆகியவற்றோடு ஒப்பிடலாம். உத்தி பிரித்தல், தலைவரைத் தேர்ந்தெடுத்தல், திட்டமிடல், விளையாடுதல், வெளியேற்றுதல் போன்ற பொதுவான கூறுகள் அரசியல், விளையாட்டு இரண்டுக்கும் பொதுவானவை. பொதுக்கூறுகள் ஒவ்வொன்றையும் அரசியலுடன் ஒப்புமைப்படுத்த நிறைய இடமிருக்கிறது. நாடகத்திற்கும் விளையாட்டு முன்னோடி என்று கூறுவதைப் போன்று அரசியலுக்கும் விளையாட்டுகள் முன்னோடி என்று ஆய்வாளர் தம் கருத்தை நிறுவுகின்றார்.

3.4.2.9 இருளரின் விளையாட்டுகள்

கே.ஏ.குணசேகரன், தமிழக மலையின மக்கள் (1994) என்னும் நூலில் மலைவாழ் மக்களின் விளையாட்டுகளை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். இருளர் மகளிர் கும்மியை விளையாட்டாகக் கருதிக் கும்மி கொட்டி ஆடுகின்றனர். வயது முதிர்ந்த இருளர்கள் தாயம், பதினைந்தாம் புலி ஆகிய விளையாட்டுகளை விளையாடுகிறார்கள். இளைஞர்கள் இளவட்டக்கல் தூக்கி விளையாடுகிறார்கள். பம்பரம், கோலிக்குண்டு, கில்லி விளையாட்டு, சிக்கி விளையாட்டு ஆகிய விளையாட்டுகள் சிறுவர், இளைஞர் விளையாட்டுகளாகும். தொட்டு விளையாடும் விளையாட்டு, கும்மி விளையாட்டு, முந்திரிக்காய் விளையாட்டு, கல் பிடித்து விளையாடும் விளையாட்டு, பூக்காய் விளையாட்டு, பல்லாங்குழி விளையாட்டு

போன்றவை சிறுமி, மகளிர் விளையாட்டுகளாகும். இருளரின் விளையாட்டுகள் பொழுதுபோக்காக அமையாமல் வாழ்க்கைத் தொழிலுக்குப் பயிற்சிக்களன்களாக அமைகின்றன. விளையாட்டுகள் தனி நபர் நிலையைச் சாராமல் குழும நிலையில் அமைந்திருக்கின்றன. அதாவது குழுவிளையாட்டுகளே அதிகம். மலையின மக்கள் விளையாட்டுகள் பொதுவாக அறிவுத் திறன்களை விட உற்பத்தித் திறன்கள் அதிகம் கொண்டனவாக விளங்குகின்றன. ஆண்களிடம் நின்றாடும் விளையாட்டுகளும், பெண்களிடம் அமர்ந்தாடும் விளையாட்டுகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. மலையின சிறுவர், சிறுமியரிடம் தான் அதிகமாக விளையாட்டுகள் காணப்படுகின்றன. மேலும் பகல் நேர விளையாட்டுகள் மிக மிகக்குறைவு. இவ்வாறு இருளர் விளையாட்டை விளக்கி அவற்றிலிருந்து மலையினப் பழங்குடியினரின் விளையாட்டுக் கோட்பாட்டை உருவாக்குகின்றார்.

3.5 முடிவுரை

நாட்டுப்புறவியல் ஆய்வில் நாட்டுப்புற இலக்கியம், நாட்டுப்புறப் பண்பாடு ஆகியவற்றை ஒப்பிட நாட்டுப்புறக் கலைகள் பற்றிய ஆய்வு இன்னும் பின் தங்கிய நிலையிலேயே இருப்பதைக் காணலாம். மேலே கூறப்பட்டுள்ள நாட்டுப்புறக் கலைகளில் நிகழ்கலைகளும், விளையாட்டும் ஆராய்ச்சி செய்யப் பட்ட அளவுக்கு அழகுக்கலைகளும், கைவினைக்கலைகளும் விரிந்த பரந்த அளவில் ஆராய்ச்சி செய்யப்படவில்லை என்பதை நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள் தரவுகளிலிருந்து உணர முடிகின்றது. மரத்தால், நார்களால், இலைகளால், துணிகளால் செய்யப்படுகின்ற கைவினைப் பொருள்கள் பற்றி ஆய்வுகள் நிகழ்த்தப்படவேண்டும் என்பது நாம் பெறப்படும் செய்தியாகும்.

4. நாட்டுப்புறப்பண்பாடு

4.0 முன்னுரை

சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான கலித்தொகை 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்று விளக்கம் தருகின்றது. பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தின் அகவய வளர்ச்சியை அல்லது பழக்க வழக்கங்களைப் பிரதிபலிப்பது என்றும், நாகரிகம் என்பது புறவய வளர்ச்சியை அல்லது புழங்கு பொருள் வழக்காற்றைச் சார்ந்தது என்றும் வேறுபடுத்தி விளக்குவர். நாட்டுப்புறவியல் பண்பாட்டில் உளவியல் சார்ந்த பழக்க வழக்கங்களையும், புழங்கு பொருள் வரலாற்றையும் இணைத்தே பண்பாடு என்று சொல்கின்றோம். எனவே, பண்பாடு என்னும் தலைப்பின் கீழ் நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள், திருவிழாக்கள், மருத்துவம், உணவியல், மக்கள் மற்றும் ஊர்ப் பெயர்கள் ஆகியனவற்றை ஆராயலாம்.

4.1 நம்பிக்கைகள்

அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களை நம்பிக்கைகள் என்று கூறுவர். மனித மனத்தின் அச்சத்தின் காரணமாகவும், மனித மனத்தின் விளைவாகவும் நம்பிக்கை தோன்றுகின்றது. நம்பிக்கைகள் காலந்தோறும் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குப் பரவி வருகின்றன. நம்பிக்கைகளே மனித வாழ்வை இயக்குகின்றன என்று கூறுமளவிற்கு அவை வாழ்வில் முக்கியமான அங்கம் வகிக்கின்றன. சில அறிஞர்கள் காரண காரியத்தைச் சார்ந்தது நம்பிக்கை (belief) என்றும், காரணகாரியத்தினால் விளக்க முடியாததை மூடநம்பிக்கைகள் என்றும் கூறுவர். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டுச் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன.

4.1.1 தொகுப்பும் சேகரிப்பும்

தமிழ் நாட்டில் நாட்டுப்புற நம்பிக்கைகள் பற்றி எம்.ஏ., எம்ஃபில், பி.எச்.டி ஆகிய பட்டங்களுக்குரிய ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. காந்தி தமிழர் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் என்ற நூலை இலக்கியச் சான்றுகள் மூலம் வெளியிட்டார். ஆனால், வாய்மொழி வழக்காற்றிலிருந்து நாட்டுப்புற நம்பிக்கைகளைத் தமிழவன் என்ற எஸ்.கார்லோஸ் 1976-இல் வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பில் தமிழர்களின் 1025 நம்பிக்கைகள் இடம் பெற்றுள்ளன. இந்த நம்பிக்கைகள் பிராமணர், முதலியார், பிள்ளைமார் சமுதாயத்தைச் சார்ந்தவை. நம்பிக்கைகள் அகர வரிசையிலேயே தரப்பட்டுள்ளன. இவ்விடத்தில் முத்துச்சண்முகம்பிள்ளை, எரிக்கா ஏ.இ.காலுஸ் ஆகிய இருவரும் இணைந்து வெளியிட்ட தமிழர்களின் நாட்டுப்புற நம்பிக்கைகள் (Folk beliefs of the Tamil, 1981) என்னும் நூல் நினைக்கத்தக்கது. இந்த ஆங்கில நூல் தமிழவனின் அனுமதியுடன் மொழி பெயர்ப்புத் தழுவலாக அமைந்துள்ளது. வாழ்க்கைச் சுழற்சி, குழந்தைகள், வீடு, வழிபாடு, தனிச் சொத்து, பயணம், விலங்குகள், மரணம், சில பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் குறித்த நம்பிக்கைகள் வகைப்பாடு செய்து தரப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து வந்த நூல்களுள் கழனியூரனின் நாட்டுப்புறத்து நம்பிக்கைகள் (1995) குறிப்பிடத்தக்கது. இந்த நூலில் பதினைந்து கட்டுரைகளும், இரண்டு பிற்சேர்க்கைகளும் இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் ஜனரஞ்சகமாக எழுதப்பட்டுள்ளன. வாழ்க்கை வட்டச்சடங்குகள், குழந்தைப்பேறு, திருமணம், மரணம், மங்களம், அமங்களம், சத்தியம், விவசாயம், மந்திரம், பில்லிசூனியம் பற்றிய கட்டுரைகள் சுவையாக அமைந்துள்ளன. பெரும்பாலும் வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டே கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஆய்வாளர் கள ஆய்விலிருந்து தரவுகளைச் சேகரித்தாலும் தகவலாளிகளைப் பற்றிய விபரங்கள் தரப்படவில்லை. இருப்பினும் கட்டுரைகளில் சூழல்கள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. தகவலாளிகளை மையமாகக் கொண்டு நுணுக்கமான செய்திகள் தரப்படவில்லை என்று தே.லூர்து (1997:297, 98) மதிப்புரை எழுதியுள்ளார். நா.செல்வராசு

புதுச்சேரியில் வழங்கப்படும் 119 நம்பிக்கைகளை, 12 தகவலாளியிடமிருந்து தொகுத்து வழங்கியுள்ளார் (1998). கோ.அருட்கலையின் தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை என்ற ஆய்வு நூல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

4.1.2 கண்ணேறுகழித்தல்

நாட்டுப்புற நம்பிக்கைகளுள் மிகவும் முக்கியமான ஒன்று கண்ணேறு அல்லது கண்படுதல் (evil eye) என்ற நம்பிக்கையாகும். இந்த ஆய்வுப் பொருள் பற்றி ஆராய்ந்த மு. பாலகிருஷ்ணன் சமர்ப்பித்த பிஎச்.டி. ஆய்வேட்டின் (1989) அச்சு வடிவமே கண்ணேறு கழித்தல் என்னும் ஆய்வு நூலாகும். இவரது ஆய்வு நூலில் முன்னுரை, முடிவுரை தவிர ஐந்து இயல்கள் அமைந்துள்ளன. கண்ணேறும் அதன் செயல்பாடும், விளைவும், கண்ணேறு விளைவிப்போர், கண்ணேறு கழிக்கும் பொருள்களும் செயல்களும், சடங்குகளில் கண்ணேறு கழித்தல், கண்ணேறு கழிக்கும் முறைகள் என்னும் ஐந்து தலைப்புகளில் கண்ணேறு பற்றிய ஆய்வு ஆழமாகவும், அகலமாகவும் நிகழ்த்தப்பட்டுள்ளது. 332 பக்க அளவில் இந்த நூல் ஆய்வுப் பொருளை நுட்பமாகவும் எடுத்துரைக்கின்றது. இந்த அளவிற்கு ஒரு பெரிய ஆய்வு இந்த நூலுக்கு முன் அன்றுமில்லை பின் இன்றுமில்லை.

கண்ணேறு என்பது பழமையான - உலகளாவிய நம்பிக்கைகளுள் ஒன்றாகும். பொறாமை, வஞ்சம், பகைமை ஆகியன கண்ணின் மூலம் வெளிப்பட்டுக் கேடு விளைவிப்பது கண்ணேறு எனப்படும். பொறாமையின் விளைவாகக் கண்ணேறு விளைவிப்பவரே உலகத்தில் மிகுதியாகும். சிலர் இயல்பாகவும் வேறு சிலர் விரும்பியும் மேலும் சிலர் இயல்புக்கு மாறாக உடலுறுப்பு வேறுபட்டிருப்பதன் விளைவாகவும் மற்றும் சிலர் நோயுள்ளதன் காரணமாகவும் இந்த ஆற்றலைப் பெற்றிருக் கின்றனர். குறிப்பாகச் சில பெண்களுக்கும் இவ்வாற்றால் உண்டு. இவ்வாற்றல் மக்களுக்கே அல்லாமல் வேறுசில உயிரினங்களுக்கும் கண்ணை மூடி வைக்காத பிணத்துக்கும், பேய், பிசாசு முதலான தீய ஆவிகளுக்கும், சில கோள்களுக்கும், விண்மீன்களுக்கும் சில தெய்வங்களுக்கும் உண்டு. கண்ணேறு விளைவிப்போர் தீய சகுனமாகக் கருதப்பட்டு ஒதுக்கத்தக்கவர்.

கண்ணேறு கழிக்கும் பொருட்கள், பாதிக்கப்படும் பொருள்களின் மீது படியும் நுண்மாசுகளின் தொகுதியைப் பற்றி ஈர்த்து பிடிக்க உதவும் சூழ்ச்சிப் பொறிகளாகப் பயன்படுகின்றன என்றும், பிற பொருட்கள் மீது தங்களுக்கு வரும் துன்பங்களையும் நோய்களையும் மாற்றி விடலாம் என்னும் நம்பிக்கையும், அதன் அடிப்படையில் 'பலியாடு' என்பது கையாளப்படுகின்றது என்றும் விளக்கப்பட்டுள்ளது. மச்சம், வடு, கருப்பு மை ஆகியவை பார்ப்பவர் கவனத்தைத் திருப்பி கண்ணேறு படுதலைத் தவிர்க்கின்றன. கண்ணேறு கழிப்பதில் மர்ம உறுப்புகளின் வடிவம் பெரிதும் தொடர்புடையது. அவருவருப்பான சிற்பங்களும் புணர்ச்சி நிலையில் உள்ள சிற்ப வடிவங்களும் விதை நிலங்களில் வைக்கப்படும் பொம்மைகளும், பல வடிவங்களில் அமைந்த தாயத்துகளும் கண்ணேறு போக்குவதற்காகப் பயன்படுகின்றன. பலவகையான உலோகங்களும், எச்சிலும், சிறுநீரும், திருநீறும், சிலுவை வடிவமும், பஞ்சகவ்வியமும், குருதியும், காரமான சுவையுள்ள பொருட்கள், நறுமணப்புகை, எருக்கு, முட்கள், கோழி, சேவல், சங்கு சோழி, தேங்காய் ஓடு, துளையுள்ள காலணா, மஞ்சள், குங்குமம், புல்வகைகள், மாவிலை, அரச இலை, எண்ணெய்,, உப்பு மண், நவதானியங்கள் ஆகியவை திருஷ்டி பரிகாரத்திற்குரிய பொருட்கள் ஆகும். கண்ணேறு செயல்களுள் காது குத்துதல், மூக்கு குத்துதல், நெற்றியில் சூடு வைத்தல், பலத்த ஓசைகள் உண்டாக்குதல், மந்திரங்களை உச்சரித்தல், கவச நூல்களைப் பாராயணம் செய்தல், யந்திரங்கள் எழுதுதல் போன்றவை கண்ணேறுபடாமை குறித்து மேற்கொள்ளப்படும் செயல்களாகும்.

கண்ணேறு கழித்தல் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் பல்வேறு கட்டங்களில் நிகழ்த்தப்படுகின்றது. தொட்டிலிலிடுதல், காதணி விழா, பூப்புச் சடங்கு, திருமணம், சாந்தி முகூர்த்தம், வளைகாப்பு, சீமந்தம் முதலான சடங்குகளின் போது தீமை வராமல் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கையாகக் கண்ணேறு கழித்தல் செய்யப்படுகின்றது. குழந்தைகளுக்கும், மகளிருக்கும், ஆடவருக்கும், கண்ணேறுபட்டுப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கும், குழுவாக இருந்து செயல்படுவோர்களுக்கும் மக்களுள் மாண்புற்றோர்களுக்கும், கடவுள்களுக்கும், கால்நடைகளுக்கும், தாவரங்களுக்கும், வீடுகளுக்கும், கிணறுகளுக்கும், கடைகளுக்கும்,

வண்டிகளுக்கும் கண்ணேறு கழித்தல் முறை நிகழ்த்தப்படு கின்றது. கண்பட்டால் நோய் நொடி வரும் என்பதும், அந்நோய் மருந்து வகையில் நீங்காது என்பதும், கண்ணேறு கழித்தல் ஒன்றால் தான்அது நீங்கி நோயாளி குணமடைய முடியும் என்பதும் மக்களிடையே நிலவும் நம்பிக்கை என்பதை இவ்வாய்வு தெளிவாக்குகிறது.

4.1.3 ஆடிமாத நம்பிக்கை

தெய்வம், வானியல், குழந்தைகள பறவைகள், விலங்குகள், தாவரங்கள், மாதங்கள், வாரங்கள் போன்றவற்றை மக்கள் தங்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ளும் நம்பிக்கைகள் ஏராளமாக நிலவி வருகின்றன. இவற்றுள் ஆடிமாதம் குறித்துத் தமிழ் மக்களிடம் சில நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இவற்றைப் பற்றி இருவர் ஆராய்ந்துள்ளனர். கு.கதிரேசன் ஆடி மாதத்தை மானிடவியல் நோக்கில் (1999) ஆராய்ந்துள்ளார். வெ.அஞ்சலி தேவி 'ஆடிமாத நம்பிக்கை' என்னும் தலைப்பில் (2001) கட்டுரை வெளியிட்டுள்ளார். இவர் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டத்தில் உள்ள ஊர்களில் களப்பணி மேற்கொண்டு சேகரித்த தரவுகளின் அடிப்படையில் கட்டுரையை அமைத்துள்ளார். கு.கதிரேசன் 'ஆடி' உத்தாரயணம் என்பதின் தொடக்க மாதமாகும். தெய்வங்களுக்கு உரிய மாதமாகவும் சூன்ய மாதமாகவும் கருதப்படுகின்றது. ஆடிமாதத்தை அடிப்படையாக வைத்து நல்ல அம்சங்கள், தீய அம்சங்கள் அடங்கிய நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. இம்மாதத்தைப் பற்றிய தெய்வ, திருமண, பிறப்பு தொடர்பான நம்பிக்கைகள் விளக்கப்படு கின்றன. பதினெட்டாம் நாள் செவ்வாய், ஆடிப்பூரம் ஆகியன வற்றைத் தெய்வ நம்பிக்கையோடும், பதினெட்டாம் பெருக்கு, திருமண நம்பிக்கையோடும், ஆடி அமாவாசை, குழந்தைப் பிறப்பு, பிறப்புத் தொடர்பான நம்பிக்கையோடும் தொடர்புபடுத்தி ஆராய்ந்துள்ளார்.

4.1.4 மீனவரது நம்பிக்கைகள்

மீனவர்கள் கடல் விவசாயிகள். இவர்களின் நம்பிக்கைகள் ஆய்வாளர்கள் பலரின் கவனத்தைக் கவர்ந்துள்ளன. மீனவர் வழக்காறுகளைக் குலக்குறியியல் நோக்கில் ஆ.தனஞ்செயன் மிகச்

சிறப்பாக ஆராய்ந்துள்ளார் (1996). திருநெல்வேலி தூயவளனார் கல்லூரி நாட்டார் வழக்காற்று ஆய்வு மையத்தில் ஜி.கே.சீனிவாசன் (1991), ஆ. ரெக்ஸ்லின் மோரிஸ் மேகலா (1991), மு.சிவராம்குமார் (1995) மீனவரது நம்பிக்கைகள் பற்றி ஆராய்ந்து முதுகலைப் பட்டங்களுக்கு ஆய்வேடு சமர்ப்பித்துள்ளார்கள். சு.சக்திவேல் மீனவரது நம்பிக்கை பற்றி ஒரு கட்டுரை (1997) வெளியிட்டுள்ளார். இவர்புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஆவுடையார் கோவில் கடலோரப் பகுதியில் வாழ்ந்து வரும் மீனவரிடத்தில் காணப்படும் நம்பிக்கைகளைத் தொகுத்து வகுத்துத் தந்துள்ளார். குழந்தை, பருவமடைதல், திருமணம், கர்ப்பிணிப்பெண்கள், விலங்கு - பறவை, நட்சத்திரம், மாதம் - கிழமை, கடவுள், பேய், வீடு, உணவு, பயணம், கனவு, எண், சகுனம், மரணம் பற்றிய நம்பிக்கையைக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரையில் மீனவர்களுக்கே சிறப்பாக உரிய நம்பிக்கைகள் சுட்டிக் காட்டப்படவில்லை.

4.1.5 வெற்றிலை பற்றி நம்பிக்கைகள்

தமிழர் பண்பாட்டில் வெற்றிலைகளும், நம்பிக்கைகளும் என்னும் பொருள் குறித்து ஒரு கட்டுரையை சுசீலா கோபாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ளார். தமிழரின் வாழ்வியல் சடங்குகள் அனைத்திலும் வெற்றிலையின் பங்கு முக்கியமான தாகக் கருதப்படுகிறது. வெற்றிலை மகாலட்சுமி அம்சமாகக் கருதப்படுவதால் அது காலில் மிதிபட்டுவிட்டால் அதைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்கிறார்கள். தமிழரின் நிச்சயதார்த்தத்திலும், திருமண அழைப்புக் கொடுக்கும் போதும் வெற்றிலை சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. பூப்புச்சடங்கு, வளைகாப்புச்சடங்கு, சீமந்தம், குழந்தை தொட்டிலிடும் நாள், பெயர் சூட்டும் நாள், குழந்தைக்கு முடி இறக்கும் நாள், காதணி விழா ஆகிய அனைத்து நிகழ்ச்சிகளிலும் வெற்றிலை பாக்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அனைத்துச் சடங்குகளின் விருந்தின் முடிவிலும் விருந்தினர்களுக்கு வெற்றிலை வழங்கப்படுகின்றது. இறந்தவர் கையில் வெற்றிலை பாக்கு வைத்து அனுப்புகின்றனர். சிலர் கிராமப்புறங்களில் இறந்தவர் வாயில் வெற்றிலை பாக்கு இடித்து வைத்துத் துணியால் வாய்க்கட்டுக் கட்டுகின்றனர். கருமாதி போன்ற சடங்குகளிலும் வெற்றிலை பயன்படுத்தப்படுகிறது. 'செத்தவன் கையில் கொடுத்த வெற்றிலை,

பாக்குப் போல' என்னும் பழமொழி இறப்புச் சடங்கிலும் வெற்றிலை பயன்படுகின்றது என்பதைச் சுட்டுகின்றது. அனுமனுக்குப் பக்தர்கள் வெற்றிலையைச் சுருளாகக் கட்டி வெற்றிலை மாலை அணிவிக்கின்றார்கள். திருஷ்டி கழிக்கும் ஆரத்தியிலும் வெற்றிலை பயன்படுத்தப்படுகிறது. வெற்றிலை வயிற்று வலி போன்றவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. இவ்வளவு முக்கியமான பொருளாகப் பயன்படும் வெற்றிலையை ஏன் வெற்றிலை என்று (வெற்று + இலை) பெயர் வைத்துள்ளார்கள் என்பது புலப்படவில்லை.

4.1.6 வளமை நம்பிக்கைள்

இரா. மனோகரன் தமது நூலிலும் (2001) சி. கருப்பசாமி தமது கட்டுரையிலும் வேளாண்மைச் சடங்குகளில் வளமை நம்பிக்கை பற்றி ஆராய்ந்துள்ளார்கள். மனோகரன் தேனி மாவட்டக் கம்பம் பள்ளத்தாக்கு மக்களிடத்தில் வழங்கும் வளமை நம்பிக்கைகளைப் பற்றி எழுதியுள்ளார். கருப்பசாமி இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண் மக்களிடத்தில் சேகரித்த தகவல்களைக் கொண்டு கட்டுரையை அமைத்துள்ளார். ஏர்வைத்தல், விதை போடுதல், விதைத்தல், கண்ணேறு கழித்தல், மழை வேண்டுதல், நோய் நீக்குதல், அறுவடை, கதிரடிப்பு, புதுசு போடுதல் ஆகியவேற்றோடு தொடர்பான நம்பிக்கைகளைப் பற்றித் தம் கட்டுரையில் விளக்கியுள்ளார். கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் சொந்த வயலில் அறுவடை ஆகும்வரை வேறு நெல் வீட்டிற்குக் கொண்டு வரக்கூடாது என்ற நம்பிக்கை உள்ளது என்று இரா. மனோகரன் குறிப்பிடுகின்றார். மேலும், அம்மை நோய் வந்த வீட்டில் விதை நெல் வைக்கக்கூடாது என்றும், நெற்களத்தின் குறுக்கே செல்லக் கூடாது என்றும், அரிசி அளந்தபின் நாழியில் சில அரிசிகளைப் போட்டு வைப்பதுடன் நாழியைக் கவிழ்க்கக் கூடாது என்றும், மாத விலக்கான பெண்களை விதை விதைக்க, செடிநட அனுமதிப்பதில்லை என்றும், கண்ணேறு படாமல் இருக்கத் தோட்டங்களில் அனைவரும் பார்க்கும் இடத்தில் கரும்புள்ளியிட்ட பானையும், உருவப் பொம்மையும் வைக்கப்படுகிறது என்றும், கொடும்பாவியை ஊரில் எடுத்துச் சென்றால் மழை பொழியும் என்றும் விவசாயிகளின் பல வகையான நம்பிக்கைகளை எடுத்துக் கூறுகின்றார். மழை பற்றிய ஒரு சில நம்பிக்கைகளையும் தம்

நூலில் சுட்டிக் காட்டியுள்ளார். வேளாண் நம்பிக்கையில் அமைந்த பல விதமான சடங்கு முறைகளையும் தம் கட்டுரையில் விரிவாக விளக்கியுள்ளார். சி.பொன்னுத்தாய் விளைமுடி வாங்குதல் சடங்கில் வளமை நம்பிக்கை பற்றிக் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

4.1.7 கல்வராயன் மலை மக்களின் நம்பிக்கைகள்

அனந்தபுரம் கோ.கிருட்டினமூர்த்தி கல்வராயன் மக்களின் வரலாறு மற்றும் வாழ்வியல் பற்றிய ஒரு முழுமையான சித்திரமாக 400 பக்க அளவில் ஒரு நூலை எழுதியுள்ளார் (1992). இந்நூலில் பிள்ளைப்பேறு நம்பிக்கைகள், ஆவி பற்றிய நம்பிக்கைகள், பச்சை குத்துதல் பற்றிய நம்பிக்கைகள், பலியிடுதல் பற்றிய நம்பிக்கைகள், சகுனங்கள் பற்றிய நம்பிக்கைகள், வழிபாடு குறித்த நம்பிக்கைகள் ஆகியவற்றை விளக்கியுள்ளார். இதைத் தொடர்ந்து செ. பழனிசாமி கல்வராயன் பழங்குடி மக்களின் நம்பிக்கைகள் என்ற கட்டுரையை வெளியிட்டுள்ளார் (2000). சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் கல்வராயன் மலை அமைந்துள்ளது. இம்மலைப் பகுதியில் 35000 பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடமிருந்து சேகரித்த நம்பிக்கைகளை இக்கட்டுரையில் விளக்கியுள்ளார். கல்வராயன் பழங்குடியினர் கொண்டிருக்கும் நம்பிக்கைகளை நல்ல தடம் பார்த்தல், வரிசைபார்த்தல், ஆறுகட்டச் சொல்லுதல், மறுமணம் செய்து கொள்ளல், பல் தெளித்தல், சீட்டுக்கட்டுதல் என்று ஆறு பகுதியாகப் பிரித்து விளக்கியுள்ளார்.

4.1.8 கொல்லிமலை மக்களின் நம்பிக்கைகள்

கொல்லிமலை மக்களைப் பற்றிச் சில நூல்களும், சில நாவல்களும் (சங்கம்) வெளிவந்துள்ளன. கொல்லிப்பாவையைப் பற்றிய நம்பிக்கை சங்க காலத்து நூலிலேயே காணப்படுகிறது. கொல்லிமலை மக்களிடம் கடுமையாகப் பின்பற்றப்படும் பல நம்பிக்கைகளைப் பற்றி அ.பிறைமதி ஆராய்ந்துள்ளார் (1999). இம் மக்களின் பழக்க வழக்கங்கள் இந்த நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. இன்றைய நாகரிக வளர்ச்சி காரணமாகச் சில மரபுகளில் நெகிழ்வுத் தன்மை ஏற்பட்டாலும் பல நம்பிக்கைகள் உறுதியாகப் பின்பற்றப்பட்டு

வருகின்றன. இந்த நம்பிக்கைகளைச் சகுனங்கள், விதி, ஏர்முகூர்த்தம், விளக்கேற்றுதல் - பூட்டு வெட்டுதல், சாணி வெட்டுதல், சத்திய நம்பிக்கை, பிற நம்பிக்கைகள் (தீட்டு, பில்லி சூனியம்) என்னும் தலைப்புகளில் பகுத்து விளக்கியுள்ளார். நன்மை தரும் பழக்கங்கள் நம்பிக்கைகளாகவும், தீமை தருபவை எச்சரிக்கைகளாகவும் அமைகின்றன. இவர் கொல்லிமலை மக்களின் இலக்கியமும், வாழ்வியலும் பற்றி ஆய்வேடு வழங்கியுள்ளார்.

4.1.9 சோதிட நம்பிக்கைகள்

தி. மகாலட்சுமியின் 'இலக்கியத்தில் சோதிடம்' என்னும் நூலில் (1996) சோதிடமும், நாட்டுப்புறவியலும் என்னும் ஓர் இயல் அமைந்துள்ளது. தமிழ் மக்கள் வானியல் அறிவு பெற்றவர்கள். வானியல் அறிவு அடிப்படையில் அமைந்த சோதிடத்திலும் நம்பிக்கை கொண்டவர்கள். அறிவியலாக இருக்கும் வானியல் சோதிடமாக மாறும் போது சில மூட நம்பிக்கைகளையும், சில தவிர்க்க முடியாத நம்பிக்கை களையும் உருவாக்குகின்றனர். இத்தகைய சோதிட நம்பிக்கைகள், நாட்டுப்புறப் பாடல்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள் ஆகியவற்றில் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் தொகுத்து ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

4.2 சடங்குகள்

நம்பிக்கை அடிப்படையில் தோன்றும் பழக்க வழக்கங்கள் காலப்போக்கில் சடங்குகளாக மாற்றம் பெறுகின்றன. முன்னோர்கள் செய்த செயல்களைக் காரண, காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் அப்படியே பின்பற்றுவதும், நிகழ்த்துவதும் சடங்கு முறையாகும். சடங்குகளை நிகழ்த்தாவிட்டால் தீமைகள் ஏற்படும் என்ற நம்பிக்கையில் சடங்குகளைச் செய்கிறார்கள். சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனிமனிதனின் சுயமான ஆக்கமாகவோ, பண்பாட்டினுடைய தனிச்சிறப்புக் கூறாகவோ அமையும் என்று ரூத்ப்ரடிக்ட் கூறியுள்ளார். நம்பிக்கைகளும், சடங்குகளும் இரட்டைக் குழந்தைகள். எனவே, சில சமயங்களில் சடங்குகளுடன் நம்பிக்கைகளையும் இணைத்தே ஆராயவேண்டியுள்ளது. பிறப்பு

முதல் இறப்புவரை மனிதனின் வாழ்க்கை சடங்குகளால் கட்டுண்டு காணப்படுகிறது. தே.ஞானசேகரனின் 'சடங்குகள்' என்னும் கட்டுரை, சடங்குகள் பற்றிப் பொது நிலையில் விளக்கும் கட்டுரையாகும். அமலி நகர் பரதவர்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகள் பற்றி ஆராய்ந்து முதுகலை ஆய்வேடு அமைத்துள்ளார் எஸ்.எம்.ஷீலா (1991).

4.2.1 வாழ்க்கைச் சுழற்சிச் சடங்குகள்

4.2.1.1. பிறப்புச் சடங்குகள்

சு. அமிர்தலிங்கத்தின் 'சடங்குகள்' என்னும் கட்டுரை பிறப்பு இறப்பு, திருமணம், மஞ்சள் நீராட்டு விழா, காதுகுத்தல் ஆகிய சடங்குகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது (1998). இவர் விளக்கும் பிறப்புச் சடங்குமுறைப் பின்வருமாறு : திருமணமான பெண் கருவுறுதலும், குழந்தை பெறுதலும் வழிவழியாகப் போற்றிக் கொண்டாடப்படுவதாகும். பெண் கருவுற்ற பின் சடங்குகள் செய்வர். அவள் விரும்பும் பொருளை வாங்கிக் கொடுப்பர். பிறக்கும் குழந்தைப் பேராசைக்காரனாக இருக்கக்கூடாது என்பதற்காக அவள் ஆசைப்படும் பொருளைக் கொடுக்கும் பழக்கம் நம்நாடு முழுவதும் இருந்து வருகிறது.

கருவுற்ற தாய் குழந்தை பெற்றவுடன் அந்த வீட்டிற்குத் துட்ட தேவதைகள் வராமலிருக்க வீட்டின் முன் வேப்பிலைக் கொத்தைச் செருகி வைப்பர். தாயும் சேயும் இருக்கும் அறைக்கு முன் பழைய செருப்பையோ பழைய துடைப்பத்தையோ கட்டித் தொங்கவிடுவர். தாயின் தலையணைக்கு அடியில் இரும்புத்துண்டு ஒன்று வைத்திருப்பர். தாயும் சேயும் இருக்கின்ற பக்கம் துட்ட தேவதைகள் வரக்கூடாது என்று கருதி இவ்வாறு செய்வர். பின்னர்த் தீட்டை நீக்கச் சடங்குகள் நிகழ்த்துவர். அப்போது மஞ்சள், இஞ்சி, சாணம் போன்ற பொருட்களைப் பயன்படுத்துவர். பிறந்த குழந்தை வளரும் வரை ஒவ்வொரு காலகட்ட வளர்ச்சிக்கு ஏற்பப் பல சடங்குகள் உள்ளன. இவ்வாறு பொதுநிலையில் எந்த வட்டாரத்தையும் அடிப்படையாகக் கொள்ளாமல் தமிழரின் பிறப்புச் சடங்கு பற்றிச் செய்திகளைத் தந்துள்ளார்.

வ. கோசலையின் கட்டுரை 'தஞ்சை வட்டாரக் கள்ளர் இனமக்களின் பிறப்புச் சடங்குகளைத் தொகுத்துத் தருகின்றது (2001). டாக்டர் விதாலி - ஃபுர்னிக்காவின் 'பிறப்பு முதல் இறப்பு வரை' (1986) என்ற நூலை ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார் (1986). தாயின் நஞ்சுக் கொடியைப் புதைத்திடுவர். விழுந்த தொப்புள் கொடியைப் பத்திரப்படுத்தி அவரவர் வசதிக்கேற்ப ஈயம், வெள்ளி, தாமிரம் பொன் ஆகியவற்றால் ஆன தாயத்து செய்து கழுத்து அல்லது இடுப்பில் கட்டும் வழக்கம் இவ்வின மக்களிடையே காணப்படுகிறது. குழந்தையை முதன் முதலில் குளிப்பாட்டுவதற்கு முன்னர் ஒரு ரூபாய் அல்லது கிடைக்கும் நாணயத்தைக் குழந்தையின் வாயில் வைத்துப் "பொய் சொல்லாதே, திருடாதே, அவுசாரி போகாதே" என்று மூன்று முறை சொல்லித் தேய்ப்பர். குழந்தை பிறந்தவுடன் கழுதை இரத்தம் கொடுக்கும் வழக்கம் உள்ளது. கழுதையின் இரத்தத்தை வெள்ளைத் துணியில் நனைத்து அதைக் குழந்தையின் வாயில் ஊற்றுவர். குழந்தையின் உணவு, பத்தியச் சோறு, வீட்டுக்கு அழைத்தல், 16-ஆம் நாள் சடங்கு, குழந்தை அழைத்தல், நம்பிக்கைகள் என்னும் தலைப்புகளில் தஞ்சைக் கள்ளரின் பிறப்புச் சடங்குகளையும் நம்பிக்கைகளையும் விளக்கியுள்ளார்.

பிறப்புச் சடங்கினைப் பொருளாதார நோக்கில் ஆராய்ந்துள்ளார் மா.சுந்தரபாண்டியன் (2001). வாழ்க்கை வட்டச் சடங்குகளுள் ஒன்று பிறப்புச் சடங்கு ஆகும். தஞ்சை வட்டம் திருக்கானூர்ப்பட்டி என்னும் ஊரிலுள்ள பறையர் சாதியினரிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரையை அமைத்துள்ளார். 'மோட்டு நாச்சியார்' அல்லது 'பேச்சியம்மன்' என்ற பெண் தெய்வத்தை வணங்கிப் பிறப்புச் சடங்கினைத் தொடங்கு கின்றனர். குழந்தை பிறந்து 16-ஆம் நாள் இச்சடங்கு நிகழ்கிறது. குழந்தை பெற்ற தாய்க்குப் பால் தாராளமாகக் கிடைக்க வேண்டும் என்பதும், இரவில் குழந்தை கத்தக்கூடாது என்பதும் இச்சடங்கின் நோக்கமாகும். 16-ஆம் நாளன்று வீட்டைக் கழுவி, சாணத்தால் மெழுகி, தாயைத் தலைகுளிக்கச் செய்து வீட்டுக்கு அழைப்பர். கிராம மருத்துவச்சி அல்லது வள்ளுவர் மாட்டுக் கோமியத்தை

மாவிலையால் வீடு முழுவதும் மந்திரம் சொல்லித் தெளிப்பர். இரவு 8 மணி அளவில் வீட்டில் சாமி கும்பிடும் இடத்தில் படையல் வைக்கப்படும். மருத்துவச்சி அல்லது வள்ளுவர் தேங்காய் உடைத்துச் சூடம் கொளுத்துவர். அரிசி புடைக்கும் முறத்தில் மூன்று முறை குழந்தையைப் போட்டு புடைப்பர். சாமி கும்பிட்ட பிறகு சிறிய விருந்து அளிக்கப்படும். இச்சடங்கிற்கு ரூ300 முதல் 500 வரை செலவாகும்.

4.2.1.2 காது குத்துதலும் முடியெடுத்தலும்

தொன்று தொட்டு கையாளப்பட்டு வரும் நம்பிக்கைகள் வயப்பட்ட பழக்க வழக்கங்கள் சடங்குகளாக அமைகின்றன. ஆண், பெண் வேறுபாடின்றி குழந்தைப் பருவத்தில் செய்யப்படும் சில வாழ்வியல் சடங்குகள் சமயச் சடங்காகவும் காணப்படு கின்றன. அவற்றுள் காது குத்தலும், முடியெடுத்தலும் நன்மையை எதிர்ப்பார்த்தலும், தீமையை விலக்கவும் கடவுளுக்கு வேண்டுதலாகவும் அமையலாம். அன்னிதாமசு காது குத்தலும் முடியெடுத்தலும் பற்றித் தொல்காப்பியம், சங்க நூல்கள், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியம் ஆகியவற்றிலிருந்து சான்றுகளைத் தந்து காதுகுத்தலும் முடியெடுத்தலும் எவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளாக, மரபாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதை விளக்கியுள்ளார்.

4.2.1.3 பூப்புச் சடங்கு

பெருமணல் பரதவர்களின் பூப்புச் சடங்கு பற்றி க.உமா தேவி முதுகலை ஆய்வேடு (1991) சமர்ப்பித்துள்ளார். கி.சித்ரா எழுதிய 'குயவர்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகள்' என்னும் கட்டுரை பிறப்புச்சடங்கு, காது குத்துதல், பெண் பூப்படைதல், திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு என்ற ஐந்து நிலைகளில் அமைகிறது. தஞ்சைக்கு அருகிலுள்ள கொசக்கரம்பை, மாரியம்மன் கோவில் ஆகிய ஊர்களில் செய்த களப்பணித் தரவுகளின் அடிப்படையில், கட்டுரையை எழுதி வெளியிட்டுள்ளார் (2001). பெண் பூப்படைந்தவுடன் தாய் மாமனுக்குச் சொல்லுதல் - மறைவிடத்தில் அமர வைத்தல் - மஞ்சள் நீரில் நீராட்டுதல் - பச்சை ஓலைக் கீற்றுக் கட்டுதல் -

நல்லெண்ணெய், முட்டை, உளுந்தங்களி போன்றவற்றை உணவாகக் கொடுத்தல் ஆகியவை மற்ற சாதிகளைப் போல் இவர்களால் செய்யப்படுகின்றன. ஏழாம் நாள் மாமன் வந்து தண்ணீர் ஊற்றும் சடங்கு நடைபெறுகிறது. இச்சடங்கின் போது நல்லெண்ணெயில் அருகம் புல்லைத் தோய்த்துப் பூப்பெய்திய பெண்ணின் நெற்றியிலிருந்து வகிடு முடியும்வரை தொட்டு வைக்கின்றனர். இதை 'ஏற்றி வைத்தல்' என்று குறிப்பிடுகின்றனர். இதை மீண்டும் பதினைந்தாம் நாள் தலையிலிருந்து நெற்றி வரை செய்கின்றனர். இதை 'இறக்கி வைத்தல்' என்கின்றனர். பதினைந்தாம் நாள் காலையில் 'துறை மிதித்தல்' என்னும் சடங்கினைச் செய்கின்றனர். பூப்படைந்த பெண்ணை ஆறு / குளம் ஏதாவது ஒரு நீர்நிலைத் துறைக்கு அழைத்துச் சென்று தீட்டினைக் கழித்து வீட்டிற்கு அழைத்து வருகின்றனர். அம்மிக் குழவியைத் துணியில் சுற்றி அதற்கு மஞ்சள், குங்குமம், பூ, பொட்டு வைத்து, அக்குழவியை மூன்று முறை அப்பெண்ணின் தலையைச் சுற்றித் தொடச் சொல்லித் தொட்டியில் போட்டுத் தாலாட்டுகின்றனர். இவ்வாறு செய்தால் பிற்காலத்தில் அப்பெண்ணிற்குக் குழந்தை பாக்கியம் கிட்டும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

4.2.1.4 திருமணச்சடங்கு

அ. முத்து முனியம்மாள் திருமணச் சடங்கும், சமுதாய வாழ்க்கையும் என்ற கட்டுரையை நாட்டுப்புற வழக்காற்று அடிப்படையில் எழுதி வெளியிட்டுள்ளார். திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் சில குறிப்பிட்ட சாதியினரின் திருமணச் சடங்கு முறைகளை ஆராய்ந்துள்ளார். ஐயர், காசுக்கார செட்டியார், வெள்ளாளர், போயநாயக்கர், தொட்டிய நாயக்கர், பள்ளர், பறையர், கவநாயக்கர், வாணியச் செட்டியார் ஆகியோரிடத்தில் காணப்படும் திருமணச் சடங்கு முறைகளில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைத் தெளிவுபடுத்தி யுள்ளார். இத்திருமணச் சடங்குகளில் மேல் வகுப்பாரிடத்தில் மாப்பிள்ளை வீட்டாரின் ஆதிக்கம் அதிகமாயிருப்பதை அறிந்து கொள்ளலாம். திருமணத்தன்று மணமகளுக்குத் தாலியும், மணமகனுக்கு மிஞ்சியும் அணிவிப்பது வழக்கம். . ஆனால், ஆணாதிக்கச் சமுதாயம் மிஞ்சியைத் திருமணத்தன்றே அகற்றி

விடுகிறது; பெண்கள் சமூகம் மட்டும் காலமெல்லாம் புனிதமாய் தம் தாலியைக் காத்துக் கொண்டு வருகிறது என்று ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய சடங்கு முறைகளை அழியாமல் காக்க வேண்டும். அளவிற்குப் பொருந்தாத, துன்பம் தருகின்ற சடங்குகள் போற்றப்படாமல் இருக்கும்படி செய்யவேண்டும்.

பெரியார் மாவட்டச் செங்குந்தரின் திருமண முறைகளை விளக்கி பெ.பழனியப்பன் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். பெரியார் மாவட்டங்களில் ஈரோடு முதலான ஏழு வட்டங்களில் வாழும் செங்குந்தரின் திருமணச் சடங்குகளைத் திருமணம் நடைபெறும் இடம், பெரிய தொகை, உப்பு வாங்குதல், முளைப் பாலிகை போடுதல், தாலி அமைப்பு, தாலியின் உருவம் பொறித்தல், பட்டினிச் சாப்பாடு (ஒரு சந்திச்சோறு) சீர்க் கூடை, சீர்க் கூடையில் இடம் பெறும் பொருட்கள், மாப்பிள்ளை அழைப்பு என்னும் தலைப்புகளில் திருமண முறைகளை விளக்கியுள்ளார். செங்குந்தரின் திருமணச்சடங்குகள் கீழ்க்காணும் நான்கு நிலைகளில் நிகழும் என்று கூறியுள்ளார். 1. திருமணத்திற்குச் சில நாட்களுக்கு முன் மணமக்கள் இல்லங்களில் நடைபெறும் சடங்குகள் 2. திருமணத்திற்கு முதல் நாள் நடைபெறும் சடங்குகள் 3. திருமணத்தன்று நடைபெறும் சடங்குகள் 4. திருமணம் முடிந்த பின் நடைபெறும் சடங்குகள். ஆனால் இந்தக் கட்டுரையில் ஏனோ மேற் கூறிய நான்கு நிலைகளில் திருமணமுறை விளக்கப்படவில்லை.

கோ. விஜயா கார்காத்த வெள்ளாளரின் விளக்கிடு திருமண முறையைப் பற்றித் தம் கட்டுரையில் விளக்கியுள்ளார் (2000). கார்காத்த வெள்ளாளர் கடைப்பிடித்து வருகின்ற விளக்கிடு திருமணம் என்பது பெண்களுக்குரிய ஒரு சடங்கு முறையாகும். இவ்வினத்தில் பிறந்த ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் 5,7 அல்லது 9 வயதில் இந்தச் சடங்கு நடைபெறும். இச்சடங்கு திங்கள் முதல் நாளான பொங்கலன்று நடைபெறுகிறது. கார்குலச் சிறுமிக்கு நவதாலியைத் தாய்வழிப்பாட்டனார் அணிவிக்கிறார். நவதாலி என்பது பவளமணிகள் பத்தும், தங்க உருண்டை ஒன்பதும் ஆக பத்தொன்பது உருண்டைகள் சேர்த்துக் கோக்கப்பட்டதாகும்.

பெண்களைச் செய்வினை முதலிய தீய செயல்களிலிருந்து காப்பதற்காகவும், குறிப்பாகக் கற்பைப் பாதுகாப்பதற்காகவும், நவதாலி அணியப்படுகிறது. விளக்கிடு திருமணத்தின் போது அகல்விளக்கும், கை விளக்கும் சீராகப் பெண்ணின் தாய்வழிப் பாட்டனார் கொடுக்கிறார். பொங்கல் வைத்தல், புத்தாடை அணிவித்தல் ஆகியவற்றோடு இந்தச் சடங்கு முடிகிறது. முன்னொரு காலத்தில் இஸ்லாமியர்கள் சிறுமியர்களைக் கவர்ந்து செல்வதிலிருந்து காப்பாற்ற இந்தத் தாலியை அணிவிக்கும் வழக்கம் வந்தது என்று குறிப்பிடுகிறார்கள். இதனைப் பெரியவர்கள் துலுக்கனுக்குப் பயந்து கட்டிய தாலி என்று குறிப்பிடுகின்றனர். ஒரு பெண் திருமணம் வரைக்கும் கட்டப்பட்ட தாலியைத் தற்காலத்தில் பொங்கலன்றும், மறுநாளும் அணிந்துவிட்டுப் பின்பு கழற்றி வைத்துவிடுகின்றனர்.

சௌராஷ்டிரரின் திருமணமுறை குறித்து நரசிம்மாச்சாரி சௌராஷ்டிர மக்களின் திருமணப் பண்பாடு என்னும் நூலினை (1994) வெளியிட்டுள்ளார். லோ.அ.உமா மகேஸ்வரி சௌராஷ்டிரர் திருமண முறை பற்றி நேரடி அனுபவம், நேர்காணல் ஆகியவற்றிலிருந்து கிடைத்த தரவுகளின் அடிப்படையில் கட்டுரையை எழுதி வெளியிட்டுள்ளார். சௌராஷ்டிரர்கள் எட்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் தமிழகமெங்கும் வாழ்கிறார்கள். இவர்கள் மதுரை, சேலம், திண்டுக்கல், வாலாஜா பேட்டை ஆகிய இடங்களில் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றார்கள். பெரும்பாலும் அந்தந்தப் பகுதிகளில் வாழும் சௌராஷ்டிரர்களுக்குள்ளேயே திருமணம் நடைபெறுகிறது. திருமணமுறையைச் சாதகம் பார்த்தல், பெண் பார்த்தல், மண உறுதி செய்தல், தெவ்காஸ், உபநயனம், நாந்தி, சப்தவாதி, இராஜஹோமம் என்னும் சிறுதலைப்புகளில் விளக்கியுள்ளார். திருமணத்தில் சீர்வரிசை, வரதட்சணை அதிகமாக வாங்கும் வழக்கம், இவ்வினமக்களிடையே குறைவாகக் காணப்படுகிறது என்றும் இருவீட்டாரும் தத்தம் உறவினருக்குத், தத்தம் இல்லங்களில் விருந்து செய்து கொள்கின்றனர் என்றும், வீட்டு மாப்பிள்ளைகள் எல்லா விசேஷங்களிலும் தனிமதிப்புப் பெறுகிறார்கள் என்றும் ஆய்வாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

வே.விஜயா முசுகுந்த வேளாளரின் திருமணச் சடங்கும், முழுச்சீர் செய்யும் முறையும் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை

வெளியிட்டுள்ளார். தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை வட்டாரத்தில் வாழும் வேளாளர்களில் ஒரு வகையினர் தங்களை முசுகுந்த வேளாளர் என்று அழைத்துக் கொள்கின்றனர். இவர்களுடைய பூர்வீகம் தொண்டை மண்டலம் என்று கூறப்படுகிறது. இவர்கள் ஆரம்பத்தில் சைவமாக இருந்து பின்பு அசைவமாக மாறியுள்ளார்கள். இவ்வேளாளர்களின் பெருந் தெய்வம் கைலாசநாதராகும். முப்பத்திரண்டு கிராமங்களில் அடங்கியுள்ள பகுதி முசுகுந்த நாடாகும். முசுகுந்த நாட்டின் தலைநகர் முசிறி ஆகும். திருமணச் சடங்குகளைத் திருமணத்திற்கு முன்பு நடைபெறும் சடங்குகள் (சாதகம் பார்த்தல், பெண் பார்த்தல், நிச்சயம் செய்தல், பந்தல் கால் நடுதல், பத்திரிகை வைத்தல், மூன்றாம் நீர் ஊற்றல், பெண் எடுத்தல்) திருமணச் சடங்குகள் (பெண் மணமகன் வீட்டிற்கு வருதல், மணமேடை, அரசாணிக் கால் நடுதல், கங்கணம் கட்டுதல், மிஞ்சி அணிவித்தல், பாதபூஜை செய்தல், தாரை வார்த்தல், தாலி கட்டுதல், பலதானம் மணமிடுதல், மனைப்பொங்கல் வைத்தல், சீக்காச் சடங்கு) திருமணத்திற்குப் பின்பு நடைபெறும் சடங்குகள் (முழுச்சீர் செய்தல், மணமக்களைப் பெண் வீட்டில் வரவேற்றல், மணமகன் வீட்டிற்குச் செல்லல்) என்னும் மூன்று பெருந்தலைப்புகளில் விளக்கியுள்ளார். இச்சமூகத்தில் மறுதாரமணம் முதல் மனைவியின் அனுமதியோடு நடத்தப்பெறுகிறது. முசுகுந்தரின் திருமண நிழ்ச்சியில் தப்படித்தல், சங்கு ஊதுதல், வெடி வெடித்தல் ஆகியவை காணப்படுகின்றன.

4.2.1.5 இறப்புச் சடங்கு

'நாட்டுப்புற வாழ்வில் இறப்புச் சடங்குகள்' குறித்து அரங்க மு.முருகையன் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார்(1996). மனித வாழ்வில் பிறப்பிற்கு முதன்மையளித்த மனிதன் இறப்பிற்கும் பல சடங்குகளின் மூலம் முதன்மை அளித்தான். குடும்ப வாழ்வில் தங்களுக்கு உடனிருந்து உதவி செய்து வழிகாட்டி இறந்த முன்னோருக்கு நன்றிக் கடனாகவும், இறந்தவரின் ஆவி தன்னையும் தன்னுடைய பிள்ளைகளையும் நல்ல முறையில் வாழ வைக்கவும், பிரிந்த முன்னோரின் ஆவி வேறு உலகில் (சொர்க்கம், நரகம்) நல்முறையில் வாழவும் இறப்புச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கட்டுரை புதுவைப் பகுதியில் வாழும் வைணவ நெறியைப் பின்பற்றி வரும்

வன்னிய மக்களுடைய இறப்புச் சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இறப்புச் சடங்கின் தோற்றமும் வளர்ச்சியும் (இறந்தவர்களை மரப்பொந்தில் இடுதல், தாழிகளில் புதைக்கும் வழக்கம், பிணத்தை எரித்தல்) இன்றைய வழக்கில் இறப்புச் சடங்குகள் (பிறந்த குழந்தை இறப்பின் செய்யப்படுபவை, இரண்டுக்கு மேற்பட்ட குழந்தைகள் இறப்பின் செய்யப்படுபவை, பருவமடைந்து திருமணமாகாது இறப்பின் செய்யப்படுபவை, கன்னி கழிக்கும் சடங்கு, திருமணமான ஆண்கள் இறப்பின் செய்யப்படுபவை) உலக்கையிடும் வழக்கம் ஆகிய தலைப்புகளில் இறப்புச் சடங்கு பற்றி விளக்கியுள்ளார்.

4.2.2 தொழிற் சடங்குகள்

4.2.2.1 வேட்டைச் சடங்குகள்

ஓ. முத்தையா கம்பத்தாளரின் வேட்டைச் சடங்குகள் பற்றிக் கட்டுரை வெளியிட்டுள்ளார் (1995). தொன்மையான பண்பாட்டு மரபுகளையும் வாழ்க்கை முறைகளையும் மாறாமல் பின்பற்றி வாழ்ந்து வரும் இனக்குழுவினர் கம்பளத்து நாயக்கர் அல்லது கம்பளத்தார். பிற இனத்தாரிடமிருந்து பிரிந்து குழுவாக வாழும் கம்பளத்தார் வேட்டைக்குச் செல்வதை வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ளனர். இவ்வினத்தாரின் வேட்டைச் சடங்கு பற்றி வேட்டைத் தொழிலின் தொன்மை, கம்பளத்தார் வாழ்வில் வேட்டைபெறும் இடம், கம்பளத்தார் வேட்டையாடும் முறை, வேட்டைச் சடங்குகள், வேட்டை நடனங்கள் என்னும் தலைப்புகளின் கீழ் ஆராய்ந்துள்ளார். கம்பளத்தாரின் திருமண நிகழ்வும், கம்பளத்தார் திருமண வாழ்வில் வேட்டைச் சடங்கும் தவறாமல் இடம் பெறுகின்றன. தாலி கட்டுதல் முடிந்தவுடன் வேட்டைச் சடங்கு நிகழ்கிறது. மூன்று முறைக் கொம்பு ஊதி அறிவிப்புக் கொடுக்கப்படுகின்றது. கொம்புச் சத்தம் கேட்டவுடன் வேட்டை நாய்கள் மற்றும் வேட்டைக்கான ஆயுதங்களுடன் கம்பளத்தார் வேட்டைக்குக் கிளம்புகின்றனர். வேட்டை நிகழ்ச்சி போலச்செய்தல் அடிப்படையில் நிகழ்த்தப்படுகிறது. வேட்டையாடி வந்தவர்களுக்குப் பெண்கள் ஆரத்தி எடுத்துக் குலவையிட்டு மங்கலப் பாடல்கள் பாடுகின்றனர். உறுமி இசைத்து ஆண்கள் தேவராட்டம் ஆடி வரவேற்பு செய்கின்றனர். இவ்வாறு வேட்டைச் சடங்கு பாவனைச் சடங்காக நிகழ்த்தப்படுகின்றது. கம்பளத்தாரின் சிறுதெய்வ

வழிபாட்டிலும் வேட்டைச் சடங்கு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இதனைச் சாமி வேட்டை என்று குறிப்பிடுகின்றார்கள். பெரும்பாலும் சித்திரை, ஆடி, ஆவணி, பங்குனி மாதங்களில் சாமிவேட்டை இடம் பெறுகின்றது. தொடக்கக் காலத்தில் உணவு ஈட்டு முறையாக இருந்த வேட்டைத் தொழில் இன்று கம்பளத்தாரின் வாழ்க்கை மற்றும் வழிபாட்டுச் சடங்குகளில் பிரிக்க முடியாத ஒரு கூறாகி வளமைச் சடங்காகவும், பாவனைச் சடங்காகவும் ஆட்டக்கலையாகவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது என்று ஆய்வாளர் முடிவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மு. கல்யாணிகுமார் வழிபாட்டில் வேட்டை நிகழ்ச்சி என்னும் கட்டுரை (1999) வேட்டைச் சடங்கு பற்றி விளக்குகின்றது. நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் நடைபெறும் சடங்கு நிகழ்த்து களில், வேட்டைக்குச் செல்லுதல் என்ற நிகழ்த்துத் தன்மை, நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கிராமங்களி லிருந்தும் ஆண், பெண் தெய்வக் கோயில்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலிருந்தும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது. சுடலை மாடன், கருப்பசாமி, முனியன், மாடசாமி போன்ற ஆண் தெய்வ வழிபாட்டிலும் வேட்டைச் சடங்கு நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படு கின்றன. கோயிலில் சாமியருள் வந்து ஆடும் சாமியாடிகளே இந்த வேட்டைச் சடங்குகளை நிகழ்த்துகிறார்கள். இரவு பன்னிரண்டு மணிக்கு வேட்டைச் சடங்கு நிகழ்ச்சி நடைபெறும். இந்த வேட்டைச் சடங்கு ஒரு பாவனை நாடகமாக நிகழ்த்தப்படுகிறது. வேட்டையாடுதலின் அடையாளமாக ஆடுகள், பன்றி, சேவல் போன்ற மிருகங்கள் பலியிடப்படுகின்றன. பொதுப்பலிகள் பங்கிடப்படுகின்றன. இந்த வேட்டைச் சடங்குகளைத் தங்களுடைய இனப்பற்றை வலுப்படுத்துவதற்காகவும் நிகழ்த்துகின்றனர்.

இரா. கருப்பையா பாரிவேட்டை என்பது வழிபாட்டில் எவ்வாறு சடங்காக, கூத்தாக நிகழ்த்தப்படுகிறது என்று தம் கட்டுரையில் (1996) விளக்கியுள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் நாட்டுப்புற மக்கள் பாரி வேட்டையை வழிபாட்டுக் கூத்தாக நிகழ்த்தி வருகின்றனர். இது ஒவ்வொரு வருடமும் மாசிமாதம் சிவராத்திரியன்று தொடங்கி மூன்று நாட்களுக்கு நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இது பழங்கால மக்களின் உணவு தேடும் வாழ்க்கை முறையினைச் சுட்டுகிறது. பாரிவேட்டை நிகழ்த்தும் முறை

தொன்மை வரலாறு. அது வரலாற்றில் இடம் பெற்றுள்ள விதம் ஆகியவற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. வேட்டைச் சமூக மக்கள் குழுவாக வாழ்ந்து வந்தனர். வேட்டையில் கிடைத்த பொருளை எல்லோரும் பங்கிட்டுக் கொண்டனர். வேட்டைப் பொருளைப் பதப்படுத்தி, பாதுகாப்பாகவும் வைத்துக் கொண்டனர். பாரி வேட்டையில் வேட்டைக் கருவிகளை வைத்து வழிபடுதலைத் 'தடிக்கொட்பிடுதல்' என்று குறிப்பிடுகிறார்கள். பாரிவேட்டையில் முன்னோர் வழிபாடும் இடம் பெறுகிறது.

4.2.2.2 வேளாண்மைச் சடங்குகள்

இரா.மனோகரன் தம் நூலில் வேளாண்மைத் தொழிலுக்கான சடங்குகளைத் (2001) தொகுத்து வழங்கியுள்ளார். வேளாண்மைத் தொழிலின் செய்முறைகளில் சடங்குகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவற்றை வளமைச் சடங்குகள் என்று குறிப்பிடுவார்கள். இச்சடங்குகள் சில பயிர்களுக்கு மட்டும் செய்யப்படுகின்றன. குறிப்பாக நெற்பயிருக்கு உழவு முதல் அறுவடை மற்றும் சேமிப்பு வரையிலான சடங்குகள் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. மழைச்சடங்கு (மழைக்கஞ்சி, பிள்ளையாரை நீரில் மூழ்கி எடுத்தல்), மழை நிறுத்தும் சடங்கு, ஏர் கட்டுதல் சடங்கு, நாற்றுப் பாவுதல் சடங்கு, நடவுச் சடங்கு, நாற்று முடி வாங்கும் சடங்கு, அறுவடைச் சடங்கு, களத்து மேட்டுச் சடங்குகள், மானாவாரிப் பயிர்களுக்கான சடங்குகள் என்ற தலைப்புகளில் வேளாண்மைச் சடங்குகளை விவரித்துள்ளார். கம்பம் பள்ளத்தாக்கில் உழவு, நாற்றுப் பாவுதல், விதைத்தல், நடவு போன்ற அனைத்து வளமைச்சடங்குகளிலும் கன்னிமார் தெய்வம் முன்னிலைப் படுத்தப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களுக்குச் சடங்குகள் செய்யப்பட்டாலும், நெல்லுக்குச் செய்யப்படுவது போன்று விரிவான அளவில் செய்யப்படுவதில்லை.

4.3 வழிபாடு

இயற்கைப் பொருள்களிடத்தில் மனிதன் கொண்டிருந்த அச்சமும் அன்பும் நாட்டுப்புற வழிபாட்டிற்கு அடிப்படையாகும். இயற்கை வழிபாடு, ஆவி வழிபாடு, போலிப்பொருள் வழிபாடு,

புனிதப்பொருள் வழிபாடு, முன்னோர் வழிபாடு, குலக்குறி வழிபாடு, வீரவழிபாடு ஆகியவற்றின் இயல்புகளைக் கொண்டது நாட்டுப்புற வழிபாடாகும். தமிழ் நாட்டில் வாழும் பல்வேறு சாதியரும் ஒரே பண்பாட்டைச் சார்ந்தவர்கள் இல்லை. சாதியாலும் பல்வேறு உட்பிரிவுகளாலும் வேறுபட்டவர்கள். ஒரே இனத்தைச் சார்ந்தவர் ஒரு தெய்வத்தை மட்டும் வழிபடுவதும் இல்லை. ஒரு தெய்வம் தமிழ்நாடு முழுவதும் ஒரே விதத்தில் வழிபாடு செய்யப்படவுமில்லை. கிராமப்புறங்களில் நிகழும் வழிபாட்டை வீட்டுத் தெய்வவழிபாடு, குல தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்று பிரித்து விளக்கு கின்றார்கள். சிலர் குடும்பத்தெய்வ வழிபாட்டையும், குல தெய்வ வழிபாட்டையும், ஒன்றாகக் கருதுகிறார்கள். சிறு தெய்வங்களுக்குக் கட்டிட அமைப்பு இல்லை. பெரும்பாலான இடங்களில் மரத்துக்கடியில் ஆயுதங்கள் அல்லது நடுகற்கள் பதித்த பீடங்கள் இருக்கும். சில இடங்களில் மண்ணால் உருவான தெய்வப் படிமங்கள் இருக்கும். இத்தகைய சிறுதெய்வங்களுக்குச் சைவ, அசைவப் பொருட்களைப் படைத்து நோய், நொடி, பேய், துட்ட தேவதைகள் விலகவும், பிள்ளை வரம் வேண்டியும், மழை பெய்யவும் விரும்பிய எண்ணம், செய்யும் காரியம் கை கூடவும் மக்கள் வழிபடுகிறார்கள்.

4.3.1 சிறு தெய்வங்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒயிட்கெட் (1901) போன்றோர்கள் கிராம தெய்வங்களை ஆராய்ந்து ஆங்கிலத்தில் நூல் எழுதி வழிகாட்டினார்கள். இவரைத் தொடர்ந்து அங்காள பரமேஸ்வரி, திரௌபதியம்மன், ஐயனார், சுடலை மாடன் ஆகிய தெய்வங்களை வெளிநாட்டவர் ஆராய்ந்து நாட்டுப்புற ஆய்வுக்கு வழிகாட்டினார்கள். நெல்லை மாவட்டப் பகுதி சிறு தெய்வங்களைப் பற்றித் துளசி. இராமசாமி (1985), கணபதி ராமன் (1986) ஆகியோர் நூல்களை வெளியிட்டு நாட்டுப்புற வழிபாட்டு ஆய்வில் முன்னோடியாகச் செயல் பட்டனர். இவர்களைத் தொடர்ந்து எம்.ஏ., எம்ஃபில், பிஎச்டி ஆய்வேடுகளுக்கு ஆய்வுத் தலைப்புகளாகச் சிறு தெய்வ வழிபாட்டை எடுத்துக் கொண்டனர். குழுமாயி அம்மன் (1991), சு.சண்முக சுந்தரத்தின் சுடலை மாடன் வழிபாடு (1993), மதுரை வீரன் வழிபாடு (பிஎச்டி ஆய்வேடு, 1996), சேலம் வட்டார மாலைத்

தெய்வங்கள் (எம்ஃபில் ஆய்வேடு, 1996), குலக்குறியியலும், மீனவர்கள் வழக்காறுகளும் (1996), பண்பாட்டு வேர்களைத் தேடி (1999), நாட்டுப்புறச் சிறு தெய்வ வழிபாடு (1999), சேலம் வட்டார மாலைத் தெய்வங்கள் (எம்ஃபில் ஆய்வேடு, 2000), மள்ளர் வாழ்வும் வழிபாடும் (2000), வாழும் மரபுகள்(2001), புதுவையில் திரௌபதி வழிபாடு (2001), நாட்டார் சாமிகள் (2002) போன்றவை எண்பதுகளுக்குப்பின் தமிழரின் நாட்டுப்புற வழிபாடுகளைச் சித்திரிக்கும் சிறந்த நூல்களாகும். நாட்டுப்புறப் பண்பாட்டில் வழிபாடு குறித்து நூற்றுக்கணக்கான கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

சு.சண்முகத்தின் நாட்டுப்புறத் தெய்வங்கள் சில குறிப்புகள் என்னும் சிறு அறிமுகக் கட்டுரை தமிழில் உள்ள (1999) நாட்டுப்புறச் சிறு தெய்வங்களை விளக்குகிறது. ரைட் ரேவரண்ட் ஹென்றி நாட்டுப்புறத் தெய்வங்களை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், கற்கள் என்று மூன்றாகப் பிரித்து விளக்குவதை சண்முகசுந்தரம் தம் கட்டுரையில் எடுத்தாண்டுள்ளார். 91 பெண் தெய்வங்கள், 19 ஆண் தெய்வங்கள், 3 கற்கள் கூறப்பட்டுள்ளன. வழிபாட்டு முறைகள் கோவில் அமைப்பு, வழிபாட்டுச் சடங்குகள், கோவில் பிரசாதங்கள், தெய்வ நம்பிக்கைகள் என்னும் தலைப்புகளில் குறிப்புகளை வகைப்படுத்தித் தந்துள்ளார்.

4.3.1.1. பிடிமண் தெய்வம்

சிறு தெய்வ வழிபாட்டில் பிடிமண் கோவில்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பிடிமண் தெய்வத்தைப் பற்றி மு.பாண்டி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மக்கள் வேறு ஊர்களுக்குப் பிழைப்புக்காகப் புலம் பெயரும் போது தாங்கள் வழிபடும் தெய்வத்தைத் தனியாக விட்டுச் செல்ல மனமில்லாது தங்களுடன் பிடிமண் வடிவத்தில் எடுத்துச் செல்வதுண்டு. இவ்வாறு அமைக்கப்படும் தெய்வங்கள் பிடிமண் தெய்வங்கள் எனப்படுகின்றன. சிறு தெய்வ வழிபாட்டினர் கலசத்தில் அல்லது மண்ணிலான பீடத்தில் தெய்வத்தைக் கொண்டு செல்வதற்கு 'குடி எழுப்புதல்' என்று முன்பு குறிப்பிடுவர். இவ்வாய்வாளர் உத்தரவு வேண்டல், இடத் தேர்வு, பொருள்களும் நோக்கமும், பிடிமண் எடுக்கும் முறை, பிடிமண் வைக்கும் முறை, சக்தி நிறுத்துதல், குதிரையெடுப்பும் பிடிமண் எடுத்தலும், குடமுழுக்கும் பிடிமண்

எடுத்தலும், ஆக்கலும் நிலை நிறுத்துதலும், மண்ணும் மக்களும் என்னும் தலைப்புகளில் விளக்கியுள்ளார். பிடிமண் எடுத்தல் மூலம் நாட்டுப்புறமக்களுக்கும், நிலத்திற்கும் உள்ள பிணைப்பை அறியமுடிகிறது. நிலைத்தைத் தெய்வமாகக் கருதும் அவர்களின் மனநிலையும் வெளிப்படுகிறது.

4.3.1.2 மடத்துத் தெய்வங்கள்

மோ.கோ. கோவை மணி 'மடத்துத் தெய்வங்கள்' பற்றி ஆராய்ந்துள்ளார் (1999), மக்களுக்குத் தொண்டாற்றி இறந்தவர்களுக்கு மக்களால் எழுப்பப்படும் நினைவிடமே சமாதியாகும். இச்சமாதிப் பீடத்தின் மேல் இறந்தவர்களின் நினைவு கூரத்தக்க வகையில் ஏதாவது ஒரு குறியீட்டை வைத்து வழிபடுவர். சமாதியில் பீடத்தின் மேல் வைக்கப்பெறும் தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டு (1) ஆண் சமாதியில் ஆண் தெய்வம் (2) பெண் சமாதியில் பெண் தெய்வம் (3) ஆண் சமாதியில் பெண் தெய்வம் (4) பெண் சமாதியில் ஆண் தெய்வம் (5) பலர் சமாதியில் ஆண் தெய்வம் எனப் பிரித்துத் தம் கட்டுரையில் விளக்கியுள்ளார். மடத்துச் சமாதிகள் (1) மடத்தால் ஏற்பட்ட சமாதி (2) சமாதியால் ஏற்பட்ட மடம் என விளக்கம் தந்துள்ளார். மடத்துத் தெய்வம் நாட்டுப்புறத் தெய்வமா என்ற வினா எழுப்பி, விவாதித்து, நாட்டுப்புறத் தெய்வமே என்ற முடிவுக்கு வந்துள்ளார். இறந்தவர்களைப் புதைப்பதும், சமாதி கட்டி வழிபடுவதும் திராவிடப் பண்பாட்டு முறையாகும். இது ஆரியத்திற்கு எதிரானது. சுமைதாங்கிக் கல் வைத்தல், மடம் நிறுவுதல் திராவிட முறைகளாகும். சமாதி வைத்தல் நாட்டுப்புற மக்களின் வழக்கமாகும். மடத்துத் தெய்வங்கள் சமாதிகளின் மேலேயே வைக்கப்பட்டிருப்பதால், மடத்துத் தெய்வங்கள் நாட்டுபுறத் தெய்வங்கள் என்றே சொல்லலாம்.

4.3.1.3 பரிவாரத் தெய்வங்கள்

பி.மாலதி பரிவாரத் தெய்வங்கள் குறித்து ஆராய்ந்து கட்டுரை வெளியிட்டுள்ளார் (1999). இது முதன்மைத் தெய்வத்தைச் சார்ந்த மற்ற தெய்வங்கள் எனப்பெறும். பெருந்தெய்வ வழிபாட்டில் பரிவாரத் தெய்வங்கள் இடம் பெறுகின்ற நிலை உண்டு. சிறு தெய்வ வழிபாட்டில் முதன்மைத்

தெய்வத்தைச் சுற்றிப் பரிவாரத் தெய்வங்கள் இடம் பெறுகின்றன. சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழக்கோட்டை அய்யனார், இலங்குடி பகத்சால மூர்த்தி அய்யனார், அரியாக் குறிச்சி வெட்டுடையார் காளியம்மன் ஆகிய மூன்று தெய்வங்கள் பற்றிய ஆய்வு இக்கட்டுரையில் இடம் பெறுகின்றது. பரிவாரத் தெய்வங்களின் வரலாறு, பட்ட தெய்வங்கள், வழிபாட்டுக் கூறுகள், வழிபடுவோர், விழாவும் நம்பிக்கைகளும் (பலியிடுதல், சத்தியம் செய்தல், தொட்டில் கட்டுதல்) பரிவாரத் தெய்வங்களின் திருவுருவ அமைதி, நேர்த்திக் கடன் என்னும் தலைப்புகளில் பரிவாரத் தெய்வங்களை விளக்கியுள்ளார். பரிவாரத் தெய்வங்கள் காலப்போக்கில் முதன்மைத் தெய்வமாக வளர்ச்சியுறுகின்றன. பரிவாரத் தெய்வங்கள் சில சாதியினரோடு (நகரத்தார், கள்ளர், தாழ்த்தப்பட்டோர்) இணைக்கப்பட்டு இனங்காணப்படுகின்றன. வெட்டுடையாள் காளி தவறு செய்தவருக்குத் தண்டனை வழங்கும் நீதிபதியாகப் போற்றப் பெறுகிறாள். இக்காளி கோயிலில் ‘காசு வெட்டிப் போடுதல்’ என்பது சிறப்பான சடங்காக நிகழ்த்தப்படுகின்றது. ஒரு கோயிலுக்குள் இரண்டு அய்யனார் இருப்பது கீழக்கோட்டைக் கோயிலின் தனித்தன்மை ஆகும். அய்யனாருக்குச் சைவ பூசையாகும். இதற்குக் காரணம் கோயிலை அரசுடைமை செய்தது ஆகும்.

4.3.1.4 குல தெய்வ வழிபாடு

சாதி, இனம், உட்குழு, குடும்பம் என்னும் சமுதாய மரத்தின் ஒவ்வொரு கிளைக்கும் குலதெய்வ வழிபாடு உண்டு. பெருந்தெய்வ, சிறுதெய்வ வழிபாடு செய்கின்றவர்களுக்கும் கூட குலதெய்வ வழிபாடு உண்டு. முன்னோர் வழிபாடாகிய குல தெய்வ வழிபாடு பற்றி எம்.எஸ்.சாந்தா கட்டுரை வெளியிட்டுள்ளார் (1996). இக்கட்டுரை இராணி மேரிக் கல்லூரி தமிழ்த்துறையைச் சேர்ந்த, பிராமணர் அல்லாத இந்து சமயத்தை மட்டும் சேர்ந்த, 25 ஆசிரியர்களிடம் 20 வினாக்களைக் கொடுத்து, பேட்டி கண்டு, அவர்களிடமிருந்து சேகரித்த செய்திகளின் அடிப்படையில் கட்டுரையை அமைத்துள்ளார். ஆய்வில் கிடைத்தவற்றை (1) குல தெய்வ வழிபாட்டில் பொதுத் தன்மை (2) வீட்டு வழிபாடு (3) வெளி ஊரில் வழிபாடு என்று மூன்று பிரிவாகப் பிரித்து விளக்கியுள்ளார். பெருந்தெய்வங்களை ஓரிருவரே

குலதெய்வங்களாகக் கொண்டுள்ளனர். முன்னோர்களைச் சிலர் குலதெய்வங்களாக வழிபடுவர். சிறு தெய்வங்கள் (எல்லைப் பிடாரி, சுடலை மாடன், இசக்கி, மதுரை வீரன்) குல தெய்வங்களாக வணங்கப்படுகின்றன. வீட்டின் கன்னி மூலையில் வைத்தோ சொந்த ஊருக்குச் சென்றோ, குல தெய்வம் இருக்கும் திசையை நோக்கி நினைத்தோ வணங்குகிறார்கள். புடவை, வேட்டி ஆகியவற்றை வணங்குவதும் பூசைப் பெட்டியை வணங்குவதும் உண்டு. இவ்வாறு பல செய்திகள் கட்டுரையில் இடம்பெறுகின்றன.

குல தெய்வ வழிபாட்டில் 'தலவிருட்சம்' பெறுமிடத்தை க.செல்வராசு (1994) ஆராய்ந்துள்ளார். கொங்கு நாட்டில் வாழும் கொங்கு வேளாள இன மக்களின் வாழ்வியலில் குலதெய்வ வழிபாடு முக்கியப் பங்கு வகிக்கின்றது. இக்கட்டுரை காங்கேயம் வட்டாரத்தை ஆய்வுக்களனாகக் கொண்டு, அங்கு அமைந்திருக்கும் கொங்கு வேளாளர்களின் குலதெய்வக் கோவில்களில் அமைந்த தல விருட்சங்களைக் கொண்டு எழுதப் பட்டுள்ளது. மர வழிபாடு, திராவிடப் பண்பாட்டில் சிந்து வெளி நாகரிகம் காலந்தொட்டு வழிவழியாகத் தொடர்ந்து வரும் வழிபாடாகும். வெள்ளையம்மனும் விடத்தலை மரமும், வீரக்குமார் சாமியும் கருக்கட்டா மரமும், நாவலடியானும் நாவல் மரமும், அத்தனூரம்மனும் முள்ளி மரமும் என்று தெய்வத்திற்கும் மரத்திற்கும் உரிய தொடர்பை விளக்கியுள்ளார். குழந்தை வரம் வேண்டுவோர் தல விருட்சங்களில் தொட்டில் கட்டுகின்றனர். தல விருட்சங்களில் செய்ய வேண்டிய நல்ல காரியங்களை நினைத்துப் பல்லி சகுனம் கேட்கின்றனர். குலதெய்வக் கோவில்களில் தல விருட்ச வழிபாடு என்பது தனி வழிபடாக அமையாமல் குல தெய்வ வழிபாட்டுடன் இணைந்த ஒரு வழிபாடாகக் காணப்படுகின்றது. இது குறித்த அட்டவணை (பத்து தெய்வங்கள் - பத்து தல விருட்சம்) இக்கட்டுரையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

4.3.1.5 வட்டாரச் சிறு தெய்வங்கள்

தெய்வானை என்பவர் சிவகாசி சிறுகோவில் பற்றி ஆய்வை எம்ஃபில் படிப்புக்குச் செய்தார் (1992). அதன் ஒரு பகுதியைக் கட்டுரையாக வெளியிட்டுள்ளார் (1995-96). சிலர் தன்

மூதாதையரின் வீரச் செயலகளைப் போற்றி அவர்கள் மீது தெய்வத் தன்மை ஏற்றி நடுகல் வழிபாடும், சமாதித் தெய்வ வழிபாடும் மேற்கொண்டதால் பல சிறு தெய்வங்கள் தோன்றின. குலதெய்வங்கள் (வாழ்ந்த மாந்தரையே குல தெய்வமாக்கி வழிபடுதல்), சாதியின் அடிப்படையில் வழிபடும் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், காவல் தெய்வங்கள், நடுகல் தெய்வங்கள் ஆகியன சிவகாசியில் சிறப்பிடம் வகிக்கின்றன. வணங்கப்படும் காரணம், கோவில் அமைப்பு, வழிபடக் காரணம், வழிபாடு, வழிபாட்டு முறைகள், ஈத்துக் காணிக்கை, முட்டைக்கழிப்பு, இராச்சோறு படைத்தல், உமாப் பிச்சை, மாரிவேட்டை (மழைக்கண் திறத்தல்), வெள்ளாவிப் பொங்கல், இலந்தை முன் சாய்தல், கரும்புள்ளி-செம்புள்ளி குத்தல், பிச்சை வாங்கல் ஆகிய தலைப்புகளில் சிறு குறிப்புகளைத் தந்துள்ளார் கட்டுரையாளர்.

'கொங்குநாட்டுச் சிறு தெய்வங்களை' மே.அ.பாலமுருகன் ஆராய்ந்துள்ளார் (2001). கொங்கு நாட்டின் எல்லா ஊர்களிலும் மாரியம்மன் கோவிலைக் காணலாம். கேப்பையை வடித்து மாரியம்மனுக்குப் படைப்பது மரபு. கண் பார்வையைக் கெடுக்கவும் மீண்டும் கண்பார்வையைக் கொடுக்கவும் வல்லவள் மாரியம்மன். பொள்ளாச்சி மாரியம்மன், ஈரோடு மாரியம்மன், பாரியூர் அம்மான், பண்ணாரியம்மன் போன்ற அம்மன் கோவில்கள் புகழ்பெற்றவை. கொங்குநாட்டில் மிகுதியாக உள்ள மற்றொரு கோயில் ஐயனார் கோயிலாகும். இயற்கைச் சீற்றங்களிலிருந்து காப்பதும், குழந்தைப் பேறு அளிப்பதும், தீராத நோய்களைத் தீர்ப்பதும், செல்வச் செழிப்பை வழங்குவதும் இத்தேவதையே எனக் கிராம மக்கள் நம்புகின்றனர். கொங்கு நாட்டில் அரிசனங்களின் குடியிருப்புகளில் வீரமாத்தி கோயில் காணப்படுகின்றது. கொங்கு வேளாளர்களால் பெரும்பாலும் வணங்கப்படும் அண்ணன்மார் கோயில் பல ஊர்களிலும் உண்டு. கொங்கு நாட்டுச் செங்குந்தர்கள் காமாட்சியம்மனை வழிபடுகின்றனர். சிறு தெய்வங்களில் பெண் தெய்வங்களே அதிகமாயுள்ளதை அறியலாம். கொங்கு நாட்டில் வணங்கப்படும் பெண் தெய்வங்கள் மாரியம்மன், காளியம்மன், சக்கம்மன், ஆலம்மன், பகவதியம்மன், கூத்தனாச்சி, செல்லியம்மன், முத்தாளம்மன், ஓங்காளியம்மன், அங்காளம்மன், செங்கையம்மன், கண்ணாத்தாள், ஆயிரம் கண்ணுடையாள், பிடாரியம்மன், பேச்சியம்மன், கொங்காளம்மன், கன்னிமார்,

மாசானி, கங்கம்மா ஆகியன. ஆண் தெய்வங்கள் ஐயனார், முனியப்பன், நாட்ராயன், வேட்டைக்காரன், வீரமல்லு, உடையார் மாடன், பாட்டப்பன், காத்தவராயன், கருப்பராயன், பொட்டுச்சாமி, கொம்பேரி, கருப்பனார், பெரியாண்டவர் ஆகியன. ஊர்த்தெய்வ விழாக்களில் கூட்டு வழிபாடு முறை காணப்படுகின்றது. பல்வேறு சாதி மக்களிடம் ஒற்றுமை உணர்வை வளர்க்க ஆண்டுத் திருவிழாக்கள் பயன்படுகின்றன.

கொங்கு நாட்டுப்புறத் தெய்வங்களின் அமைப்பும் சிலை செய்யும் பொருட்களும் என்பது பற்றி நீ.வ.கருப்பசாமி ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார் (2001). நாட்டுப்புறத் தெய்வங்களை மரத்தடியிலும் திறந்த வெளியிலும் கற்சிலைகள் வைத்து வழிபட்டு வருகின்றனர். நாட்டுப்புறக் கோயில் அமைந்திருக்கும் இடத்தை வைத்து ஊர்க்கோயில்கள், சமுதாயக் கோயில்கள், குலதெய்வக் கோயில்கள் என்றும், கோயில்களில் திசை அமைப்பைக் கொண்டு (1) வடக்கு நோக்கிய கோயில்கள் என்றும் பகுக்கலாம். கொங்கு நாட்டில் உள்ள குலதெய்வக் கோயில்கள் அனைத்தும் வடக்குத் திசையைப் பார்த்தே இருக்கின்றன. பெரும்பாலான கோயில்கள் கிழக்குப் பார்த்து அமைந்துள்ளன. இந்த வட்டாரத்தில் உள்ள முன்னோர் நினைவான கோயில்கள் மேற்குத் திசையை நோக்கியே அமைந்துள்ளன. மேலும் கோயிற்சிலை அடிப்படையில், (1) உருவமற்ற தெய்வங்களைக் கொண்ட கோயில்கள் (2) உருவச்சிலை கொண்ட கோயில்கள் எனப் பகுத்து விளக்கியுள்ளார் கட்டுரையாளர். கல், மரம், அரிவாள், வேல் போன்றவற்றை உருவமற்ற தெய்வங்களாக வழிபடுகின்றனர். களிமண், மரம், கல், சுதை ஆகியவற்றினால் சிலைகள் செய்து வைத்து வழிபடுகின்றார்கள். காளியம்மனுக்கு மரத்தால் சிலை செய்து வணங்கி ஊர்வலத்திற்கும் எடுத்துச் செல்கிறார்கள். மூவனூரில் உள்ள வஞ்சியம்மனுக்குக் கற்சிலை வைக்கப் பட்டுள்ளது. தெய்வங்களின் சிலைகளோடு அவற்றின் வாகனங்களும் (குதிரை, யானை) சுதையினால் செய்யப்படு கின்றன. களிமண்ணால் செய்த சிலைகளைத் திருவிழாவிற்குப் பின் கிணற்றில் இறக்கி விடுகின்றனர். இதற்குக் காரணம் கிராமத் தெய்வங்கள் மனிதர்களாகப் பிறந்து இறந்தபின் தெய்வங்களாக மாறியவை. இவற்றின் மூலம் கோயில்களின் அமைப்பும் முன்னோர்களின் வழிபாடும் தொன்று தொட்டு நடைபெற்று வருவதை அறியமுடிகிறது.

குறும்பலாப்பேரி மக்களின் வழிபாட்டுத் தெய்வங்களைப் பற்றி சு.இராசரத்தினம் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். நெல்லை மாவட்டத் தென்காசி வட்டம் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் குறும்பலாப்பேரி (குலசேகரப் பட்டி) அமைந்துள்ளது. இவ்வூர் மக்கள் வழிபடும் தெய்வங்களை இக்கட்டுரை விளக்குகிறது. இவ்வூர் மக்கள் அனைவருக்கும் பொதுவான பத்திர காளியம்மன் கோயில் ஆகும். கோயில் முன்பு 'தேரோட்டி மாடன்' என்ற தெய்வத்திற்கு வேப்பமரத்தின் அடியில் ஒரு சிலை வைக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் அமைந்திருக்கும் கோயில்களை (1) பேக்கோயில் (2) அம்மன் கோயில்கள் (மாரியம்மன், முத்தாரம்மன், உலகம்மன்) என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இவற்றைத் தவிர, சுடலை மாடனுக்கு மட்டும் பீடம் போட்டு வழிபடும் 3 கோயில்களும் உண்டு. ஜெம்புலிங்க சாஸ்தா நாடாருக்கு உரியது. கருப்பசாமி என்ற 2 கோயில்கள் உண்டு. பேக்கோயிலாக இருந்தால் மாடனுக்குக் கடாவை நெஞ்சு கீறுவார்கள். அம்மன் கோயிலாக இருந்தால் கடாவை வெட்டுவார்கள். பூசை நடந்த பின் மஞ்சள் நீராட்டம் நடைபெறும். மஞ்சள் நீரைப் பொங்கல் வைத்து, சாமியாடிகள் தலையில் தெளிப்பார்கள், ஊற்றுவார்கள். வெட்டிய கடாக்கறி பிரித்துக்கொடுக்கப்படும். எட்டு நாள் கழித்துப் பொங்கல் இடப்படும். பேக்கோயிலாக இருந்தால் வியாழனும் வெள்ளியும் அம்மன் கோயிலாக இருந்தால் திங்களும் செவ்வாயும் பூசை நடைபெறும்.

என். மணிமேகலை, பொதும்பு மற்றும் ஆனையூர் வட்டாரப் பெண் தெய்வங்களைப் பற்றிக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். ஆனையூர் வட்டாரத்தில் மந்தையம்மன், இச்சந்தியம்மாள், காளியம்மன் என்ற மூன்று பெண் தெய்வங்களைப் பொதுத் தெய்வங்களாக வழிபடுகின்றனர். குழந்தை வேண்டும் என்றும், மழைவேண்டும் என்றும், நோய் தடுப்பு வேண்டும் என்றும் பெண் தெய்வங்களை மிகுதியாக நாடி வழிபடுகின்றார்கள். பொதும்பு வட்டாரத்தில் கல்லூரில் அம்மச்சியாருக்குப் பதினைந்து நாள் திருவிழா நடத்து கின்றார்கள். இதற்குக் காவல்தெய்வம் சங்கையாவையும் கொண்டாடுகின்றார்கள். இங்கு அம்மச்சியார், ராக்காயி, பேச்சி பொதுத் தெய்வங்களாகும். வண்ணத்தியம்மன் சாதி

தெய்வமாகும். காளியம்மனைப் பறையர்களின் பங்காளித் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

4.3.2 ஆண் தெய்வங்கள்

வீரயுகத்தில் போர்க்களத்தில் வெற்றி பெற்ற / இறந்த வீரர்களின் வழிபாடாக நடுகல் வழிபாடு தோன்றியது. இந்த முன்னோர் வீர வழிபாடு பிற்காலத்தில் சிறு தெய்வங்களாகி - இனத் தெய்வங்களாக - வட்டாரத் தெய்வங்களாக - உலகம் போற்றும் உயர்ந்த பெருந்தெய்வங்களாக மேனிலை ஆக்கம் பெறுகின்றன. நலிவுடைமைச் சமுதாயமும் ஆணாதிக்க உணர்வும் பெற்ற சமூகத்தில் ஆண் தெய்வங்கள் வளர்ந்து பெருந்தெய்வ நிலையை அடைகின்றன. தொல்காப்பியம் குறிப்பிடும் நான்கு நிலத் தெய்வங்களும் - சேயோன், மாயோன், வேந்தன் (இந்திரன்), வருணன் ஆகிய நால்வரும் - ஆண் தெய்வங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாலைத் தெய்வமாகிய கொற்றவை இப்பட்டியலில் இடம் பெறவில்லை. பாலையை உரிப்பொருளாக ஏற்றுக் கொண்டாலும், நில வகையில் கூறப்படவில்லை. பாலை என்பது நில மயக்கமாகக் கொள்ளப் பட்டது. பெருந்தெய்வ நெறியில் காளியோ மற்ற பெண் தெய்வங்களோ சரி - சமமான இடத்தைப் பெறவில்லை என்பதை வரலாற்றிலிருந்து அறியலாம். நாட்டுப்புற ஆண் தெய்வங்களை இனிக் காணலாம்.

4.3.2.1 அரவான் வழிபாடு

அரவான் அல்லது கூத்தாண்டவர் என்ற கிராமத் தெய்வம் மகாபாரதக் கதையோடு தொடர்புடையது. வடாற்காடு, தென்னாற்காடு, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஆய்வு செய்த பேராசிரியர் அல்ப்ஹில்டபைல்டல் முப்பத்திரண்டு (32) கூத்தாண்டவர் கோவில்களைப் பார்த்ததாகக் கூறுகின்றனர். இக்கோயிலில் பெரும்பாலும் வன்னியர்கள் வழிபடுகின்றனர். தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு கூத்தாண்டவர் கோவிலுக்கு ஏராளமான அலிகள் பல மாநிலங்களிலிருந்து வந்து வழிபடு கின்றனர். மாரியம்மன், கங்கையம்மன் மற்றும் காளியம்மன் போன்ற கிராமத் தாய்த் தெய்வங்களின் வழிபாடுகளோடு

இணைந்தும் கூத்தாண்டவர் வழிபாடு காணப்படுகின்றது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை, வீரநல்லூர், கிளாக்குளம், அரிகேச நல்லூர், பண்பொழி, விவ்நாதப்பேரி, சிவகிரி, ராஜபாளையம், சங்கரன் கோவில் போன்ற ஊர்களில் திரௌபதியம்மன் கோவிலில் அரவான் வழிபாடு நடைபெறுகிறது. தூத்துக்குடி மாவட்டம் நட்டார் மடத்திலும் கன்னியாகுமரி மாவட்டம் குருந்தங்கோட்டிலும் நாடார் இன மக்கள் அரவானுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கோவில் அமைத்துள்ளனர். வீரமரணம் அடைந்தவர்களை வழிபடும் நம்பிக்கையில் களபலியாகக் கொடுக்கப்பட அரவானை வழிபடுகின்றார்கள். தென் மாவட்டங்களில் அரவான் குடும்பத் தெய்வமாகவும், கிராமத் தெய்வமாகவும் அமைந்துள்ளது. களிமண்ணால் நிலத்தில் அரவானை உருவாக்கி வழிபாடு நிகழ்த்துகின்றனர்.

கூத்தாண்டவர் திருநாள் என்ற பெயரில் அலிகள் நிகழ்த்தும் திருவிழா தமிழகத்தின் வடமாவட்டங்களில் புகழ் பெற்றது. புதுவைப் பகுதியான பிள்ளையார் குப்பத்திலும் இத்திருவிழா நிகழ்கின்றது. இவ்விழா நிகழ்வுகள் பற்றி அ.அறிவுநம்பி ஆராய்ந்து கட்டுரை வெளியிட்டுள்ளார். மகாபாரதப் புராணக்கதையை அடியொற்றிய வழிபாடுகளில் அரவான் வழிபாடு குறிப்பிடத்தக்கது. அலிகளின் பங்கேற்பு, பிறவழிபாடுகளிலிருந்து இதனை முற்றிலும் வேறுபட்டதாக்கு கின்றது. நிணச்சோறு, படுகளம், பலியிடுதல், ஒப்பாரி போன்ற கூறுகள் அரவான் வழிபாடு நாட்டுப்புற வழிபாடு என்பதை உறுதி செய்கின்றன. பிள்ளையார் குப்பத்தில் நிகழும் அரவான் வழிபாட்டைக் காப்புக் கட்டுதல், செவ்வாயில் திருவிழா நிகழ்த்துதல், அரவானுக்குத் திருமணம் நிகழ்த்திப் பல்லயச்சோறு வழங்குதல், களப்பலி கொடுத்தல், இது நிகழ்ந்த பதினாறாம் நாள் படுகளம் இழப்பல் என்ற பேரில் கருமாதி நடத்துதல் போன்ற சடங்கு முறைகளை நிரல்பட விளக்கியுள்ளார்.

சித்திரை அமாவாசையன்று இக்கோயிலில் யாருக்கும் தெரியாமல் கோமுட்டிச் செட்டியார் காப்புக்கொடியைத் திருட்டுக்கொடியால் கட்டுதல் வினோதமான பழக்கமாக இருக்கின்றது. அரவான் வழிபாட்டில் காத்தவராயன் சுவாமி

தலைமைத் தெய்வமாக வழிபடப்படுகிறது. கோயிலுக்குப் புனிதநீர் கொண்டுவரும் பழக்கத்தைச் 'சக்கராபரணி' என்று குறிப்பிடுகிறார்கள். இக்கோயிலுக்கு அருகிலுள்ள ஐயனார் கோவிலிருந்து மரத்தாலான அரவான் தலையை ஆண்டு தோறும் எடுத்து, விழா முடிந்தவுடன் அங்கேயே வைத்துவிடுகிறார்கள். மாரியம்மன் கோயிலில் அரவானுக்குக் கண்திறப்பு செய்யப்படுகிறது. அம்மன் கோயிலிலுள்ள கண்ணன்சிலை பெண்ணாக அலங்கரிக்கப்படுகிறது. அரவானுக்கும் பெண்ணுருக் கண்ணனுக்கும் திருமணம் நடைபெறுகிறது. தாலி கட்டும் வைபவம் நடைபெறுகிறது. இச்சமயத்தில் ஆடவர்கள் வளையல் அணிந்து தாலிகட்டிக் கொள்கிறார்கள். ஏறத்தாழ இரண்டாயிரம் பேருக்கு மேற்பட்டோர் தாலியணிந்து கொள்கிறார்கள். அலிகள் ஒப்பாரி பாடுகிறார்கள். தம் கூந்தலில் உள்ள மலர்களை எடுத்துக் கசக்கி எறிகிறார்கள். வளையல்கள் நொறுக்கப்படுகின்றன. இரத்தம் கலந்த பொங்கல் நான்கு திசைகளிலும் வீசப்படுகின்றன. அரவான் தலை வெட்டப்படுகிறது. இதன் குறியீடாக மஞ்சள் துணியால் அரவானின் தலையை மூடிவிடுகிறார்கள். வைக்கோலால் அமைக்கப்பட்ட அரவான் உடல் தீவைக்கப்படுகிறது. அலிகள் வண்ண ஆடைகளை நீக்கிவிட்டு வெள்ளை ஆடை அணிகின்றனர். அதற்கு முதல் நாள் கழுத்தில் ஏறிய தாலியை அறுத்து, ஒரு குறிப்பிட்ட மரத்தடியில் வீசிவிடுவார்கள். பதினாறாம் நாள் அசைவப் படையல் படைக்கப் பெறும். இந்தக் கோயிலில் விழாக்காலம் தவிர ஏனைய நாட்களில் நாள்தோறும் தீபம் ஏற்றப்படுமே தவிர மற்றைய பூசைகள் எதுவும் கிடையாது.

4.3.2.2 அய்யனார் வழிபாடு

மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் பள்ளபட்டிக்கு அருகிலுள்ள மாவூத்து ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் அய்யனார் வழிபாட்டையும் அதன் பின்புலத்தையும் இரா.மோகன் ஆராய்ந்துள்ளார் (1999). இவ்வழிபாடு மாசிமாதம் மகா சிவராத்திரியன்று இரவெல்லாம் கண்விழித்துக் கொண்டாடப்படுகின்றது. இது சின்னமனூரிலுள்ள சிறிய கோவிலில் மட்டும் நடைபெற்று வருகிறது. வைகாசி விசாகத்திற்கு இச்சாமிக்குப் பூசை

செய்யப்படுகிறது. அய்யனார், அரசுமகன், (6) மூத்ததங்கா, அக்கினித்தங்கா, பதினெட்டாம்படி, துள்ளுவெட்டி, அக்னி வீரபத்திரர், லாட சன்னாசி, வேட்டைக் கருப்பன் ஆகியவை பரிவாரத் தெய்வங்களாக வணங்கப்படுகின்றன. ,கச்சைகட்டி என்ற கிராமத்தில் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்பாக வாழ்ந்த ஜமீன்தார் ஒருவர் தன் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் காமாட்சி அம்மன் கோவிலில் பூசாரி ஐயர் ஒருவரின் மகள் மீது மோகம் கொள்கிறார். வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த ஆறு பெண்கள், அப்பெண்ணின் தோழிகள் இந்த நெருக்கடியிலிருந்து தப்ப, இரவோடு இரவாக ஐயர் தனது மகளையும், மகளது தோழிகளையும் காப்பாற்ற, வேளாளர் சமூகத்தின் உதவியோடு புறப்படுகின்றனர். ஆனால் மாவூத்தைக் கடந்தபோது அவர்களுக்குத் துணையாக வந்த அரச மகன், அக்கினி வீரபத்திரன், பதினெட்டாம்படி, துள்ளுவெட்டி, சப்பாணி, லாடசன்னாசி அங்கேயே உயிர்விடுகின்றனர். இவர்களைத் தொடர்ந்து வந்த குதிரைவீரர்கள் இவர்களைப் பிடிக்க முடியாமல், போரிடமுடியாமல் திரும்புகின்றனர். இறந்தவர்கள் அவர்களுடைய வாரிசுகளால் முன்னோர் வழிபாட்டின் அடிப்படையில் தெய்வமாக வணங்கப்படுகின்றனர். இத்தெய்வத் தோற்றத்தின் சமூக அரசியல் பின்னணிகளைக் கட்டுரையாளர் விளக்கியுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசியிலிருந்து எரிச்சநத்தம் செல்லும் சாலையில் பதினொரு கிலோமீட்டர் தொலைவிலுள்ள மங்களம் புதுப்பட்டி என்ற சிற்றூரின் தெற்கு எல்லையில் அருள்மிகு கூடமுடையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலிலுள்ள ஐயனாரைப்பற்றியும், ஆறுகரையாதவரோடு அக்கோயில் கொண்டுள்ள தொடர்பு பற்றியும், பொ.நா.கமலா தம் கட்டுரையில் விளக்கியுள்ளார். கூடமுடை ஐயனாரை முதலியார், பிராமணர் தவிர, பிறசாதியினர் பலரும் தத்தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். இவர்களும் அகத்தார் இருப்பு 56 கிராமத்து ஆறுகரையாதவர்கள் இத்தெய்வத்தைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். பசுக்களை மீட்கும் கரந்தைப் போரில் இறந்த வீர்களுக்கு நடுகல் அமைக்கப்பட்டதின் அடிப்படையில் ஐயனார் வழிபாடு தோன்றி இருக்கலாம். பின்பு ஐயனார் கூடலிங்கம் உடையார்ாக

மேல்நிலையாக்கம் பெறுகின்றார். இந்த மாற்றத்திற்கான வரலாற்றையும் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். ஐயனார் பெருந்தெய்வமாக மாறுவதைப் போலத் தலவிருச்சமாக இருந்த ஆலமரம் மருதமரமாகவும், யாதவரின் குலத்தொழில் ஆடு, மாடு மேய்த்தல், உழவுத் தொழிலாக மாறுவதையும் ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அனைவருக்கும் பொதுத் தெய்வமாக, ஊர்க்காவல் தெய்வமாக இருந்த ஐயனார் யாதவருக்கும், வாணியச் செட்டியாருக்கும் மட்டுமே உரிய தெய்வமாக மாற்றம் பெறுவதைத் தம் கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். மற்ற சாதியினரின் குலதெய்வமாகிய சீலைக்காரியம்மனையும், தீப்பாய்ச் சியம்மனையும் குலதெய்வமாக வணங்க வெளிமண்டபத்தில் அனுமதித்துள்ளனர். அகத்தார் இருப்பு 56 கிராமத்து ஆறுகரை யாதவர்கள் ஏழுநாட்கள் பெரும்பூசையைச் சித்திரை, வைகாசி மாதத்தில் ஐந்தாண்டுக்கு ஒரு முறை கொண்டாடுகிறார்கள்.

வெண்டாக்கோட்டை ஆகாய அய்யனார் பற்றி த. பூமா ஆராய்ந்துள்ளார் (2001). பட்டுக்கோட்டை வட்டத்தில் முப்பத்திரண்டு கிராமங்கள் அடங்கியது முசுகுந்த நாடு. இந்த முசுகுந்த நாட்டில் அடங்கிய வெண்டாக்கோட்டையில் ஆகாய அய்யனார் வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. இவர் கம்பீரமான பெரிய மீசையுடன் யானை மேல் அமர்ந்த நிலையிலும், குதிரையின் மீது அமர்ந்த நிலையிலும் காணப்படுகிறார். ஆனால், இந்தக் கிராமத்து அய்யனார் உருவம் 'குடம்' போன்ற அமைப்பில் உள்ளது. இந்தக் குடம் தான் மூலவிக்கிரகம். கோயில்களுக்குக் கதவுகள் இல்லை. ஏனென்றால், இரவு நேரங்களில் அய்யனார் காவலுக்குச் சென்று வருவதால் நடை சாத்தப்படுவதில்லை. இதனால் தானோ என்னவோ ஆகாய அய்யனார் என்று பெயரிட்டுள்ளார்கள். அய்யனாரின் எதிரில் முன்னடியான் மற்றும் பரிவாரத் தெய்வங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அபிஷேகத்தின் போது மூல விக்கிரகமாகிய சிறுகுடம் அலங்கரிக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. உயிர்ப்பலியிடும் வழக்கத்தை இவர்கள் 'சிறப்பு விடுதல்' என்று அழைக்கின்றனர். பலி மாமிசங்களை விற்கவோ, ஊரின் எல்லையைத் தாண்டிக் கொண்டு செல்லவோ கூடாது. இந்தக் கிராமத்தில் வீரக்குடி வேளாளர் அதிகமாக வாழ்கின்றார்கள். இவர்களின் முக்கியமான வழிபாட்டுத்

தெய்வமாக அமைகின்றது. நாடாவிக்கோனார் போன்றவர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும் வழிபடுகின்றனர். ஆனால், தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்தவர்கள் அய்யனாரிடம் வருவதில்லை. இக்கோவில் வழியாக யாரும் குதிரையில் செல்லக் கூடாது. மேலும், குதிரை வண்டிகள் இந்தக் கிராமத்திற்கு வருவதில்லை. அய்யனார் மீது சத்தியம் செய்து கூறுதல், இவ்வட்டாரத்தின் வாய்மொழி வழக்காறாகும். இக்கோயிலில் அய்யனார் அரூப வழிபாட்டு முறையில் வணங்கப்படுகிறார்.

4.3.2.3 இடும்பன் வழிபாடு

த.பூமா 'இடும்பன் வழிபாடு' குறித்து ஆராய்ந்துள்ளார் (2001). முருகன் கோவில் இருக்கும் இடங்களில் எல்லாம் இடும்பன் ஆலயமும் இருக்கும். இடும்பனுக்குத் தனிக்கோவில் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் 'வெண்டாக் கோட்டை' என்ற கிராமத்தில் உள்ளது. இக்கட்டுரை வெண்டாக் கோட்டை இடும்பனைப் பற்றி அமைகிறது. இடும்பன் பற்றிய இரண்டு புராணக்கதைகள், ஒரு வாய்மொழிக் கதை ஆகியவற்றை முதலில் தந்துள்ளார். சுப்பிரமணியசுவாமி ஆலயத்தின் எதிரில் ஓர் உதிர வேங்கை மரத்தினை வணங்கினர். பின்னர் ஆலயத்தின் இடப்புறம் ஒரு மரத்தில் பூமாலை அணிவித்து வணங்கினர். இந்த இடும்பன் ஆலயம் வடக்குத் திசையில் சுப்பிரமணியர் ஆலயத்தைப் பார்த்த வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. கம்பீரமான தோற்றத்தில் 2½ அடி உயரத்தில் ஒரு கையில் அரிவாள், மற்றொரு கையில் சிக்குமுக்கு தடி வைத்திருப்பது போல் சிலை அமைந்துள்ளது. இதன் அருகில் 'கடம்பன்' என்ற சேவகன் சிலையும் உள்ளது. முன்பு ஆடு வெட்டிப் பலி கொடுத்தனர். இப்போது சைவப் பொருட்கள் படைத்துப் பூசிக்கப்படுகிறது. புரோகிதரே அபிஷேக ஆராதனை செய்து வருகிறார். ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் கோயில் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 68 குடும்பத்தினர் மட்டும் ஒரு வாரம் விரதம் இருந்து காவடி எடுத்து மாவிளக்குப் போட்டு வழிபடுகிறார்கள். இடும்பன் 68 குடும்பத்தினரின் குலதெய்வமாகவும் முருகனின் காவல் தெய்வமாகவும் வீற்றிருக்கின்றார்.

4.3.2.4 ஒண்டி வீரன் வழிபாடு

புதுச்சேரி உருளையன் பேட்டையில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தின் வடபகுதியில் ஒண்டி வீரன் என்ற அய்யனார் கோயில் அமைந்துள்ளது. இவ்வழிபாடு பற்றிப் பொதினி ராஜா ஒரு குறிப்புரை (1998) வெளியிட்டுள்ளார். ஒற்றைக் குதிரை சிலையும், ஒற்றை ஈச்ச மரமும் தான் இந்தக் கோவிலின் தொடக்கக் காலத்தில் இருந்திருக்கின்றன. புயல் மழை வெள்ளத்தில் உடையும் ஏரியை (உசுச்சேரி) உடையாமல் காத்து நின்ற ஒண்டி வீரனைப் பற்றிய செவிவழிக் கதையைக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். குயவர் பாளையம் மக்களுக்குக் குலதெய்வமாக, அய்யனார் வெள்ளந்தாங்கியில் கோவில் கொண்டதைப் போலவே, உருளையன் பேட்டை புதுப்பாளையம் பேட்டையின் சேரி மக்களுக்கும் ஒண்டிவீரன் குல தெய்வமாக இருக்கின்றான்.

4.3.2.5 கருப்பராயன் வழிபாடு

மு. சற்குணவதி கருப்பராயன் வழிபாடு அன்றும் இன்றும் எவ்வாறு இருந்து வருகிறது என்பதைத் தம் கட்டுரையில் விளக்கியுள்ளார் (1998). உடுமலையில் உப்பிலி நாயக்கர் இனமக்களால் கருப்பராயன் குலதெய்வமாக வணங்கப்படுகிறது. கருப்பராயன் என்பவர் உப்பு விளைவிக்கும் தொழிலைக் கற்றுக் கொடுத்து வீரனாகக் காத்து மறைந்தார். இவர்களின் தலைவனான கஜரெட்டி கருப்பராயன் நினைவாகக் கல்நட்டு வழிபட்டார். அந்த வழிபாடே இன்றும் தொடர்ந்து உப்பிலியர் நாயக்கர்களின் வாரிசுகளால் வழிபாடாகத் தொடர்கின்றது. உடுமலையில் அமைந்துள்ள கருப்பராயனுக்கு வைகாசி கடைசிவாரம் ஆனிமாதம் முதல் வாரத்தில் விழா எடுக்கப்படுகின்றது. வருடாவருடம் இருப்பத்திரண்டு ஊர்மக்களிடம் விழாவுக்காக வரி வசூலித்து அமாவாசை முடிந்து பௌர்ணமி தொடங்கும் தினத்திலிருந்து செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாட்கள் விழா நடைபெறுகின்றது. இக்கோயிலில் விநாயகர் சிலையை வைத்துக் கருப்பராயனை விநாயகரின் தந்தையாகவும், சிவனின் அவதாரமாகவும் மாற்றப்படுகின்ற வைதீக மயமாக்கலும் இக்கோயிலில் காணப்படுகின்றது. உப்பிலிய நாயக்கரின் குலதெய்வம் பொதுநிலைத் தெய்வமாக மாறி வருகின்றது. சில

சிறப்புப் பூசைகளுக்குப் பார்ப்பனர் அழைக்கப்படுவதிலும், பிற இன மக்கள் கோவிலுக்குச் சென்று வழிபடுவதாலும் கருப்பராயன் குலதெய்வ நிலையிலிருந்து பொது நிலை தெய்வமாக மாறி வருவதைக் காணலாம்.

4.3.2.6 கறுப்பணசாமி

மு.பாண்டி மாறநாடு கறுப்பணசாமி வழிபாடு - மோதலும் ஒற்றுமையும் என்னும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளார். பசும்பொன் மாவட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ளது மாறநாடு கிராமம். இவ்வூரிலிருந்து அருள்பாலிப்பவர் கறுப்பணசாமி ஆவார். இத்தெய்வம் சில சாதிகளுக்கு வழிபாட்டு முதன்மை பெற்றுள்ளது. இத்தெய்வத்தால் இப்பகுதியில் மோதலிலும் சமூக ஒற்றுமையே நிகழ்கிறது. இக்கட்டுரையின் தொடக்கத்தில் எவ்வாறு தேவேந்திரரின் குலதெய்வமாகக் கறுப்பணசாமி வந்தார் என்ற தோற்ற வரலாறு எடுத்துரைக்கப்படுகின்றது. பின்பு அகம்படியார், பறையர் இக்கோவில் வழிபாட்டில் சில உரிமையும் பங்கும் பெறுவது விளக்கப்படுகின்றது. எனவே, மூவரும் சேர்ந்து வழிபாட்டை நடத்துகின்றார்கள். இக்கறுப்பண சாமி அய்யர் வணங்கியது என்றும், மலையாளத்திலிருந்து வந்ததாகவும் நம்பப்படுகின்றது. இத்தெய்வம் தென்மாவட்டங்களில் நகரத்தார், அகமுடையார், கள்ளர், தேவேந்திரர், பறையர் போன்ற பல சாதியினருக்கும் குல தெய்வமாகத் திகழ்கிறார். தேவேந்திர குலப்பெண்ணால் நிர்மாணிக்கப்பட்டதால் இக்கோயில் உரிமை இவர்களிடம் இருக்கிறது. பெண் வாரிசுக்கு முதல் மரியாதை கொடுக்கப்படுகின்றது. சாமியாடி வீட்டில் திருமணம் செய்யும் ஆண்களுக்குச் சாமி வந்து ஆடுவது வழக்கில் உள்ளது. மாலைகள் விருப்பமான படையல் ஆகும். இராமநாதபுர சேதுபதி மரபினரும் சிவகங்கை மன்னர் மரபினரும் இன்றளவும் இக்கோயிலுக்கு மரியாதை செலுத்துகின்றனர். மாசித் திருவிழா நடைபெறும். சாமியாடி பேய் பிடித்த பெண்களுக்குப் பேய் விரட்டுவார். நேர்த்திக் கடனாக மாலைகள் செலுத்துகின்றார்கள். சுமார் 20,000க்கு மேற்பட்ட மக்கள் கூடி மாசித் திருவிழாவை நிகழ்த்துகிறார்கள்.

4.2.2.7 கசம் காத்த சுவாமி வழிபாடு

சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் தாலுக்காவிற்குள் அடக்கமான வரண்டிய வேல் என்ற கிராமத்தில் எழுந்தருளியுள்ள தெய்வம் கசம் காத்த சுவாமி. இச்சுவாமியின் வழிபாட்டையும் அதன் சமூகப் பின்புலத்தையும் மு.கண்ணன் ஆராய்ந்துள்ளார். வெள்ளைக் குதிரையில் அமர்ந்த நிலையிலிருக்கும் கசம் காத்த சுவாமி, இடையில் கச்சையும் நீளமான வாளையும் கழுத்தில் சிலுவையும் தோளில் மீன்பிடிக்கும் வலையும் தலையில் முக்கோண வடிவத்தில் நீளமான குல்லாயும் அணிந்திருக்கும். இத்தெய்வத்தினை, வரண்டி வேல், புன்னை சாத்தன்குறிச்சி, மேல ஆத்தூர், புன்னக் காயல் ஆகிய நான்கு ஊர்களைச் சேர்ந்த நாடார், பர்னாந்து ஆகிய இரண்டு சமூகத்தாரும் வழிபடுகின்றனர். இத்தெய்வ வழிபாடு ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் முதல் வாரத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இரண்டு சமூகத்தார் இணைந்து வழிபடும் தெய்வமாக இருந்தாலும், உண்மையான வழிபாடு நாடார் களுக்குரியதாக மட்டுமே திகழ்கிறது. இத்தெய்வத்திற்குரிய பூசாரியாகவும், மருளாடியாக இருப்பவர்களும் நாடார் சாதியினர். மூன்று நாட்கள் திருவிழாவில், இரண்டாம் நாளான செவ்வாய்க் கிழமைத் திருவிழாவை 'நிறை கொடை' என்று குறிப்பிடுகின்றனர். இவையில் இறால் மீன் குழம்புப் படையல் வைக்கப்படுகிறது. கருப்புநிறச் செம்மறியாடு பலி கொடுக்கப்படுகின்றது. மறுநாள் பலி ஆட்டுக்கறியைப் பங்கிடுகின்றனர். இத்தெய்வ வழிபாடும் காதல் உறவு - படுகொலை அடிப்படையில் தோன்றியதாகும். கொலை செய்த குடும்பத்தினர் பயந்து பர்னாந்தைத் தெய்வமாக்கி வழிபடுகின்றனர் என்று ஆய்வாளர் விளக்கம் தந்துள்ளார்.

4.3.2.8 சுடலை மாடன் வழிபாடு

சு.சண்முகசுந்தரம் சுடலை மாடன் வழிபாடு பற்றி விரிவாக ஆராய்ந்து ஒரு நூலை வெளியிட்டுள்ளார் (1993). சுடலை மாடன் வழிபாடு பற்றித் தமிழறிஞர்களும் வெளிநாட்டு அறிஞர்களும் கட்டுரைகள் எழுதியுள்ளனர். சுடலை மாடன் வழிபாடு பற்றிய படிநிலைக் கட்டமைப்பைச் சு. சண்முகசுந்தரம் 'கால்கரை' ஊரை மையமாக வைத்து (1995) ஆராய்ந்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள கால்கரை ஊரில் 22.09,94 முதல் 24.09.94 வரை மூன்று நாட்கள் நிகழ்ந்த சுடலை மாடசாமி கொடை விழா மற்றும் சடங்குகளில் அமைந்துள்ள வருணாசிரமக் கட்டமைப்பை ஆராய்ந்துள்ளார். திருநெல்வேலி, குமரி மாவட்டங்களில் பரவலாகப் பல பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதி மக்களால் சுடலைமாடன் வழிபடப்பட்டு வருகின்றான். இவனைப் பேய்த் தெய்வம் அல்லது பேய்களின் தலைவன் என்று கருதி வருகின்றனர். இறந்த முன்னோர்களைச் சுடுகாட்டில் வழிபட்டதால், அவர்களைச் சுடலைசாமி அல்லது மயானசாமி, மசான மூர்த்தி என்று அழைத்திருக்க வேண்டும். மாடுகளைச் செல்வமாகக் கருதுவதற்கு முன்னர் மாட்டைத் தங்கள் குலக்குறியாக எண்ணித் தெய்வமாக வழிபட்டிருக்க வேண்டும். மாடுகளைக் காப்பாற்ற, அவற்றைக் கவர்ந்தவர்களோடு (கரந்தைப் போர் & நடுகல்) போராடி உயிர்விட்டவர்களையும் மாடன் என்று அழைத்து வழிபட்டு இருக்கலாம். சாதிபடிநிலை, இடப்படி நிலை, காலப்படி நிலை, சடங்குப்படிநிலை, கணியான் பங்கு (கூத்து, பேயாட்டம், கைவெட்டு, சுடுகாட்டுப் பூசை, பறையர் பங்கு என்னும் தலைப்புகளில் விளக்கியுள்ளார். 'சுடலைமாடன் ஆரம்பத்தில் திராவிடத் தெய்வம் பிற்காலத்தில் சிவன் சுடலையின் இடத்தைப் பிடித்துக் கொண்டான்' என்ற கே.கே. பிள்ளையின் கருத்தைக் கட்டுரையாளர் ஏற்றுக் கொண்டு விளக்கம் தந்துள்ளார். திருவிழாக்கள் சாதிக்கட்டமைப்பை உடைக்காமல் கட்டிக்காத்து வருகின்றன என்று முடிவு கூறியுள்ளார்.

4.3.2.9 தம்பிரான் வழிபாடு

உடுமலை வட்டாரத்தில் தம்பிரான் வழிபாடு பற்றி இரா. மனோகரன் ஆராய்ந்துள்ளார் (2001). மானுப்பட்டிக் கிராமத்திற்கு அருகிலுள்ள கோவிலில் வணங்கப்படும் தம்பிரான் நாட்டுப்புறத் தெய்வமாகத் தோன்றி ஊர்த் தெய்வமாக உயர்ந்து இன்று பெருமரபு சார்ந்த தெய்வவழிபாடாகச் சிவவழிபாடாக நிலைத்து நிற்கிறது. பெரியபுராணத்திலும் கேரள, கோவில் வழக்காற்றிலும் 'தம்புரான்' என்ற சொல் வழங்கப்படுகின்றது. இக்கோவில் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம். 15

வருடங்களுக்கு முன்பாகத் தவக்கோல சிவனின் உருவ அமைப்புடன் சிலையை வடிவமைத்துள்ளதாகத் தெரிகின்றது. கருப்பசாமி சிலை, கன்னிமார் சிலை, உருவப் பொம்மைகள் இக்கோவிலில் காணப்படுகின்றன. செவ்வாய், வெள்ளி ஆகியவை வழிபாட்டு நாட்கள், கோவில் மரங்களில் குழந்தைப் பேறு வேண்டித் தொட்டில் கட்டி விடுகின்றனர். கோவிலுக்கு எதிர்ப்புறம் மிகப் பெரிய பாறை உள்ளது. பாறையையே இலையாக்கி உணவு படைப்பது சமீப காலம் வரை நடைபெற்று வந்துள்ளது. இத்தெய்வத்தின் வேண்டுதலால் மகப்பேறு அடைந்தவர்கள் தம் குழந்தைகளுக்குத் தம்பு, தம்புராஜ், தம்புசாமி என்று பெயர் சூட்டி நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

4.3.2.10 பெரியாண்டவர் வழிபாடு

தருமபுரி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு வழிபாடுகளில் பெரியாண்டவர் வழிபாடும் ஒன்றாகும். இவ்வழிபாடு குறித்து சு. இராசரத்தினம் ஒரு குறிப்புரை எழுதி வெளியிட்டுள்ளார் (1996). பெரியாண்டவர் வழிபாடு என்பது துரியோதனனுக்கும், அவன் தம்பிகள் 99 பேர்களுக்கும் நடக்கும் வழிபாட்டைக் குறிப்பதாகும். தருமபுரி மாவட்டத்தில் தாதன் குளியலூர் என்னும் ஊரில் உள்ள மக்களும், இதற்கு அருகில் உள்ள மேல் குளியலூர், பருத்தி நத்தம் கிராமத்தைச் சேர்ந்த மக்களும் சேர்ந்து பெரியாண்டவர் விழாவினை ஒரு வயல் வெளியில் நடத்துகின்றனர். வயல்வெளியில் மரத்தடியில் 15 குதிரைகள் மட்டும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. கோயில் எதுவும் கிடையாது. விழாவை ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் கொண்டாடுகின்றனர். சித்திரை மாதம் முதல் நாளிலிருந்து 15 நாட்கள் இவ்விழா நடைபெறுகிறது. முதல் நாளிலிருந்து 15 ஆவது நாள் வரை யாரும் ஊரில் செருப்புடன் நடப்பதில்லை. 14-ஆம் நாள் ஊர் இளைஞர்கள், குறிப்பாகத் திருமணம் ஆகாதவர்கள் கூடுகின்றனர். புதிதாகக் கிணறு தோண்டி ஊற்று நீர் எடுத்துக் கோவில் நிலத்தில் விளைந்த நெல்லைக் குத்தி அரிசியெடுத்துப் பொங்கல் வைத்துப் படைக்கின்றனர். 108 உருவங்களை மண்ணால் செய்து வைத்து வழிபடுகின்றனர். மண்ணால் செய்த குதிரையைப் பூசாரி தூக்கிக் கொண்டு வரும்போது தெருவில் பெண்கள் குப்புறப்படுத்துக்

கொள்கின்றனர். அவர்களின் மீது அவர் நடந்து வருகின்றார். பேய் பிடித்தவர்கள் மேல் சாட்டையால் அடித்துப் பேயை ஓட்டுகின்றார். அன்று இரவில் ‘பதினெட்டாம் போர்’ என்னும் தெருக்கூத்து நடைபெறுகின்றது. தெருக்கூத்தின் இறுதியில் பீமனுக்கும் துரியோதனுக்கும் சண்டை நடக்கின்றது. பீமன் வேடமிட்டவர் துரியோதன் பொம்மை உருவத்தின் வலது தொடையில் அடிக்கிறார். இத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெறுகின்றது.

4.3.2.11 மதுரைவீரன் வழிபாடு

மதுரைவீரன் கதைகளை வெ.ச. திருமாவளவன் எம்.ஃபில் ஆய்விற்கும் நா.நீலமோகன் பிஎச்.டி ஆய்வுக்குரிய பொருளாக எழுபதுகளிலும், எண்பதுகளிலும் எடுத்துக் கொண்டனர். தி.கருப்பையா தொண்ணூறுகளில் மதுரைவீரன் கதைப் பாடலையும், மதுரைவீரன் வழிபாட்டையும் ஒருங்கிணைத்து முனைவர் பட்ட ஆராய்ச்சி நிகழ்த்தினார் (1996). இவ்வாய் வேட்டின் கருதுகோளாக மதுரைவீரன் இடைநிலைத் தெய்வமாக வழிபடப்படுகின்றான் என்பது இவ்வாய்வு களப்பணி தரவுகளால் நிரூபித்துள்ளது. இவ்வாய்வேடு தமிழகத்தில் நாட்டார் வழிபாடு, மதுரைவீரன் சமூகத்தாரும் வழிபாட்டு நிலைகளும், மதுரைவீரன் வழிபாட்டிடங்களும் வழிபடு உருவங்களும், மதுரைவீரன் வழிபாட்டு முறைகள், கலைவடிவங்களில் மதுரைவீரன் என்னும் இயல்களைக் கொண்டுள்ளது. திருச்சிக்குத் தெற்கேயுள்ள எட்டு மாவட்டங்கள் ஆய்வுக்களப் பகுதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. மதுரைவீரன் வீரவழிபாட்டிலிருந்து குலதெய்வமாகி நாட்டுப்புறச் சிறுதெய்வமாக உயர்ந்து, ஊர்ப் பொதுத்தெய்வ நிலையைப்பெற்று, உயர் சாதியினரின் பெருந்தெய்வமாக இல்லாமல் இடைநிலைத் தெய்வமாக விளங்கி வருகின்றான் என்பது இவரது ஆய்வின் முடிவாகும்.

4.3.2.12 வயிரவர் வழிபாடு

வயிரவர் சாமியின் வழிபாடு குறித்து மு. கண்ணன் ஆராய்ந்துள்ளார் (1994). இராசபாளையம் வட்டாரத்தில் வணங்கப்படுகின்ற சிறுதெய்வங்களில் காவல் தெய்வமாக விளங்கும் வயிரவர் என்ற தெய்வத்தை மையப்படுத்தி,

இவ்வட்டாரத்து மக்கள் ஏற்படுத்தும் தாக்கங்களையும், வழிபாட்டு மாற்றங்களையும் விளக்கிக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இராசபாளையம் வட்டாரத்தில் வாழும் அனைத்துச் சாதியினரும் தாங்கள் வழிபடும் முதன்மைத் தெய்வத்திற்குக் காவல் தெய்வமாக வயிரவரை வைத்து வழிபடுகின்றனர். தேவர், நாடார், பள்ளர் ஆகிய மூன்று சாதியினரும் வழிபடுவதற்குரிய காரணங்களை ஆய்வாளர் அறிந்துள்ளார். திருவிழாவில் வயிரவருக்கு வழிபாடு நிகழ்த்துகின்ற போது 'சேவலைக் கழுவேற்றுதல்' நிகழ்ச்சியை நடத்துகின்றனர். மேலும், படையலின் போது முட்டைக் கோழியை அடித்துக் கறியாக்கிப் படையல் செய்கின்றார்கள். இவற்றுடன் சாராயம், சுருட்டு ஆகியனவும் படைக்கின்றனர். பள்ளர் சாதியைச் சேர்ந்த வயிரவன், ஜமீன்தார் மகளுடன் பேசிப் பழகியதால் ஜமீன்தார் தகாத உறவு இருப்பதாகக் கூறி அவனைக் கழுவேற்றிக் கொன்று விடுகின்றார். பள்ளர் இறந்த வயிரவனைத் தெய்வமாக்கி வழிபடுகின்றனர். இதன் நினைவாகச் சேவல் கழுவேற்றப்படுகின்றது. நாடார்களின் குலதெய்வமாகிய காளிக்கு 'வயிரவர்' துணை செய்ததால், காவல் தெய்வமாக வைத்து வணங்குகிறார்கள். இராசபாளையம் வட்டாரத்தில் தேவர்கள் ஜமீன்தார்களாக இருந்தவர்கள். இவர்கள் வயிரவரைக் கொலை செய்ததால், பயத்தின் காரணமாகத் தாங்கள் வழிபடும் தெய்வங்களுக்குக் காவல் தெய்வமாக வயிரவரைக் கொண்டுள்ளனர். பள்ளர் சாதியினர் பற்றிய பழமரபுக் கதையை உருவாக்கிப் பரப்பி விட்டதால், நாடார் மற்றும் தேவர் சாதியினர் வயிரவர் வழிபாட்டை நிறுத்தி வைத்து, வீரபத்திரரை வணங்கு கின்றனர். சேத்தூர் எக்கலா தேவியம்மன் வழிபாட்டில் வயிரவருக் குரிய கழுவேற்றலை நிறுத்தியதோடு, சைவப்படையாலான வடைமாலையைச் சார்த்துகின்றனர். நாயக்கர், கோனார், முதலியார், சாலியர் போன்றோர் எவ்வித மாறுபாடுமின்றி வயிரவர் வழிபாட்டினை நடத்தி வருகின்றனர்.

4.3.3 பெண் தெய்வங்கள்

ஒவ்வொரு வீட்டிலும் தென்மேற்கு மூலையில் பூசை அறை இருக்கும். கன்னி மூலையில் முன்னோர் வழிபாடாகப் பெண் தெய்வத்தை வணங்குவார்கள். இறந்த கன்னிப்பெண்கள்/

பத்தினிப்பெண்கள் தெய்வங்களாக வழிபாடு செய்யப்படு கிறார்கள். தற்கொலையில் / கொலையில் உதித்த பெண் தெய்வங்கள் நிறைய சிறு தெய்வ வழிபாட்டில் காணப்படு கின்றன. இவ்வாறு தோன்றிய தெய்வங்கள் புராணங்களோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. இறுதியில் அவர்கள் பெருந்தெய்வ நிலையை அடைகின்றனர். ஏ.கே.இராமானுஜம் (1986) இத்தகைய தெய்வங்களை 'அல்லவை செய்யும் தெய்வங்கள்' (tooth mother), 'நல்லவை செய்யும் தெய்வங்கள் (breast mother) என்று இருவகைப்படுத்தியுள்ளார். முத்தாரம்மன், மாரியம்மன், காளியம்மன், பத்திரகாளியம்மன், உச்சினி காளியம்மன், தோட்டுக்காரி அம்மன், பூலங்கொண்டாளம்மன், இசக்கியம்மன் போன்ற அம்மன்கள் அச்சத்தினால் வணங்கப்படுபவை. இவ்வம்மன்கள் பழி(லி) வாங்கும் தன்மை கொண்டவை. 'தேவியரில் பெரும்பாலானவை மூர்க்கத் தேவதைகளே, பரட்டத்தலை, கொட்டைவிழி, கோரப்பற்கள் முதலிய அசுர அம்சங்கள் எல்லாத் தேவதைகளுக்கும் பொதுவானவை' என்ற நா.வானமாமலையின் கருத்து இங்கு நினைவுகூரத்தக்கது. இதைப் பெண்ணாதிக்கச் சமூகத்தின் எச்சமாகவும், தாய்த் தெய்வ வழிபாட்டின் செல்வாக்காகவும் கருதலாம். முத்தாரம்மன், குமரி, செல்வி போன்ற தெய்வங்களை மணம் புரிந்து கொள்ளாத தேவியர்களை மக்கள் அச்சத்தோடு வழிபட்டு வருகின்றனர். க. குளத்தூரான் தஞ்சை நகரிலுள்ள சக்தி கோயில்கள் பற்றி ஆராய்ந்து ஒரு நூலை வெளியிட்டுள்ளார் (1994).

4.3.3.1 அங்காளம்மன் வழிபாடு

புதுச்சேரியில் அங்காளம்மன் வழிபாடு பற்றி கோ.அருட்கலை ஆராய்ந்துள்ளார் (1998). ஆய்வாளர் களஆய்வு செய்துள்ள பகுதியில் அங்காளம்மன் ஊர்ப்பொதுத் தெய்வமாக வணங்கப்பட்டு வருகிறது. செம்படவர் எனப்படும் பரதவராச குலமரபினருக்குக் குலதெய்வமாக அமைகின்றது. ஏனென்றால் இக்கோயிலில் வழிபாட்டுச் சடங்குகளையும், திருவிழாவின் போது நீர்கொண்டு வருதல், இரணகளிப்பு நிகழ்ச்சியில் பங்கு கொள்ளுதல் என அனைத்து நிலையிலும் பரதவராசகுல மரபினரே முதன்மை பெற்று எல்லா நிகழ்ச்சிகளையும் நடத்து கின்றனர். இரணகளிப்பு மற்றும் கொள்ளையிடல் நிகழ்ச்சியின்

போது விலங்குகள் பலியிடப்படுவதால், அங்காளம்மன் புராணக் கதையோடு தொடர்புபடுத்தப்பட்டு இருந்தாலும் சிறுதெய்வ மரபுக்குள்ளே அடக்கப்படுகிறது. இவர்களின் புராணக்கதை களின்படி படையாட்சிகளை அழிக்கவே அங்காளம்மன் தோன்றினாள் என்றும், வல்லாளக் கண்டன் முதலிய அரக்கர்களை அழிக்கவே அங்காளம்மன் பரதவகுலத்தில் அவதரித்தாள் என்றும் சொல்லப்படுகிறது. பத்து நாட்கள் நடத்தப்படும் அங்காளம்மன் திருவிழாவில் முதல் நாள், எட்டாம் நாள், ஒன்பதாம் நாள் சடங்குகளை உள்ளடக்கிய சிறப்பு மிக்க திருவிழாவாக அமைகின்றது. எட்டாம் நாள் விழாவில் வல்லாள கண்டியின் (மண்ணால் அமைக்கப்பட்ட மிகப் பெரியதாக கோர வடிவுடன் உள்ள) அரக்க வடிவம் அழிக்கப்படுகிறது. பக்தர்களுக்கு இரத்தச் சோறு வழங்கப் படுகிறது. முதல் நாளும், ஒன்பதாம் நாளும் கொள்ளையிடல் நிகழ்ச்சி நிகழ்த்தப்படுகிறது. தங்கள் நிலத்தின் விளை பொருட்களோடு நாணயங்களையும், கொழுக்கட்டைகளையும் பெருமளவில் வாரியிறைக்கின்றனர். கொள்ளையிடல் நிகழ்ச்சி, அரக்கர்களை அழித்தல் நிகழ்ச்சி, மாசானக் கொள்ளை ஆகியவை இரண்டு சாதியினருக்குள் ஏற்பட்ட மோதலை நினைவுகூர்கின்றது. நோணாங்குப்பம், நல்லவாடு போன்ற ஒரு சில கிராமங்களைத் தவிர, இவ்வழிபாடு புதுவைப்பகுதி முழுமைக்குமாக ஒன்றாகவே நிகழ்த்தப்பட்டு வருகின்றது. பரதவர்க்குரிய குலதெய்வம் அங்காளம்மன் அனைத்து மக்களாலும் வணங்குப்படுகின்ற பொதுத் தெய்வமாக மாறி வருகின்றது.

4.3.3.2 கன்னி வழிபாடு

தமிழகத்தின் தென் பகுதியில் வழக்கிலிருக்கும் ஒரு வகை பெண் தெய்வ வழிபாடே கன்னி வழிபாடு ஆகும். இவ்வழி பாட்டை மானிடவியல் நோக்கில் விளக்கியுள்ளார் கு.கதிரேசன் (1998). பூப்படைந்து திருமணம் ஆகாமல் இறந்த பெண்ணை கன்னித் தெய்வம் என்று சுட்டுகின்றனர். ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுமியரும் இவ்வகையில் அடங்குவர். இது முன்னோர் வழிபாட்டின் ஒரு பிரிவாகும். இந்து சமயத்தைச் சேர்ந்த நாடார், தேவர், கோனார், ஆதிதிராவிடர் உள்ளிட்ட அனைத்து மக்களிடமும் காணப்படுகிறது. வீடுகளில் தென்மேற்கு

மூலையில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் குத்துவிளக்கு தீபம் ஏற்றி பூமாலை அணிவித்து வழிபடுவர். பொங்கல், தீபாவளி, ஆடி இறுதி, சித்திரைப் பிறப்பு, கன்னிப் பெண் நினைவு நாள் ஆகிய நாட்களில் படையலிட்டு வழிபாடு செய்வர். பணியாரம் சுட்டுப் போடுதல் அல்லது படுக்கைப்போடுதல் என்று வழங்குவர். கன்னிப் பெண்கள் பயன்படுத்தும் பொருட்களை ஒரு பெட்டியில் வைத்து வழிபடுவர். ஆண்டு தோறும் அவற்றை மாற்றிப் புதிய பொருள் வாங்கி வைத்து வணங்குவர். கன்னி வழிபாடு என்பது வளமைச் சடங்கு நோக்குடனும், அணங்கு வழிபாட்டுச் சிந்தனையுடனும், குலக்குறி வளர்ச்சி நோக்க முன்னோர் வழிபாட்டுடனும் அமைந்து, அனைத்தும் கலந்த அனிமேட்டிசப் பண்பாட்டை எடுத்தியம்புகிறது.

மு. பாண்டி கன்னிமாரிப் பெண்டு வழிபாடு பற்றி ஆராய்ந்துள்ளார் (1999). சமாதித்தெய்வ வழிபாட்டில் ஒரு கூறாக கன்னிமாரிப் பெண்டு என்னும் வழிபாடு சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டாரத்தில் தேவேந்திர குல வேளாளர் களிடையே வழக்கில் உள்ளது. அநியாயமாக இறந்த பெண்களை இப்பகுதியில் கன்னிமாரிப்பெண்டு என்று சொல்லி வழிபட்டு வருகின்றனர். கன்னிமாரி வழிபாடும், மாரியம்மன் வழிபாடும் இணைந்த ஒன்றாக இத்தெய்வ வழிபாடு அமைகிறது. சில ஊர்களில் 'விடலச்சி' என்று குறிப்பிடுகின்றனர். சப்த கன்னிகள் வழிபாடு என்பது பெருந் தெய்வ நெறியிலிருந்து தோன்றியது. கன்னிமாரிப் பெண்டு வழிபாடு இறந்த குமரிப் பெண்களின் வழிபாட்டோடு தொடர்புடையது. இக்கன்னிமாரிப் பெண்டு கோயில்கள் ஊரின் புறத்தே வயல்வெளிகளில் அமைந்துள்ளன. பெரும்பான்மையாக இறந்து பட்ட இடத்தில் அல்லது அவ்விடத்திற்கு அருகில் இவற்றை அமைத்துள்ளனர். காதோலை, கருகமணி, பயன்படுத்தப்பட்ட ஆடை, அணிகலன்கள் படையலில் இடம்பெறுகின்றன. தாய்த் தெய்வ வழிபாட்டில் ஒரு கூறாகவும், திராவிடச் சிறு மரபு சார்ந்த வழிபாட்டில் ஒரு பிரிவாகவும் உள்ளது.

4.3.3.3 காத்தாயி அம்மன் வழிபாடு

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை சாலையில் காசவளநாடு என்னும் சிற்றூரில் எழுந்தருளியிருக்கும் தெய்வம்

காத்தாயி அம்மனின் வழிபாட்டு முறையை எம்.சுசிலா ஆராய்ந்துள்ளார் (2001). காக்கும் தெய்வம் என்ற பொருளில் காத்தாயி அம்மன் என்று அழைக்கப்படுகிறது. இத்தெய்வத்தைத் தினைப்புனம் காக்க வந்தவள் என்றும், முதலில் மரமாக வைத்துத்தான் வணங்கினர் என்றும், பின்பு தான் இத்தெய்வத்திற்குக் கோயில் அமைத்தனர் என்றும் கூறப்படுகிறது. கள்ளர், கோனார் ஆகிய இருவருக்கும் குலதெய்வமாக வணங்கப்படுகிறது. பள்ளரும் இத்தெய்வத்தை வணங்குகிறார்கள். இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இந்த அம்மனுக்கு ஆடி மாதம் கடைசித் திங்கள் இரவு பதினொரு மணிமுதல் நள்ளிரவு இரண்டு மணிவரை விழா கொண்டாடப்படுகிறது. இந்த ஒரு நாள் விழாவில் பள்ளரின மக்கள் அம்மனுக்கு ஆட்டையும், கோழியையும் பன்றியையும் பலியிடுகின்றனர். இக்கோயிலில் பட்டவன், ஆஞ்சநேயர், கொடிகாத்த சரஸ்வதி, சப்பாணிவீரன் ஆகிய துணைத் தெய்வங்களும் உண்டு. பட்டவன் பள்ளர் இனமக்களுக்கும், சப்பாணிவீரன் பறையர் இனமக்களுக்கும் உரிய குல தெய்வங்களாகும். இந்த ஊர்க் குழந்தைகளுக்கு மரத்தொட்டில் கட்டக்கூடாது. கள்ளர் இனமக்களில் இருபத்தேழு பங்காளிகள் உள்ளனர். அந்தப் பங்காளிகளின் தலைவர் தலையாரி இக்கோயிலை நிர்வகித்து வருகிறார்.

4.3.3.4 சீலக்காரியம்மன்

இன்று பல்வேறு சாதியினரால் தமிழகம் முழுவதும் வழிபடப்பட்டு வரும் சீலக்காரியம்மன் வழிபாட்டை மு.கண்ணன் (1996) ஆராய்ந்துள்ளார். மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வாழும் நாயக்கர், பிள்ளைமார், பள்ளர், சக்கிலியர், பறையர் ஆகிய சாதியினரிடையே ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி, தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் ஏதாவது ஒரு மாதத்தில் விழா எடுத்துக் கொண்டாடுகின்றனர். விழாத் தொடக்கம் வெள்ளிக் கிழமையில் அமைகிறது. மூன்று நாட்கள் நிகழ்கிறது. முதல் நாளில் விளக்குப் பூசையும், இரண்டாம் நாள் மாவிளக்கு எடுத்தல் மற்றும் படையல் செய்தலும், மூன்றாம் நாளில் விளக்குப் பூசை மற்றும் மஞ்சள் நீராட்டுதலும் நடைபெறுகின்றன. இவ்வழிபாட்டில் சக்கிலியர் மட்டும் அசைவ

உணவுகளைப் படைக்கின்றனர். ஏனைய பள்ளர், பிள்ளைமார், பறையர், நாயக்கர் ஆகிய சாதியினர் சைவப் படையல் படைக்கின்றனர். எல்லோரும் பட்டுச்சேலை, காதோலை, கருகமணி, வளையல், கண்மை, பொட்டு ஆகியவற்றை வைத்து வழிபடுகின்றனர். சீலக்காரியம்மன் உருவாக்கப் பின்புலத்தை விளக்கியுள்ளார். நாயக்கர் பெண் சக்கிலிய ஆடவனைக் காதலித்துத் திருமணம் செய்து வாழ முற்படும் பொழுது நாயக்கர் இனத்தார், அவளை எரித்துக் கொன்றிருக்க வேண்டும் அல்லது அவள் தற்கொலை செய்திருக்க வேண்டும். இவ்வாறு இறந்த கன்னிப் பெண்ணைச் சீலக்காரியாக வழிபட்டிருக்கவேண்டும்.

4.3.3.5 சீதாளம்மன் வழிபாடு

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் முத்தையா பிள்ளை மண்டபம் என்னும் ஊரில் மேலத் தெருவில் சீதாளம்மன் உள்ளது. நட்டாற்றில் மிதந்து வந்த மரச்சிற்ப அம்மனை மகிழ மரத்தடியில் வைத்து வணங்கினர். பின்பு கீற்றுக் கொட்டகை அமைத்து வழிபட்டனர். இறுதியில் காரைக் கட்டிடம் கட்டிச் சிறப்பாக விழா எடுக்கின்றனர். கருவறையில் அமர்ந்த நிலையில் அம்மன் காட்சியளிக்கின்றாள். கற்சிற்பத்தால் அம்மன் சிலை உருவாக்கப்பட்டுள்ளது. கோயிலின் இடங்களில் காத்தவராயன், ஆரியமாலா, ஒந்தாயி, சின்னான், முன்னடியான், கள்வடியான், பேச்சியாயி, மதுரை வீரன், வெள்ளையம்மா, பொம்மி, சங்கிலிக் கருப்பன், சுந்தரமாகாளி, நாகக்கன்னி போன்ற தெய்வங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கோவில் கிழக்குத் திசையை நோக்கி உள்ளது. இக்கோயில்களில் சித்திரை மாதம் 15 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. முதல் ஞாயிற்றுக்கிழமை காப்புக்கட்டி, மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை 'செடல் விழா' நடைபெறும். அடுத்து வரும் புதன், வியாழன், வெள்ளி மூன்று நாட்களும் 'காளியாட்டம்' நடைபெறுகிறது.

4.3.3.6 பச்சை வாழியம்மன் வழிபாடு

அரங்க. மு. முருகையன் புதுச்சேரியில் பச்சை வாழியம்மன் வழிபாடு பற்றி ஒரு அறிமுகக் கட்டுரை வெளியிட்டுள்ளார் (1998). பச்சை வாழியம்மன் பெரும்பான்மை வன்னியருக்கும், சிறுபான்மை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் குலதெய்வமாக

விளங்குகிறது. ஊர் பொதுத் தெய்வமாகவும் வணங்கப்படுகிறது. பச்சைவாழியம்மன் கோவில் தோற்றம் பற்றிய கதை, பச்சை வாழியம்மன் பற்றிய புராணக்கதை, வள்ளியின் கதை ஆகிய மூன்று கதைகள் கன்னியர் கோயில் பச்சை வாழியம்மன் கோவில் வழிபாட்டோடு தொடர்புடையன. ஆண்டு தோறும் ஆனி மாதத்தில் மூன்றாவது வாரம் வெள்ளிக் கிழமை இக்கோயிலுக்குக் கொடியேற்றப்படுகிறது. பின்பு பூங்கரகம் எடுத்துச் சிலம்பாடி அம்மனை வழிபடுகிறார்கள். நான்காம் வெள்ளிக் கிழமையில் தீமிதி விழா நடைபெறும். தீமிதிக்கும் சமயத்தில் வேல் ஒன்றினை நட்டு அரிசன மக்கள், ஆட்டினைப் பலி கொடுக்கின்றார்கள். தீமிதி விழாவில் சமபங்கு பெறும் அரிசன மக்கள் கோயிலுக்குள் இன்றளவிலும் அனுமதிக்கப் படுவதில்லை.

4.3.3.7 பெரியாச்சி வழிபாடு

தஞ்சை மாவட்ட நார்த்தேவர் குடிக்காட்டில் வீற்றிருக்கும் பெத்தையன் வழிபாட்டை ஒட்டியே பெரியாச்சி வழிபாடு நடைபெறுகிறது. பெத்தையனுக்கு அக்னிசட்டி எடுப்பவரே இத்தெய்வத்திற்கும் பூசாரியாக உள்ளார். இவ்வழிபாடு பற்றிக் கு. கண்ணன் குறிப்புரை எழுதி வெளியிட்டுள்ளார். பார்ப்பனர்கள் வழிபட்ட அம்மனே பெரியாச்சி. பார்ப்பனருக்கும் கள்ளருக்கும் ஏற்பட்ட சாதிச் சண்டையில் பார்ப்பனர்கள் ஊரை விட்டே ஓடிவிட்டனர் என்றும், பார்ப்பனர்கள் ஏவிய அம்மனைக் கள்ளரின் மக்கள் மந்திரசக்தியால் கட்டுப்படுத்திப் பின்பு தங்களின் தெய்வமாக வணங்கி வருவதாகச் சொல்கிறார்கள். பெரியாச்சிக்குக் கடா பலியிடப்படுகின்றது. அமாவாசை தவிர மற்ற எல்லா நாட்களிலும் பூசை நடைபெறுகிறது. பெரியாச்சிக்குப் 'பெட்டைக் கோழி' பலியிடுதல் பூசைக்கு இன்றியமையாதாகக் கருதப்படுகின்றது. பலியிடப்பட்ட கோழியை அக்கோயிலிலேயே சமைத்துச் சோறு வடித்துக் கருவறையில் 'பள்ளயம்' அமைத்து வழிபாடு செய்யப்படுகின்றது. எந்தவித நற்செயலில் ஈடுபட்டாலும் முதலில் இத்தெய்வத்திற்குப் பூசை செய்யப்படுகின்றது.

4.3.3.8 பெரியாண்டிச்சியம்மன் வழிபாடு

சேலம் மாவட்டத்தின் வட்டாரத் தெய்வமாகத் திகழும் பெரியாண்டிச்சியம்மன் என்னும் பெண் தெய்வம் பற்றி பி.வி. இலட்சுமணன் (1996) ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். இக்கட்டுரை இராசிபுரம் வட்டம் சந்தியூர் என்னும் சிற்றூரில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அமைகிறது. இத்தெய்வம் நன்மை செய்யும் தெய்வமாக - ஊர்க்காவல் தெய்வமாக வழிபாடு செய்யப்படுகின்றது. இத்தெய்வத்தைப் பறையர், சக்கிலியர், போயர், வன்னியர் ஆகிய சாதியினர் வணங்குகின்றனர். சேலம் மாவட்டத்தில் பறையர் இனத்தவர்களுள் கிழக்கத்திய பறையர், கொங்கப் பறையர், கட்டிப்பறையர் என்ற மூன்று பிரிவுகள் உண்டு. இவர்களுள் கிழக்கத்திப்பறையர் மட்டும் தம் குலதெய்வமாக வழிபடுகின்றனர். தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள மேல் மலையனூரிலிருந்து இத்தெய்வம், சேலம் மாவட்டத்தில் குடியேறி மக்களோடு கூடவே வந்துவிட்டது என்று தெய்வத்தின் வரலாற்றை ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அத்தெய்வத்தின் உருவத்தைச் செய்து வைத்து வழிபடுகின்றனர். பெரும்பாலும் இத்தெய்வத்தின் இருப்பிடம் ஏரி, ஆற்றங்கரையோரம், சுடுகாடு போன்ற ஊருக்கு ஒதுக்குப்புறமான இடங்களில் அமைந்துள்ளது. எனவே, ஊர்க்காவல் தெய்வம் அல்லது எல்லைத் தெய்வம் எனச் சுட்டலாம். இத்தெய்வம் 'பிணம் தின்னும்' என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்து வந்துள்ளது. இத்தெய்வத்திற்குப் 'பன்றி' முக்கியமான பலிப் பொருளாகும். பன்றிக் கறியைச் சுட்டும் அதன் இரத்தத்தை வைத்தும் படையல் செய்கிறார்கள். விழாக் கொண்டாடுதலைத் 'தெவம் செய்தல்' என்று குறிப்பிடுகிறார்கள்.

4.3.3.9 மலையேறியம்மன் வழிபாடு

தஞ்சை மாவட்டம் கண்ணந்தாங்குடி கிராமத்திலுள்ள மலையேறியம்மன் தெய்வத்தின் வழிபாடு மற்றும் விழாக்கள் பற்றி சி.சந்திரா விளக்கியுள்ளார் (1995). இத்தெய்வத்தின் சிலை மழை வெள்ளத்தால் அடித்து வரப்பட்டது என்றும், பெரிய ஆலமரத்தை வெட்டுகிற போது மக்களால் கண்டெடுக்கப்

பட்டது என்றும் கூறப்படுகின்றது. அன்னப்பறவை இதன் வாகனமாகும். கோவில் வடதிசை நோக்கி அமைந்துள்ளது. மாசிமாதம் ஒவ்வொரு புதன் கிழமையும் இசைவுத்திருவிழா நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் கடைசி செவ்வாய்க்கிழமை தொடக்க விழா நாளாகும். பத்து வயதுக்குட் பட்ட சிறுமியர்கள் மூன்று நாள் விரதமிருந்து மதுக்குடம் எடுப்பார்கள். சித்திரை மாதம் மூன்றாவது வாரத்தில் காப்புக் கட்டுதல் நடைபெறும். இதில் முக்கியப் பங்கு பெறுபவர் பறையர். வைகாசி முதல் வாரத்தில் திங்கட்கிழமை களவுப் பலியிடுதலும், மதுக்காட்டுதலும் நடு இரவில் நடைபெறும். வைகாசி மாதம் முதல் வியாழக்கிழமை காவடித் திருவிழா நடைபெறும். 22 நாட்களுக்குப் பிறகு முன்பு கட்டப்பட்ட காப்பினை அறுத்துவிட்டுச் சாமி தன் இருப்பிடத்திற்குத் திரும்பும். மதுக்காட்டும் பெண்கள் சட்டை அணியலாம் என்பது இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கமாகும். மது எடுத்தல், மதுக் காட்டுதல், மது வைத்தல் போன்ற நிகழ்ச்சிகளில் பெண்களுக்கு முக்கியப் பங்கு உண்டு.

4.3.3.10 மாசானியம்மன் வழிபாடு

துளசி. இராமசாமி மாசானியம்மனைப் பற்றி ஒரு வரலாற்று ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார் (1998). ஆராய்ச்சி முன்னுரை, ஆய்வு வரலாறு, ஆனைமலை, நன்னனூர், நன்னன் மரபு, நன்னனும் பெண் கொலையும், நாட்டுப்புறத் தெய்வம், தெய்வம் பற்றிய திராவிடர்களின் கொள்கை, மாசானியம்மன் வழிபாடு, தொகுப்புரை, துணை நூற்பட்டியல் என்னும் தலைப்புகளில் ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார். சங்ககாலத்தில் நன்னன் கொலை செய்த பெண்ணுக்கும், மாசானியம்மனுக்கும் ஒரு தொடர்பினைக் காண்கிறார். நன்னனால் கொலை செய்யப்பட்ட பெண் அடக்கம் செய்யப் பட்ட மயான இடமே இன்று கோயிலுள்ள பகுதி. மாங்கனியைத் தின்றதால் (மாங்கனியம்மன்) மாசானியம்மன் என்ற பெயர் வந்தது என்று குறிப்பிட்டுள்ளார். மாசானியம்மன் வழிபாடு நாட்டுப்புற வழிபாட்டைச் சேர்ந்தது. இவ்வழிபாட்டைக் கொடி கட்டுதல், மயானபூசை, குண்டம் வளர்த்தல் என்னும் தலைப்புகளில் விளக்கியுள்ளார். நன்னனால் கொலை செய்யப்பட்ட பெண் தான்

மாசானி என்று முதல் முதலில் ஆராய்ந்து சொன்னவர் அவ்வை துரைசாமிபிள்ளை என்பதை ஆராய்ச்சியாளர் நிறுவியுள்ளார். ஆனால், மாசானியம்மன் ஔவை. சு.துரைசாமிபிள்ளை குறிப்பிடுவது போன்று, கோசர் குடியைச் சேர்ந்தவள் அல்ல. கொங்கு வேளிர் மரபினள், வெள்ளாளக் கவுண்டர் இனத்தைச் சேர்ந்தவள் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

மாசானியம்மன் வரலாறும் வழிபாடும் பற்றிக் கள ஆய்வு அடிப்படையில் மு.சற்குணவதி கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார் (1999). மயான தெய்வமாகத் தோன்றிய மயானியம்மன் பின்பு மாசானியம்மன் என்று மாறியிருக்கலாம். கோவில் திருவிழாவின் போது மயானத்து எலும்பை வைத்தும், மயானத்து மண்ணை எடுத்துமே உருவம் செய்கின்றனர் என்ற வழக்காறு மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகிறது. மாசானியை மகாசயனி என்றும் பிரித்து விளக்கலாம். காரணம் மாசானியம்மன் நீளவாக்கில் கிழக்கு மேற்காகப் படுத்த கோலத்தில் காணப்படுவதாகும். மாசானியம்மன் கோவில் கோவை மாவட்டத்தில் ஆனைமலை என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன் தோன்றியதாகக் கூறப்படுகிறது. நிறைமாதக் கர்ப்பிணியான ஒரு பெண், பிரசவ வேதனையோடு மயானத்தில் படுத்துக் கொள்ளக் குழந்தை பிறந்ததும் அவளும் குழந்தையும் கல்லாக மாறிவிட்டார்கள். கல்லாக மாறிய அவளே மாசானியம்மனாக வழிபடப்படுகிறாள் என்று கதை கூறப்படுகிறது. மாசானியம்மன் நான்கு கைகளையுடைய அம்மனாகப் பார்ப்பதற்குப் பயத்தை ஏற்படுத்துவது போன்று காட்சியளிக்கிறாள். இக்கோயில் உப்பாற்றங்கரையில் அமைந்துள்ளது. இக்கோவிலில் பூசையைச் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பண்டாரம் என்பவரே செய்து வருகிறார். அம்மன் அருகில் உள்ள கல்லில் மிளகாயை அரைத்துப் பூசுபவரின் வேண்டுதல் நிறைவேறும் என்று நம்புகின்றனர். பொருட்களோ, ஆடு, மாடுகளோ எது காணாமல் போய்விட்டாலும் உடனே கல்லில் மிளகாயை அரைத்துத் தடவி விட்டால் தடவிய நாளிலிருந்து அடுத்த வாரம் அதே நாளைக்குள் கிடைத்து விடும் என்று கூறுகின்றனர். இக்கோவில் திருவிழா வருடந்தோறும் மாசி மாதக் கடைசியிலோ சித்திரை மாதம் முதலிலோ நடைபெறுகிறது. கொடியேற்றம், அம்மன் சிலை

ஊர்வலம், கரகம் எடுத்தல், தீ மிதித்தல் போன்றவை நிகழ்கின்றன. ஒயிலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்ற கலைநிகழ்ச்சிகள் திருவிழாவில் இடம் பெறுகின்றன. வெள்ளாளக் கவுண்டர் ஜாதி மக்களுக்கு மாசானியம்மன் குல தெய்வமாக விளங்குகிறது. மாசானியம்மன் பெருந்தெய்வ வழிபாட்டை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறது.

4.3.3.11 மாரியம்மன் வழிபாடு

தமிழகத்தின் பட்டி, தொட்டிகள் மற்றும் நகரங்களிலும் அனைவராலும் வணங்கப்படும் தெய்வம் மாரியம்மனாகும். பல்வேறு பகுதிகளில் மாரியம்மன் வழிபாடு பற்றி முதுகலை எம்.ஃபில் முனைவர் பட்டங்களுக்கு மாணவர்கள் ஆராய்ந்துள்ளார்கள். 1990-இல் என்.இராஜேந்திரன் வலங்கைமான் கோயில் பற்றி ஒரு முதுகலை ஆய்வேடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார். ஆ.சண்முகம் இக்கோயில் பற்றி ஆராய்ச்சி செய்து கட்டுரை வெளியிட்டுள்ளார் (1999). வலங்கைமான் என்னும் ஊர் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்திற்குத் தெற்கே குடமுருட்டி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. அந்தணர் மனைவி பெற்றெடுத்த குழந்தை அம்மை நோயால் இறந்து விட, அந்தக் குழந்தையைப் புதைத்த கோவிந்தம்மாள் குடும்பத்தினர் வழிபட, சமாதித் தெய்வத்திலிருந்து மாரியம்மன் வழிபாடு உருப்பெறுகிறது. பின்பு அமர்ந்த நிலையில் அம்மன் சிலையைச் செய்து வைத்துப் பெருந் தெய்வ நிலையில் உயர்த்திக் கோயில் அமைத்து மண்டபங்களுடன் அழகு செய்து வணங்குகிறார்கள். பேச்சியம்மன், இருளன், மதுரை வீரன் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்கள் துணைத்தெய்வங்களாக வீற்றிருக்கின்றனர். வில்வமரம் மாரியம்மனுக்கு உரிய தலவிருட்சமாகக் கோயிலில் வளர்க்கப்படுகின்றது. நாள்தோறும் மூன்றுகால பூசைகள் மாரியம்மனுக்கு நடைபெறுகின்றன. 1950-ஆம் ஆண்டிற்குப் பின்னரே பெரு மரபு நெறியில் நாள் வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்கோயிலில் ஆண்டுதோறும் ஆவணி, பங்குனி மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பாடைக் காவடியை இக்கோயிலுக்கு நேர்த்திக்கடனாகச் செலுத்து

கின்றார்கள். பாடைக்காவடியில் நாகபாடை, தேர்ப்பாடை, பல்லக்குப் பாடை, கைப்பாடை போன்ற பல வகைகள் நேர்த்திக்கடனாகக் கொண்டு வருகின்றனர். திருவிழா அன்று பாடை கட்டி அதில் நேர்த்திக்கடன் செலுத்துபவரைப் படுக்கவைத்து இறந்தவர் களுக்குச் செய்யும் அனைத்துச் சடங்குகளையும் அவருக்குச் செய்கின்றனர். பின்பு ஒருவர் தீச்சட்டி எடுத்துச் செல்ல நால்வர் பாடைக்காவடியைத் தூக்கி வருவர். பாடைக்காவடி கோயிலைச் சுற்றி வாயிலில் இறங்கியதும் பூசாரியார் பாடையில் படுத்திருப்பவருக்குத் திருநீறு அளிப்பார். பின்னர் அவர் எழுந்து மாரியம்மனை வணங்கிச் செல்வர். ஒவ்வொரு சாதியினரும் அவரவர்க்குரிய முறைப்படி பாடைகட்டி இறப்புச்சடங்கு நிகழ்த்தி நேர்த்திக்கடன் செலுத்துவர்.

ஆண்டுதோறும் பங்குனிமாதம் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை மாலை ஆறு மணியளவில் செடில் சுற்றும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. தோராயமாக முப்பது அடி தடியினை நட்டு அதன் மேல் ஒரு கம்பினைக் குறுக்காகக்கட்டி அதன் ஒரு முனையில் ஒரு ஆட்டினைக்கட்டி மூன்றுமுறை சுற்றுவர். செடில் சுற்றியபின் ஆடு உபயதாரரிடமே கொடுக்கப்படும். ஆட்டைக் கட்டி மும்முறை சுற்றியபின் அதனை இறக்கிவிட்டுச் செட்டியார் பொம்மையைக்கட்டி மறுபடியும் மூன்றுமுறை சுற்றுவர். இந்நிகழ்ச்சி அம்மன் கோயில் முன்பாக நடைபெறும். செடில் சுற்றுவதைக் காண்பதற்கு ஏராளமான மக்கள் கூடுவர். மாரியம்மன் பக்தர் செட்டியார் ஒருவர் உயிருடனேயே செடில் சுற்றியதாகவும் கூறப்படுகிறது. அவரின் நினைவாக இக்காலத்தில் செட்டியார் பொம்மையைச் சுற்றுகிறார்கள். எட்டாம் நாள் திருவிழா முடிந்தபின் அன்று மக்கள் அனைவரும் மீன் வாங்கிச் சமைத்து உண்பர். இந்நாளை மீன் திருநாள் என்று அழைப்பர். இக்கோயிலில் உள்ள வில்வமரத்தில் கன்னிப் பெண்கள் மஞ்சள் கயிற்றினால் கட்டினால் திருமணம் நடக்கும் என்று நம்புகின்றனர். வன்னியர் சமூகத்தைச் சார்ந்த ஒரு குடும்பத்தினருக்குச் சொந்தமாக விளங்கிய மாரியம்மன் கோவில் 1968-ஆம் ஆண்டு முதல் அரசு நிர்வாகத்தின் கீழ் வந்துவிட்டது. இருப்பினும், வன்னியர் சாதியைச் சேர்ந்தவரே பூசாரியாக இருக்கிறார். வரலாற்றுக் கதையில் கூறப்படும் அந்தணர் குழந்தை

வன்னியர் குழந்தையாக இருந்திருக்க வேண்டும். மாரியம்மனைப் பொதுத் தெய்வமாக்கி மேனிலையாக்கம் செய்வதற்காக அந்தணக் குழந்தை என்று புனையப்பட்டிருக்கலாம். வலங்கை மாரியம்மன் சிறுதெய்வ மரபிலிருந்து பெருமரபை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் இடைநிலைப்பட்ட தெய்வம் என்று கூறலாம்.

தே.ஞானசேகரன் மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டி, திருமங்கலம், ஆண்டிப்பட்டி வட்டாரங்களில் மாரியம்மன் வழிபாட்டை விளக்கியுள்ளார் (1999). மாரியம்மன் வழிபாடு கோடைகாலமாகிய பங்குனி, சித்திரை மாதங்களில் பெரும்பாலும் நடைபெறும். கரகம் எடுத்தல், முளைப்பாலிகை எடுத்தல், பாவனை நடனம், பயிர் வளம் மற்றும், குலம் தழைக்க வேண்டுதல், தீச்சட்டி எடுத்தல் ஆகிய தலைப்புகளில் வழிபாட்டுச் சடங்குகளை விளக்கியுள்ளார். புதிய மண்கலயத்தால் அல்லது பித்தளைச் செம்பினால் கரகம் அலங்கரிக்கப்படுகிறது. அம்மனின் முகம் மஞ்சளால் அல்லது உலோகத்தாலான அம்மன் முகத்தால் இணைக்கப்படுகிறது. பின்பு கண் திறக்கப்பட்டுப் பூசாரி தலையில் வைத்துக் கோயிலுக்குக் கொண்டு வரப்படுகிறது. விழா முடிந்த பின் அந்தக் கரகம் நீர்நிலையில் அல்லது கிணற்றில் மூழ்கடிக்கப்படுகிறது. நீர் உள்ள கரகம் அம்மனாக வணங்கப்படுகிறது. கரகத்தோடு முளைப்பாலிகை எடுத்து வருவதும் உண்டு. முளைப்பாலிகையும், கும்மியும் மழையை வேண்டும் பாவனை நடனமாகும். இதனை வளமைச் சடங்கின் அம்சமாகக் கருதலாம். அம்மனுக்கு உரிய முக்கியமான நேர்த்திக்கடன் தீச்சட்டி அல்லது அக்கினிச்சட்டி எடுத்தலாகும். தீச்சட்டி எடுத்து வருபவர் மீது மஞ்சள் நீரை ஊற்றிக் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவர். தீச்சட்டி எடுப்பவர்களுடன் சிறுவர்களும், இளைஞர்களும் புலிவேடம், சேத்தாண்டி வேடம் ஆகிய வேடமிட்டும், கரும்புள்ளி, செம்புள்ளி முகத்திலும், உடம்பிலும் போட்டுக் கொண்டும் ஆடி வருவர். உடம்பில் ஊசிகளைக் குத்திக் கொள்வதும் நேர்த்திக்கடனில் ஒன்றாகும். தீச்சட்டி எடுத்தல் அம்மனின் சினத்தைத் தணிப்பதற்காக மேற்கொள்ளப்படும் சடங்காக அமைகிறது என்று ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

புதுக்கோட்டை நகரினை ஒட்டி அமைந்திருக்கும் திருவப்பூர் கிராமத்தில் வீற்றிருக்கும் முத்துமாரியம்மனின்

வழிபாட்டைப் பற்றி மு.பழனியப்பன் விளக்கியுள்ளார் (1999). இந்தக் கிராம தேவதைக்கு ஆண்டு தோறும் பூச்சொரிதல் விழா, மாசிப் பெருந்திருவிழா என்ற இரு திருவிழாக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இது நாட்டு வலையர் என்று அழைக்கப்படும் முத்துராஜா இனத்தைச் சேர்ந்தவருக்குரிய குலதெய்வமாகும். பூப்பலி செலுத்துதல் பழங்காலத்திலிருந்து வரும் பழக்கமாகும். அதுவே இன்று பூச்சொரிதல் விழாவாக நடைபெறுகிறது. பச்சை ஓலையால் தொட்டில் கட்டி அதில் செலுத்தப்பட்ட பூக்களைக் கொண்டு மூலஸ்தானத்து அம்மன் மலர்க்குவியலில் நின்று காட்சி தருவதாக அலங்கரிக்கப் படுகின்றார். பூசை முடிந்த பின் பூப்பிரசாதம் வழங்கப்படுகின்றது. அன்று மதியம் மாடுபிடி விழா நிகழ்ச்சியும் ஊர் மக்களால் நடத்தப்படுகிறது. பூச்சொரிதல் விழா முடிந்தபின் ஏழாம் நாள் மாசித் திருவிழாவிற்குக் காப்புக் கட்டப் பெறுகின்றது. பதினைந்தாம் நாளில் காப்பு அவிழ்க்கப்படும். எல்லா இனத்தவருக்கும் பதினான்கு மண்டகப்படிகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எல்லாச் சாதியார்களும் ஏற்றத் தாழ்வின்றி வழிபடுவதற்கு மாரியம்மன் பொதுநிலைத் தெய்வமாகத் திகழ்கின்றது. அதே சமயத்தில் சாதி அமைப்பு நிரந்தரமாக வேரூன்றிக் கொள்வதற்கும் மாரியம்மன் வழிபாடு துணை போகின்றது. கு.ஜோஸ்பின் கலா மாரியம்மன் ஓர் இடைநிலைத் தெய்வம் என்று ஆராய்ந்து கூறியுள்ளார் (1992).

4.3.3.12 மைலார் அம்மன் வழிபாடு

புதுவை இலாசுப்பேட்டை வண்ணார் காலனியில் நிகழ்த்தப்பெறும் மைலார் வழிபாட்டை அ.தத்தை பழனி விளக்கியுள்ளார் (1999). தை அமாவாசை முடிந்து 7,9,11 ஆகிய நாட்களில் ஒரு நாளில் இந்த வழிபாட்டை நிகழ்த்துகிறார்கள். இது ஏகாலி எனப்படும் வண்ணாரின் குலதெய்வமாக வணங்கப்படுகிறது. மயில் போன்று உருவம் கொண்டு தனது இறகால் குழந்தையை அணைத்துக் காத்ததால் இவ்வம்மனை மைலாரம்மன் என அழைக்கிறார்கள். துறையருகில் கரும்பால் பந்தலிடுகிறார்கள். பந்தலில் மைலாரம்மனையும், ஏழு கன்னிமாரையும் நிலைநிறுத்துவர். முக்கியக் கடவுளாக மைலாரம்மனைக் களிமண்ணால் பிடித்து வைக்கின்றனர்.

மைலாரம்மனுக்கு நேராகப் பந்தலுக்கு வெளியே மதுரை வீரன் சாமிக்குப் பலிபீடம் அமைக்கப்படுகிறது. பந்தலில் உள்ள அம்மனுக்கும் கன்னிமாருக்கும் சைவப்பொருட்கள் படைக்கின்றார்கள். மதுரை வீரனுக்கு ஆடு, கோழி, பன்றி ஆகியவற்றையும் பலி கொடுக்கின்றார்கள். மைலாரம்மன் வழிபாட்டிலும் மேல்நிலையாக்கம் காணப்படுகிறது. மைலாரம்மன் உமையவளின் மற்றொரு அவதாரமாகக் கூறப் படுகிறது. மைலாரம்மன் தோற்றக்கதையில் மேல்குடி மற்றும் கீழ்க்குடி மக்களுக்குமிடையே இருந்து வந்த போராட்டம் தெரிகிறது. மைலாரம்மன் வழிபாட்டில் முருக வழிபாட்டுக் கூறுகள் ஒத்துக் காணப்படுகின்றன. கரும்பால் பந்தலிடுதல், முருகனின் வேலினை நினைவூட்டுகிறது. மைலாரம்மன் சடங்கு முறைகள் வேலன் வெறியாடல் நிகழ்ச்சியை நினைவுபடுத்துகின்றன.

4.3.3.13 திரௌபதியம்மன் வழிபாடு

வட தமிழகத்தில் திரௌபதியம்மன் வழிபாடு மிகவும் புகழ் பெற்றது. இதைப்பற்றி ஆராய்ந்து ஆங்கிலத்தில் இரண்டு தொகுதிகளில் நூல் வெளிவந்துள்ளது. தமிழகத்தில் திரௌபதியம்மன் வழிபாடு பற்றித் துளசி. இராமசாமி கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். இவ்வழிபாட்டைப் பற்றி உலக. வீரப்பன் ஆராய்ந்து கட்டுரைகளும்(1998), நூலும்(2001) வெளியிட்டுள்ளார். இவர் புதுவையிலுள்ள பிள்ளைச் சாவடி என்னும் சிற்றூரில் அமைந்துள்ள திரௌபதியம்மன் வழிபாட்டைப் பற்றி ஆராய்ந்துள்ளார். இது மிகப் பெரிய கோயிலாகவும், பழமையான கோயிலாகவும் காணப்படுகிறது. 108 ஆண்டுகளாக அம்மனுக்கு ஒன்பது நாட்கள் திருவிழா நடத்தி வருகின்றனர். பொதுவாகச் சித்திரைத் திங்களில் அமாவாசைக்குப் பிறகு வளர்பிறை நாளில் திருவிழா தொடங்கலாம் என்று குறிக்கப்படுகிறது. முக்கியமாக ஆறாம் நாள் திருவிழாவினை தீ மிதி விழா வெள்ளிக்கிழமை வருமாறு அமைக்கப்படுகிறது. முதல் நாளில் கொடி கட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. தினமும் பகற்பொழுதில் திரௌபதியம்மன் தொடர்பான, பாரதக் கதைப் பாடலும், உடுக்கையுடன் பாடப்படும். பிற பாடலும் இடம் பெறுகின்றது. அதன்பின்

எட்டு நாட்களுக்குத் தினமும் அம்மன் திருவீதியுலா கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறுகின்றது. தினமும் மகாபாரதக் கூத்து நிகழ்ச்சிகள் இரவில் நடத்தப்பட்டு மக்களுக்குக் கதை நிகழ்வின் மூலம் மகாபாரம் உணர்த்தப் பெறுகின்றது. இவ்வொன்பது நாட்கள் நடைபெறும் திருவிழாவில் தீமிதித் திருவிழா மிகச் சிறப்புடையதாகும். தீமிதித் திருவிழாவான ஆறாம் விழாவில் 1. திருக்கல்யாணம், 2. பூந்தோட்டம் அமைத்தல், 3 அரவான் களப்பலி அமைத்தல், 4. பக்காச் சூரனுக்குச் சோறு படைத்தல், 5. தீ மூட்டுதல், 6. தீயில் இறங்குதல், 7. முடிசூட்டுதல் (பட்டாபிஷேகம்) ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. திரௌபதியம்மன் விழாவின் முக்கிய செய்தியாக அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டியதாகத் தீமிதி விழா நடத்தப்பட்டு வருகின்றது.

4.3.3.14 நாடியம்மன் வழிபாடு

ஆடிமாதத்தில் நாடியம்மன் வழிபாடு என்னும் கட்டுரையை வெளியிட்டுள்ளார் வெ.அஞ்சலிதேவி (2001). புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டத்தில் சேகரித்த தரவுகளின் அடிப்படையில் நாடியம்மன் வழிபாடு ஆராயப்படுகிறது. குறிப்பாக ஆலங்குடி கிராம மக்களின் உயிர் நாடியாகத் திகழும் நாடியம்மனைப்பற்றி விளக்கியுள்ளார். நாடியோர்க்கு நல்லதே அளிக்கும் என்னும் பொருளில் நாடியம்மன் என்ற பெயர் விளக்கப்படுகிறது. ஆடிமாதம் இந்த அம்மனுக்கு உகந்த மாதமாகும். இந்த நாடியம்மனின் கதை அக்காள் தங்கைக் கதையோடு இணைத்துக் கூறப்படுவதால் அக்கா பெரிய நாடியம்மன் என்றும், தங்கை சின்ன நாடியம்மன் என்றும் கூறுகின்றனர். அக்காள் ஆலங்குடி மத்தியில் வடகாடு முச்சந்தியிலும், தங்கை சின்ன நாடியம்மன் கீழாத்தூரிலும் அருள் பாலிக்கின்றனர். பெரிய நாடியம்மன் கோவில் இருநூறு ஆண்டுக்கால பழமையுடையது. ஆடிமாதம் கடைசிச் செவ்வாய் விழாக் கொண்டாடப்படுகிறது. முளைப்பாரி போடுதல், எசவுக்குடம் எடுத்தல், மதுக்குடம் தூக்குதல் இக்கோயிலின் வழிபாட்டு முறைகளில் அடங்கும். இக்கோயிலின் வழியாகச்

செல்லும் வாகனங்கள் கட்டிடப் பொருள்களைக் கொண்டு சென்றால் மூன்று அல்லது ஐந்து கற்களைக் காணிக்கையாக இறங்கிச் செலுத்திவிட்டுச் செல்கின்றனர். நாடியம்மனை வணங்குவதின் நோக்கம் மழைவளம் வேண்டுதலேயாகும்.

4.4 முடிவுரை

நாட்டுப்புற வாழ்க்கையில் மையமான இடத்தைப் பெறுவது பண்பாடாகும். பண்பாடு என்னும் களஞ்சியத்திற்குள் அடங்காத பொருள்களே இல்லை. மானிடவியலார் இலக்கியம், கலைகளைக்கூட பண்பாட்டின் வெளிப்பாடுகளாக விளக்கு கின்றனர். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நூல்கள் மற்றும் கட்டுரைகளிலிருந்து நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் என்னும் மூன்று பெருந்தலைப்புகளின் கீழ் ஆராயப் பட்டுள்ளன. இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. மேலும், இந்த மூன்று பண்பாட்டு அம்சங்களும் கதைப்பாடல், கோலம், ஓவியம், விளையாட்டு, கூத்து போன்றவற்றோடும் நெருங்கிய உறவுடையன. கிராமத்தில் பல்வேறு சாதியினரும், உறுப்பினர்களும், நிறுவனங்களும் ஒன்றையொன்று சார்ந்து பிரிக்க முடியாத கூட்டமைப்பாக இருப்பதைப் போல பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று சார்ந்தும், இயைந்தும் உள்ளன. எனவே தான் பலரும் அமைப்பியல் அணுகுமுறையைப் பின்பற்றுவதைக் காணலாம். பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான திருவிழா, விரதம் அல்லது நோன்பு போன்ற பல கூறுகள் பற்றி விளக்கப்பட வில்லை. இவை சடங்கு அல்லது வழிபாடு ஆகியவற்றோடு தொடர்பு கொண்டிருந்தாலும் இவற்றைத் தனியாக ஆராய்வதற்கு இடமுண்டு.

5. நிறைவுரை

5.0 முன்னுரை

இவ்வாய்வில் நாட்டுப்புறவியலின் ஆய்வு வரலாறு குறித்து ஒரு முன்னோட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தனித்த நூல்கள், ஆய்வுக் கோவைகள் மற்றும் தமிழியல் ஆய்வு நூல்கள் ஆகிய நூல்களில் வெளிவந்துள்ள கட்டுரைகள், பல்கலைக்கழகப் பட்டங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடுகள் மற்றும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட நூல்கள் ஆகியனவற்றை வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. காலச்சுருக்கம் மற்றும் நூலின் பக்கவரையறை கருதி ஆங்கிலக் கட்டுரைகள் இவ்வாய்வில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவ்வாய்வு நூலை விரிவாக்கம் செய்யும்போது அவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். வெகுசன இதழ்களில் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்களில் நாட்டுப்புறச் செல்வாக்குப் பற்றி ஆராய்வதற்குக் கால அவகாசம் இல்லை. மக்கள் ஊடகங்களில் நாட்டுப்புறத் தாக்கம் எவ்வாறு இருந்தது என்று ஆராயலாம். சு.சக்திவேல் நாட்டுப்புறவியல் நூலடைவு என்னும் நூலை ஏப்ரல் 1988-இல் வெளியிட்டார். 1987 வரைக்கும் வந்துள்ள தமிழ், ஆங்கில நூல்கள் மற்றும் கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டாலும் 1988 முதல் 2002 வரையுள்ள நூல்களையும் ஆய்வேடுகளையும் கட்டுரைகளையும் தரவுகளாக எடுத்துக் கொண்டுள்ளேன். அதாவது, தொண்ணூறுக்கு முற்பட்ட 1988, 1989, 2000 ஆம் ஆண்டுகளில் வெளி வந்துள்ளவை, 2001 மற்றும் 2002 ஆண்டுகளில் வெளியிடப்பட்டவையும் கவனத்திற்குள்ளாக்கப் பட்டுள்ளன. இவற்றைத் தொகுத்து வகுத்துப் பார்க்கும்போது கிடைத்த செய்திகள் மேலும் சில இவ்வியலில் தரப்படுகின்றன.

5.1 சேகரிப்பும் பதிப்பும்

உலக நாடுகள் இன்று 'வாய்மொழி வரலாற்றைப்' பதிவு செய்யும் வகையில் ஆண்டுதோறும் உலக வாய்மொழி வரலாறு சர்வதேசக் கருத்தரங்கை நிகழ்த்தி வருகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட மனித வரலாற்றையும் மரபுகளையும் அறிந்து கொள்ளவும், இக்கால வரலாற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் வாய்மொழிகள் சிறந்த ஆவணங்களாகும். இவ்வகையில் வாய்மொழி வரலாறுகள் புதிய முயற்சியாக வெளி வருகின்றன. மக்களின் பேச்சுவழக்கிலே அப்படியே கதைகளும், பாடல்களும், வழிபாடுகளும் பதிவு செய்யப்படுகின்றன. வாய்மொழி வரலாறு (2001), நாட்டார் சாமிகள் (2002) என்னும் சமீபத்திய தன்னனானேயின் வெளியீடுகள் சேகரித்துப் பதிவு செய்வதில் புதிய போக்கினைக் காட்டுவன. 'விடுதலையின் வேர்கள்' என்னும் நூலும் (1998) வாய்மொழி வரலாற்று ஆதாரங்களை முழுமையான இந்திய விடுதலை வரலாற்றை எழுதத் திரட்டித் தருகின்றது. நாட்டுப்புறவியலின் பல்வேறு பகுதிகள் பல்வேறு பட்டங்களுக்காகத் திரட்டப்பட்டாலும் அவை ஆய்வேட்டில் தூங்குகின்றனவே தவிர, அவை அச்சு வடிவம் பெற்று அனைவருக்கும் பயன்படும் வகையில் நூலாக வெளிவரவில்லை.

5.2 பெண்ணியமும் நாட்டுப்புறவியலும்

எண்பதுகளில் தமிழ் இலக்கிய உலகில் 'பெண்ணியம்' உரத்தக் குரலில் பேசப்பட்டது. தமிழ்க்கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் பெண்ணியக்கோணத்திலே படைக்கப் பட்டன; ஆராயப்பட்டன. பெண்ணிய நோக்கில் தொண்ணூறுகளில் நாட்டுப்புறக் கதைகள் ஆராயப்பட்டன. சரஸ்வதி வேணுகோபால் வாய்மொழி இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள் (1994) வே. சசிகலாவின் நாட்டுப்புறக் கதைகள் - பெண்ணியப்பார்வை (1997) என்னும் கட்டுரைகளின் மூலம் நாட்டுப்புற வழக்காறுகளைப் பெண்ணியப் பார்வையில் மறுவாசிப்பு செய்யவேண்டிய நோக்கத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். சரஸ்வதி வேணுகோபால் கதைவடிவில் (Narrative) பாலின வேறுபாடு எவ்வாறு அமைந்துள்ளது

என்பதைக் காண இரண்டு தேசியக் கருத்தரங்குகள் (1999 & 2000) நடத்தினார். அபிச்சை தமிழ்க் கதைப்பாடலில் பாலினத்தன்மை / பெண்ணாதிக்கம் பற்றிக் கட்டுரை அளித்துள்ளார். இந்திய மொழி அறிஞர்கள் தத்தம் மொழிகளிலுள்ள கதைப்பாடல்கள், கதைகள், பழமொழிகள், காவியங்கள் ஆகியவற்றில் ஆணாதிக்கமும் பெண்ணடிமை நிலையும் பதிவு செய்யப்பட்டுள்ள பாங்கினை ஆராய்ந்தனர். வே.ச.சசிகலா 'நாட்டுப்புறக்கதைகள் - பெண்ணியப் பார்வை, நிர்மலா ராணியின் பழமொழிகளில் உகந்த நிலைப் பண்பாடு என்னும் கட்டுரைகள் இக்கோணத்தில் எழுதி வெளியிடப்பட்ட கட்டுரைகளாகும்.

5.3 தலித்தியமும் நாட்டுப்புறவியலும்

தலித்தியக் காற்று மராட்டி - கன்னடத்தின் வழியாகத் தமிழகத்தில் வீசத் தொடங்கியது. சுபமங்களா, நிறப்பிரிகை போன்ற இதழ்கள் இக்காலச் சமகாலத் தமிழ் இலக்கியத்தில் தலித்தியக் குரலை ஓங்கி ஒலிக்கச் சுருதி ஏற்றின. தலித்தியப் புதுக்கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் எழுதப்பட்டன; விமர்சனங்கள் எழுந்தன. இதனின் தாக்கத்தை நாட்டுப்புறவியல் ஆய்விலும் காணலாம். இ.முத்தையா தலித்திய நோக்கில் நூலும் கட்டுரைகளும் வெளியிட்டுள்ளார். நாட்டுப்புற அழகியல் - எதிர் அழகியல் குறித்த சிந்தனைகள் (1995), நாட்டார் பண்பாட்டு மரபு - மாற்று மரபு (1998), ஆதிக்கத்திற்கு எதிரான அடித்தள மக்களின் கதைப்பாடல்கள் (1999) ஆகிய கட்டுரைகள் இக்கோணத்தில் சிந்தித்து எழுதப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரை களாகும். 21-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தலித்திய நோக்கில் நாட்டுப்புறவியல் மறுபரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன. வாய்மொழி வரலாறுகளும் இப்பார்வையில் விளக்கப்படுகின்றன. மு.கண்ணனின் கட்டுரைகள் இத்தகைய ஆய்வை முன்னிலைப்படுத்துகின்றன. இவருடைய 'சிறுதெய்வ உருவாக்க வழிபாட்டில் தலித்துக்களின் நிலை' (1995) முதலிய கட்டுரைகள் நினைக்கத் தக்கவை. ஆ.சண்முகம்பிள்ளை நாட்டுப்புற இலக்கியத்தைத் தலித்தியப் பார்வையோடு ஆராய்ந்துள்ளார் (1995).

5.4 வட்டாரம் சார்ந்த ஆய்வுகள்

கோவை பாரதியார், திருச்சி பாரதிதாசன், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார், கொடைக்கானல் தெரசா, காரைக்குடி அழகப்பா, புதுவைப் பல்கலைக்கழகம், கோவை அவினாசிலிங்கம் ஆகிய பல்கலைக்கழகங்கள் முதுகலைப் படிப்பிற்கு ஆய்வுத் திட்டம் (Project work) என்பதைப் பாடப்பிரிவுக்குள் கொண்டு வந்தன. எம்.ஃபில் படிப்பின் ஒரு பகுதியாக அமையும் ஆய்வேட்டிற்கும் முனைவர் பட்டத்திற்கும் ஆய்வுப்பொருளாக நாட்டுப்புற வழக்காறுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றை மதிப்பிட வேண்டுமானால் ஒருவர் ஐந்தாண்டுக் காலத்திற்கு முனைவர் பட்ட ஆராய்ச்சிக்குரிய ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டால் மட்டும் சாத்தியமாகும். அந்தளவிற்குப் பல்கலைக்கழகத் தேர்வாளர் அலுவலகத்திலும் / பல்கலைக்கழக நூலகத்திலும் முதுகலைத் தமிழ்த் துறைகளிலும் ஆய்வேடுகள் குவிந்துள்ளன.

5.5. சாதி சமூகம் சார்ந்த ஆய்வுகள்

நாட்டுப்புறவியல் ஆய்வைச் சாதி/இனம் ஆகியவற்றிலிருந்து பிரித்துக் காண இயலாது. கள்ளர், பள்ளர், பறையர், வேளாளர், கணியான், இருளர் போன்ற சாதியினர்கள் குறித்த ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. குறிப்பாக இவர்களின் சடங்கு முறைகள், சாமி வழிபாடுகள் ஆராயப் பட்டுள்ளன. கள்ளர் வரலாறு, அருந்ததியர் வரலாறு, நகரத்தார் கலைக்களஞ்சியம் ஆகிய நூல்கள் இவ்வினத்தாரின் நாட்டுப்புற வழக்காறுகளைப் பற்றிய தகவல்களை நமக்கு அளிக்கின்றன. நடன. காசிநாதன் வன்னிய வரலாற்றைத் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து முழுமையான நூலை வெளியிட்டுள்ளார். இதன் அடிப்படையில் இக்கால நாட்டுப்புற வழக்காறுகளை ஒப்பிட்டு ஆராயலாம். அகமுடையார், செங்குந்தர், பாளையக்காரர், முசுகுந்தர் வேளாளர், சௌராஷ்டிரர் போன்றோரின் திருமணச் சடங்குகளைப் பற்றிக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. லம்பாடிகளின் பாட்டும் பண்பாடும் குடும்ப உறவுகளும் (1995), வன்னியச் சாதிப் பிள்ளைகளின் வாய்மொழி வரலாறு (2000) ஆகிய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவை.

5.6 தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம்

வி.ஐ. சுப்பிரமணியனின் தூண்டுதலால் ஊக்கமூட்டுதலால் தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம் (FOSSIL) தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் தொடங்கப்பட்டது. தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களின்/ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆதரவோடு ஆண்டு தோறும் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப் படுகின்றது. இதில் தமிழக நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கட்டுரைகள் ஆங்கிலத்தில் வழங்குகின்றனர். FOSSIL என்னும் பெயரில் செய்தி மடலை வெளியிட்டு வருகின்றது. இதில் தமிழ் நாட்டுப்புறவியல் தொடர்பான செய்திகள் பதிவுசெய்யப் படுகின்றன; மற்றவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

5.7 காவ்யாவும் தன்னனானேயும்

சு.சண்முகசுந்தரம் தனது பதிப்பகமான காவ்யா மூலம் தமது நாட்டுப்புற நூல்களையும் பிறரின் நூல்களையும் வெளியிட்டு வருகின்றார். இவற்றில் நிறைவடையாத அவர் 'தன்னனானே' என்னும் அரையாண்டு இதழை வெளியிட்டு வருகின்றார். இதுவரைக்கும் (2001) 16-க்கு மேற்பட்ட தொகுதிகளை வெளியிட்டுள்ளார். நாட்டுப்புறக்கூறு அடிப்படையில் கதைப்பாடல் சிறப்பிதழ் (6&7. ஜன 1997) விளையாட்டுச் சிறப்பிதழ் (4&5 ஆக 1996) நாட்டுப்புற மருத்துவச் சிறப்பிதழ் ஆகியவற்றையும், மாவட்ட / மண்டல அடிப்படையில் கொங்குவட்டாரம் (மே,2001), நெல்லை மாவட்டம் (மே,2000), குமரி மாவட்டம் (டிசம்பர் 2001) சென்னை மாவட்டம் (மே, 2001) புதுவை வட்டாரம் ஆகியவற்றைப் பற்றிய சிறப்பிதழ்களையும் வெளியிட்டுள்ளார். தமிழ் மக்களிடையே - ஆய்வாளர்களிடையே போதுமான ஆக்கமும் ஊக்கமும் இல்லாததால் சரியான காலத்தில் இவ்விதழைக் கொண்டு வர முடியவில்லை என்று தெரிகிறது. இந்த இதழ்களில் தொகுப்பும் ஆய்வும், ஆய்வறிக்கைகளும் நூலறிமுகமும், நாட்டுப்புறக் கருத்தரங்கு பற்றிய செய்தியும் அறிக்கையும், ஆய்வேடுகள் பற்றிய அட்டவணைகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் படிக்காத நாட்டுப்புற ஆய்வாளரின் ஆய்வு முழுமை அடையாது என்று சொல்லுமளவிற்கு நிறைய செய்திகளையும் சிந்தனைகளையும் ஆய்வாளர்களுக்கு ஒரு குடையின் கீழ் தொகுத்துத் தருகின்றது.

5.8 சிறுவர் நாட்டுப்புறவியல்

பள்ளிக்கல்விப் பாடத்திட்டம் தொடங்கிய போது இந்திய மொழிகள் அனைத்திலும் அந்தந்த மொழிகளில் வழங்கப்படும் கதைகள், பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் திரட்டப்பட்டுப் பாடப்பகுதியாயின. சிறுவர்களின் பாடல்கள், விளையாட்டுகள், கதைகள் ஆகியவற்றைத் திரட்டி ஆராயும் போக்கு எண்பதில் தோன்றித் தொண்ணூறுகளில் வளர்ந்துள்ளது. திருநெல்வேலி நாட்டார் வழக்காற்று மையம் ஓர் ஆண்டில் அனைத்து மாணவர்களும் சிறுவர் நாட்டுப் புறவியலில் (காண்க பிற்சேர்க்கை) பல்வேறு ஆராய்ச்சித் தலைப்புகளில் ஆய்வு செய்யும்படி நெறிப்படுத்தப்பட்டனர். குழந்தைகள் கதைகள், குழந்தைகள் வழக்காறுகளில் அரங்கக்கலைக் கூறுகள், சிறுவர் விளையாட்டுகளின் அமைப்பியல், சிறுவர் விளையாட்டும் சமூகவியமாதலும், குழந்தைகளுக்காகச் செய்யப்படும் சடங்குகள், குழந்தைகள் பற்றிய நம்பிக்கைகளும் சடங்குகளும், குழந்தைகளின் வழக்காறுகளில் நகைச்சுவை ஆகியன பற்றி முதுகலைப் பட்டத்திற்கு ஆய்வுத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

5.9 கிறித்தவ நாட்டுப் புறவியல்

எண்பதில் தொடங்கப்பட்ட கிறித்தவர்களின் நாட்டுப் புறவியல் பற்றிய ஆய்வு தொண்ணூறுகளில் மேலும் தனது எல்லையை விரிவாக்கிக் கொண்டது. திருநெல்வேலி தூய சவேரியார் கல்லூரி வழக்காற்றியல் மையம் கிறித்தவ நாட்டுப் புறவியலில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றது. கிறித்தவப் பள்ளர்களின் இறப்புக் கும்மி நிகழ்த்துதல் (1990) மாரம்பாடி புனித அந்தோணியார் வழிபாடு (1990) இந்திய யேசு ரட்சகர் சபை (1992) ஆகிய முதுகலை ஆய்வேடுகளும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட குமரி மாவட்டத்தைச் சேர்ந்த கிறித்து பிறப்புப் பாடல்கள் (1994-95) தென்னிந்திய திருச்சபை திருமணச் சடங்குகள் (1990-92) ஆகிய ஆய்வேடுகள் கிறித்தவ நாட்டுப்புறவியல் ஆய்வின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவன.

க. திருமுருகன் புதுச்சேரியில் கல்லறைத் திருவிழாவைப் பற்றி ஆராய்ந்துள்ளார். புதுச்சேரியில் பெரும் எண்ணிக்கையில் வசித்து வரும் உரோமன் கத்தோலிக்கரின் மரணச் சடங்குகளையும் முன்னோர் வணக்கமாகச் செலுத்தப்படும் கல்லறைத் திருவிழாவையும் விளக்கியுள்ளார். முதலில் கிறித்தவர்களின் மரணச் சடங்குகளை 1. மத அடிப்படையில் செய்யப்படும் சடங்குகள், 2. தமிழ் பண்பாட்டின் தாக்கத்தால் செய்யப்படும் சடங்குகள் என இரண்டாகப் பிரித்து இறந்த நாள் முதல் பதினாறாம் நாள் வரை செய்யப்படும் சடங்குகளை விவரித்துள்ளார். தமிழ் பண்பாட்டின் தாக்கத்தால் செய்யப்படும் சடங்குகளை மேலும் மூன்று வகையாகப் பிரித்துக் கூறுகின்றார். 1. உடல் எடுக்கும் போது செய்யப்படும் சடங்குகள் (உடலைக் கழுவுதல், நெய்ப்பந்தம் பிடித்தல், மங்கல நாண் நீக்குதல், பலிப் பொருள் கட்டுதல், கருவுற்ற பெண்களுக்குச் சடங்கு, சமபந்தி சாப்பாடு) 2. பால் தெளித்தலின் போது செய்யப்படும் சடங்குகள் 3. கருமாதி சார்ந்த சடங்குகள் எனப் பகுத்து விளக்கியுள்ளார். கருமாதிக்கு அடுத்த நாள் இறந்தவர்களின் பங்காளிகள் (இந்துக்களைப்போல) எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றனர். அன்று மதியம் அனைவரும் அசைவம் உட்கொண்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புகிறார்கள். நவம்பர் மாதம் இரண்டாம் தேதியை உலகிலுள்ள அனைத்துக் கிறித்தவர்களும் கல்லறைத் திருவிழாவை நீத்தார் தினமாகக் கொண்டாடுகிறார்கள். இந்துப் பண்பாட்டிலிருந்து கிறித்தவ சமயத்திற்கு மத மாற்றம் அடைந்தாலும் பல பழக்க வழக்கங்களை உறவு முறைகளைப் பழம் மரபு அடிப்படையிலே பின்பற்றுகிறார்கள்.

கிறித்தவ சமயத்திலும் புனிதர்கள் அல்லது நல்லடியார்களை மையமிட்டு வழிபடுகிற முறை பரவலாகக் காணப்படுகிறது. சிவகங்கை மாவட்டம் ஓரியூர் கிராமத்தில் உள்ள புனிதர் அருளானந்தர் வழிபாடு முற்சுட்டிய வழிபாட்டோடு தொடர்புடையதாகும். அருளானந்தர் வழிபாடு பற்றி க.சொல்லேருழவன் (1999) ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். போர்ச்சுக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் பிறந்த தெ.ஜான் தி பிரிட்டோ என்பவர் சமயப்பணி செய்வதற்காக இந்தியாவிற்கு (1673) வந்து தமது பெயரை அருளானந்தர் என்று மாற்றிக்

கொண்டு கிறித்தவ மறையைப் பரப்பும் பணியைச் செய்தார். இதனால் சினம் கொண்ட அரசர் சேதுபதி 1993ஆம் ஆண்டு பிப்ரவரி நான்காம் நாள் அருளானந்தரைக் கொல்வதற்கு உத்தரவிடுகிறார். ஓரியூர் கோட்டைக்கு வடக்கே பாம்பாற்றின் தென் கரையில் உள்ள திட்டை என்னும் ஊரில் அருளானந்தர் கழுமரத்தில் தொங்கவிட்டுக் கொல்லப்பட்டார். கழுமரத்தின் துண்டு இக்கோயிலில் புனிதமாகக் கருதப்படுகிறது. இவருடைய வரலாறு, மற்றும் அற்புத நிகழ்ச்சிகள் இவ்வட்டார மக்களிடையே கதைகளாகவும், நம்பிக்கைகளாகவும் பெரும் வழக்கில் உள்ளன. இவர் தீய ஆவியில் இருந்து மக்களைக் காப்பவர் என்றும், உடல் நோய், மனநோய் தீர்ப்பவர் என்றும் மக்கள் நம்புகிறார்கள். அதற்காக மெழுகுவர்த்தி ஏற்றுதல், தென்னம்பிள்ளை ஏந்திச் செல்லுதல், கிடாய் விடுதல், காணிக்கை வழங்குதல் போன்ற நேர்த்திக்கடன்களைச் செலுத்துகின்றார்கள். ஜனவரி 21-ஆம் நாள்தொடங்கி பிப்ரவரி நான்காம் நாள் வரை அருளானந்தர் திருவிழா நடைபெறுகிறது.

5.10 இசுலாமியரின் நாட்டுப்புறவியல்

இசுலாமியரின் நாட்டுப்புறவியல் பற்றிச் சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இந்திய விடுதலைக்குப் பின் இசுலாமியருக்கே உரிய படைப்போர் போன்ற கதைப்பாடல்கள் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்டன. இச்சமூகத்தைச் சேர்ந்த நாட்டுப்புறப் பாடல்கள் பழக்கவழக்கங்கள் கதைகள் ஆகியன ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. பத்தமடை லப்பையாரைப் பற்றியும் (1992) இசுலாம் பெண்களின் நாட்டார் கதைகள் பற்றியும் (1996) முதுகலை ஆய்வேடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆ.நாகராசன் சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் வட்டாரத்தில் வாழும் இசுலாமியரின் பழக்க வழக்கங்கள் குறித்து ஆராய்ந்துள்ளார் (1997). இவர்களின் வாழ்க்கை முறையினைத் தொழுகை, பர்தா அணிதல், பூப்புப்பற்றிய செய்திகள், திருமணம், இறப்பு பற்றிய செய்திகள், இத்தா முறை என்னும் தலைப்புகளில் விளக்கியுள்ளார். ஆண்கள் தொழுகை செய்யும் இடம் 'பள்ளிவாசல்' என்றும், பெண்கள் தொழுகை செய்யும் இடம் 'தைக்கா' என்றும் கூறுவர். பூப்புச்சடங்கு, தாலிகட்டும் சடங்கு இல்லை. முடிபிடித்துக் கொடுத்தல் சடங்கு உண்டு. இறந்தவர்களுக்காக அழாமல், அவர்களுக்காகப் பள்ளிவாசலில் தொழுது

பாவமன்னிப்பு கேட்டு, உறவினர் பிள்ளைகள் முத்தமிட்ட பின்பு புதைக்கிறார்கள். கணவன் இறந்தால் மறுமணத்திற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

இசுலாமியர்களின் தர்கா வழிபாடு பற்றி செ.சு.நா. சந்திரசேகரன் ஆராய்ந்துள்ளார் (1999). சிவகங்கை மாவட்டம் புதுவயல் என்னும் ஊரிலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில் 'பெத்தனேந்தல் நத்தர் அவிலியா தர்கா' உள்ளது. இறைப்பணியும் அருள்வாக்கும் கொடுத்த 'நத்தர் அவுலியாவின்' சந்ததியாரும் முன்னோர் வழிபாட்டைக் கொண்ட இந்து சமயத்திலிருந்து மாறினர். இசுலாமியர்கள் மதக் கோட்பாட்டிற்கு எதிராக இருந்தாலும் தர்கா வழிபட்டைப் பின்பற்றுகின்றனர். இத்தர்காவிற்கு இந்துக்களே அதிகமாக வந்து செல்கிறார்கள். இசுலாமியரும் தொழுகைக்குப் பின் இவரைத் தரிசிக்கிறார்கள். ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை இரவு சிறப்புத் தொழுகை நத்தர் அவுலியா சமாதியில் செய்யப்படுகிறது. இசுலாமியரும் இந்துக்களும் கொண்டுவந்த பொருட்கள் படையல் செய்யப்படுகின்றன. ஆடுகளை வெட்டி ஏழை மக்களுக்கு அன்னதானம் செய்கிறாகள். கந்தூரித்தொகை செய்யப்படு கின்றது. படைக்கப்பட்ட பொருள்கள் வீட்டிற்குக் கொண்டு செல்லக்கூடாது. பிரான்மலைத் தர்காவிலும் இவ்வாறு நடைபெறுகிறது. ஆம்பக்குடி என்னும் 'ஐந்து வீட்டுக் காளியம்மனுக்கும்' இத்தர்காவிற்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. பக்தர் தொடர்புண்டு; நிர்வாகத் தொடர்பில்லை. பில்லிசூனியம், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் இத்தர்காவிற்கு வந்து தங்கிச் செல்கிறார்கள்.

எஸ். முத்துமீரான் 1975 முதல் 1995 வரை கிழக்கிலங்கைப் பகுதியில் தொகுத்த பாடல்களை வெளிக்கொணர்ந்துள்ளார் (1997). அப்பகுதி கிராமத்து மக்களின் பண்பாடு, நாகரீகம், வாழ்வியல் பாங்கு ஆகியவற்றை இப்பாடல்கள் மூலம் விவரித்துள்ளார். நாட்டாரியல் அறிமுகம், பாடல் தேடலும் ஆய்வும் என்ற விவரங்களோடு குழந்தைப் பாடல்கள், நகைச்சுவை, நையாண்டிப் பாடல்கள், வாது கவிகள், தொழில், காதல், பிரார்த்தனை, சத்தியம், தத்துவம், பொல்லடி, வழிநடைச் சிந்து என்னும் தலைப்புகளில் பகுத்துள்ளார்.

5.11 நாட்டுப்புறப் பஞ்சாயத்து

நாட்டுப்புறங்களில் தோன்றும் வழக்குகளை விசாரித்து ஒவ்வொரு சாதிக்கும் 'குடும்ப நீதிமன்றமும்' ஊருக்கே உரிய 'பொது நீதிமன்றமும்' எனக் கட்டப்பஞ்சாயத்து அமைப்புகள் நடைபெற்று வருகின்றன. பல பெரிய கிராமங்களில் இவற்றின் செயல்பாடுகள் வலுவிழந்து விட்டாலும், சில கிராமங்களில் இவை இன்னும் செல்வாக்கும் அதிகாரமும் செலுத்தி வருகின்றன. நடுவர் மன்றங்களுக்கும், உயர்நீதிமன்றங்களுக்கும் சென்று அலைவதைக் காட்டிலும் இதன் மூலம் விரைவாக - உடனே சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள விரும்புகின்றனர். நடராசன் கிராமப்பஞ்சாயத்து முறையும் அமைப்பும் (1996), வெள்ளலூர் நாட்டின் பஞ்சாயத்து மரபும் பலரின் கவனத்தைக் கவர்ந்தவை. இது குறித்து இரண்டுக்கு மேற்பட்ட ஆய்வேடுகள் வந்துள்ளன.

5.12 ஒப்பீட்டு நாட்டுப்புறவியல்

இறையடியான் கர்நாடக நாட்டுப்புறவியலைத் தமிழில் தந்துள்ளார். இதை வைத்து அறிமுக அளவில் தமிழ் - கர்நாடக நாட்டு நாட்டுப்புறவியலில் நாட்டுப்புற வழக்காறுகள் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளன என்றும், தமிழகச் சிறுபான்மைச் சாதியினரின் நாட்டுப்புறவியல் குறித்தும் ஆராய்ச்சிகள் செய்யலாம். தமிழ், தெலுங்கு நாட்டுப்புறப்பாடல்கள் பற்றி ஒப்பிட்டுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. காட்டமராசன் கதையை இங்குள்ள வரலாற்றுக் கதையோடு ஒப்பிட்டு பொதுவான நாட்டுப்புறத் திராவிட மரபுகளைக் கண்டுபிடிக்கலாம். தமிழ் - மலையாளக் கண்ணகிக் கதைப்பாடல்கள், தமிழ் - மலையாளப் பகவதி வழிபாடுகள், தமிழ் - மலையாளப் பழமொழிகள் ஆகியன ஒப்பீடு செய்வதற்குத் தளத்தை ஏற்படுத்தித் தருகின்றன. திராவிடத் தாய்த் தெய்வ வழிபாடு, மர வழிபாடு, நாக வழிபாடு என ஆய்வெல்லையை விரித்துக் கொண்டு செல்வதற்கு எதிர்காலம் ஆய்வாளருக்குக் காத்துக் கொண்டிருக்கிறது.

5.13 நாட்டுப்புற உணவும் மருத்துவமும்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மனிதன் உணவைத் தேடி அலைந்து பலவகையான உணவுகளை உண்டு

வாழ்ந்து வருகின்றான். ஒவ்வொரு இனத்தாரும் தமக்கே உரிய உணவுப் பண்பாட்டை உருவாக்கிப் பேணி வருகின்றனர். சில பண்பாடுகளில் உணவே மருந்து போலச் செயல்பட்டு உடல்நலம் அளிக்கின்றது. தமிழரின் குழம்புகள், ரசங்கள் நாட்டுப்புற / சித்த மருத்துவக் குணங்களைக் கொண்டவை. நாட்டார் உணவு பற்றி தே.லூர்து தம் நூலில் ஒரு குறிப்புரை (1997) வழங்கியுள்ளார். இது பற்றிய போதுமான ஆய்வு நிகழவில்லை என்று சொல்ல வேண்டும். தெய்வங்களுக்குப் படைக்கும் உணவுகளைப் பற்றி மு.கண்ணன் ஆராய்ந்துள்ளார் (1995). தேனி, போடி ஊராட்சி ஒன்றியங்களில் கையாளப்படும் நாட்டுப்புற மருந்துகள் பற்றிச் சில ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ந.சந்திரனின் நாட்டு மருத்துவம் என்னும் நூல் அவரது முனைவர் பட்ட ஆய்வேட்டின் அச்சு வடிவமாகும் (2002). இந்நூலில் மகளிர் மருத்துவம், ஆடவர் மருத்துவம், குழந்தையர் மருத்துவம், பொது மருத்துவம், கால்நடை மருத்துவம் என்னும் தலைப்புகளில் நாட்டு மருத்துவத்தை விளக்கியுள்ளார். தன்னனானே நாட்டுப்புற மருத்துவத்திற்கு ஒரு சிறப்பிதழை வெளியிட்டுள்ளமை இவண் நினைக்கத்தக்கது. அ. பிச்சை மற்றும் த. கருப்பையா நாட்டுப்புறக் கால்நடை மருத்துவம் பற்றிக் கட்டுரை வெளியிட்டுள்ளார்கள். அழிந்து போகும் நாட்டுப்புறக் கால்நடை மருத்துவத்தைப் பதிவு செய்ய வேண்டியது அவசியம். பிலவேந்திரன் உணவுப் பண்பாடும் சமூகப் பொருண்மைகளும் (2001) பற்றி ஆராய்ந்து ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார்.

5.14 பெயராய்வுகள்

மக்களின், இடத்தின், ஊரின், நீர்நிலைகளின் பெயர்களை ஆராய்வது நாட்டுப்புறப் பண்பாட்டு ஆய்வுகளில் அடங்கும். 'ஊரும் பேரும்' என்னும் தலைப்பில் ராபி. சேதுப்பிள்ளை நூலை வெளியிட்டதைத் தொடர்ந்து மாவட்ட ரீதியாகவும், பஞ்சாயத்து ஒன்றியம் / வட்டார அளவிலும் ஊர்ப்பெயர் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. கி. நாச்சிமுத்துவின் 'கோயம்புத்தூர் மாவட்ட ஊர்ப் பெயராய்வு' முன் மாதிரியாக அமைந்தது. இதைத் தொடர்ந்து தொண்ணூறுகளில் சில ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. திருவட்டாறு ஊராட்சி ஒன்றியப் பெயராய்வு (1993-94) முன்சிறை ஊராட்சி ஒன்றியப் பெயராய்வு (1993-94) போன்ற குமரி மாவட்ட

எம்.ஃபில் ஆய்வேடுகள் ஆகியனவற்றைச் சான்றுகளாகக் கூறலாம். நாட்டுப்புற வழக்காறுகளில் நகைச்சுவையையும் நாட்டுப்புற மணத்தையும் வெளிப்படுத்துபவை பட்டப் பெயர்கள் ஆகும். பட்டப் பெயரிடுதல் பற்றிச் சில குமரி மாவட்ட எம்.ஃபில் ஆய்வேடுகளும் (1990-1992) சில கட்டுரைகளும் (1995) வெளிவந்துள்ளன. மக்கட்பெயர் ஆய்வுகள் குழவிப் பருவத்திலே உள்ளது; இதற்கிடையில் ஆரியப் பெயர்கள் தமிழ்ப் பெயரிடு முறையை அழித்துக் கொண்டு வருகின்றன. தமிழ் மக்களின் பெயர்களை அழிவதிலிருந்து தொகுத்து ஆராயப்படாவிட்டால் என்னென்ன தமிழ்ப் பெயர்கள் வழக்கில் இருந்தன என்ற சுவடு இல்லாமல் போய்விடும். குலதெய்வ ஆராய்ச்சிக்கு மக்கட் பெயர்கள் துணைபுரிவன.

5.15 முடிவுரை

நாட்டுப்புறவியல் ஆய்வில் நாட்டுப்புறப் பண்பாடு பற்றிய ஆய்வு முதலிடத்தையும், நாட்டுப்புற இலக்கியம் பற்றிய ஆய்வு இரண்டாம் இடத்தையும், நாட்டுப்புறக்கலைகள் பற்றிய ஆய்வு மூன்றாம் இடத்தையும் பெறுகின்றன. இந்த ஆய்வு முழுமையான ஆய்வு அன்று. மிகக் குறுகிய காலத்தில் செய்யப்பட்ட விளக்கவியல் ஆய்வாகும். கிடைத்த செய்திகள் ஓரளவு தொகுத்தும், வகுத்தும் தரப்பட்டுள்ளன. விடுபட்ட செய்திகள் ஏராளமாக இருக்கலாம் என்பதை ஆய்வாளர் உணர்வர். இந்த ஆய்வைக் குறைந்த அளவு ஓராண்டு செய்தால் சிறப்பாக அமையும். அதற்கு இது ஒரு அடிக்கல் நாட்டு விழாவாகும்; கண்ணேறுபடுதலைக் கழிக்கச் சில புள்ளிகளை வைத்து வீட்டின் முன்னால் போடப்பட்ட 'திருஷ்டி'க் கோலம் போன்றதாகும். இவ்வாய்வு. அழகான, பெரிய கோலத்தைப் போடுவதற்கு வாசலும் வாய்ப்புமுண்டு. எதிர்காலத்தில் ஓர் ஆய்வாளர் இப்பொருளில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெறுவதற்கு உரிய விரிந்த பரப்பையும் தரவுகளையும் இவ்வாய்வு கொண்டுள்ளது.

துணை நூற்பட்டியல்

அழகப்பன், ஆறு., நாட்டுப்புறப்பாடல்கள் - திறனாய்வு, கழக வெளியீடு, சென்னை - மறுபதிப்பு, 1990.

அன்னகாமு, சி., மேல்மலைமக்கள், சர்வோதயப் பிரசுரலாயம், தஞ்சாவூர், 1961.

இராமநாதன், ஆறு., நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.

சக்திவேல், சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1983.

சக்திவேல், சு., நாட்டுப்புறவியல் நூலடைவு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988.

சண்முகசுந்தரம், சு., நாட்டுப்புறவியல் சிந்தனைகள், மணிவாசகர் நூலகம், சென்னை, 1981.

சண்முகசுந்தரம், சு., திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு, காவ்யா, 1986.

சண்முகசுந்தரம், சு., நாட்டுப்புற இலக்கியம் (தமிழ் இலக்கியக் கொள்கை) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1978, பக்: 193-248.

சுப்பிரமணியன், ச.வே., தமிழில் விடுகதைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மறுபதிப்பு,1980.

சுந்தரம், எம்., நாட்டுப்புறப் பாடல்கள், மணிவாசகர் நூலகம், 1981.

சௌந்திரபாண்டியன், எஸ்., தமிழில் பழமொழி இலக்கியம், ஸ்டார் பிரசுரம், 1988.

தமிழண்ணல், தமிழியல் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1988, இரண்டாம் பதிப்பு.

தேவநேயப்பாவணர், ஞா., தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழ் மண் பதிப்பகம், சென்னை, புதிய பதிப்பு, 2000.

நாச்சிமுத்து, கி., தமிழ் இடப்பெயராய்வு, சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில், 1983.

நாசீர் அலி, மீ. அ.மு., நாட்டுப்புறப் பண்பாட்டியல், இக்ரஹ் பப்ளிகேஷன்ஸ், திருச்சி, 1987.

பரமேசுவரி, மள்ளர் வாழ்வும் வழிபாடும், அறிவகம், கோவை, 2000.

பாலசுப்பிரமணியன், இரா., தமிழர் நாட்டு விளையாட்டுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

பாண்டி, மு., நாட்டுப்புறக் கதைகள், (திருப்பு வனம் வட்டாரம்) முத்துப்பதிப்பகம், விழுப்புரம், 1989.

பெருமாள், அ.நா., தமிழில் கதைப்பாடல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1987.

கணபதிராமன், திருநெல்வேலிப் பகுதியில் சிறுதெய்வ வழிபாடு, திருமகள் நூலகம், தூத்துக்குடி, 1986.

கஸ்தூரி காந்தி, நாட்டார் வாழ்வியலும் பண்பாடும், அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1986.

கதிர் மகாதேவன் & இரா. மோகன்., (பதி.) பெண்ணியம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1994, பக்: 1-13.

வரதராசன், செங்கோ, மேற்குத் தமிழக நாட்டுப்புறவியல் - ஓர் ஆய்வு, நியுசெஞ்சுரி புத்தக(பி)லிட், சென்னை, 1988.

வானமாமலை, நா., தமிழர் பண்பாடும் தத்துவமும், நி.செ.பு., சென்னை, 1978, 2-ஆம் பதிப்பு.

விதாலிஃபுர்னீக்கா, பிறப்பு முதல் இறப்பு வரை, நி.செ.பு., சென்னை, 1986.

லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் - களஆய்வு, பாரிவேல் பதிப்பகம், திருநெல்வேலி, 1986.

லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் மையம், பாளையங்கோட்டை, 1997.

பிற்சேர்க்கை

அ. பொது

(i) நூல்கள்

அரசு, வீ & கி. பார்த்திபராஜா, வாய்மொழி வரலாறு, தன்னனானே பதிப்பகம், பெங்களூர், 2001.

இராமநாதன், ஆறு & பிறர், வாழும் மரபுகள், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், தன்னனானே பதிப்பகம், 2001.

இராமநாதன், ஆறு., (பதி.), நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், சமூகவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.

------------------, நாட்டுப்புற இயல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.

இராமநாதன், ஆறு & பிறர், மாறிவரும் சமூகம் : நாட்டுப்புறவியல் ஆய்வுகள், தன்னனானே பதிப்பகம், 2002.

இறையடியான், கர்நாடக நாட்டுப்புற இயல் : ஓர் அறிமுகம், மெஸ்கா வெளியீடு, ஆயிரம் விளக்கு, சென்னை, 1993.

கிருட்டினமூர்த்தி, கோ., கல்வராயன் மலை மக்கள், சேகர் பதிப்பகம், எம்.ஜி.ஆர். நகர், சென்னை, 1992.

குணசேகரன், கே.ஏ., தமிழக மலையின மக்கள், நி.செ.பு. நிறுவனம், சென்னை, 1992.

சண்முகசுந்தரம், சு., நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, தன்னனானே பதிப்பகம், பெங்களூர், (19761, பதி.) 1988, 3-ஆம் பதிப்பு.

சண்முகசுந்தரம், சு., நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.

சண்முகசுந்தரம், சு., நாட்டுப்புறவியல் - ஆய்வுக்கோட்பாடுகள், தன்னனானே, டிசம்பர், 2000.

------------------, விடுதலை வேர்கள் (வாய்மொழி வரலாறு), தன்னனானே, பதிப்பகம், பெங்களூர், 1998.

சண்முகசுந்தரம், சு., (பதி.) சென்னை நாட்டுப்புறவியல், தன்னனானே, 18, மே - 2002.

சண்முகம், ஆ., & பிறர், மண்வாசம், நாட்டுப்புறவியல் ஆய்வுக் கட்டுரைகள், அனன்யா வெளியீடு, தஞ்சாவூர், 2000.

செல்வராசு, சிலம்பு நா. & சண்முக விஷ்ணுதாசன் (பதி.) நாடுதோறும் நாட்டுப்புற மரபுகள், சவீதா வெளியீட்டகம், இருளக்குப்பம், 1992.

தமிழ்நாடன், சேலம் மாவட்டம் சில ஆய்வுகள், காவ்யா வெளியீடு, பெங்களூர், 1998.

நசீம்தீன் டாக்டர், பீ., இடுக்கி மாவட்டப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல், அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1989.

பரமசிவம், தொ., அறியப்படாத தமிழகம், ஜெயா பதிப்பகம், பாளையங்கோட்டை, 1997.

பரமசிவம், தொ., பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 1991.

பாலசுப்பிரமணியம், இரா., நாட்டுப்புற வாழ்வியல், சத்யா வெளியீடு, திருநகர், மதுரை, 1996.

பிலவேந்திரன், ச., தமிழ்ச் சிந்தனை மரபு, நாட்டுப்புறவியல் ஆய்வுகள், தன்னனானே, பதிப்பகம், டிசம்பர் - 2001.

பீர்முகம்மது, சை., மண்ணும் மனிதர்களும், மித்ரா வெளியீடு, சென்னை, 1999.

பெருமாள் முருகன், கொங்குவட்டாரச் சொல்லகராதி, குருத்து, கோபிச்செட்டிபாளையம், 2002.

பெருமாள், அ.கா. & சண்முக சுந்தரம், சு., குமரி நாட்டுப்புறவியல், தன்னனானே, டிசம்பர் 2001.

முத்தையா, இ., நாட்டுப்புற பண்பாட்டு மரபு, மாற்று மரபு, அரசு பதிப்பகம், மதுரை, 1998.

லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூயசவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, 2000.

லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1996.

(ii) கட்டுரைகள்

இராமநாதன், ஆறு., வரலாற்று நிலவியல் ஆய்வு முறை தோற்றமும் வளர்ச்சியும், தன்னனானே, (15), 2000, பக்:14-32.

இளம்பரிதி, மொ., வடிவமும் சூழலும், களம் (1), 1995, பக்:13-25.

கிளாஸ், பீட்டர், ஜே., அணுகுமுறை வறுமை, நாட்டார் வழக்காற்றியல், தொகுதி-1, 1987, பக்:137-138.

சிவசுப்பிரமணியன், ஆ., ஆய்வுக்கோட்பாடுகளில் 'சாமியாடும் மனைவி', தன்னனானே பதிப்பகம் (15), 2000, பக்:43-73.

செல்லப்பெருமாள், ஆ., மானிடவியலும் நாட்டார் வழக்காற்றியலும், நாட்டார் வழக்காற்றியல் (3) 1989-91, பக்:165-195.

செல்லப்பெருமாள், ஆ., பண்பாட்டுச் சார்பிசைவு - பண்பாட்டுப் பன்மைவாத நோக்குகள், களம் (2) 1996, பக்:1-16.

தனஞ்செயன், ஆ., பரவலியல் கோட்பாடுகள், நாட்டார் வழக்காற்றியல், (3) 1989-91, பக்:37-76.

தமிழ் ஒளி, பி., பண்பாட்டுப் படிமலர்ச்சி, நாட்டார் வழக்காற்றியல், (3) 1981-91, பக்:1-36.

நலங்கிள்ளி, அரங்க, நாட்டுப்புறத் தரவு சேகரிப்புப் பண்பும் பழக்கமும் : ஓர் உளப்பகுப்பாய்வு நோக்கு, களம் (1), 1995, பக்:162-172.

பக்தவத்சலபாரதி, சீ., செயற்பாட்டியற் கொள்கை: ஆய்வுகளும் அணுகுமுறைகளும் நாட்டார் வழக்காற்றியல், (3), 1981-91, பக்:75-108.

பெரியசாமி, தி., தமிழ்மொழி வளர்ச்சிக்கு நாட்டுப்புற இலக்கியங்களின் பங்களிப்பு, தமிழியல் 2001, பக்:148-152.

மீனலோசினி, சு., வைரமுத்துவின் திரை இசைப்பாடல்களில் நாட்டுப்புற இலக்கியத்தாக்கம், ஆய்வுச் சிந்தனைகள் (7-ஆம் கருத்தரங்க மலர்) 2001, பக்:316-320.

முத்துக்குமாரசாமி, லெவிஸ்ட்ராஸின் அறிவியலும் அரசியலும், நாட்டார் வழக்காற்றியல் (2) 1988, பக்:181-189.

முத்துமோகன், ந., லெவிஸ்ட்ராஸின் அமைப்பியல் கொள்கை: ஒரு தத்துவ மதிப்பீடு நாட்டார் வழக்காற்றியல்; (2) 1988, பக்:1-14.

முத்துச்சண்முகம்பிள்ளை, நாட்டுப்புறவியல், செவ்வியல், நாட்டுப்புறச் செவ்வியல் : தமிழ் இலக்கியமும் நிகழ்கலையும் டிக்லோசியா கோட்பாடு, களம் (2) 1996, பக்: 111-126.

முத்துக்குமாரசுவாமி, எம்.டி. கிளாட்லெவிஸ்ட்ராஸ், நாட்டார் வழக்காற்றியல் இதழ், தொகுதி : 2, 1987, பக்: 139-142.

லூர்து, தே., சூழலியல் கோட்பாடு, தன்னனானே (15), 2000, பக்:74-94.

லூர்து, தே., அமைப்பு - அமைப்பியல் - லெவிஸ்ட்ராஸ், நாட்டார் வழக்காற்றியல் (2) 1988, பக்: 73-148.

ஜோசப் சுந்தரராஜ், சூ., குறியியல் கோட்பாடுகள் (Semiology), நாட்டார் வழக்காற்றியல், தொகுதி :1, 1987, பக்:101-136.

ஆ. நாட்டுப்புறப் பாடல்கள்

(i) நூல்கள்

அன்பு மீனாள், பழ., பொங்குதே கண்ணீரு, தன்னனானே பதிப்பகம், பெங்களூர், 2002.

இராஜன், மு., தாலாட்டுப் பாடல்களின் பொருள் அமைப்பு ஓர் ஒப்பிட்டு ஆய்வு, எம்.ஏ., ஆய்வேடு நாட்டார் வழக்காற்றியல் மையம், பாளையங்கோட்டை, 1990.

இராஜகுமாரன், டா., சிறுவர் பாடல்கள் - ஓர் ஆய்வு, எம்.ஏ., ஆய்வேடு, நா.வ. மையம், பாளையங்கோட்டை, 1989.

ஏசுதாசன், ப.ச., & சோமசுந்தரம், ச., (பதி.) நாட்டுப்புறப்பாடல்கள், தமிழ்த்துறை, பிசப்ஹீபர் கல்லூரி, திருச்சி, 1990.

சண்முகசுந்தரம், சு., (தொ.) நாலுவகைப்பூவெடுத்து, (நாட்டுப் புறப்பாடல்கள்) சாகித்ய அக்காதமி, சென்னை, 1999.

சக்திவேல், சு., திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப்பாடல்கள், இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர், 1995.

சக்திவேல், சு., தஞ்சை மாவட்ட நாட்டுப்புறப்பாடல்கள், இ.த.நா.க. அண்ணாமலை நகர், 1995.

சுப்பிரமணியன், சி., கொங்கு நாட்டு மங்கல வாழ்த்துப்பாடல், தன்னனானே பதிப்பகம், பெங்களூர், 1997.

சுப்பிரமணியன், சு., உடுமலை வட்டார நாட்டுப்புறப் பாடல்கள் - ஓர் ஆய்வு, தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக் கழகம், கோவை, பி.எச்.டி. ஆய்வேடு.

தண்டாயுதம், இரா., மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1999.

தனஞ்செயன், ஆ., தஞ்சாவூர் மாவட்ட மீனவர் பாடல்கள் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், பி.எச்.டி. ஆய்வேடு, 1985.

புஷ்பம், பி., தாலாட்டும் ஒப்பாரியும், தன்னனானே பதிப்பகம், பெங்களூர், 1999.

பெரியண்ணன், நல்லாமூர் நாட்டுப்புறப்பாடல்கள், வனிதா பதிப்பகம், சென்னை, 1994.

பொன்வேலப்பன், நாட்டுப்புறச் சிறுவர் பாடல்கள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1990.

மதனகல்யாணி, புதுச்சேரி நாட்டுப்புறப்பாடல்கள், ஆனந்தா பதிப்பகம், புதுச்சேரி, 1995.

முத்துமாறன், இரா., அண்ணாமாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் மக்கள் வாழ்வியல், ம.கா.ப.க., மதுரை, 1997, பி.எச்.டி. ஆய்வேடு.

முத்துமீரான், எஸ்., கிழக்கிலங்கை முஸ்லீம்களின் நாட்டார் பாடல்கள், மீரா உம்மா நூல் வெளியீட்டகம், நிந்தவூர், ஸ்ரீலங்கா, 1997.

முருகானந்தம், ச., நாட்டுப்புறப்பாடல்களில் வரலாற்றுச் செய்திகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.

மோகனராசு. கு., அம்பாபாட்டு, ஸ்டார் பிரசுரம், சென்னை, 1988.

ராஜன், எ.மு.(தொ.) கிராமத்துச் சிறுவர் பாடல்கள், மீனா புத்தகப் பண்ணை, விழுப்புரம், 1989.

(ii) கட்டுரைகள்

அஞ்சலி இராஜசேகரன் - சிறுவர் விளையாட்டுப் பாடல்களும் நையாண்டிப் பாடல்களும், ஆய்வுக்கோவை - 1992, பக்:1-5.

அறிவுடை நம்பி, ம.சா., நாட்டார் மடல்கள், ஆய்வுக்கோவை - ஒ, 1995, பக்:62-66.

அப்பாத்துரை, இரா.வீ., பிராப்பின் அமைப்பியல் கோட்பாடும் நாட்டுப்பாடல்களும் களம் (2) 1996, பக்: 169-173.

இராணி, ந., சங்கப்பாடல்களில் நாட்டுப்புற இலக்கிய வெளிப்பாடு, ஆய்வுக்கோவை - I, 1998, பக்:223-227.

இரத்தின கிருட்டினமூர்த்தி, பெரியபுராணத்தில் நாட்டுப்புறவியல் கூறுகள், ஆய்வுக்கோவை - 1992, பக்:90-94.

இளவரசி, சு., கரூர் வட்டாரக் கும்மிப்பாடல்கள், களம் (2) 1996, பக்:205-207.

இராசேந்திரன், அ., ஒப்பாரிப் பாடல்களில் அண்ணி - நாத்தி உறவு, களம் (2) 1996., பக்:62-68.

உமாதேவி, தி., முளைப்பாரிப் பாடல்கள் - அமைப்பியல் நோக்கு, தன்னனானே - ஜூலை (95 ஜனவரி (96) பக்: 107-120.

கருப்புச்சாமி, நீ.வ. ஆலாத்திப் பாடல்களின் தனித்தன்மைகள், ஆய்வுக்கோவை (21, III) 1989, பக்:177-180.

கிருஷ்ணசாமி, ப., அண்ணன்மார் பாட்டும்; பாட்டுக்காரர்களும் சில மனப்பதிவுகளும், தன்னனானே - மே. 2001 (16) பக்:122-134.

சரஸ்வதி வேணுகோபால், வாய்மொழி இலக்கியத்தில் எதிர்ப்புக் குரல்கள், ஆய்வுக்கோவை - 1, 1994, பக்:487-491.

சற்குணவதி, மு., நாட்டுப்புறப்பாடல்களும் பெண் உரிமையும், களம் (2), 1996, பக்:82-86.

சற்குணவதி, மு., நாட்டுப்புறப்பாடல்களில் மனிதம்,ஆய்வுக் கோவை : 1 1994, பக்:502-506.

சற்குணவதி, மு., நாட்டுப்புற இலக்கியங்களும் சகிப்புத்தன்மையும் ஆய்வுக்கோவை - II, 1996, பக்:571-575.

சக்திவேல், சு., அம்பாப் பாடல்கள், ஆய்வுக்கோவை-II, 1998. பக்:550-554.

சக்திவேல், சு., மீனவரது கொண்டாட்டப் பாடல்கள், களம் (2), 1996, பக்:208-211.

சந்திரகுமாரி, ச., கோபி வட்டாரக் காதற்பாடல் காட்டும் சமுதாயம், ஆய்வுக்கோவை-I, பக்:477-481.

சந்திரகுமாரி, ச., தாலாட்டு காட்டும் வறுமையும் செழுமையும், களம் (1), 1995, பக்:173-175.

சத்திய சீலம், ச., நாட்டுப்புறப் பாடல் வழக்கு, ஆய்வுக்கோவை-I, 1992. பக்:282-286.

சண்முகவேல், கோ., நாட்டுப்புறப்பாடலும் இலக்கியமும், களம் (2), 1996, பக்:212-216.

சண்முகசுந்தரம், சு.., திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புற பாடல்கள், தன்னனானே,14, மே 2000, பக்:51-54.

சண்முகம், ந., நாட்டுப்புறப் பாடல்களின் யாப்பு, ஆய்வுக் கோவை-II,1997, பக்: 516-520.

சண்முகசுந்தரம், சு.., திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புற பாடல்கள், தன்னனானே,14, மே 2000, பக்:14-40.

சாந்தகுமார், பெ.கு., சிற்றிலக்கியங்களில் நாட்டுப்புறக் கூறுகள், ஆய்வுக்கோவை(21)-II, 1989. பக்:292-297.

சிவாநந்தம், எ., பாகூர் ஏரிப்பாடல், தன்னனானே - மே, 1998, பக்: 69-72.

சிவமணி, சா., நல்லம்மா தோற்றம் பாட்டு - ஓர் அறிமுகம், ஆய்வுக்கோவை, 1 1994, பக்:586-590.

சுப்பிரமணியம், மா., குருவிகுளம் வட்டார ஒப்பாரிப் பாடல்கள், தன்னனானே (14), மே 2000, பக்:51-54.

சுப்பிரமணியன், சி., கொங்கு வேளாளர் மங்கல வாழ்த்துப் பாடல், தன்னனானே- மே 2001 (16) பக்: 116-121.

செயலட்சுமி, இரா.பெ., வைரமுத்துவின் கவிதை - பாடல்களில் நாட்டுப்புறச் செல்வாக்கு, களம்(2) 1996, பக்:77-81.

சோமசுந்ரம், ச., நாட்டுப்புறப் பாடல்களில் அகப்பொருள் மரபுகள், ஆய்வுக்கோவை - II, 1999, பக்:876-880.

தமிழரசி, வி., நாட்டுப் பாடல் : ஒரு மக்களிலக்கியம், தமிழியல் ஆய்வு - 1994, பக்: 243-247.

தர்மாரெட்டி, ந., தெலுங்கு நாட்டுப்புற இலக்கியத்தில் தெய்வப் பாடல்கள் ஓர்அறிமுகம், ஆய்வுக்கோவை (20) III, 1988, பக்:335-341.

திலகவதி, க., ஏட்டிலக்கியத்தில் எழுதா இலக்கியத்தின் செல்வாக்கு, களம்(2) 1996, பக்: 57-61.

திருநாகலிங்கம், ஆ., பூச்சியம்மன் வில்லுப்பாட்டு ஆய்வுகோவை-1995, பக்:496-500.

தொல்காப்பியன், இள., நாட்டுப்புறப் பாடல்களின் சமுதாய நலச்சிந்தனைகள், களம்(2) 1996, பக்: 217-219.

பழனியாண்டி, சு., நாட்டுப்புறப் பாடல்களில் எதிர்ப்புணர்ச்சி, ஆய்வுக்கோவை (20) III, 1988,பக்:415-420.

பாவண்ணன், புதுச்சேரி ஒப்பாரிப் பாட்டுகள், தன்னனானே (9,10) 1998, பக்: 80-83.

மதனகல்யாணி, ச., புதுச்சேரி நாட்டுப்புறப் பாடல்கள், தன்னனானே, (9,10) 1998, பக்:84-90.

மனுவேல், ஜே, சித்தூர் மாவட்டத் தமிழ் - தெலுங்கு கும்மிப் பாடல்கள் ஓர் அறிமுகம், ஆய்வுக் கோவை (20) III, 1988, பக்: 491-496.

மனுவேல், ஜே, சித்தூர் மாவட்டத் தமிழ் - தெலுங்கு கபிலைப் பாடல்கள் ஒப்பாய்வு, ஆய்வுக் கோவை (21) III, 1989, பக்: 646-6512.

மருததுரை, அரு., ஒப்பாரிப்பாடல் பாடப்பெறும் சூழலும் நடைமுறைகளும், ஆய்வுக்கோவை (21) III, 1989, பக்:640-645.

மனோகரன், இரா., நாட்டுப்புறப் பாடல் அமைப்பில் கவிஞர், வைரமுத்துவின் கவிதைகள், களம் (2) 1996, பக்: 87-93.

முத்தையா, இ., நாட்டுப்புற அழகியல் - எதிர் அழகியல் குறித்த சிந்தனைகள், தமிழியல் ஆய்வு - 1995, பக்:265-270.

முத்துமீரான், எஸ்., கிழக்கிலங்கை முஸ்லீம்களின் நாட்டார் பாடல்கள், தன்னனானே - மே 1998, பக்:192-204.

முருகையன், மு., புதுவைப் பகுதி ஒப்பாரிப் பாடல்கள் ஓர்அறிமுகம், ஆய்வுக்கோவை (21) III, 1989, பக்:737-742.

ருக்மணி, ச., ஒப்பாரிப் பாடல்களில் சமூகப் பிரச்சினைகள், களம் (1) 1995, பக்:137-140.

லலிதா, து., காவடிச்சிந்து, களம் (1) 1995, பக்:127-132.

வளவன், சா., தொழிற்பாடல்களும் சமூகவியல் ஆய்வுகளும், ஆய்வுக்கோவை (21) III 1989, பக்:790-795.

வசந்தா, ஜி., நாட்டுப்புறப் பாடல்களில் வாணிபம், களம்(2) 1996, பக்:166-168.

வசந்தமாலை, புதுச்சேரிக் கோயிலில் உடுக்கைப் பாடல், தன்னனானே, (9,10) 1998, பக்:73-79.

விஷ்ணுதாசன், ச., பாரதிதாசன் கவிதைகளில் நாட்டுப்புறக் கூறுகள், ஆய்வுக்கோவை (21) III 1988, பக்:835-840.

வைரம், கா.கா., திருப்புவனம் தொழிற்பாடல்கள், ஆய்வுக்கோவை (20) III, 1998, பக்: 555-560.

ஜெயப்பிரதா தேவி, இரா., நாட்டுப்புறப்பாடல்களும் விடுதலை வீரர்களும், ஆய்வுக்கோவை III, 1999, பக்:1642-1946.

இ. நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் / கதைகள்

(i) நூல்கள்

அலமேலு, வ., (பதி.) தோட்டுக்காரி கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.

இருதய சேவியர், ஜோசப், ம., புனிதப்பழ மரபுக் கதைகள், நாட்டார் வழக்காறுகள், தமிழ்த்துறை ஆய்வுமையம், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை, 1994.

கனகராஜ், க., அண்ணன்மார்சாமி கதைகள் - ஓர் ஆய்வு, பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சி, 1999, ஆய்வேடு.

கலைச்செல்வி, கா. மதுரை மாவட்ட நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் - ஓர் ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பி.எச்.டி. ஆய்வேடு, 1989.

கிருஷ்ணசாமி, ப., கொங்குநாட்டு வரலாறும், அண்ணன்மார் வழிபாடும், தன்னனானே, பதிப்பகம், பெங்களூர், 1998.

குணசேகரன், கே.ஏ.,. நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1988.

சத்தியமூர்த்தி, அ.ம., (பதி.) மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக்:82.

சரசுவதி வேணுகோபால், தொன்மக் கதைகள் கோட்பாட்டு ஆய்வுகள், தாமரை வெளியீடு, 1997.

சக்திக்கனல், (பதி.) அண்ணன்மார்சுவாமி கதை, நர்மதா பதிப்பகம், சென்னை, 1994.

சக்திக்கனல், மலைச்சாமி குன்றுடையான், வெற்றிவேல் பதிப்பகம், கோயம்புத்தூர், 1997.

சண்முகசுந்தரம், சு., (தொ.) ஐந்து கதைப்பாடல்கள் (நெல்லை வட்டாரம்) தன்னனானே, பதிப்பகம், பெங்களூர், 2001.

சிவசுப்பிரமணியன், ஆ., (பதி.) பூச்சியம்மன் வில்லுப்பாட்டு, நி.செ.பு. 1989.

சுந்தரேசன், நாட்டுப்புறக் கதைகள், குந்தவை வளநாடு, குந்தவை பதிப்பகம், தஞ்சாவூர், 1991.

நிர்மலாதேவி, சூ., சின்னணைஞ்சான் கதை, அரவமுத்து வீரன் கதை, (கிளைக்கதை) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

நிர்மலாதேவி, சூ., தடிவீர சுவாமி கதை & வன்னியராயன் கதை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பாண்டி, மு. நாட்டுப்புறக் கதைகள் (திருப்புவனம் வட்டாரம்) முத்துப்பதிப்பகம், விழுப்புரம், 1989.

பெருமாள், ஏ.கே., வில்லுப்பாட்டு புராணக்கதைகள், 11 வில்லிசைக்குரிய கதைகள், வருண் பதிப்பகம், நாகர்கோயில்.

ராஜநாராயணன், கி., கழனியூரன், நாட்டுப்புறப் பாலியல் கதைகள், நீலக்குயில், சென்னை, 1994.

வசுமதி, இரா., (பதி.) குசலவர் சுவாமி கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995.

விவேகானந்தன், சி., செங்கிடாக்காரன் கதை - ஓர் ஆய்வு ஸ்ரீகண்ணன் பதிப்பகம், கோவில்பட்டி, 1994.

வேளாங்கன்னி, வே., ஆளவந்தார் கதைப்பாடல் - ஓர் ஆய்வு, தமிழ்த்துறை, கிராமியப் பல்கலைக் கழகம், காந்திகிராமம், 1990, (எம்.ஏ. ஆய்வேடு)

(ii) கட்டுரைகள்

ஆனந்தகுமார், பா., மதுரைவீரன் கதைப்பால் - ஒரு கண்ணோட்டம், தாமரை, நவம்பர், 1990, பக்:45-48.

இரவி, ச., வரலாற்றுக் கதைப்பாடல்களில் தலைவர்களைக் கண்டறிவதில் சிக்கல், தமிழியல் ஆய்வு - 1994, பக்:237-242.

இராமச்சந்திரன், நா., மருதநாயகம் பிள்ளை கதை, தன்னனானே, (14) 2000, பக்: 186-200.

இராசு, செ. வெற்றித்திலகம் வெள்ளையம்மாள் கதைப்பாடல், தன்னனானே, (16) 2001, பக்:135-145.

இரவிச்சந்திரன், சி.மா. கொங்குநாட்டுக் குறுங்கதைப் பாடல்கள், தன்னனானே, (16), 2001, பக்: 146-156.

இராமச்சந்திரன், நா., நாட்டார் கதைகளின் அமைப்பியல் ஆய்வு உத்திகளும் நெறிமுறைகளும், நாட்டார் வழக்காற்றியல் (2) பக்:15-36.

கருப்புசாமி, நீ.வ., நல்ல தங்காள் கதைப்பாடல் கொங்கு நாட்டில் நிலவிய பாங்கு, ஆய்வுக்கோவை-I, 1999,பக்:348-352.

கஸ்தூரி நாகராஜன் நாட்டுப்புறக்கதை - ஓர் உளவியல் பார்வை ஆய்வுக்கோவை- I, 1992, பக்:209-213.

கலியாணிகுமார், மு., காவடி பற்றிய கதைகள், களம்(2) 1996, பக்:220-222.

கமலி கஜேந்திரன், தி., கதைபொதி பாடல்களில் குற்றம் மற்றும் தண்டனைக் கருத்துகள், களம் (2) 1996, பக்:146-150.

கழனியூரன், திருநெல்வேலி வட்டார நாட்டுப்புறக்கதை, தன்னனானே, (14), 2000, பக்:148-151.

காந்திமதி, நா., புலமாடன் கதைப்பாடலில் மொழிநடை, களம்(1) 1995, பக்: 118-122.

கிருஷ்ணசாமி, ப., அண்ணன்மார் பாட்டும், பாட்டுக்காரர்களும் சில மனப்பதிவுகளும், தன்னனானே, (16) 2001, பக்:122-134.

கிருஷ்ணசாமி, ப., அண்ணன்மார் வரலாறு - காப்பியம் - வழிபாடு, தன்னனானே, (1) ஏப்ரல் ஜுன் 1995, பக்:51-57.

கீதா, சௌ., ஆந்திரமுடையார் கதைப்பாடலில் சமயப்பொதுமை, களம்(1) 1995, பக்:100-103.

கோவைமணி, மோ.கோ.,வல்லான் காவியம் - அறிமுகம், களம்(1) 1995, பக்: 93-99.

சக்திவேல், சு., பெரியண்ணன், சின்னண்ணன் கதைப்பாடல் - ஓர் ஆய்வு, ஆய்வுக்கோவை-I வெள்ளிவிழா ஆண்டு, 1994, பக்:440-441.

சக்திவேல்,சு., கதைப்பாடலும் வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடும் ஆய்வுக்கோவை-1992, பக்:267-271.

சக்திவேல், சு., கதைப்பாடல்களில் மேல்நிலையாக்கம், ஆய்வுக்கோவை-II, 1996, பக்:493-497.

சசிகலா, வே., நாட்டுப்புறக் கதைகள் - பெண்ணிய பார்வை, ஆய்வுக்கோவை - II 1997, பக்:496-500.

சரஸ்வதி வேணுகோபால் - அஸ்டிவாலின் கதை, நாட்டார் வழக்காற்றியல் (2) 1988, பக்:37-72.

சவரிமுத்து, சா., கதைப்பாடல்கள் வழி அறியலாகும் சாதிப் போராட்டம், ஆய்வுக்கோவை - II, 1999, பக்:643-647.

சண்முகசுந்தரம், சு., சோனமுத்து கதைப்பாடல் தன்னனானே, (14), 2000, பக்:41-50.

சிவசங்கர், ஏ., சூரசம்காரக் கதைப்பாடலில் பாத்திரப்படைப்பு, தன்னனானே (9,10) 1998, பக்:169-183.

சிவசுப்பிரமணியன், ஆ., மாடத்தி அம்மன் கதை, தன்னனானே - மே 2000 (14) பக்: 79-89.

சிவகாமி, ச., நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாடு, ஆய்வுக்கோவை - (21) III, 1989, பக்:310-315.

சுப்பிரமணியன், பெ., அண்ணன்மார் சுவாமி கதைப்பாடலில் நாட்டுப்புறக் காவியக் கூறுகள், தன்னனானே (6,7), 1997, பக்:143-159.

சுப்பிரமணியன், பெ., கொங்கு நாட்டுப்புறக் கதைகள் வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை தன்னனானே மே 2001 (16), பக்: 157-160)

சுப்பிரமணியன், பெ., மூடர் பற்றிய நாட்டுப்புறக் கதைகளில் சமூகம், தன்னனானே, (1) ஏப்ரல் ஜூன் 1995, பக்:17-26.

சுப்பிரமணியன், பெ., நாட்டுப்புறக் கதைகளில் அன்புறவும் எதிர்மறைப் பண்பும், தமிழில் ஆய்வு - 1995, பக்:310-314.

சுப்பிரமணியன், பெ., நாட்டுப்புறக் கதைகளில் இருநிலை எதிர்வு அமைப்பு முறைகள், தமிழியல் ஆய்வு - 1994, பக்:221-224.

சேனாவரையன், இ., நீலாவதி நீலகண்டன் கதைப்பாடல் ஆளுமைக் கோட்பாடு அணுகுமுறை, களம்(1) 1995, பக்:141-147.

சோமசுந்தரம், ச., நாட்டுப்புறக் கதைகளில் கள்ள உறவுகள், ஆய்வுக்கோவை (20) III, 1988, பக்:310-314.

தமிழரசி, சு., வெங்கலராசன் கதைப்பாடல் ஓர் ஆய்வு, ஆய்வுக்கோவை II, 1996, பக்:828-832.

தவசிமுத்து, த.த., உடையார் கதைப்பாடலில் மரங்களும் மாந்தையர்களும், தமிழியல் ஆய்வு - 1999, பக்: 197-203.

தனஞ்செயன், ஆ., தேரிக்காட்டுக்கதைகள், அபலைகளும் சாயங்களும், தன்னனானே (14) 2000, பக்:168-185.

தமிழவன், வெகுஜன கலாச்சாரத்தில் நாட்டுப்புறக் கதையாடல், அமைப்பியல் வாதமும் தமிழ் இலக்கியமும், காவ்யா, பெங்களூர், 1991, பக்:46-58.

நடேசன், அ., சமுதாயக் கதைப்பாடல்களில் இறுதிச்சடங்கு, ஆய்வுக்கோவை (20) III, 1988, பக்:375-379.

நடராசன், மா., காத்தவராயன் கதைப்பாடல் அமைப்பு ஒரு கண்ணோட்டம், ஆய்வுக்கோவை (20) II, 1998, பக்:891-895.

நத்தர்சா, ஹ.மு., நாட்டுபுறக் கதைப்பாடலில் பாத்திர படைப்பும் பண்புநலனும், ஆய்வுக்கோவை (21) III, 1989, பக்:500-505.

நசீம்தீன், பி. டாக்டர்., நாட்டுப்புறக் கதை கூறும் மரபும் சாக்கியாரும், ஆய்வுக்கோவை (20) III, 1988, பக்:369-374.

நசீம்தீன், பி. டாக்டர்., நாட்டுப்புறக் கதையில் அமைப்பியலாய்வு, ஆய்வுக்கோவை - II, 1996, பக்:790-794.

நசீம்தீன், பி. டாக்டர்., நாட்டுப்புறக் கதைப் பாடல்களும் வடிவ மாற்ற முயற்சிகளும், ஆய்வுக்கோவை II, 1997, பக்:818-822.

நிர்மலாராணி, வீ., தமிழக நாட்டுப் புறக்கதைகளில் பெண்களின் நிலை, களம் (2) 1996, பக்:154-158.

நீலமோகன், ந., மதுரைவீரன் கதை - ஓர் அறிமுகம், ஆய்வுக்கோவை (21) III, 1989, பக்:534-539.

பழனியப்பன், மு., கடற்புரத்திலிருந்து இரண்டு கதைகள், தன்னனானே (9,10) 1998, பக்: 104-112.

பாண்டி, மு., நாட்டுப்புறக் கதைகள் காட்டும் குடும்ப உறவுகள், ஆய்வுக்கோவை (21), III, 1989, பக்: 5654-569.

ஃபிரான்சிஸ் ஜெயபதி, அமைப்பியலும் புராணக்கதையும், நாட்டார் வழக்காற்றியல் (2) 1988, பக்:169-180.

மதியழகன், மு., கிளியேந்திர ராசன் குறுங்கதைப் பாடல் ஓர் ஆய்வு, தமிழியல் ஆய்வு - 1999, பக்: 191-196.

முத்தையா, இ., ஆதிக்கத்திற்கு எதிரான அடித்தள மக்களின் கதைப் பாடல்கள், தமிழியல் ஆய்வு - 1999, பக்: 238-241.

முரளி, இராம., சந்திரகுல ராஜாவும் புட்டுவான்சி மவனும், தன்னனானே (9,10) 1998, பக்:1113-117.

மைதிலி வளவன், நாட்டுப்புறக் கதைகளும் உடல்மொழியும், ஆய்வுக்கோவை II, 1999, பக்:1441-1445.

ராமானுஜன், ஏ.கே., பாஸ்கரன் - இந்திய நாட்டுப்புறக் கதைகள் ஒரு முன்னுரை, தன்னனானே (1) ஏப்ரல் - ஜுன் 1995, பக்:38-50.

ராஜநாராயணன், கி. சிலம்பு. நா.செல்வராசு - புதுச்சேரி வட்டார நாட்டுப்புறக்கதைகள், தன்னனானே (9,10), 1998, பக்: 91-103.

ரொஸ்லெட்டானிபாய், ஜே., நாட்டுப்புற கணவன் மனைவிக் கதைகளின் அமைப்பியல், ஆய்வுக் கோவை (20) III 1988, பக்:538-543.

லலிதா, து., முத்துப்பட்டன் கதையில் இலக்கிய மரபு, ஆய்வுக்கோவை III, 1999, பக்:1476-1480.

விவேகானந்தன், சிவ., பிரம சத்தியம்மன் கதை, ஆய்வுக்கோவை (20) III, 1988, பக்: 550 - 554.

விவேகானந்தன், சிவ., பிரம சத்தியம்மன் கதை சொல்லாராய்ச்சி, ஆய்வுக்கோவை (21) III, 1989, பக்:812-817.

விவேகானந்தன், சிவ., குருக்கேத்திரன் கதைப்பாடல், தன்னனானே - ஜனவரி - 1997 (6,7) பக்: 1-132.

ஜெபமலர் வின்செஸ் மணிமாலா, ஜோ., நாட்டுப்புறக்கதைகளில் நீதிக்கதைகள், ஆய்வுக்கோவை III, 1999, பக்: 1632-1636.

ஈ. பழமொழிகள்

(i) நூல்கள்

இந்து, இரா., அறிவியல் நோக்கில் தமிழ்ப்பழமொழிகள், சன் பதிப்பகம், தஞ்சாவூர், 1998.

சங்கரலிங்கம், அறிவூட்டும் பழமொழிகள், விசாலம், சென்னை, 1992.

சைமன் ஜான், சா., நகர்ப் புறப் பழமொழிகள் கள ஆய்வு அறிக்கை, எம்.ஏ., ஆய்வேடு, நா.வ. மையம், பாளயைங்கோட்டை, 1996.

துரைப்பாண்டியன், அ., பரமக்குடி வட்டாரப் பழமொழிகள் - ஓர் ஆய்வு, தியாகராசர் கல்லூரி தன்னாட்சி நிறுவனம், மதுரை - 9, 1998 (எம்ஃபில் ஆய்வேடு)

நர்மதா, தமிழ் நாட்டுப் பழமொழிகள் 2000, நர்மதா பதிப்பகம், சென்னை - 17, 2000, பக்:160.

நாகையா, ஜே., பண்பை வளர்க்கும் பழமொழிகள், வள்ளியேல் பதிப்பகம், சென்னை, 1992.

